(1473)

T. N. L. A. Debates

Official Report

Vol. 38 No. 3 & 4

1980

C

D
V211,31 N80
N80.38.3&4;1
123046

212/80

வெளியீடு—19-6-1980] [Issued—19-6-1980

DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
2 ஆக 1980
1473.
EGMORE, MADRAS-600 008.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1980 பிப்ரவரி 12-தொகுதி XXXVIII-எண் 3

Tuesday 12th February 1980—Volume XXXVIII—No. 3

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

V211,31 N80
N80.38.3

உள்ளடக்கம்

**12–2–1980**

| | பக்கங்கள் |
|---|---|
| 1. தகவல் கோரல் | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து .. | 375—376 |
| (ஆ) பேரவையின் அமைப்பு எல்லைக்குள் இரகசிய காவலர்கள் போடப்பட்டுள்ளார்களா என்பது குறித்து .. | 377—378 |
| (இ) நகராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து. | 443 |
| (ஈ) மின்சார பற்றாக்குறை குறித்து அறிக்கை கோரல் .. .. | 446 |
| 2. அறிவிப்புகள் | |
| (அ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம் குறித்து .. .. .. | 379 |
| (ஆ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1980 .. .. | 384 |
| (இ) பேரவை அலுவல் குறித்து .. .. | 452 |
| (ஈ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து | 478 |
| 3. அரசினர் தீர்மானம் | |
| (அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து .. | 380—383 |
| (ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து .. .. | 478—481 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1980 .. .. | 384—407 |
| (ஆ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. .. | 407—441 |
| (இ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. | 441—442 |

5. அறிக்கை அளித்தல்
(அ) அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பஞ்சப்படி உயர்வு குறித்து .. 443—445
(ஆ) கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவது குறித்து .. .. 446—457
6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் (விவாதம்) தொடர்ச்சி .. .. 452—469
(அ) திரு. எஸ். ஆர். இராதா .. ..
(ஆ) திரு. கே. கந்தசாமி .. .. 470—477
7. பேரவை முன் வைக்கப்பபெற்ற ஏடுகள் .. 481—483

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1980, பிப்ரவரி, 12

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

*ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைகுறிக்கும்.

## 1. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்று அறிவிக்கும் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும் முன்பு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் கல்லூரி ஆசிரியர்கள் 3 பேர்கள் மரணப் படுக்கையில் இருக் கிறார்கள். உயிர் போகக்கூடிய ஆபத்தான நிலைமை இருக் கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நானும் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே குறிப்பிட்டிருக்கிற விஷயம் என் கவனத்தில் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் ; கல்லூரி ஆசிரியர்களைப் பற்றி நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் ரகுமான்கான் அவர்களும் கோவிந்தராஜன் அவர்களும் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை என் கவனத்தில் இருக்கின்றது. பேரவை முன்னவர் ஏதேனும் சொல்ல இருந்தால் சொல்லலாம். பதில் சொல்கிறேன்.

[1980 பிப்ரவரி 12

<u>திரு. கோ. இளங்கோவன்</u> : தலைவர் அவர்களே, யார் யார் இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே' ஆசிரியர் கிளர்ச்சி பற்றி அல்லது கோரிக்கைகளை பற்றி இந்த அரசு தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் உட்பட பலரும் கேட்டிருக்கிறார்கள்.

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : எழுப்பியது நான்தான் மாண்புமிகு முன்னவர் அவர் பெயரைச் சொல்லுகிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் எல்லோரையும் சொன்னேன். திரு. ரகுமான்கான் கேட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது குறித்து ஒரு அறிக்கை இந்த அவையில் தாக்கல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

<u>திரு. எம்.ஏ, லத்தீப்</u> : யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை பேரவைத் தலைவர் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்தப் பிரச்சினையை இன்று எடுத்துக் கொண்டு இருந்தால் எழுப்பிய உறுப்பினர் பெயர் விடப்பட்டு இருந்தால், அப்போது அந்த உறுப்பினர் ஏன் என் பெயர் விடப்பட்டு இருக்கிறது என்று கேட்டால் நான் பதில் சொல்லி இருக்க முடியும். ஆனால் அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்று திருவாளர்கள் ரகுமான்கான், கோவிந்தராஜன், அழகர்சாமி போன்றவர்களும் மற்றவர்களும் எழுப்பி அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று நானும் விரும்புவதால்தான் பேரவை முன்னவரை அரசின் கருத்து என்ன என்று கேட்டேன். எடுத்துக் கொள்கிறபோது பெயர்களைப் படிப்பேன். அரச தரப்பிலே இருந்து அறிக்கை வைப்பதாகச்சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை இத்தோடு விடுங்கள்.



980 பிப்ரவரி 12]

ஆ. பேரவையின் அமைப்பு எல்லைக்குள் இரகசிய காவலர்கள் போடப்பட்டுள்ளார்களா என்பது குறித்து.

<u>திரு. துரைமுருகன்</u> : தலைவர் அவர்களே, இந்த பேரவையும் அதைச்சுற்றி இருக்கிற பகுதிகளும் லாபி போன்ற பகுதிகளும் தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் ஆகும். சட்ட மன்றம் நடக்கிற நாட்களில் மட்டுமல்ல; மற்ற நேரங்களிலும்கூட. ஆனால் இது அரசாங்க இடமாக இருந்தாலும் தங்களுடைய ஆளுகையின் கீழ்தான் வரும். அவர்களின் ஆளுகையின் கீழ் வராது. இன்றைக்குக் காலையிலிருந்தே பார்க்கிறேன். நிறைய போலிசார்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் ஈ மொய்ப்பது போன்று லாபியிலும், மற்றும் ஏங்கே போனாலும் இருக்கிறார்கள். வராண்டா, லைப்ரரி எங்கே போனாலும் எம். எல். ஏக்களைப் பார்ப்பதைவிட போலீசைத்தான் நிறையப் பார்க்க முடிகிறது. இன்றைக்கு இங்கே ஏதேனும் அதிசயம் நிகழப் போகிறதா? அல்லது உங்கள் அனுமதியோடுதான் அவர்கள் வந்திருக்கிறார்களா? என்பதை அறிய விரும்புகிறேன், சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளின்போது எம். எல். ஏக்கள் உட்கார்ந்து கொள்ளுகிற இடங்களில் எல்லாம் போலீசார் உட்கார்ந்திருப்பதும், லாபியிலே எல்லாம் நின்று கொண்டு இருப்பதும் ஏதோ இந்தச் சர்க்கார் எம். எல். ஏ.க்களை ஒரு கேடியைப் போல் நடத்துகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உட்காருங்கள் சொல்லுகிறேன். இதைய பெருந்தன்மையோடு எடுத்துச் சொன்னால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். இங்கே உங்களுக்கு ஊறு விளையத்தக்க, உங்களுக்குத் தொல்லை தருகின்ற அளவுக்கு இருக்குமேயானால் பாதுகாப்புக்கு நான் பொருப்பாளி. நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தப் பிரச்சினைக்கு இடையூறாகவோ அல்லது பிறருக்கு அவர்களாலே தொல்லை தருவதாகவோ இந்தப் பிரச்சினை இந்த மன்ற உறுப்பினர் களுக்கு ஏற்படுமானால் நிச்சயமாக என் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். நான் நடவடிக்கை எடுக்கத் தயார். ஆனால் ஒரு அரசுக்கு இப்படிப்பட்ட முறைகளை வைத்துக்கொள்வது எங்கேயும் உள்ள ஒன்றுதானே தவிர வேறு அல்ல. (குறுக்கீடு துரைமுருகனுக்கு அதனாலே தொல்லை என்றால் முதி) கொடுங்கள்.

<u>திரு. துரைமுருகன்</u> : தலைவரவர்களே, உறுப்பினர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் வந்திருப்பதுபோல தெரிகிறது. நான் தொல்லைப்படுத்தப்பட்டால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. துரைமுருகனுக்கு தொல்லை என்றால் துரைமுருகன் அதை ஏற்றுக்கொள்ளத்

தயார். ஆகவே, வழக்கத்திற்கு மாறாக இருக்கிற சி. ஐ. டி. களை நீங்கள் வெளியேற்றிவிட வேண்டும். லாபியிலும் மற்ற இடங்களிலும் சி.ஐ.டி. வருவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் பேசும்போதும் யோக்கியதையோடு பேசுங்கள்.

திரு. துரைமுருகன் : நான் என்ன யோக்கியதை குறைவாகச் சொல்லிவிட்டேன்? யோக்கியதை என்பது தவறான வார்த்தையா? அது என்ன 'அன்பார்லிமென்டரி' வார்த்தையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது கவனமாக பயன்படுத்த வேண்டும். பேசுபவர்கள் யோக்கியதையோடு பேசினால் நல்லது.

திரு. துரைமுருகன் : முதலிலே நீங்கள் யோக்கியதையாகப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரைமுருகன் அவர்கள் பிரச்சனையைப் பெரிதாக்க விரும்பினால் அதற்கு நான் தயார், நீங்கள் பேரவைத் தலைவரைப்பார்த்து இப்படியெல்லாம் பேசுவது நியாயம் அல்ல. துரைமுருகன்தான் பேசலாம், எந்த இடத்திலும் பேசலாம் என்று சொன்னால் நியாயம் அல்ல, (குறுக்கீடு) இங்கே இருப்பவர்கள் என்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட காவல் துறையினர். அவர்கள் மாற்று உடையிலே எப்போதும் பணியாற்றுகிறவர்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

திரு. துரைமுருகன் : நான் சவால் விடுகிறேன், என்னோடு வாருங்கள். எத்தனை பேரை பிடித்துத் தருகிறேன் என்று பாருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, தனிப்பட்ட உறுப்பினர்களுக்குத் தொல்லை இருக்கிறா இல்லையா என்பது வேறு. ஒரு துறை இன்னொரு துறையின் அதிகார வரம்புக்குள் வருவது விரும்பத்தக்கதல்ல.

"Legislature is a separate independent Constitutional body. The Executive Authority should not be allowed to intrude into the sovereign right of Legislature"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது மாதிரி சி. ஐ. டி. இங்கே இருந்தால் நான் அனுமதிக்க முடியாது. சி. ஐ. டி. யாரும் லாபியில் இருக்கக் கூடாது. சார்ஜன்டிடம் சொல்லியிருக்கிறேன். யாராவது இருந்தால் அவர் வெளியேற்றி





விடுவார். இங்கே காவல் துறையினர் மாற்று உடையில் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் மாற்று உடையில் பணியாற்றுகிறவர்கள் தான். மற்றவர்கள் இருந்தால் அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

## 2. அறிவிப்புகள்.

### அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 256ன்கீழ் 1979-80 ஆம் ஆண்டு அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. சேலம் மு. ஆறுமுகத்திற்குப் பதிலாக திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களை உறுப்பினராக நியமிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முறைப்படி உறுப்பினர்களை நியமிக்கிறீர்கள். இருப்பினும் கட்சியினுடைய கொறடாக்கள் அனுமதிக்கப்பட்டால் இன்னும் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பதால், அவர்களுக்குள்ள சங்கடங்களைக் குறைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அவர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நம்முடைய விதியில் 17-க்குமேல் உறுப்பினர்கள் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. அந்த விதியின் கீழ், 17 உறுப்பினர்களைக்கொண்டு, அலுவல் ஆய்வுக்குழுவில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இடம்பெறுவது தேவை, அவசியம் என்பதால் கணிசமாக கட்சியினுடைய சக்திக்கு ஏற்றவாறு இடம் தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு சேர்ப்பதற்கு விதியைத் தளர்த்தியாக வேண்டும். அந்த முறையை எப்போதும் கையாண்டதில்லை. அந்தந்தக் கட்சியினுடைய பிரதிநிதிகள் கொறடாவின் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கொறடாக்களை அனுமதிக்க வேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது வழக்கமும் அல்ல. அவர்களுடைய கட்சிப்பிரதிநிதிகளே, கொறடாக்களின் கருத்துக்களை அலுவல் ஆய்வுக்குழுவில் தெரிவிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கைக்கு தாங்கள் பதில் அளிக்கும்போது, விதிகளை தளர்த்தினால் இடம் பெற வாய்ப்பு இருக்கும் என்று அறிவித்தீர்கள். இருக்கும் நிலை கருதி, சூழ்நிலை கருதி, விதிகளை தளர்த்தியாவது அத்தகைய நிலை உருவாவதற்கு, தாங்கள் உதவி புரிய வேண்டும். அதற்கு அவை முன்னவர் அவர்களும் ஒத்துழைப்பார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டப்பா அவர்கள் கேட்டதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, அலுவல் ஆய்வுக்குழு எடுக்கும் முடிவை அவருக்கும் தெரிவிக்கிறேன்

## 3. அரசினர் தீர்மானம்.

### நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின் கீழ் இனம் 2—ல் வருகின்ற (1) 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு,(2)1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, (3) 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, (4) 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, (5) 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி தனி நன்செய் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆகியவைகள் ஆளுநர் பேருரைககு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும் என்று வருகின்ற இனம் 1—க்கு முன்னால் எடுத்துகொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[முற்பகல் 9.10]

திரு அ. ரகுமான்கான் : தலைவர்களே. பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அனுமதித்துக்கொண்டிருந்தால் அவையின் நேரம் வீணாகிறது. அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குச் சாந்தம் உண்டாக்குவது உறுப்பினர்களுடைய கடமை, ஆகவே உறுப்பினர்கள் தான் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு அவையில் ஒரு தீர்மானம் மொழிந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே கேள்வி நேரம் இல்லை என்றால் மற்ற அலுவல்களும் தானாக நின்றுவிடுகிறது. ஆகவே எது எது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதைக் கவனித்து ஆவன செய்கிற நிலையிலேதான் நான் இருக்கிறேன். ஆகவே இவ்வாறு ஒவ்வொருவருக்கும் பேச வாய்ப்புத் தர வேண்டும் என்றால் அது இயலாது இன்றைக்குக் கேள்வி நேரம் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் நிறைய அலுவல்கள் முடிக்க வேண்டி இருப்பதுதான். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் நீங்கள் குறிப்பிடுகின்ற பிரச்சினை பற்றி ஒரு அறிக்கை வைப்பார்களே தவிர மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து பேசுவது என்றால் அதை என்னால் அனுமதிக்க முடியாது. அதற்கெல்லாம் நேரமில்லை.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொருவரையும் இப்படிப் பேச அனுமதித்து நான் நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை. ஆகவே அந்தப் பிரச்சனைக்கு அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்கள். தாங்கள் அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேலும் பேசி பல பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம். அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையினுடைய நேரத்தைக் காப்பது என்னுடைய பிரச்சனை. ஆககே தாங்கள் பேசுவதை அனுமதிக்க இயலாது. உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் தயவு செய்து அமருங்கள். நேரம் வீணாகிறது.

திரு. அ. ரகுமான்கான் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நேரம் இல்லை. அலுவல் ஆய்வு குழுவில் இடம் பெறவில்லை. உட்காருங்கள்.

திரு. அ ரகுமான்கான் : * * *

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் என்னுடைய அனுமதி இல்லாமல் என்ன பேசியிருந்தாலும் அது குறித்து பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது. நடவடிக்கை குறிப்பிலிருந்தும் எடுத்து விட வேண்டும். ஒலி பெருக்கியில் பேசுகிற நேரத்திலேதான் எந்த உறுப்பினர் பேசினாலும் இடம் பெற வேண்டும். ஆகவே நான் சொல்வதற்கு முன்னாலே தானாகவே எழுந்து பேசுவது இந்த அவையின் விதிகளை மீறுவதாகும். அமைச்சரின் அறிக்கையோடு சரி. மற்றவைகளை அனுமதிக்க இயலாது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, உங்களுடைய உத்தரவுதான் சபையைக் கட்டுப்படுத்தும். உங்களுடைய உத்தரவை தான் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நேற்று நான் பேசியதாக சொல்லப்பட்ட விஷயங்களை சபையில் நீங்கள் நீக்க வேண்டும் என்று தெரிவித்த பிறகும் ''மாலை முரசு'', இன்னும் சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே தாங்களாகவே சூயோ-மோட்டாவாக நடவடிக்கை எடுத்து எச்சரிக்க வேண்டும். பத்திரிகைகளில் வெளி வந்தது தவறு, அவர் அப்படி பேசவில்லை என்று திரும்பவும் வெளியிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பத்திரிகைகளில் வெளி வந்தது என்று எழுதிக் கொடுத்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத்தான் செயலாளர் இருக்கிறார்களே. அவர்கள் எல்லாத் தகவல்களையும் உங்களுக்குத் தருவார்கள். நீங்கள் சொன்ன உத்தரவை மீறி அவைகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன......

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நேற்று இங்கே மேஜையை உடைத்ததாக பத்திரிகைகளில் தகவல் வந்திருக்கின்றன. இங்கே மேஜை என்ன உடைந்தா இருக்கிறது?....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு தகுந்த தொழில் நிபுணர்களைக் கொண்டு வந்து பரிசோதனை செய்து பார்த்தால்தான் தெரியும் உடைந்திருக்கிறதா இல்லையா என்று....

திரு. சி. ஆறுமுகம் : வேண்டும் என்றே என் பெயரை திரித்துப் போட்டிருக்கிறார்கள். உங்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ஆறுமுகத்தையும் திரித்துப் போட்டிருக்கிறார்களா? இங்கே எல்லோருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். உட்காருங்கள்.



1980 பிப்ரவரி 12]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் அனுமதி இல்லாமல் எதையும் பேசக்கூடாது. பேசினாலும் நடவடிக்கைக் குறிப்பில் வராது என்று உத்தரவு இட்டிருக்கிறேன். அமருங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பரவலாக மின்சாரம், டீசல் தட்டுப்பாடு இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை...... (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளிநடப்புச் செய்து அதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே உட்காருங்கள். திரு. லத்தீப்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படிப்பதற்கு முன்னால், இந்த மாதிரி இன்னின்ன உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மறுக்கப்படுகிறது என்று.... (மணியடிக்கப்பட்டது.)

(முற்பகல் 9.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அறிக்கை வைத்தபிறகு இந்தப் பிரச்னையை இந்த உறுப்பினர்கள் எழுப்பினார்கள் என்று நான் சொல்வேன்.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### ஆ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[1980 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் என்னுடைய அனுமதி இல்லாமல் என்ன பேசியிருந்தாலும் அது குறித்து பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது. நடவடிக்கை குறிப்பிலிருந்தும் எடுத்து விட வேண்டும். ஒலி பெருக்கியில் பேசுகிற நேரத்திலேதான் எந்த உறுப்பினர் பேசினாலும் இடம் பெற வேண்டும். ஆகவே நான் சொல்வதற்கு முன்னாலே தானாகவே எழுந்து பேசுவது இந்த அவையின் விதிகளை மீறுவதாகும். அமைச்சரின் அறிக்கையோடு சரி. மற்றவைகளை அனுமதிக்க இயலாது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, உங்களுடைய உத்தரவு தான் சபையைக் கட்டுப்படுத்தும். உங்களுடைய உத்தரவை தான் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நேற்று நான் பேசியதாக சொல்லப்பட்ட விஷயங்களை சபையில் நீங்கள் நீக்க வேண்டும் என்று தெரிவித்த பிறகும் ''மாலை முரசு'', இன்னும் சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே தாங்களாகவே சூயோ-மோட்டாவாக நடவடிக்கை எடுத்து எச்சரிக்க வேண்டும். பத்திரிகைகளில் வெளி வந்தது தவறு, அவர் அப்படி பேசவில்லை என்று திரும்பவும் வெளியிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பத்திரிகைகளில் வெளி வந்தது என்று எழுதிக் கொடுத்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத்தான் செயலாளர் இருக்கிறார்களே. அவர்கள் எல்லாத் தகவல்களையும் உங்களுக்குத் தருவார்கள். நீங்கள் சொன்ன உத்தரவை மீறி அவைகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன......

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நேற்று இங்கே மேஜையை உடைத்ததாக பத்திரிகைகளில் தகவல் வந்திருக்கின்றன. இங்கே மேஜை என்ன உடைந்தா இருக்கிறது?....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு தகுந்த தொழில் நிபுணர்களைக் கொண்டு வந்து பரிசோதனை செய்து பார்த்தால்தான் தெரியும் உடைந்திருக்கிறதா இல்லையா என்று....

திரு. சி. ஆறுமுகம் : வேண்டும் என்றே என் பெயரை திரித்துப் போட்டிருக்கிறார்கள். உங்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ஆறுமுகத்தையும் திரித்துப் போட்டிருக்கிறார்களா? இங்கே எல்லோருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். உட்காருங்கள்.



1980 பிப்ரவரி 12]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, (மணி யடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் அனுமதி இல்லாமல் எதையும் பேசக்கூடாது. பேசினாலும் நடவடிக்கைக் குறிப்பில் வராது என்று உத்தரவு இட்டிருக்கிறேன். அமருங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பரவலாக மின்சாரம், டீசல் தட்டுப்பாடு இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை..... (மணி யடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளிநடப்புச் செய்து அதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே உட்காருங்கள். திரு. லத்தீப்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படிப்பதற்கு முன்னால், இந்த மாதிரி இன்னின்ன உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மறுக்கப்படுகிறது என்று....(மணியடிக்கப்பட்டது.)

(முற்பகல் 9.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அறிக்கை வைத்தபிறகு இந்தப் பிரச்னையை இந்த உறுப்பினர்கள் எழுப்பினார்கள் என்று நான் சொல்வேன்.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### ஆ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### அ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழி, கிறேன்.

நேற்றைக்கு தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்த) சட்ட முன்வடிவை நான் இங்கே தாக்கல் செய்திருக்கிறேன். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க நான் வேண்டிக்கொள்கிறேன். அவர்களது கருத்துக்களைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு அது பற்றிய எனது விளக்கத்தைச் சொல்லலாம் என்று இருக்கிறேன். ஆக, அவர்கள் தங்களது கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று நான் பணிவோடு கட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவின்மீது ஒரு சில கருத்துகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் நமது தமிழக சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் உள்ள உறுப்பினர்களுக்கு ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் சேர்த்து ரூ. 750 வழங்கப்படுகிறது. அதுபோல பொறுப்பில் இருக்கிற நேரத்தில் இறந்துவிடுகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓரளவிற்கு இது வழங்கப்படுகிறது. சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இருக்கும்போது அவர்கள் ஆற்றுகிற பணியின் காரணமாகவும், அவர்கள் உழைக்கிற உழைப்பின் காரணமாகவும் அவர்களுக்கு ஏற்படுகிற உடல்நலக் குறைவை நீக்கிக்கொள்வதற்காக சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்களாக இருக்கும்போது வழங்கப்படுகிற மருத்துவச் சலுகைகள் தொடர்ந்து அவர்கள் அந்தப் பதவியில் இல்லாத நேரத்திலும் அல்லது அவர்கள் சாகிறவரையில்—பிறந்தவர்கள் எல்லாம் சாகப் பிறந்தவர்கள்தான் என்ற அடிப்படையில் சொல்கிறேன்—அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, அதுபோல் சட்டப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்களுக்கு இப்போது அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை

*1980 மார்ச் 13ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.



பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் மேலவை உறுப்பினர்களாக இருந்து பணியாற்றியவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்து என்னுடைய தாழ்மையான கருத்துகளை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் குறிப்பாக 1952-ம் ஆண்டிலிருந்து சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்களாக இருந்திருக்கிறவர்களுக்கு அவர்கள் கடந்த காலத்தில் ஆற்றிய பணிகளை மதிக்கிற வகையில், பொது மக்களுக்காகப் பணியாற்றி விட்டு பிறகு அந்த வாய்ப்பில்லாதபோது அவர்கள் கஷ்டப்படுகிற நிலையை மனதில்கொண்டு இந்த அரசாங்கம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதில் குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற வசதிகள் இருக்கின்றனவா இல்லையா என்றாலும் பஸ்களில் செல்லும்போது முன் உரிமை தருகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது, பஸ்களில் செல்லுகின்ற முன்னுரிமை தருவதுபோல், எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்கள் பதவி இழந்த பிறகும் அப்படிச் செல்வதற்கான முன்னுரிமையை நிச்சயமாக அவர்களுக்குத் தரவேண்டும். காரணம், இப்போது அவர்கள் பஸ்களிலே முன்னுரிமை பெற்று செல்லுகிறார்கள். எனவே, பிரியட் முடிந்த பிறகு எக்ஸ்-எம். எல். ஏ. ஆக வரும்போது பஸ்களிலே வரிசையிலே நின்று டிக்கெட் வாங்கி வர வேண்டுமென்ற கஷ்டத்தை உருவாக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12 (பீ) பிரிவிலே, ரூபாய் 150 ஒரு டெர்முக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு டெர்ம் என்று சொன்னால், 5 ஆண்டுகள் என்று நிச்சயமாக குறிக்கும். ஆகவே, irrespective of the years என்பதைச் சேர்த்துக் கொண்டால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். அதிலேகூட, 150 ரூபாய் என்றிருப்பதை 250 ரூபாயாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்: (மேஜையைத் தட்டல்.)

அடுத்தபடியாக, இரண்டு ஆண்டுகளுக்கு மாக்சிமம் லிமிட் 500 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறீர்கள். அதிலே 2 ஆண்டுகளுக்கு 50 ரூபாய் என்று இருப்பதை, ஒரு ஆண்டிற்கு 50 ரூபாய் என்று போட்டு, மாக்சிமம் லிமிட் 500 ரூபாய் என்று வைத்து விடுங்கள். அதோடு, 2 ஆண்டுகள் முழுவதுமோ அல்லது ஒரு டெர்ம் முழுவதுமோ அவையிலே மன்ற உறுப்பினர்களாக பணியாற்றினால், அந்தத் தொகையைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

மற்றொன்று, டெலிபோன் பில்லைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய பர்சனல் எக்ஸ்பீரியன்சை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றபோது ஆஸ்டலிலே லோகல் கால்ஸ்

ரெண்ட் பிரீ செய்து கொடுக்கிறீர்கள்; டிரங்க் கால்களுக்கு காசு வாங்குகிறீர்கள். அது நியாயம். சில பேர்களுக்கு குவாட்டர்ஸ் கொடுத்துவிட்டு, எங்கள் சொந்த செலவிலே அங்கே டெலிபோன் ரெண்ட் பில், லோக்கல் கால்ஸ்கள் எல்லாம் சேர்த்து மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ 500, 600 கொடுப்பதற்கு ஆகிவிடுகிறது. எங்களுக்குக் கொடுக்கின்ற சம்பளமே அவைகளைக் கட்டுவதற்கு சரியாய்ப் போய்விடுகிறது. அதனால், குவாட்டர்சிலே இருக்கும் போதுகூட, லோகல் கால்கள், ''ரெண்ட் பிரீ'' கொடுத்தால் சரியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், பாமிலிக்கு மெடிகல் எக்ஸ்பென்சஸ் ரீஎம்பர்ஸ்மென்ட் எக்ஸ்டென்ட் பண்ணியிருக்கிறீர்கள்; அது வரவேற்கத்தக்கது. அரசாங்க மருத்துவ மனைகளில் டிரீட்மென்ட் எடுத்தால் அது கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை விஸ்தரித்து, எங்களுக்கு கவர்ன்மென்ட் அல்லாத பிரைவேட் ஆஸ்பத்திரிகளிலே டிரீட்மென்ட் எடுத்தால் கூட, ரீ-இம்பர்ஸ்மென்ட் உண்டு என்று நீங்கள் எக்ஸ்டென்ட் பண்ணினால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இன்றைக்கு எல்லோராலும் வரவேற்கப்படக் கூடிய ஒரு சட்டமாக இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மீது பேசும்போது, கட்சி பேதாபேதங்களுக்கு அப்பாற்பட்டு, இன்றோ நாளையோ என்று நினைத்துப் பார்க்காமல், நேற்று, நாளை என்று நினைத்துப் பார்த்து, காலாகாலமாக சமுதாயத்திற்கு உழைக்கின்ற பொதுத் தொண்டர்கள், மக்கள் நல்வாழ்விற்காகப் பேசுகிறோம் என்ற எண்ணத்தோடு நான் பேசுகிறேன், இந்தச் சட்டத்திலே சில ஷரத்துகளைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், The Chief Minister is always very generous so far as the members of this House are concerned.
அப்படியிருக்கும்போது, ஏன் இந்த விஷயத்தில் கொஞ்சம் கையை இழுத்துப் பிடித்து விட்டார்கள் என்று தெரியவில்லை, எல்லா இடங்களிலும், ஒரு டேர்ம் என்று சொன்னால் 5 ஆண்டுகளாக இருக்கலாம், 5 ஆண்டுகளுக்கு முந்தி ஏதாவது ஒரு காரணத்தினால், அவை கலைக்கப்பட்டால், அப்படிப்பட்ட சூழ்நிலை உருவானால்கூட 2 ஆண்டுகளோ அல்லது ஒரு ஆண்டோ இருந்தாலும்கூட, ஒரு டேர்மாக கணக்கிடப்படும். அப்படிக் கணக்கிடப்படுகின்ற ஒரு டேர்முக்கு உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு மற்ற சட்டசபைகளிலே கொடுக்கப்படுகின்ற ஓய்வுதியம் 250 ஆக இருக்கிறது. அதே முறையை ஏன் கடைப்பிடிக்கக் கூடாது என்பது எனக்குத் தெரியவில்லை. 150 ரூபாய் என்று சொன்னால், இந்தக் காலத்திலே எப்படிப் போதும் என்பதைக் கொஞ்சம் தயவுசெய்து பார்க்க வேண்டும். எங்களை அவமானப்



படுத்தாதீர்கள். கொடுக்கவில்லை என்றால், சொல்லிவிடுங்கள். விட்டு விடுகிறோம். 150 ரூபாய் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு பென்ஷன் என்று சொன்னால், நான் உள்ளபடியே கேட்கிறேன். நாங்கள் எந்த விதத்திலே குறைந்தவர்கள்?

[முற்பகல் 9-30]

ஒரு ஐ. ஏ. எஸ். ஆபீசர், சர்க்கார் உத்தியோகஸ்தர் ரிடையர் ஆனால் 1,000 ரூபாய், 1,400 ரூபாய் என்று பென்ஷன் கிடைக்கிறது. அந்த யோக்யதை கூடவா எங்களுக்கு இல்லை. இலட்சக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற எங்களுக்கு 150 ரூபாய் என்று சொல்லும்போது ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க்குக்குக் கிடைக்கக்கூடிய பென்ஷன் கூட இல்லையென்ற நிலைமையைத் தயவு செய்து உருவாக்காதீர்கள். ஒன்று இல்லையென்று சொல்லிவிடுங்கள், இல்லாவிட்டால் மற்ற சட்ட சபைகளில் செய்திருப்பது போல் 250 ரூபாய் ஒரு டேர்முக்கு என்று வையுங்கள். எல்லா இடங்களிலும் அதற்குமேற் ஓராண்டுக்கு 50 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள்-but not more than Rs. 500/ 500 ரூபாய்க்கு மேல் போகாமல் ஒவ்வொரு ஆண்டுக்கும் 50 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். இங்கே இரண்டாண்டுகளுக்கு 50 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். ஓராண்டுக்கு 25 ரூபாய் என்று சொல்லுங்களேன். பேட்டா கணக்கு மாதிரி சொல்லுகிறீர்களே. அவ்வளவு தெரியாதவர்களா இங்கு இருக்கிறார்கள், இந்த இரண்டையும் மாற்ற வேண்டும். வேண்டாமென்று சொல்லாதீர்கள். நல்லது அல்ல. இந்த விஷயத்தில் கட்சி கிடையாது. I am the representative of the whole House எங்களை அவமானப்படுத்தாதீர்கள், நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எம். எல். ஏக்கள் வாழ வழி இல்லாமல் தெருவில் கிடந்து செய்திருக்கிறார்கள். ஒருவர் எம். எல். ஏ, ஆனவுடன் பிறகு அவர் எதற்கும் 'பிட்' இல்லை He becomes an unfit. நான் நல்ல வழக்கறிஞர் என்று சொல்லுகிறீர்கள். இருக்கட்டும் இப்போது நிலைமை என்ன தெரியுமா? கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? நன்றாக வாதிடுவார், ஆனால் எப்போது போனாலும் ஆள் இருக்கமாட்டார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நல்ல வழக்கறிஞர் என்று மட்டுமல்ல. வழக்கறிஞர் வேலையைச் செய்யட்டும் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா;</u> தலைவர் அவர்களே தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால் அவர் வக்கீல் வேலைக்குப் போகவேண்டுமென்று சொல்லுவதாகத் தெரிகிறது,

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> எல்லோரைப் பற்றியும் அதுதான் நிலைமை. டாக்டராக இருந்தாலும், வக்கீலாக இருந்தாலும் வேறு எந்தத் துறையில் இருந்தாலும் எம். எல். ஏ. ஆனவுடன் அவர்கள் இருந்த துறைகளில் சரியாக இயங்கமாட்டார்கள் என்ற

எண்ணம் மக்களுக்கு வந்து விடுகிறது. அது சரியோ, தவறோ, அதுதான் நிலைமை. இதை விட்டுப் போன பிறகு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று நிதர்சனமாகப் பார்க்கிறோம். பென்ஷன் 150 ரூபாய் இரண்டாண்டுக்கு ஒரு முறை 50 ரூபாய் என்று வைக்காமல் மற்ற சட்டசபைகளில் வைத்திருப்பது போல் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ வசதி பற்றிச் சொன்னார்கள். ரொம்ப முக்கியம். கடந்த காலத்தில் உள்துறை அமைச்சராக இருந்தவர்கூட மதுரை ஆஸ்பத்திரியில் அவருக்கு உரிய இடத்தைப் பெற முடியாமல் வேறு இடத்தில் சாதாரணமாக நடத்தப்பட்டதை அங்கு போன முதலமைச்சர் அவர்கள் பார்த்து விட்டு வருந்தி அவருக்கு உரிய முறையில் நல்ல வசதிகளைச் செய்து கொடுத்தார் என்று பத்திரிகையில் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது. ஆகவே, ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்போது இருப்பது போல் ஆஸ்பத்திரிகளில் 'பி' கிளாஸ் கொடுக்க வேண்டும்.

''பஸ் பாஸ்'' சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது மட்டும் தருகிறார்கள். அதைத் தொடர்ந்து பஸ் பாஸ் பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லலாம். ஆனால் மாநிலத்தில் எஃபக்டிவ் பீப்பிள்ஸ் ரெப்ரசன்டேட்டிவ்ஸ் எம்.எல்.ஏ.க்கள்தான். ஆகவே, எம்.எல்.ஏ.க்கள் பஸ் பாசில் உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கனவே கொள்கை அளவில் ஒத்துக்கொண்டீர்கள், அதை நடைமுறைப்படுத்தவில்லை.

கர்நாடகத்தில் இந்தச் செலவு வகைக்காக டிரான்ஸ்போர்ட் அன்டர் டேக்கிங்சுக்கு உறுப்பினர்கள் பிரயாணம் செய்வதற்காக 50,000 ரூபாய்தான் சட்டமன்றத் துறை தருகிறது. ஆனால் நாம் மூன்று லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். 3,36,000 ரூபாய் என்று இருக்கிறது. அங்கே எவ்வளவு உறுப்பினர்கள் பிரயாணம் செய்கிறார்களோ அவ்வளவு உறுப்பினர்கள்தான் இங்கேயும் பிரயாணம் செய்கிறார்கள். 3 லட்சம் ரூபாய் நாம் கொடுக்கிறோம். நாம் போகும்போது ஒரு உதவியாளரைக்கூட அழைத்துப் போவதற்கு உரிமையில்லை என்றால் எப்படி என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பஸ் பாஸில் போகும்போது உறுப்பினர் தன்னுடைய உதவியாளரையும் அழைத்துச் செல்கின்ற வகையில் விதிகள் மாற்றப்பட வேண்டும்.

இப்படியெல்லாம் கேட்பதால் சட்ட மன்ற உறுப்பினர்கள் தாமாகவே கேட்டுக்கொள்கிறார்கள் என்பதல்ல. அவர்கள் எபக்டிவ் ஆக பங்ஷன் செய்வதற்காகவும் சர்வீஸ் செய்ய வேண்டுமென்பதற்காகவும்தான் கேட்கிறோம். அவர்களுக்கு வாழ்க்கைக்கு வழியில்லை, தங்களுடைய பட்ஜெட்டில் துண்டு விழுகிறது என்றால் சரியாகப் பணியாற்ற முடியாது?



மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து தலையை அப்படி அப்படி ஆட்டாமல் இப்படி இப்படி ஆட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு டெர்ம் இருந்தால் 250 ரூபாய் கொடுக்க வேண்டும். இந்தத் தொகை ஒரு பெரிய தொகை இல்லை. நம்முடைய அந்தஸ்துக்கு ஏற்றவகையிலே அதைப் பாருங்கள். அதற்கு மேலே ஒரு வருஷம் என்றாலே 50 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதோடு ரிடையர் ஆனவர்களுக்கும் பஸ் பாஸ் கொடுக்கப்பட வேண்டும். அதேபோல அவர்களுக்கு மெடிக்கல் பெஸிலிடிஸும் கொடுக்க வேண்டும், அந்த பஸ் பாஸிலே உறுப்பினர்கள் ஒரு உதவியாளரையும் அழைத்தச் செல்லக்கூடிய முறையிலே கொண்டுவர வேண்டும். இப்படிப்பட்ட சிறு சிறு உதவிகளைத்தான் நாங்கள் கேட்கிறோம், இன்னும் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன, அதைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தால் பேசவில்லை. இதிலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பதல்ல, எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே மறுக்கக் கூடாது என்று சொல்லி இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி.)

திரு. சேலம் மு. ஆறுமுகம் ; பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்தசட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கருத்தை எப்படிச் சொல்லப் போகிறீர்கள் என்று நினைத்துத்தான் சிரித்தார்கள். தப்பாக அவர்கள் சிரிக்கவில்லை. திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டு முதன் முதலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 1971 ஆம் ஆண்டிலேயே—அவர்களுடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று இருந்தாலும்கூட, ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பே அந்தச் சட்டமன்றம் ராஜிநாமா செய்து தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டது—அப்போது பதவியில் இருந்த பலர் மறுமுறை தேர்ந்தெடுக்கப் படாமல் இருந்து விட்டார்கள். அவர்களும் பயன்பெறத் தக்க

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வகையில், 1952 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர்களாக
இருந்தவர்களுக்கும் இந்தத் திருத்தத்தின் மூலமாக ஓய்வூதியம்
பெறக்கூடிய முறையிலே கொண்டுவரப்படுகின்ற இந்தச் சட்டம்
இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் கொண்டுவரப்பட்டிருக்
கிறது, அந்தப் பெருமை நம்முடைய முதலமைச்சர் புரட்சித்
தலைவர் அவர்களைத் தான் சாரும் என்றால் மிகையாகாது.

நாட்டிலே மக்களுடைய நல்வாழ்விற்காகவும், நாட்டிற்
காகவும், உழைத்து பொது வாழ்வில் தொண்டாற்றிய தொண்டர்
களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் காலத்திலே அவர்கள் கடைசிக்
காலத்தை நன்றாகக் கழிக்க வேண்டுமென்ற முறையிலே
கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை
அனைத்துக் கட்சிகளின் சார்பாக நாம் வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறோம். ரூபாய் 150 என்பது பெரிய தொகை அல்ல,
முதியோர் தொகை போலத்தான் இது இருக்கிறதே தவிர
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற தொகை என்று
ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்றைய தினம் இருக்கின்ற விலைவாசியின் அடிப்படையில்
மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு.
லத்தீப் பேசும்போது குறைந்த பட்சம் 250 ரூபாயாவது வழங்க
வேண்டும் என்றும், மருத்துவ வசதிகள் என்பது, இன்றைக்கு
சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு மட்டுமல்ல,
அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள்
பெறக்கூடிய முறையிலே வசதிகள் செய்யப்பட வேண்டுமென்றும்
சொன்னார்கள். உறுப்பினர்களாக இருந்தபோது மருத்துவ
வசதிகள் பெற்றவர்கள், உறுப்பினர்களாக இல்லாதபோது
அவர்களுடைய குடும்பத்தினரோடு கியூவிலே நின்று மருத்துவ
வசதிகள் பெறுவது இயலாத காரியம் என்ற அளவிற்குப் போய்
விடுகிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவ
வசதிகள் பெறுகின்றதைப்போல் முன்னாள் சட்டமன்ற உறுப்
பினர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

காரணம், இன்றைக்கு, மக்களுக்காக உழைத்து, உழைத்து
அவர்கள் தங்களுடைய சக்தியையெல்லாம் இழந்த பிறகுதான்
அவர்களுக்கு களைப்பே ஏற்படுகிறது. அவர்கள் பதவி நேரத்தில்
ஓடோடி பணி செய்து வருகிறார்கள். அவர்கள் பதவி போன
பின்தான் அவர்களுக்குப் பல பிணிகளே ஏற்படுகின்றன. பதவி
இருக்கும்போது யாருக்கும் நோய் வருவதில்லை. பதவி
முடிந்த பிறகுதான் பலவிதமான நோய்கள் வருகின்றன.
ஆகவே, அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாது
காப்பு வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நான் நம்முடைய
எதிர்க்கட்சி நண்பர்களுக்கும் சேர்த்துத்தான் இந்தக்
கோரிக்கையை விடுக்கின்றேனே ஒழிய எங்களுக்காக மட்டும்
அல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே,
இந்தச் சட்ட முன்வடிவானது, மாண்புமிகு புரட்சித் தலைவ



ருடைய காலத்தில், இந்தியாவிலேயே முதன்முதலாக,
தமிழகத்தில் ஒரு முறை—ஒரு முறை என்றால் பதவிப் பிரமாணம்
எடுத்து ஒரு நாள் என்றால் கூட அவர்களும் ஓய்வூதியம் பெறக்
கூடிய தகுதியைப் படைத்தவர்கள் என்ற வகையில் துணிச்சலான
சட்டம் இது. இந்த ரூ. 150/-ஐ, ரூ. 250/-ஆக மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் உயர்த்தி, அவர்களுக்கு பஸ் பாஸ்
போன்ற சகலவிதமான வசதிகளையும் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு
நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்
பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்கக்கூடிய
சட்டத் திருத்தத்திற்கான சட்ட முன் வடிவில் என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதன்மீது எனக்கு
முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் அத்தனை பேரும்
ஓய்வூதியமாக ரூ. 250 இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்
கள். உண்மையிலேயே அது வரவேற்க வேண்டியதுதான்.
அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய
பரிந்துரையை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று இங்கே கூற ஆசைப்படுகிறேன். இப்பொழுது
இரண்டு தடவையாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்
களுக்கு இந்தச் சட்டத்திலே ஒரு வகை செய்யப்பட்டிருக்கிறது.
இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால்,
'12—பி ஓய்வூதியம் ஒரு முறை உறுப்பினராக இருந்த ஒவ்வொரு
வருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 150 கொடுக்கப்பட
வேண்டும் 'என்றிருக்கிறது. அதில் மேலும் கூறியிருப்பதாவது:
'மேற்கூறியவாறு ஐந்தாண்டுகளுக்கு மேல் ஒருவர் பதவி வகிப்
பாரேயானால் அதிகப்படியான ஒவ்வொரு இரண்டாண்டிற்கும்
மாதம் ஒன்றிற்கு ஐம்பது ரூபாய் வீதம் உச்சவரம்பு எந்த வகை
யிலும் ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் கொடுக்கப்பட
வேண்டும். மேலவையிலே உள்ள உறுப்பினர்கள் ஒரு தடவைக்கு
6 ஆண்டுகள் பதவி வகிக்கின்றார்கள். ஆனால் சட்டமன்ற
உறுப்பினர்கள் பதவி வகிப்பது 5 ஆண்டுகள்தான். 2 ஆண்டு
களுக்கு ஒரு முறை ரூ. 50 என்றால், மேலவை உறுப்பினர்களுக்கு
கிடைக்கும் பலன் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்க
வில்லை. மேலவையிலே உள்ளவர்கள் 6 ஆண்டுக் காலம் பதவி
வகிக்கின்றார்கள். இரண்டு தடவை என்று சொல்லும்போது 12
வருஷம் ஆகின்றது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 5
ஆண்டுகள் என்றிருப்பதால், இரண்டு தடவை என்றால், 10
ஆண்டுகள்தான் ஆகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை
ரூ. 50 என்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மேலவை உறுப்
பினர்களுக்குக் கிடைப்பதைப் போன்ற சலுகை கிடையாது:
இவர்களுக்கு அடிபட்டுப் போய்விடுகிறது. இதையாவது
கலைத்து விடுவார்களோ, போய்விடுமோ என்ற ஒரு எண்ணம்
இருக்கிறது. கலைத்தும் விடலாம், கலைக்காமலும் இருக்கலாம்.

ஆனால். மேலவை கலைக்கப்படுவதில்லை. அந்தப் பயம் வருவ தில்லை. ஆகவே, மேலவை இருதடவை என்றால் 12 ஆண்டு கள் என்றிருப்பதாலும், சட்டமன்றத்தில் இரு தடவை என்றால். 10 ஆண்டுகள் என்றிருப்பதாலும், மேலவை உறுப்பினர்களுக்கு அளிப்பதைப் போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சலுகை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஆகவே, இதை அரசாங்கம் கவனத்திலே கொண்டு இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலும் கொடுக்கப்படுகிற ஜீப்புகள் அந்த எம். எல். ஏ.க்கள் கணக்கில்தான் இருக்கின்றனவே தவிர அவர் களுக்கு ஜீப்புகள் வழங்கப்படவில்லை. 50 லிட்டர் பெட்ரோல் கொடுப்பதாக கணக்கிலேதான் இருக்கிறதே தவிர, கமிஷனர்கள் அவர்களுக்கு ஜீப்புகளைக் கொடுப்பதில்லை. அந்த ஜீப்புகளைச் சரிவர பயன்படுத்திக்கொள்ள, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளைச் சுற்றிப் பார்க்க அந்தந்த தொகுதியிலே இருக்கின்ற நிலவரங்களை நேரடியாகத் தெரிந்து கொள்ள வாய்ப் பாக இருக்க வேண்டுமென்ற வகையில் செய்ய வேண்டும். எப் பொழுதோ ஒரு காலத்தில் 50 லிட்டர் பெட்ரோல் கொடுத்தது இப்பொழுது பொருந்தாது. ஆகவே, அந்தப் பெட்ரோலின் அளவைக் கூடுதலாகத் தர வேண்டும். அதேநேரத்தில் தொகுதி மக்களும் முன்பு 80,000 என்று இருந்தது. ஆனால் இப்பொழுது கிட்டதட்ட 1,25,000 மக்கள் என்ற அளவிற்கு இருக்கிறது. ஆகவே, 50 லிட்டர் பெட்ரோல் என்பதை இன்னும் கூடுதலாக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த ஜீப்புகளை வழங்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையைப்பற்றி எடுத்துக்கொண்டால் தனிப்பட்ட மருத்துவமனைகளில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் சேர்ந்தால் அவர்களுக்கு அந்தப் படி கொடுப்பது கிடையாது. ஆகவே, அரசாங்க அலுவல் செய்யும் டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் அவர்களுக்கு அந்த பில் பாஸாகிறது. ஆகவே, தனிப்பட்ட டாக்டர் கொடுத்தாலும் அதை எற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தத் துறையை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னுமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பென்ஷன் வாங்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ்கள் தாராள மாக வழங்கப் பட வேண்டும். இதைத் தள்ளிக் கொண்டு போகக் கூடாது. முன்பிருந்த அரசாங்கத்திலும் சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கும் அரசாங்கத்திடமும் சொல்லப்படுகிறது. அந்த பஸ் பாஸ்களை ஒரு தடவை இருப்பவர்களுக்கு விட்டு விடுங்கள். ஆனால் இரண்டு தடவை சட்டமன்ற உறுப்பினர் களாக இருந்தவர்களுக்குக் கட்டாயமாகத் தொடர்பு ஏற்படுத்திக்





கொள்ள அந்த பஸ் பாஸ் வழங்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை அரசாங்கத்திற்குச் சொல்லி, அவைகளை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இன்று பேரவை உறுப்பினர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்துகின்ற இந்த மசோதா மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஏறக் குறைய ஒருமித்த கருத்தோடு சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு அதிகம் வேண்டு மென்ற நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் அறிவித்த அறிவிப்பு போதாது. இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தை அத்தனை கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதையே நானும் ஏற்று என் கட்சியின் சார்பாகக் கருத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Government of the people by the people and for the people என்று ஆப்ரகாம் லிங்கன் ஜனநாயகத்தைப் பற்றிக் கூறுகிறபொழுது அந்த அரசு மக்களுடைய அரசாக, மக்களால் உருவாக்கப்பட்ட, மக்களுக்காக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டது மாமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியது என்பதை நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்ற உறுப்பினர்கள் நல்ல முறையிலே செயல்பட்டு, அவர்கள் மக்களால் மதிக்கப்படுகின்ற நல் வர்களாக இறுதிவரையில் வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டு வந்து, மாமன்ற உறுப்பினர்களின் கருத்தை அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

இந்த நிலையில் ஒரு 'டெர்ம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது, ஐந்து வருடங்களா அல்லது அதற்குக் குறைந்த வருடங் களாக இருந்தாலும் போதுமா என்று தெளிவாக்கப்பட வேண்டி யிருக்கிறது. ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டாலே போதும் என்ற அளவிற்கு, அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டி யிருந்தால் திருத்தி, ஒரு காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களாக இருந்தாலும் அவர்களுக்கு ஓய்வூதியம் ரூபாய் 250 குறைந்த பட்சம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு மருத்துவ வசதிகளும், பஸ் வசதிகளும், அவர்கள் உறுப்பினர்களாக இருக் கின்ற நேரத்தில் எப்படியிருக்கிறதோ, உறுப்பினர்களாக இருக் கின்றபொழுது எந்த வசதிகள் இருக்கிறதோ அவைகளை, ஒரு டெர்ம் உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வைத்திய வசதிகள் வழங்கு வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சி தரத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. கந்தசாமி] [1980 பிப்ரவரி 12

டெலிபோன் பில்லுக்காக 150 ரூபாய் கொடுக்கிறீர்கள். அது கட்டாது. அது போதுமானதாக இல்லை. ஆகவே, வாடகையையும் டெலிபோன் டெய்லி சார்ஜையும், லோகல் காலுக்கும் அரசே ஏற்றுக் கொண்டால் நலமாகயிருக்கும். 150 ரூபாய் கொடுப்பதைக்கூட நிறுத்தி விட்டு சார்ஜை மொத்தத்தையும் நீங்கள் ஏற்றுக்கொண்டால் மிகவும் நலமாக இருக்கும் அல்லது இதற்கு இன்னும் 100 ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் ஒத்தாசையாக இருக்கும்.

(முற்பகல் 9.50)

அடுத்தபடியாக, for more than one term. இருந்தவர்களுக்கு 500 ரூபாய்க்கு அதிகப்படாமல், மீதியிருக்கின்ற ஒவ்வொரு வருஷத்திற்கும் 50 ரூபாய் வீதம் கணக்கிட்டுமற்ற மாநிலங்களிலே கொடுப்பதாகக் கூறுகிறார்கள். In proportion to the rise in prices காஸ்ட் ஆப் லிவிங் கூடுகிற போது அரசு ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் பிரைஸ் இன்டக்ஸ் வைத்து கொடுக்கிற மாதிரி நமக்கும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டி இருக்கிற காரணத்தால் விலைவாசி கூடி இருக்கிற காலத்தில், ஆரம்ப காலத்தில் 500 என்று வைத்திருக்கிறார்கள். not exceeding the maximum limit of Rupees 750 என்ற அளவுக்கு ரூ. 50 என்று ஆண்டுக்காண்டு கணக்கிட்டு ரூ. 750-க்கு அதிகப்படாமல் நீங்கள் தொகையைக் கூடுதல் செய்தால் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுப்பினர்களும் கவனிக்கவேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பொது வாழ்விலே உள்ளவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்த பிறகு, மீண்டும் வரமுடியவில்லை என்றால் அவர்களுக்கு ஓய்வூதியம் தருவது மிகவும் வருந்தத் தக்கது என்பது என் சொந்தக் கருத்து. இந்த வேலைக்குப் பேரே சம்பளம் இல்லாத வேலை. நாட்டு மக்களுக்கு தங்களுடைய சேவையை ஆற்றுகிறவர்கள்தான் பொது வாழ்விலே உள்ளவர்கள்தான் அரசியல்வாதிகள். வந்த உடனே மக்களுடைய வரிப் பணத்தை தாங்களே எடுத்துக்கொள்ள விதிகளைதிருத்துவது என்பது ஒட்டு மொத்தமாகச் சரியில்லை என்பது என் சொந்தக் கருத்து. ஓய்வு ஊதியம் கொடுக்கும்போது. இங்கே உள்ளவர்களில் யார் யார் வசதி உள்ளவர்களாக இருக்கிறார்களோ, உதாரணமாக டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வியாபாரம் செய்கிறவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் போன்ற வருமான வரி கட்டுகிறவர்கள் போன்றவர்களுக்குக் கொடுக்காமல், உண்மையிலேயே வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால் அவர்களுக்குச்சற்று அதிகமாகக் கொடுக்கவழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எந்தப் பட்டியலில் சேர்ந்தவர்கள், அதையும் சொல்லுங்கள்.



980 பிப்ரவரி 12]

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நல்ல நேரத்தில் ஞாபகப்படுத்தினீர்கள். எனக்கு இந்த ஓய்வு ஊதியம் வேண்டவே வேண்டாம் என்ற பட்டியலிலே வருகிறவன். காரணம் நீங்கள் வேண்டுமானால் பார்க்கலாம். நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு மருத்துவச் சலுகைக் கூட வாங்கவே இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அமருங்கள். அமைதியாக இருக்கவும். அவரைப் பொருத்தவரையில் வாங்க வேண்டாம் என்று சொல்கிறார். மற்றவர்களைப் பற்றி அவர் சொல்லவில்லை.

திரு. சி. ஆறுமுகம்; மருத்துவச் சலுகை பெற்றுக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. நம்மை விட வாய்ப்பு வசதி இல்லாதவர்களைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களைப் பற்றிப் பேச நேரம் இல்லை என்று சபாநாயகரிடம் சண்டை போடுகிறோம். அப்படிப்பட்ட மக்கள் வாழ்கிற நாட்டில் ஓய்வூதியம் என்பது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது சம்பளம் வாங்குகிறீர்களா ?

திரு. சி. ஆறுமுகம்: அதைக் கூட வாங்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அந்தச் சம்பளம் கூட என் தொகுதி மக்களுக்குப் போதாது. என் சொந்தப் பணம் மாதம் 5000 ரூபாய் தேவைப்படும். அந்த அளவுக்கு நான் நடந்து கொள்கின்றவன் என்பது தங்களுக்குத் தெரியும். அந்த அளவுக்கு ஓய்வூதியத்தை நான் எதிர்க்கிறேன். வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்லுவதற்கு ஜீப் வசதி செய்து கொடுத்தால், பெட்ரோல் வசதி செய்து கொடுத்தால், நலமாகஇருக்கும். நீண்ட காலத்திற்கு முன்புபோட்ட உத்தரவுப்படியான அந்தப்பெட்ரோல் அளவை சற்று அதிகமாக அளிக்கலாம். தொலைபேசி வசதி, போக்குவரத்து வசதி போன்றவைகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தால்முறையாக இருக்கும். எனவே இந்த ஓய்வு ஊதியத்தை நான் எதிர்க்கிறேன் என் சொந்த நிலையில் என்று முடிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: I have given notice of an amendment.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்போது நீங்கள் பிறகு பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் தாக்கல் செய்த ஓய்வூதியத்தைப் பற்றிய மசோதாவின் மீது பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், நண்பர்களும் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் எனக்கு ஓய்வு ஊதியம் தேவையில்லை என்று திட்டவட்டமாக

எடுத்துக் கூறி இருப்பதற்கு எனது மட்டற்ற மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை அவர் எழுதி அனுப்பினால் அதைப் பதிவு செய்து கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : நான் அதை பள்ளிக்குத்தான் கொடுக்கிறேன். அதனால் அந்தப் பள்ளிக்கு நீங்கள் தெரிவித்துவிட்டால் போதும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர் பள்ளி வேறு நடத்துகிறார் என்பது இப்போதுதான தெரிகிறது. பள்ளிக்கு அந்த மானியம் கொடுப்பதைப்போல அவர் வாங்கிக்கொடுக்கலாம். அது எனது யோசனை; அவருடைய முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

நான் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவுக்கு புதிய மெருகு கூட்ட வேண்டுமென்ற கருத்தில் சில நண்பர்கள் இங்கே பேசினார்கள் ; மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். அதிலே ஒரு கருத்து—ஒரு 'டெர்ம்' என்பதற்குத் தெளிவான விளக்கத்தை மசோதாவில் தந்திருக்கிறோம். பெரியவர் கந்தசாமி அவர்கள் இந்த மசோதாவைப் படிக்கவில்லை ; படிக்கக் கூடாது என்பதல்ல ; படிக்க நேரம் இருந்திருக்காது ; தொகுதி வேலை இருந்திருக்கும். ஒரு 'டெர்ம்' என்பதற்குப் புதிய மசோதாவில் கொண்டு வந்திருப்பது 5 ஆண்டுகள் அசம்பிளி தொடர்ந்து நடந்தாலும் சரி, இடையிலே கலைக்கப்பட்டாலும் சரி, ஓராண்டுக்குள்ளேயே அசெம்பிளி கலைக்கப்பட்டாலும் சரி ஒரு டெர்ம் என்று அதற்குப் பொருள். திரு. கந்தசாமி அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பேசும்போது எங்கோ பார்க்கிறார்.

அதற்குப் பிறகு! பேசிய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் எங்களை எல்லாம் ரொம்பக் கேவலமாக நினைத்து விட்டீர்கள். 150 ரூபாய் என்கிறீர்களே, இதுஎன்னநியாயம், என்றுகேட்டார்கள். மற்ற மாநிலங்களில் ஒரு டெர்ம் என்றால் 5 ஆண்டுகள் என்று பொருள். ஆனால் நாம் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவில் ஒரு ஆண்டுக்குள்ளே ஆட்சி கவிழ்க்கப்பட்டால் அதற்கும் ஒரு டெர்ம் என்று பொருள். ஆனால் லத்தீப் அவர்கள் அழுத்தமாகவும் வேகமாகவும் சில நேரங்களில் கொஞ்சம் ஆவேசமாகவும் இருந்ததை நான் பார்த்தேன். அவர் 150 ரூபாயை 250 ரூபாயாக்க வேண்டும் என்று சொன்னபோது எல்லோரும் மேசையைத் தட்டினார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களும் அது பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். முதலமைச்சர் அவர்களை நான் கேட்டேன்.

திரு. ரா. உமாநாத்: எல்லோரும் மேசையைத் தட்டினார்கள் என்று சொன்னார்கள்; நாங்கள் செய்யவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இதயபூர்வமாகச் சிரிப்பதும் ஒன்று.



திரு. ரா. உமாநாத் : நாங்கள் சிரிக்கவும் இல்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; இந்தக் கருத்தை நீங்கள் சொல்லுகிறபோது நிச்சயமாக உமாநாத் அவர்கள் அழவில்லை (சிரிப்பு) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அழவில்லை என்பதைச் சொல்லாமலே அது அவை பூராவும் தெரியும். But சிரிப்பது என்பது வேறு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதைத் தெரிவிக்கிற போதும் சிரித்துக் கொண்டேதான் இருக்கிறீர்கள்,

திரு. ரா. உமாநாத் : பொதுவாக நான் எப்போதும் சிரித்துக் கொண்டே சொல்வதுதான் வழக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : 'Jurisdiction of areas' ல்—Expla-nation I-ல் shall mean a period not less than one year but not more than 5 years of membership என்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : Term means five years என்று நான் குறிப்பிட்டேன். Sec. 4(12) (3) Provides even for one year membership.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு விளக்கம். நான் கேட்க விரும்புவது ஓராண்டுக்குள்ளேயே கலைத்துவிட்டால் அல்லது கலைக்கப்பட்டுவிட்டால் இது பொருந்துமா? அதுதான் அவர்களுடைய கோரிக்கை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நமது கற்பனை அந்த அளவிற்குச் செல்லக் கூடாது என்பது எனது விருப்பம். ஒரு மாதத்திற்குள்ளேயே கலைந்துவிட்டால் என்ன ஆகும் என்றெல்லாம் எண்ணக் கூடாது. அது ஓர் ஆண்டு என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று.

அடுத்து ஓய்வூதியத் தொகை 150 என்று இருப்பதை 250 என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்ட உறுப்பினர்களின் கருத்தை முதலமைச்சரின் சார்பாக நான் வரவேற்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

அடுத்து மருத்துவ வசதி பற்றி இங்கே சொன்னார்கள். உறுப்பினர்களுக்கு மட்டும்தான் மருத்துவ வசதி இதுவரை இருந்தது; அது இனிமேல் உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உண்டு என்று புதிய மசோதாவில் இணைக்கப் பட்டிருக்கின்றது என்ற கருத்தை இந்த மன்றம் வரவேற்கும் என்று நான் நம்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1980 பிப்ரவரி 12

இன்னொரு கருத்தையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் எழுப்பியதாக நினைவு. உறுப்பினர்கள் பதவி விலகியதற்குப் பிறகு மருத்துவ வசதி அந்த உறுப்பினர்களுக்கு மட்டும் உண்டே தவிர குடும்பத்தினருக்கு இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தச் சட்டசபைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, நாடாளுமன்றத்தை எடுத்துக் கொண்டாலும் சரி அவர்கள் பதவியிலே இருந்து விலகியதற்குப் பிறகு அந்தக் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி இருக்கிறதா என்று தேடித்தேடி துலாவிப் பார்த்து விட்டேன், எங்கேயும் காணவில்லை. ஆகவே அந்த நிலை இங்கே வரவேண்டும் என்று நண்பர்கள் விரும்புவதை நான் ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். ஆகவே இதுவரையிலும் அப்படி எங்குமே இல்லை என்ற காரணத்தாலே அப்படி ஒரு புதிய மரபை உருவாக்கக் கூடாது என்ற காரணத்தாலேதான் நான் இவ்வாறு தெரிவிக்கிறேன்.

அதற்குப் பிறகு பஸ் வசதிக் பற்றி கேட்டார்கள். இப்போது அந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. பதவிக் காலம் முடிந்ததற்குப் பிறகும் எங்களுக்கு அது வேண்டும் என்று இங்கே சில நண்பர்கள் கேட்டார்கள். நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருப்பவர்கள் பதவி விலகிய மறுநாளே உறுப்பினர்களாகிய எங்களிடம் அங்குள்ள பார்லிமென்டரி செக்ரட்டேரியட்டிலே இருந்து கேட்பது உங்களுடைய கையிலே வைத்திருக்கின்ற அட்டையைத் திருப்பித் தாருங்கள் என்பதுதான். ஆகவே பதவி விலகியதற்குப் பிறகு அந்த வசதி எந்தச் சட்டமன்றத்திலேயும் அல்லது பாராளுமன்றத்திலேயும் இதுவரை தரவில்லை என்பதை இந்த அவைக்குச் சொல்லி, ஆகவே அதை வற்புறுத்த வேண்டாம் என்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நாம் முன் உதாரணமாக இருக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதற்கு மேல் சில காரியங்கள் இருக்கின்றன. அதற்கு வேண்டுமானால் முன் உதாரணமாக இருக்கலாமே தவிர இந்த விஷயத்திலே முன் உதாரணமாக இருந்து நாம் புதிய மரபை உருவாக்க வேண்டாம் என்று நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு மொத்தமாக அனைவரும் இதை வரவேற்றார்கள் என்பதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு டெலிஃபோன் வசதியைப் பொருத்த வரையில் 150 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். இன்ஸ்டாலேஷன் சார்ஜ் மட்டும்தான் தருவோம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இதைத்தான் நான் சென்ற கூட்டத் தொடரிலேயே பேசியதாக ஞாபகம். ஆனால் இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் அந்தச் சார்ஜை எல்லாம் நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டால் எந்த ஒரு சர்க்காரும் பொருளாதாரத் துறையில் ஒழுங்காக இயங்குமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது. அதனைப் பாழாகப் பயன்படுத்துவார்கள் என்று நான் சொல்லவில்லை. ஏராளமான தொகை சர்க்காருக்கு ஆகும். இதுவரை



1980 பிப்ரவரி 12] [திரு. கி. மனோகரன்]

நல்ல காரியத்தை இந்த அரசு செய்து வந்திருக்கிறது. அதை மகிழ்ச்சியோடு அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு 250 ரூபாய் என்று நான் குறிப்பிட்டேன். திரு. லத்தீப் அவர்கள் இரண்டாண்டுக்கு ஒரு முறை 50 ரூபாய் என்கிறீர்களே அதை ஆண்டுக்கு 25,25 என்று சொல்லக் கூடாதா, அல்லது ஆண்டுக்கு 50 என்று சொல்லக் கூடாதா என்று கேட்டார்கள்.

நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், ரூபாய் 250, அதற்கப்பாலே ஆண்டுக்கு 50, சீலிங் 500-ஐத் தாண்டாது என்பதை. இதனை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே திரு. லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே ஒரு திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள், அவர் தெரிவித்திருப்பது :

"Provided that the period served as a member of the Legislative Assembly of the erstwhile Travancore–Cochin State by any person representing any Constituency from the Kanyakumari District during years 1952–1957 shall also be taken into consideration for the payment of pension under this Act."

இதுபற்றி விசாரித்தபோது எனக்குக் கிடைத்த தகவல்

It would not be legally correct for this State Legislature to give pension to a Member who has served in other State Legislature though the territory has been transferred to this State under the States' Re-organisation Act.

ஆகவே இந்த ஆக்டின் படிதான் இந்த அரசு இயங்க முடியும். அனுதாபம் இருக்கிறது ஆனால்........

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஸ்டேட் ரீ–ஆர்கனைசேஷன் ஆக்ட் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுவாக சட்டங்கள் குறிப்பிடப்பட்டால் அதன் அடிப்படையை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த ஸ்டேட் ரி-ஆர்கனைசேஷன் ஆக்டில் கூட ஒரு செக்ஷன்–வகுப்பு இருக்கிறது. நீங்கள் இப்பொழுது திரூர் என்று கேட்பதால் எனக்கு அது கிடைக்கவில்லை. ஒரு நபர் ஏற்கெனவே இருந்த மாநிலத்தில் எந்தெந்த நன்மைகளைப் பெற்றிருந்தார்களோ, அந்த நபர் இந்த ஸ்டேட் ரி-ஆர்கனைசேஷன் ஏற்பட்டு விட்டதனால், மற்றொரு மாநிலத்தில் அவர் ஏற்கனவே இருந்த மாநிலத்தில் எத்தெந்த நன்மைகளைப் பெற்றிருக்கிறார்களோ அந்த நன்மைகள் அனைத்தையும் வழங்கப்பட வேண்டும் என்று தெளிவான பிரிவு-வகுப்பு ஒன்று ஸ்டேட் ரி-ஆர்கனைசேஷன் ஆக்டில் இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. அதுமட்டும் அல்லாமல் இந்த ஸ்டேட் ரி-ஆர்கனேசேஷன் ஆக்டில் இதை மறுக்கப் பட்டு எந்த கருத்தும் எந்த இடத்திலும் இல்லை என்று கூறிக் கொள்கிறேன்...

அது மட்டும் அல்லாமல், பென்ஷன் ரூலை எடுத்துக் கொண்டால் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுகிற பென்ஷன் ரூல்ஸ்படி, ஸ்டேட் ரி-ஆர்கனைசேஷன் ஆக்ட் பிறப்பிக்கப் படுவதற்கு முன்னால், அல்லது மாநிலங்கள் மொழிவழி மாகாணங் களாக மாற்றி அமைப்பதற்கு முன்னால், அரசு ஊழியர்கள் எந்தத் தாய் மாகாணத்தில் பணி புரிந்து இருந்தாலும் சரி, மாநிலங்கள் பிரிந்து வேறொரு மாநிலத்தில் அங்கத்தினராக வந்து அந்த அரசில் பணிபுரியும் நிலையைப் பெற்றிருந்தாலும், ஏற்கெனவே அவர் பணி புரிந்த அந்த அரசில் எத்தனை காலம் பணிபுரிந் தார்களோ, அந்த ஆண்டுகளையும் பென்ஷன் கொடுப்பதற்கு கணக் கில் எடுத்தக்கொள்ள வேண்டும். இவைகளை யெல்லாம் ஒரு அடிப்படை விதியாகத்தான் நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த அடிப்படை தத்துவத்தை இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் கையாள வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். நான் அறிந்த மட்டில் ஸ்டேட் ரி—ஆர்கனை சேஷன் ஆக்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்னொரு மாநிலத்தில் பணியாற்றியவர் என்று சொன்னால் பென்ஷன் கிடையாது என்று தெளிவாக நிச்சயமாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

இதை நான் விளக்கமாகச் சொல்ல வெண்டும் என்று சொன்னால், இந்த ஸ்டேட் ரி—ஆர்கனைசேஷன் ஆக்ட் ஏற்பட வில்லை என்று சொன்னால் திருவாங்கூர் கொச்சின் பிரிவதற்கு முன்னால் இருந்த கேரள மாநிலத்தில் அவர் சட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருப்பார்கள் என்று ஏற்பட்டிருந்தால் இன்றையதினம் கேரள மாநிலத்திலிருந்து பென்ஷன் கிடைத்திருக்கும். ஆனால் இந்த நன்மைகள் ஸ்டேட் ரி ஆ—ர்கனைசேஷன் ஆக்ட் ஏற்பட்டதின் காரணமாகக்கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆனால், அந்த நிலை இருக்கிறது என்று ஸ்டேட் ரி—ஆர்கனைசேஷன் ஆக்டில் புரொவிஷன் இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டும் அல்லாமல் பென்ஷன் கொடுக்கிறோம் என்று சொன்னால் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறோம் என்று இல்லை. அவருடைய தியாகம், அவருடைய பணி, தாயகத்திற்கு அவர் செய்த தொண்டு இவைகளை மதிக்கிறோம் என்றுதான் பொருள். இவைகளை இந்த அரசு அனுமதிக்க கடமைப் பட்டிருக்கிறது.

(முற்பகல் 10–10)

அவர்கள் அந்தப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதைப் பற்றி அவர்கள் என்னென்ன இன்னல்களை அனுபவித்தார்கள், என்னென்ன தியாகங்களைப் புரிந்தார்கள் என்பதைப பற்றி நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற வேண்டிய அவசியமில்லை; அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் ஆறு மாதம், பத்து மாதம் சிறையில் அடைக்கப் பட்டார்கள். கொலைக் குற்றத்திற்காக அவர்கள்மீது வழக்குகள் தொடுக்கப் பட்டன. ஆகவே அவர்களது இந்தத் தியாகத்தை நினைத்து, அந்தத் தியாகத்திற்காக அரசு இதைச் செய்ய வேண்டும்.



இதனால் அரசுக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டு விடப்போவ தில்லை. தியாகம் புரிந்த தலைவர்கள் பலர் மறைந்து விட்டார்கள். எஞ்சியிருப்பவர்கள் சிலரே. திரு. நேசமணி அவர்களைப் போன்றவர்கள், அவர்களைப் போன்ற பல தியாகிகள் மறைந்துவிட்டனர். எஞ்சியிருக்கிற தலைவர்கள் நான்கு அல்லது ஐந்து பேர்களே இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பென்ஷனை அவர்களுக்கும் வழங்குவது நீதியாகும், நியாயமாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டபோது ஏற்கனவே சட்ட மன்ற உறுப்பினர்களாக இரண்டு தடவை இருந்தவர்களுக்கு பென்ஷன் என்றிருந்ததை ஒரு தடவை இருந்தாலும் கொடுக்கலாம் என்றளவில், குறைவான அளவில் கொண்டு வரப் பட்டது. அதை ஓரளவு அடிப்படையாகக் கொண்டதாக முன்னால் இருந்த சட்டத்திற்குத் தொடர்புடையதாக இருந்தது. இப்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சில உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க வேறு சில கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டு அறிவிக்கிறார்கள். இவைகளைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இப்போதே இந்தச் சபை நடந்துக் கொண்டிருக்கிறது, அதைப் பற்றி திட்டவட்டமாகக் கூற இயலாது. புதிய பிரச்சனைகள் பற்றி எங்கள் கட்சி முடிவு எடுத்து அதற்குப் பிறகுதான் நாங்கள் எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: ஏற்கனவே மெம்பராக இருந்தவர்களுக்கு காம்போஸிட் மெட்ராஸ் ஸ்டேட்டில் சட்டசபை மெம்பர்களாக இருந்தவர்களுக்கு— ஆந்திரா, கேரளா, எல்லாம் சேர்ந்திருந்த போது இருந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது திருவிதாங்கூர்—கொச்சியில் இருந்தவர்களுக்கு இல்லை என்று சொல்வது நாம் போட்டிருக்கிற சட்டத்திற்கு முரணானது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்ட கருத்துக்களை நான் நினைவிலே கொள்கிறேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் மேற் கொண்ட தியாகத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்களில் மீதி இருப்பவர்கள், எனக்குத் தெரியும், மூன்று நான்கு பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். அவர்கள் இதற்குத் தகுதி படைத்தவர்களா அல்லவா என்ற பிரச்னை வரும்போது தார்மீக அடிப்படையில் கூட அவர்கள் அதைப் பெறலாம் என்ற கருத்து படைத்தவன் நான். என்றாலும், சட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு ஷரத்து இருக்கிறது என்று குறிப்பிடப்படுகிற காரணத்தால் அதைப் பற்றிக் கொஞ்சம் தீவிரமாக ஆலோசித்

தற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதை நான் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு திரு. சங்கரய்யா அவர்கள் அவர்களது கட்சி சார்பாக உள்ள கருத்துக்களைப் பொறுத்த வரையில் இப்போது தெரிவிப்பதற்கு இல்லை என்றும் புதிய ப்ரப்போஸல்களை நாங்கள் பரிசீலித்ததற்குப் பிறகு தான் கருத்தைத் தெரிவிக்க முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கருத்துக்களை தாராளமாகத் தெரிவிக்கலாம். இந்த அவையில் நான் தாக்கல் செய்திருக்கும் இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி: தலைவர் அவர்களே. பென்ஷன் பெறும்போது மத்திய அரசாங்கத்திலிருந்தோ அல்லது மற்ற மாநில அரசாங்கங்களில் இருந்தோ சம்பளமோ அல்லது மற்ற எந்த ஊதியமோ பெறக் கூடியவர்களுக்கு இந்தப் பென்ஷன் கிடைக்காது என்றிருக்கிறது. தியாகிகள் நிறையப் பேர்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து பென்ஷன் பெறுகிறார்கள்: அவர்களில் நிறையப் பேர்கள் இங்கு உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன். பெரியவர் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி அது பதிவேட்டில் இடம் பெற வேண்டும் என்பதற்காக பேசுகிறாரே தவிர என்னிடம் இங்கே பேசிக் கொண்டிருக்கும்போது தெளிவாகச் சொன்னேன். தியாகிகள் பென்ஷன் வாங்குவதை இது பாதிக்காது என்று. தெரிவித்ததற்குப் பிறகும் எழுந்து பேசுகிறார் என்றால்—(குறுக்கீடு) நீங்கள் தியாகிகள் சார்பாக எடுத்து வைத்த இந்தக் கருத்துக்கள் தியாகிகளின் காதில் இப்போது மூலை முடுக்கெல்லாம் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தியாகிகளை இது பாதிக்காது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, ஒரு பீரியட் இருந்தால் 250 ரூபாய். அடுத்து ஒவ்வொரு ஆண்டுக்கும் 50 ரூபாய் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. அதே நேரத்தில் கடந்த நிதி நிலை அறிக்கையின்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதுபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பஸ்ஸில் ஒரு கம்பானியனை அழைத்துச் செல்வதற்கு அரசு ஏற்றுக் கொண்டது. அன்றைக்கு, அப்படி ஏற்றுக்கொண்ட பிறகு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, அதற்கான நடைமுறையை மேற்கொள்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் அதை நடைமுறைப் படுத்தவில்லை. ஆகவே, அதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது என்று அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கி. மனோகரன்: புகை வண்டியில் செல்பவர்களுக்கு அந்த வசதி செய்து தரப்படும்; செய்து தரப்பட்டிருக்கிறது. ஆனால் பஸ்ஸில் இல்லை என்று தெளிவாக தெரிவித்ததற்குப் பிறகு, அதைத் திருப்பியும் கேட்கிறார்கள். பஸ்ஸில் கம்பானியன் இல்லை, ப்ளீஸ்.

திரு. கே. கந்தசாமி: சார், உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் பற்றி அறிவித்ததற்கு மகிழ்ச்சி தெரிவிக்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள் அளிக்கப்படும் என்று கருதுகிறேன். முன்மாதிரியாக நமக்கு முன்னால் அமைச்சராக இருந்து ஓய்வு பெற்ற திரு. கக்கன் அவர்கள் மருத்துவ வசதி இல்லாமல், வேதனைப்பட்டபோது, முதலமைச்சர் அவர்கள் உதவியதை நாம் அறிவோம். அப்போப் பட்ட தனிப்பட்ட முறையில் மருத்துவ உதவி ஏதாவது நடக்கலாம். இவர்கள் நாளை ஓய்வு பெறுகிற இந்த அமைச்சர்களும், இனிமேல் வரும் அமைச்சர்களுக்கும் என்ன நிலை? சாதாரண உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற பிறகு, மருத்துவ வசதி இல்லை என்ற நிலை இருக்கிறது. அதே நிலை தொடருமா அல்லது மாண்புமிகு திரு. கக்கன் அவர்களுக்கு கொடுத்ததுபோல், இவர்களுக்கும் மருத்துவ வசதி, மற்ற வசதிகள் செய்துதரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடை நிதி அமைச்சர் அவர்கள் பஸ்களிலே இன்னொருவரை அழைத்துச் செல்ல அனுமதிக்க இயலாத நிலை இருக்கிறது என்றுசொன்னார்கள். இப்போது கர்நாடக மாநிலத்தில் இன்னொருவரும் போகலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது, அதைப்போலவே, கர்நாடக மாநிலத்தில் இந்த ஓய்வூதியம் ஆரம்பத்திலிருந்து 300 ரூபாய் என்று இப்போது வழங்கிக் கொண்டு வருகிறார்கள். அதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, ஒரு டெர்ம் இருந்தால் 250 ரூபாய் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு ஆண்டுக்கு 25 ரூபாய் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாபகம். ஒரு ஆண்டிற்கு 50 ரூபாய் என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள் ... ... ...

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, Maximum ceiling Rs. 500. to start with Rs. 250.

திரு. துரை முருகன்: அதற்குப் பிறகு, ஒவ்வொரு வருஷத்திற்கும் 50 ரூபாய் தரப்படும் என்று சொல்லுகிறீர்களா?

[1980 பிப்ரவரி 12

திரு. கே. சுப்பு: தலைவர் அவர்களே, இதிலே ஒரு முரண்பாடு இருக்கின்றது; அதைச் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 550 ரூபாய் என்றிருக்கும்போது, டெபுடி ஸ்பீக்கருக்கு 750 ரூபாய் இருந்தது. எங்களுக்கு 750 ரூபாய் என்று ஆன பிறகு, டெபுடி ஸ்பீக்கருக்கு அப்படியே இருக்கிறது. இதனால், எதிர்க் கட்சி தலைவருக்கும் இது பாதிக்கிறது. எந்த ஒரு கமிட்டிக்கும் அட்டென்ட் பண்ணினால், பணம் கிடையாது. அவர்களுக்கு காபினட் ராங் வைத்துக் கொடுத்தால், நன்றாக இருக்கும்.

திரு எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நான் சொன்ன அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் பொது நிறுவனங்களுக்குப் பஸ் கம்பெனிகளுக்கு 50,000 ரூபாய் வரையில் கொடுத்து இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள், ஆனால், நாம் மூன்று லட்சம் கொடுக்கிறோம். ஆகவே, ஏன் இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது? டிரெயினில் கொடுத்திருக்கிறீர்கள். நன்றி. அதைவிட பஸ்ஸில்தான் அதிகம் போகிறோம். ஒரு உறுப்பினருக்கு உதவியாளர் தேவைப்படுகிறது. அது முக்கியம் என்று கருத வேண்டும். சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னீர்கள். எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது, முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களும், இதைக் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். போக்குவரத்து அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். இதிலே என்ன குறை இருக்கிறது.? ஏன் ஒரு கம்பானியனை அனுமதிக்கக் கூடாது? அந்த மாநிலத்தில் இருக்கும்போது இந்த மாநிலத்தில ஏன் அனுமதிக்கக்கூடாது?

[முற்பகல் 10–20]

திரு. ரா. மார்க்கபந்து: அந்தக் கருத்தை நானும் ஆதரிக்கிறேன். அதிகமாக ட்ரெய்னில் பயணம் செய்வதில்லை. பஸ்ஸில்தான் செல்லுகிறோம். ஆகவே, பஸ்ஸில் கம்பானியனை அழைத்துச் செல்ல மனமுவந்து இந்த அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே கந்தசாமி நானும் அதே கருத்தை வலியுறித்துகிறேன்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: சில பேருக்கு கம்பானியன் தேவைப்படுகிறது. அவர்கள் தங்களது விருப்பத்தை ஒளிவு மறைவு இல்லாமல் வெளியிட்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலோர் தன்னையே நம்பிப் போகிறார்கள் என்ற நம்பிக்கை தெரிகிற காரணத்தால் அந்த வேண்டுகோளை ஏற்பதற்கில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 12] [திரு. எம். எ. லத்தீப்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்'',

THE HON. THIRU K. MANOHARAN: Sir, I move the following mendment.

Clause 3 :

For sub-clause (1), substitute the following :—

(1) in sub-section (4)—

(a) after the expression "Every Member referred to in sub-section (1) shall", the expression "for himself and the members of his family shall be inserted.

(b) the following provison shall be inserted, namely :—

Provided that every person who had been a Member of the Legislative Assembly or of the Legislative Council or of both, but had ceased to be such Member at any time, shall subject to such conditions and during such period as may be determined by rules made by the State Government, be entitled free of charge to accommodation in the hospitals maintained by the State Government and also to medical treatment and the benefits conferred by this proviso shall not be available to the members of the family of the person referred to in this proviso".

The amendment was put and carried. Clause 3, as amended, was put and carried.

[1980 பிப்ரவரி 12

*Clause 4*

MR. SPEAKER : The question is "that clause 4 do stand part of Bill."

THE HON. THIRU K. MANOHARAN : Sir, I move the following amendment :—

In new section 12-B—

(a) In sub-section (1)

(i) For the expression "one-hundred and fifty rupees" *substitute* the expression "two hundred and fifty rupees".

(ii) In the proviso, *for* the expression "two years", *substitute* the expression "one year".

(b) In sub-section (2), "*omit*" clause (iii)

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

In clause 4, in sub-clause (1), Add the following proviso :

"Provided that the period served as a member of the Legislative Assembly of the erstwhile Travancore–Cochin State by any person representing any Constituency from the Kanyakumari District during the years 1952—1957 shall also be taken into consideration for the payment of pension under this Act".

The amendment was duly seconded.

திரு. ஜே. ஜேம்ஸ் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவாகள் இதில் இருக்கும் சட்ட. சிக்கலைப் பரிசீலனை செய்து இதுசம்பந்தமாக தேவையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்று வாக்குறுதி அளித்ததாக நினைக்கிறேன். இந்தச் சட்டச் சிக்கல் பெரிய சிக்கல் அல்ல. சட்ட அமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். உடனடியாக சட்டச் சிக்கலை ஆலோசித்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளலாம். தேவைப்பட்டால் மாலையில் நடைபெற இருக்கிற சட்டசபைக் கூட்டத்திலேயே தேவையான திருத்தத்தைக்கொண்டு வந்து பரிகாரம் தேடித் தர வேண்டுமென்ற எண்ணத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கி. மனோகரன் : நான் தெளிவாகவே எனது கருத்தைத் தெரிவித்தேன. திரு. ஜேம்ஸ் அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு இருக்க வேண்டும், அவருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதற்குமேல் அக்கறை எனக்கு இருக்கிறது என்று சொல்லாவிட்டாலும், அந்த அளவுக்கு அக்கறை எனக்கும் உண்டு, நான் உறுதியைத் தந்திருக்கிறேன். அந்தச் சட்டத்தைப் பார்த்ததற்குப் பிறகு நிச்சயமாக இந்தத் திருத்தம் தேவைப் பட்டால் செய்யலாம். இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வர வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் அவசரப்படாமல் கொஞ்சம் பொறுமையாக எனக்கும் துணை யாக இருந்தால் அடுத்த கூட்டத் தொடரில் அதைப்பற்றி ஒரு தெளிவான அறிக்கை தரப்படும் என்பதை நான் அவருக்குச் சொல்லி அவருடைய திருத்தத்தை வாபஸ் வாங்குமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.





திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது. பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980), திருத்தப் பெற்றபடி, நிறை வேற்றப்பட வேண்டும்"

என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது. சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறை வேற்றப்பெற்றது.

## ஆ. பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1980) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

---

1980, பிப்ரவரி 7ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இதுலே இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. இதைப் போன்றே அடுத்த சட்ட முன் வடிவும் இருப்பதால் விவாதத்திற்கு மற்றதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதிக்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவினுடைய நோக்கத்தை நான் வரவேற்கிறேன். 75க்கு 25 என்று கொண்டு வந்திருக்கிறார்கள். 60க்கு 40 என்பது போய் இப்போது 75க்கு 25 என்று வந்திருக்கிறது. 75க்கு 25 என்பதல்ல, 80க்கு 20 என்று கொண்டு வந்தால் கூட ஒவ்வொரு ஆண்டும் கட்டுக் குத்தகை பாக்கி இருக்கத்தான் செய்யும். பிறகு ஒவ்வொரு ஆண்டும் கடைசி காலத்திலே தள்ளுபடி செய்கிறோம் என்று கொண்டுவரத்தான் வேண்டும். அது தான் யதார்த்தமான உண்மை. கட்டுக் குத்தகைக்கு உட்பட்ட விவசாயிகள் இன்றைக்குப் பல்வேறு காரணங்களால் அதைச் செலுத்தமுடியாத நிலைமை இருக்கிறது, அப்படிப்பட்ட டிரெண்ட் இன்றைக்கு இருக்கிறது. டிரெண்ட் டெவலப் ஆகித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலே உழுபவனுக்கு நிலம் சொந்தம் ஆகவேண்டும் என்ற அடிப்படையிலே சட்டம் கொண்டுவரப்பட்டது. கேரளாவிலே பத்மநாபசாமி கோவில் நிலத்தை எடுத்து அது உழுபவனுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நீங்களும் சென்றிருந்தால் உங்களைப் பாராட்டலாம். நேற்றுக்கூட முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். இந்த அரசாங்கத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ அதற்கு உட்பட்டுச் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே 75க்கு 25 என்பதை 80க்கு 20 ஆக்கும் அதிகாரம் உங்களுக்கு இல்லையா ? இருக்கிறது. நேற்றைக்குப் பேசிய திரு. ரகுமான்கான் ''நாடோடி மன்னன்'' சினிமா படத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார். அதிலே நீங்கள் 10 சதவீதம் என்றுதான் சொல்லியிருக்கிறீர்கள். நீங்களே சொல்லி விட்டீர்கள். உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் இருக்கும் பொழுதே செய்யவேண்டும். இல்லாத போது அதிகாரம் இல்லை என்று சொல்லக் கூடாது. அதிகாரம் இருக்கும்போதே செய்யவேண்டும். அதிகாரத்தை இழந்த பிறகு அதிகாரம் இல்லை செய்யவில்லை என்று சொல்லக் கூடாது. இன்றைக்கு நீங்கள் இருக்கலாம், நாளைக்கு நாங்கள் வரலாம், வேறு யாராவது ஒரு புது ஆள் வரலாம். உங்களுக்கு இன்றைக்கு அதிகாரம் இருக்கும்போதே செய்யவேண்டும். 8 ஆண்டுக்காலம் தண்டனை ஜெயிலிலே அனுபவித்தவர்களை விடுதலை செய்யவேண்டுமென்ற



கோரிக்கையைச் சொன்னபோது அதிகாரம் இருக்கிறதா என்று பரிசீலிப்போம் எ று அமைச்சர் செயலர் திரு. ஜெயவேலு சொன்னார். திரு. உமாநாத் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். விடுதலை செய்வதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது, ஏன் செய்யவில்லை ?

[முற்பகல் 10·30]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய வேலைகளைத் தாமதப்படுத்தும்பொழுது, இந்தப் பிரச்னையில் ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் எப்படி இருக்கிறது என்று. 75–25 என்று அல்ல, 90–10 என்று போட்டால்கூட அந்த 10 வருமா என்றால் வரக்கூடிய நிலைமையில் இல்லை. குறைந்து கொண்டேதான் போகிறது. எனவே, நிலத்தை உழுபவனுக்கே சொந்தமாக்குவது எப்படி என்பதில் உங்கள் சிந்தனையைச் செலுத்த வேண்டும். உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கி விடுங்கள். அதற்காக நிர்ணயிக்கப்படவேண்டிய விலையை, நிலத்தை உழக்கூடியவர்களுக்கே சொந்தமாக்கிவிட்ட பிறகு, உழுபவர்களே நிலச் சொந்தக்காரர்களாக்கப்பட்ட பிறகு அவர்களிடத்திலேயிருந்து எப்படி ரெகவர் பண்ணுவது என்பதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். அதைத்தான் கேரளாவிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத்தான் தமிழ்நாட்டிலேயும் முன்பு கொண்டு வந்தோம். அதிலே இருக்கின்ற சில குறைகளை அல்லது முடியாத சில விஷயங்களையெல்லாம் மாற்றி வைத்துவிட்டு, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஆக்கப்பட வேண்டும். அதுதானே ஃபர்ஸ்ட், முதல் பாயிண்டு, ''நாடோடி மன்னனிலே'' உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பது. அதை இரண்டரை வருஷங்களாகியும் நீங்கள் செய்யவில்லையென்றால் அதிகாரம் இல்லையா ? அதிகாரம் இல்லை என்றால் சொல்லிவிடுங்கள். எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் அந்த அதிகாரத்தைப் பெறுவது எப்படி என்று கேளுங்கள். அப்பொழுது நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டும், செய்ய முடியும் என்ற நிலை இருக்கும்பொழுது அதைச் செய்யவில்லை. அமைச்சர் என்ன சொல்கிறார்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருக்கும்பொழுது, 1972-லே கட்டுக் குத்தகையை ரத்து செய்வது என்று கொண்டு வரப்பட்டது; அந்த அரசாங்கம் எங்களுடைய அரசாங்கம் என்றுதான் பெருமையோடு சொல்லமுடியும் என்று நேற்று அமைச்சரவர்கள்கூடச் சொன்னார்கள். நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன். உங்களுக்குஅதிலே ரொம்பப் பங்கிருக்கிறது என்று நேற்று சொன்னீர்கள். அது எங்களுடைய அரசாங்கம், அன்றைக்கு நாங்கள் அங்கு இருந்தோம்; இன்னும் சொல்லப்போனால் கலைஞர் தலைமையில்

இருந்த அரசாங்கம், அந்த அரசாங்கம் முற்போக்கான கொள்கையைக் கொண்டு வந்தது என்றால், அதிலே இன்னும் ஒருபடி முற்போக்காகப் போய் இருக்கிறதா இல்லையா என்று கேட்டார். அது முற்போக்குதான். எங்கள் அடியை ஒற்றி நீங்கள் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்று எங்களுக்கு மகிழ்ச்சி தான். எங்களைப் பின்பற்றுவதை வேண்டாமென்று சொல்ல முடியுமா? நல்ல காரியங்களில் எங்களைப் பின்பற்றுங்கள். அதைப்பற்றி வரவேற்கிறோம்; வேண்டாமென்று சொல்ல வில்லை.

இன்றைக்கிருக்கின்ற நிலைமையில் அதைவிட ஒரு படி அதிகமாகப் போய், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஆக்கப் பட வேண்டும். அதிகாரம் இருக்கும்பொழுது செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களானால் நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்போம். அதற்குப் பதிலாக 60-40 என்பதை மாற்றி, 75–25 என்று ஆக்கினால், கூட்டிக் கழித்துப் பார்த்தால், கடைசியிலே சைபர்தான். 60-40 என்று சொன்னால் என்ன அரீயர்ஸை வசூல் செய்ய முடிந்தது? அதுபோல்தான் 75–25 என்கிற பொழுதும் என்ன அரீயர்ஸ் வரப் போகிறது? அந்த அரீயர்ஸைக் கலெக்ட் பண்ண முடியுமா என்றால் கலெக்ட் பண்ண முடியாது. இங்கிருக்கும் நிலையில் வசூல் செய்ய விட மாட்டார்கள், தொழிலாளிகளையும், விவசாயிகளையும், எதிர்த்து நின்று ஒன்றும் பண்ணிவிட முடியாது. கோவில் நிலங்கள் பூரா பினாமியாக இருக்கிறது. நாங்கள் எடுக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோமே தவிர எந்த அளவிற்கு நாம் வெற்றி பெறப் போகிறோம் என்பதை யெல்லாம் இனிமேல்தான் பார்க்க வேண்டும். முடியவில்லையே இப்பொழுதே. அந்த அளவிற்கு ரொம்பக் கஷ்டப்படுகிறோம். ஆகவேதான், பிராக்டிகலாக, யதார்த்தமாக என்ன முடியும் என்பதைப் பார்த்து, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று செய்ய வேண்டும். எழுதத் தெரியாதவனுக்குப் பேனா எதற்கு என்பதைப்போல் உழ முடியாதவனுக்கு நிலம் எதற்கு என்று ஒரேயடியாக ஆக்கி விடுங்கள், பாவம், ஆசிரியர்களாக இருப்பவர்கள் வேறு வருமானம் இல்லாமல் கஷ்டத்திலே இருப்பவர்கள், அரை ஏக்கரா, ஒரு ஏக்கரா வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள், வசூல் செய்ய முடியவில்லை என்று, பல ஏரியாக்களில்; அப்படியிருப்பது எங்களுக்குத் தெரியும். என்னிடம் கூட வருவார்கள், குத்தகை பாக்கி கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள் என்று, நாங்களும் கொடுக்கக் கூடாது என்றுதான் சொல்ல வேண்டுமென்ற நிலை. வேறு வழியில்லை. நீங்களும் அதை எதிர்த்து விட முடியாது. ஓட்டு வேண்டும் உங்களுக்கும். அந்தமாதிரியான நிலைமைகளை யெல்லாம் மனத்திற்கொண்டு செய்ய வேண்டும், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பது முற்போக்கான கொள்கை. அந்த முற்போக் கான கொள்கையை நாம் இருக்கின்ற இந்தக் காலக் கட்டத்திலேயே—அது எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும்



இருக்கும், எவ்வளவு வருஷங்களாகவும் இருக்கலாம்—நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை, நல்ல காரியங்களைச் செய்யும்பொழுது ஒரு நிமிஷத்திலே கூட செய்யலாம், செய்து முடித்துவிட்டு நீங்கள் போகலாம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாபற்றி ஒரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சிகரமான திட்டம் என்று நினைத்துக் கொண்டு சில அறிவிப்புகளை இந்த அரசு தந்து கொண்டிருக்கிறது. உதராணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குத்தகைதாரர் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம் என்ற நிலையை மாற்றி மூன்று ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிப்புக் கூட தந்தது. மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா முதற் கொண்டு இந்த அவையிலே எதிர்த்ததை அமைச்சரவை அறியும். ஏன் இதை நான் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், ''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' என்பது போல எங்கே குறை இருக்கிறதோ அதை ஆராய முன்வர வேண்டும், அதைத்தான் எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லிய இலட்சியமே உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்பது தான். ஆனால் அந்த நிலைமை இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இன்னும் சொல்கிறேன், குத்தகைதாரர் இருக்கிறார், நிலவுடைமையாளர் இருக்கிறார், அரசு ஒரு காலனி கட்ட அந்த நிலத்தை எடுக்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அதற்கு நிலவுடமையாளரின் ஒப்புதலைக் கேட்குமே தவிர குத்தகைதாரரின் ஒப்புதலைக் கேட்பதில்லை. குத்தகைதாரர் அம்போ என்று சந்தியில் நிற்கிறார். குத்தகைதாரர் மீது உண்மையிலேயே இந்த அரசு இரக்கம் காட்ட வேண்டும் என்று எண்ணினால் எங்கெங்கே குறைகள் இருக்கின்றனவோ அவைகளைக் களைவதற்கு முன் வர வேண்டும். இந்தச் சட்டத்திலே குத்தகைதாரர்களுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் இடையே சச்சரவுகளை உண்டாக்கு கின்ற சூழ்நிலைதான் அமைகிறதேயொழிய சுமுகமான சூழ்நிலை உருவாகவில்லை. இந்த மன்றத்திலே பலமுறை சொல்லப் பட்டிருக்கிறது. ஏழை விதவைகள் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது என்று கேட்டால் அரசு இதைப் பரிசீலிக்கும், பரிசீலிக்கும் என்று ஆண்டுதோறும் அமைச்சரவர்கள் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். எனவே, ஆங்கங்கே குறைகள் இருக்கின்றன. நான் இரண்டு மூன்று குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். குத்தகைதாரர் ஒப்புதல் பெறாமல் நில உடமையாளர் களிடமிருந்து அரசு காலனிக்கு நிலத்தை எடுத்துக் கொண்டால், அந்தக் குத்தகைதாரர் சந்தியில் நிற்கிறார். ஏழை விதவைகள்

பெற வேண்டியதைப் பெறமுடியாமல் நிற்கின்றார்கள். இது போன்ற சட்டம் கொண்டு வருவது சிக்கலை இன்னும் அதிக மாக்கும் என்ற என் கருத்தைச் சொல்லி அமர்கிறேன், வணக்கம், நன்றி.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, நில உழுவடை செய்கின்ற குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பளிக் கின்ற இந்தச் சட்ட முன்வடிவில் எனது கருத்துக்களைச் சுருக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன். நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்கிற கோட்பாடு நல்லமுறையில் 'It sounds well in theory' என்ற ஒரு நிலையை நாம் உணர்ந்து நடைமுறைச் சிக்கலை அரசு புரிந்து செயல்பட வேண்டுமென்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலம் உழுபவனுக்குச் சொந்தம், வீடு குடியிருப்பவனுக்குச் சொந்தம், பஸ் பிரயாணம் செய்பவனுக்கே சொந்தம் என்று சொன்னால் எங்கே கொண்டு போய்விடும் என்று தெரியவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் '' ரியலிஸ்டிக் அப்ரோச் '' வேண்டும். கொள்கை அளவிலும், வாக்குப்பெறவும், நடைமுறைக்கு ஒவ்வாத கோட்பாடுகளை அரசு நிறைவேற்றுவதாகச் சொல்லி, குழப்பத்தை அதிக மாக்குகிற முயற்சி வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். காரணம், நடைமுறையில், சமுதாயத்தில், சிக்கல் அதிகமாகிக் கொண்டே போனால், இன்று, நாளை, நாம் இருக்கக்கூடிய காலம் வரையில், பெருவாரியான மக்கள் நலன் என்று, நிறைவேற்றக் கூடாததை நாம் நிறைவேற்றிக் கொண்டே போனால், சிக்கலைத் தள்ளிப் போடலாமே தவிர, அது தீர்க்க உதவாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்று சொன்னால் சென்னையிலே வக்கீல் இருக்கிறார், மதுரையிலே 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார். அவர் திடீரென்று ஆக்சிடென்டில்—எதிர் பாராத வகையில் இறந்து விடுகிறார். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்றால், அந்த வக்கீலின் பிள்ளைகள் நடுக்காட்டில் நிற்பதா ? 'What is the guarantee to be given for such an orphan family' அதற்கு அரசு ஏதாவது சிந்தனை செய்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ். அதிகாரி இங்கே இருக்கலாம். அவர் தூத்துக்குடியிலே 4 ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம். அந்த ஐ.ஏ.எஸ். ஆபீசர் இறந்ததற்குப் பின்னாலே, அந்தக் குடும்பத்தினுடைய நிலைமை என்ன வாகும், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்றால், அவர் 1/2 டஜன் பிள்ளைகளை வைத்திருப்பார். ஆண் ஒன்று, பெண் ஒன்று என்று பேசுகிறோம். ஆனால், அவர் 1/2 டஜன் பெற்றுக் கொண்டிருப்பார். அவரது நிலம் அந்தப் பிள்ளைகளுக்கு இல்லை யென்றால், அப்பிள்ளைகள் எங்கே போய் நிற்பார்கள் ? கிராச்சுவிட்டி, பிராவிடன்ட் ஃபண்ட் போன்ற பணம் எல்லாம் போதுமா அந்தப் பிள்ளைகள் வளருவதற்கு ? ஆகவே, இப்படிப் பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வராமல், அரசு எதிர்கால



சந்ததியினுடைய நலன்களைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டு மென்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'Politicians are for next election; and statesmens are for the next generation.' என்று ஜெனரல் நேத்தாஜி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல்வாதி ஓட்டு வாங்க, அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பான். தேசியவாதி அடுத்த சந்ததியைப்பற்றி சிந்திப்பான் என்று சொன்னார். ஆகவே, அருள்கூர்ந்து, அடுத்த சந்ததியைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அவசரப்பட்டு நிலம் உழுபவனுக்கே சொந்தம்—60-40 என்றிருப்பதை 75-25 என்று ஆக்கினால், 1 ஏக்கர், 1/2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் இன்னலுக்கு ஆளாவார்கள். மாண்புமிகு சுப்பு அவர்கள் வருத்தத்தோடு சொன்னார்கள்—ஓட்டு வாங்க இப்படிச் சட்டம் கொண்டு வருகிறார்கள், வருகிறோம், என்று. எங்களிடம் பலர் வேதனையோடு, குத்தகை வாங்க முடியவில்லை என்று குரல் கொடுக்கிறார்கள், வேதனைப்படுகிறேன். ஆனால் குத்தகை வாங்க முடியவில்லை. வாக்கு பெற வேண்டிய ஜனநாயக நாட்டில் இதைத்தான் சொல்ல முடிகிறது என்ற பரிதாபகரமான நிலைமையைச் சுட்டிக்காட்டினார். ஆகவே, வாக்கு வாங்குவதற்காக இப்படிப்பட்ட சட்டத்தை அவசரப் பட்டுக் கொண்டு வர வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை சார்பாக ஒரு துறை இருக்கிறது. அதன் அமைச்சராக திரு. வீரப்பன் அவர்கள் இருக்கிறார்கள். அவருக்கு தெய்வ நம்பிக்கை உண்டா, இல்லையா என்ற ஆராய்ச்சியை விட, அவர் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக நான் அறிகிறேன். இந்து அற நிலையங்களைப் பராமரிக்க பல தர்மகர்த்தாக்கள், தர்மஸ்தாபனங்கள், இந்து அறநிலையங்களுக்குப் பல ஏக்கர் நிலங்களை வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கப்பட்ட நிலங்களுக்கு நாட்டிலே பாதுகாப்புத் தரவேண்டும். அதை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்காகத்தான் சொல்கிறேன். ஆகவே, இந்து அறநிலையங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். இப்பொழுது இந்தச் சட்டம் குறுக்கிடும். செக்குலர் ஸ்டேட் என்று சொல்லிவிட்டு, மதச் சார்பற்ற நாடு என்று சொல்லிவிட்டு, மற்ற மதங்களுக்குத் தனித் தன்மையை ஒதுக்கிவிட்டு, இந்து அறநிலையங்களுக்கு மட்டும் அரசு கார்டியனாக வந்து, இங்கே நிறைய ''இன்ட்ருஷன்ஸ்'' ஏற்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10-40]

அதனுடைய விளைவு, இந்து மதத்தினுடைய புனிதத் தன்மைகள் பலகோணங்களில் சிதைக்கப்பட்டு இருக்கிறது மட்டுமல்லாமல் அவைகளைக் காப்பதற்காக இருக்கக்கூடிய நில டலன்கள்' நிரந்தரமாக இருக்கக்கூடிய சொத்துக்களும் பல கோணங்களில் பிடுங்கப்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை அருள்கூர்ந்து குத்தகை தாரர்களிடம் இருந்து பாக்கி வரவேண்டும் என்று இருந்தாலும் பாக்கிகளை நிர்தாட்சண்யமாக வசூல் செய்து அறநிலையங் களைக் காக்கவேண்டும், அதேபோல உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்ற கோட்பாட்டை இந்த விஷயத்தில் புகுத்தாமல் அந்த நிலங்கள் சொத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதற்குத் தனியாக மசோதா கொண்டுவந்து பாதுகாப்பு அளிப்பதன் மூலம் இந்து மதத்தைக் காக்கவேண்டும். இந்து மதம் என்பது யாருக்கும் விரோதி அல்ல. தர்மத்தை நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள்; அதைக் காப்பதன் மூலம் நாட்டில் நல்ல ஒழுக்கத்தையும் தர்மத்தையும் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அரசாங்கத் தரப்பிலே இருந்து கொண்டு வரப் பட்டிருக்கிற 75:25 என்ற இந்த வார நிர்ணய சட்டத்தை, அதன்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக நிற்கிறேன். ஏற்கனவே 75:25 சட்டம் கொண்டு வருவோம் என்று சென்ற கூட்டத் தொடரிலே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியதன் விளைவாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அதை வரவேற்கின்ற அதே நேரததில் ஒன்றை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 75:25 கொண்டு வந்ததைப் பற்றி பல பேர்கள் சொன்னார்கள். உழைக்கிறவனுக்கே நிலம் சொந்தம் என்ற முற்போக்குத் திட்டத்தை காங்கிரஸ் கட்சி ஆரம்பித்தாலும், காந்தியார் சொன்னாலும், இதுவரையில் அந்தக் காங்கிரஸ் கட்சி அதைப் பற்றி எந்த சிந்தனையும் செய்யவில்லை. அதோடு மட்டுமல்ல.

திட்டக் கமிஷன் கூட 80:20 கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். மாநில அரசாங்கம்தான் அதை நிறைவேற்று கின்ற பொறுப்பை ஏற்க வேண்டும் என்று தட்டிக் கழித்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்த மாநில அரசாங்கம் இதைக் கொண்டு வந்திருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் குறைந்த பட்சம் 75:25 கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்து அரசாங்கத்தை வற்புறுத்தி இன்றைக்குக் கொண்டு வந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அந்த முறையில் நிலங்கள் உழுபவனுக்குத்தான் சொந்தமாக்கப் படவேண்டும் என்ற கோரிக்கை பிரதானமாக இருந்ததால்



இன்றைக்கு உடனேநிவாரணமாகக்கொண்டு வந்ததை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. 60:40 என்பது 1966–67 லே வந்தது. ஆனால் அதற்குப் பிறகு இன்று கிட்டத்தட்ட 23, 24 ஆண்டுகள் கழிந்து கூட இந்த 24 ஆண்டுகள் மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோதும் சரி, அதற்குப் பின்னாலே இருந்த அரசும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருந்தன. இப்போது இந்த நேரத்தில் கொண்டு வந்திருப்பதை சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்றைக்கு 60:40 சட்டத்தில் வைக்கோல் கொடுக்கப்பட வேண்டும் என்ற விளக்கத்திலே சொல்லப்பட்டிருந்தது. அது இன்று ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இன்று வைக்கோல் கொடுக்கப்பட தேவையில்லை என்ற முன்னேற்றத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அன்று கரும்புக்கு விதிவிலக்கு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே விலக்கு வேண்டியதில்லை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் ஒன்றை இந்த அரசும் கூட பரிசீலிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கரும்புக்கு விதி விலக்குக் கொடுத்திருப்பதைப் போல வாழைக்கும் வெற்றிலைக் கொடிக்காலுக்கும் விதிவிலக்கு இருக்கிறது. அது கூட மாற்றப்படவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. ஏன் என்றால் அதைச் சொல்லும்போது இரண்டு ஆண்டுகள் ஆகலாம். ஆகவே அதற்கு என்ன செய்யலாம் என்றும் எப்படியும் நிர்ணயம் செய்யலாம் என்றெல்லாம் சந்தேகப் பட வேண்டியதில்லை. ஏற்கனவே 60:40 போட்ட காலத்திலேயே கூட வாரம் நிர்ணயம் எப்படி வருகிறது. அந்த விளைந்த நெல்லிலே 60:40 என்றால் எவ்வளவு. அதையும் குத்தகையாக மாற்றினார். ஆகவே ஓராண்டில் 25 சதவீதம் விளைந்தால் எவ்வளவு வரும் என்று ஒரு பாட்டத்தை நிர்ணயிக்கவில்லை. அல்லது வாரத்தை நிர்ணயிக்கவில்லை. கரும்புக்கு எப்படி எல்லாம் விதிவிலக்கு இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக் கிறதோ அதேபோல வாழைக்கும் வெற்றிலை கொடிக்காலுக்கும் அந்த விதிவிலக்கை ரத்து செய்து அதையும் கூட 75:25 என்று பெறுவதற்கு வாய்ப்பு உண்டு என்று அரசாங்கம் திருத்தம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேநேரத்தில் இன்னொன்றையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். திட்டக் கமிஷனைப் பொறுத்தவரையில் அவர்கள் 80-க்கு 20 என்று

சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் 75-க்கு 25 என்று அறிவித்திருக்கிறது. இந்த நேரத்தில் புஞ்சைக்காவது 80-க்கு 20 என்று கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இன்னும் பல மசோதாக்கள் இருக்கின்ற காரணத்தால் இத்தோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. உத்திராபதி: பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் விவசாயிகளுக்கு 60-க்கு 40 என்று இருந்த வாரத்தை 75-க்கு 25 என்று கொண்டு வந்திருக்கிற மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் 1961-ம் ஆண்டிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய நீண்டகாலப் போராட்டங்களுக்கு இடையிலே 16,000 விவசாயிகள் சிறையிலே தள்ளப்பட்ட பின்னால், அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்ட பின்னால் காங்கிரஸ் கட்சி அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை, 60-க்கு 40 என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு பெரிய போராட்டம் இல்லாமல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிசார்பாக தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு வாரத்தை இன்னும் உயர்த்தவேண்டுமென்று கேட்டோம். விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டோம். இது எங்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. அதற்காகப் போராடி வந்திருக்கிறோம்.

இந்த நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் இன்றைக்கு இந்தியாவிலே காந்தியடிகளின் பெயரைச் சொல்லி காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் பெயரால் கட்சியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற பின்னால், இந்த இந்திய நாட்டில் பரந்து கிடக்கிற பூமியை நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு, பெரும்பாலும் அடிமைகளாக இருக்கிற அரிசன மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தால் தான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். அந்த காந்தியின் பெயரைச் சொல்லித் தான் காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் 30 ஆண்டுக் காலமாக ஆண்டு கொண்டிருக்கத்தார்கள். அன்றைக்கு 22 மாநிலங்களில் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள் காந்தியின் பெயரால் கட்சி வளர்க்கிற காங்கிரஸ் கட்சி இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றவில்லை. ஆனால் இந்தியாவிலேயே கேரளத்தில் தான் முதன் முதலாக இந்தியப் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. இன்றைக்கு இந்திய பிரதமராக இருக்கிற இந்திரா



காந்தி அம்மையார் அவர்கள் அன்றைக்கு கலைத்தார்கள்; அதற்குப் பின்னால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி அணியை உருவாக்கி, அச்சுதமேனன் தலைமையில் ஆட்சி அமைத்து, இன்றைக்கு இந்தியாவிலேயே முதன் முதலாக உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது, பத்மநாப சுவாமிக்குச் சொந்தமாக இருந்த 15,000-க்கு அதிகமான ஏக்கர் நிலங்களை நிலமற்ற ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை முன் உதாரணமாக வைத்து தமிழக அரசும் 75-க்கு 25 வாரம் என்று சொல்கிறபோது-கொடுக்க வேண்டியது தான், கொடுக்கக் கூடாது என்று வாதம் பேசவில்லை. 40 வாரம் என்று சொல்லும்போதும் குத்தகை விவசாயிகள் 5 ஆண்டு காலமாக அரசாங்கக் கடன், தனியார் கடன் பெற்று, அதைக் கொடுக்க முடியாத அளவுக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது வருவாய்த்துறை அமைச்சருக்கும் தெரியும். ஆகவே, நிலச்சொந்தக்காரர், குத்தகை விவசாயி யார், யார் என்பதை அரசாங்கம் கண்டுபிடித்து, நிலத்திற்கு அரசாங்கம் ஒரு விலை நிர்ணயம் செய்து, உண்மையான நிலச் சொந்தக்காரருக்கு அரசாங்கமே அந்த விலையைக் கொடுத்துவிட்டு, அந்த நிலத்தில் குத்தகை சாகுபடி செய்கிற விவசாயியிடமிருந்து 20 ஆண்டுத்தவணைகளில் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.50)

பெரிய நிலச் சொந்தக்காரர்கள் பினாமியாக எழுதி வைத்திருந்தால் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க முடியாது என்று கேரளாவிலே கூறப்பட்டிருக்கின்றது. அதை முன் உதாரணமாக ஏற்றுக் கொண்டு அதனைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் கரும்புப் பண்ணைக் கழகம் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நிலம் எங்கே இருக்கின்றது என்று கேட்டார்கள். வடபாதி மங்கலம், தியாகராஜ முதலியார் அவர்களுக்கு 1001 வேலி சொந்த நிலமும், 1001 வேலிக்கு மேலே கோயிலுக்கு இருந்த நிலமும் ஆக 14 ஆயிரம் ஏக்கருக்கு மேலான நிலத்தை ஒரே நபர் ஆண்டு அனுபவித்து வந்திருக்கிறார். அதில் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் கூத்தா நல்லூரில் உள்ள கிட்டதட்ட 5 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலத்தை தங்களது நிர்வாகத்தில் வைத்திருக்கிறார்கள். அது இதே நிலம்தான். ஆனால் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் தஞ்சை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகத்திற்கு 84 இலட்ச ரூபாய் 5 ஆண்டுக்காலத்தில் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த நஷ்டத்தை ஏற்று இன்றைக்கு அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்தைக் கலைக்கும் தருவாயில் இருக்கின்றது. வடபாதி மங்கலத்தில் பல ஆண்டுக்காலமாக ஆயிரக்கணக்கான அரிசனக் குடும்பங்கள் தியாகராஜ முதலியாருக்கு அடிமைகளாக, உழைத்து

உழைத்து ஓட்டாண்டிகளாக ஏழை எளியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் கலைக்கப்பட்டால் அந்த நிலத்தை உழுகின்ற அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உடனடியாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குத்தகை விவசாயிகளுக்கு 5 ஏக்கருக்கு மேல் 2 ஏக்கர் என்று இருந்தால் அதை எடுத்து நிலமற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறீர்கள். அது நியாயம் இல்லை. பினாமி இல்லாமல் உண்மையிலேயே 5 ஏக்கர் குத்தகை நிலத்தை ஆண்டாண்டு காலமாக வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும். ஆகவே, அந்த மசோதாவை நிறைவேற்றாமல் அதனை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு அமருகிறேன், நன்றி. வணக்கம்.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> தலைவரவர்களே, தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவின் மீது நான் எனது கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்,

60-க்கு 40 என்று முன்பிருந்த நிலையை மாற்றி இப்போது 75-க்கு 25 என்று ஒரு புதிய நிலையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஜனநாயகத்தின் முன்னோடியாக, தொடர்ந்து எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றைச் சட்டத்திற்கு உட்பட்டு எந்த அளவிலே நாட்டுமக்கள் எதிர்பார்க்கிறார்களோ அந்த அளவில் நல்ல திட்டத்தை நாசுக்காக இதிலே புகுத்தி நல்ல பல வெற்றிகளை நிறைவேற்றக்கூடிய வகையில், விவசாயிகள் வரவேற்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. இதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதனை வரவேற்கிறேன். இங்கே பேசுகின்றபோது நண்பர் திரு. சுப்பு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் நல்லதைப் பின்பற்றுங்கள், நாங்கள் கூட பல திட்டங்களைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அவ்வாறு கொண்டுவரப்படும்போது நாங்களும் இருந்தோம் என்பதையும் நிச்சயமாக நல்லதை தொடர்ந்து செய்வோம் என்பதையும் சொல்லி அதேநேரத்தில் தீயவைகளைக் களைவோம், நாங்கள் ஒன்றாக இருக்கின்றபோதே ஏற்பட்ட தீமையாயினும் களைவோம் என்பதையும் தீயவைகள் என்றால் அதை எதிர்த்துப் போராடக்கூடிய நிலையிலே இருப்போம் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து இங்கே நான் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தாக வேண்டும். பொதுவாக தமிழகமானாலும் சரி, இந்திய துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னாலும், நித்தம் நித்தம் பட்டா வழங்குகிறோம் என்று சொல்லக்கூடிய கதை தொடர் கதையாக இருக்கின்றது. இது இருக்கத்தான் வேண்டுமா ? நாட்டுமக்களுடைய இனப்பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. நிலப்பெருக்கம் அதிகமாகின்றதா என்று கேட்டால் இல்லை. கூடுதலாக ஆவதற்கு வழிவகை கிடையாது. ஆகவே ஆண்டுக்காண்டு, மாதாமாதம், வாராவாரம், நாளுக்குநாள் பட்டா கொடுக்கின்றோம் என்று சொல்லப்படுகின்ற நிலை இருக்கின்றதே, இது மாறவேண்டும்.

அரசுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு, பினாமி எவ்வளவு, புறம்போக்கு நிலம் என்று சொல்கிறார்களே அது எத்தனை வகை, எவ்விதம் இருக்கின்றது என்று மாவட்ட வட்ட அளவிலே நாம் ஒரு முழுமையான கணக்கை எடுத்து எவ்வளவு அரசு நிலம் இருக்கின்றதோ அதைக்கொடுத்துவிட்டோம் என்று முற்றுப் புள்ளி வைக்கின்ற ஒரு நிலை வந்தால் ஒழிய, 'அவள் ஒரு தொடர்கதை' என்று சொல்லக்கூடிய வகையில் இந்த நிலம் கொடுப்பது ஒரு தொடர்கதையாகிக் கொண்டிருந்தால் இந்தப் பிரச்சினை முடிவு பெறாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும். அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட அளவில், வட்ட அளவில் அரசுக்குச் சொந்தமான, பட்டா கொடுக்க வேண்டிய அளவுக்கு வாய்ப்புள்ள நிலங்களினுடைய மொத்தக் கணக்கு எடுத்து, மாவட்ட வாரியாக அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால்தான், இலாக்கா பெருகிக் கொண்டே போவதும், அதற்கு அரசு அலுவலர்கள் பெருகிக் கொண்டே போவதும், அரசு பல வழிகளில் பணம் செலவழிக்க வேண்டியிருக்கக் கூடிய நிலைமையும் கூட குறையும் என்பது என்னுடைய தாழ்மையான, திடமான அபிப்பிராயம் ஆகும். அந்த வகையில் அதை நாம் மாற்றியமைத்தால் ஒரு முன் உதாரணமாக இந்தியத் துணைக்கண்டத்திலேயே அப்படிப்பட்ட ஒழுங்கினை தேவையான பிரச்னையை காற்புள்ளி, அரைப்புள்ளி என்று சொல்கிற நிலைமையிலே இல்லாமல் முற்றுப்புள்ளி வைக்கின்ற நிலை ஏற்படும். அதற்கு அரசு முன் வரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்வதும், அப்படிப் பார்த்தால் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொன்னால், குடியிருப்பவர்களுக்கே வீடு சொந்தம், வண்டியிலே செல்லக்கூடியவனுக்கே பஸ் சொந்தம் என்ற வாதம்

எல்லாம் வந்தது. நான் இரண்டையும் சொல்லத் தயாராக இல்லை. என்னைப் பொறுத்தவரையில் ஒரு ஆலோசனையாக அரசுக்கு இதைச் சொல்லிக் கொள்ள முன்வருகிறேன். அரை ஏக்கர் நிலம் கொடுக்கின்ற காரணத்தினால் ஒரு தரித்திரனாக இருக்கக்கூடியவன் தர்மவானாக மாற முடியாது. மிகப் பெரிய வளர்ச்சியும் பெற்றுவிட முடியாது. அதே நேரத்தில் 50 ஏக்கர் ஒருவனுக்குச் சொந்தமாக இருந்தால், அது கூட ஒரு நல்ல ஆரோக்கியமான ஜனநாயக அரசியல் என்று சொல்லிவிடவும் முடியாது. இந்த இரண்டு நிலைகளையுமே நோக்கி நல்ல பிரச்னைக்கு நாம் கொண்டு வருவோம். நிலம் நாட்டிலே இருக்கிறது. யார் யார் பெயரிலோ இருக்கிறது. எந்தெந்த கடவுளின் பெயரிலோ இருக்கிறது. அந்தக் கடவுளுக்கு என்று எதற்காக அப்பொழுது நிலம் வழங்கப்பட்டதோ அந்த பிரச்னை முடியவில்லை என்று கருதினால், அது நல்ல முறையில் சீர்படுத்தப் படவில்லை என்று கருதினால், அது நல்ல முறையில் இயங்க வில்லை என்று கருதினால், அது நாட்டு மக்களுக்குத் தேவை யற்றது என்று கருதினால். தேவையான நல்ல பயன்களை உருவாக்கவில்லை என்று கருதினால் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற நிலையிலே அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது போன்ற நிலங்களைக் கூட்டுறவுத் துறையிலே பயன்படுத்துவது என்று கொண்டு வரவேண்டும். ''ஒத்தை குடித்தனம் பத்து காணியில் உழுது பாடுபட முடியாது; ஒரு பத்து குடித்தனம் நூறு காணியில் பாங்காய் உழுவதுதான் தோது'' என்று சொல்லப்படுகிற தத்துவத்தின் அடிப்படையில் அது போன்ற நிலங்களை கூட்டுறவுத் துறையில் அந்தந்த கிராமங் களிலே இருக்கக் கூடியவர்கள் முறையாக பயிரிட்டு, கிராம வளர்ச்சி, நகர வளர்ச்சி, மாவட்ட வளர்ச்சி, வட்டவளர்ச்சி என்ற அடிப்படையிலே, உற்பத்தியும் குறையாது, மக்களும் சுபிட்சம் அடைய முடியும்' நாட்டிலே இருக்கிற யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது என்ற நிலை வரும், அதற்கு வேண்டிய வழி வகைகளை செய்ய அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் நாம் என்ன எதிர் பார்க்கிறோமோ அந்த சுபிட்சமான நிலை வர முடியும். அவைகளையெல்லாம் தொடர்கதையாக இல்லாமல், பட்டா கொடுப்பதிலே 60க்கு 40 இப்பொழுது 75க்கு 25 அதற்கு பிறகு உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று வாதங்கள் எல்லாம் இல்லாமல் போராட்டங்கள் எல்லாம் இல்லாமல் நாட்டில் தேவையான நல்ல அமைதியான சூழ்நிலையும் வளர்ச்சிப் பெறக் கூடிய வகையில் அமையும் என்பதை அரசுக்கு ஆலோசனையாகச் சொல்லி, ஆயினும் இந்த நேரத்தில் இது போன்ற தீவிரமான



திட்டத்தின் அடிப்படையான முன் உதாரணமாக நல்லதொரு சட்டத்தினைக் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த 2 மசோதாக்களின் அடிப்படையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இரண்டு மசோதாக்களிலும் 2-வது பிரிவான அரசியல் அமைப்புச் சட்டத்தின் 4-வது பிரிவிலே உள்ள கோட்பாடுகளை நிறைவேற்று கின்ற அடிப்படையிலே இந்த 2 சட்டங்களும் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய 4-வது பிரிவு Directive Principles of State Policy இதிலே பல்வேறு பொருளாதார கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும், பல்வேறு சீர்திருத்தங்களை நிர்ணயிக்க வேண்டும் என்று, அரசியல் அமைப்பு சட்டத்தின் 4-வதுபிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த 2 மசோதாக்களும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. பொதுவாக இந்த Directive Principles of State Policy யை பொறுத்தவரையில் பல்வேறு சீர்திருத்தங்களை சட்டத்தின் மூலமாக செயல்படுத்த முடியாத அளவுக்கு இருந்தது. அதைத்தான் 42-வது பிரிவு அரசியல் சீர்திருத்த திருத்தச் சட்டத்தின் மூலமாக அந்த குறைபாடுகள் நீக்கப்பட்டது. ஆனால் மத்தியிலே 2 ஆண்டுகள் ஆட்சி செய்த ஜனதா ஆட்சி 42-வது பிரிவின் அடிப்படையிலே நல்ல பல சட்டங்களைக் கொண்டு வரக்கூடிய வகை செய்திருந்ததை மாற்றி அமைத்து விட்டார்கள். பிரிவு 44, 45-வது சட்டங்களின் மூலமாக மாற்றி அமைத்து விட்டார்கள். அது ஒரு பெரிய குறைபாடு.

(முற்பகல் 11.00.)

இந்தச் சட்டங்களை எல்லாம் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். பல்வேறு சட்டங்களை, சீர்திருத்தமான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும், புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று சொல் கிறார்கள். அதே நேரத்தில் 42-வது அரசியல் சட்டத் திருத்தச் சட்டத்தில் இல்லாத ஒரு சூழ்நிலை, கோர்ட் அங்கே தலையிட்டு நிச்சயமாக இந்தச் சட்டங்களுக்கு ஒரு தடை விதித்துவிடும் என்பதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் மூலம் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 60-40 ஆக இருந்த நியாய வாரத்தை 75-25 ஆக உயர்த்தியதை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. ஆனால் அதே நேரத்தில் தனியாருடைய நிலங்கள் பொறுத்து-அவர்களை திருப்தி செய்ய நினைத்து 75-25 ஆக மாற்றியிருக்கலாம், அதை விட அதிகமாக மாற்ற வேண்டுமென்றால் அந்தத் துறையில் கை வைக்காவிட்டாலும் பப்ளிக் ட்ரஸ்ட், பொது நிறுவனங்கள்,

கழகங்கள், அந்தக் கழகங்களுக்குச் சொந்தமான வேளாண்மை நிலங்களைப் பொறுத்தவரையில் 90–10 ஆக மாற்றலாம் என்ற யோசனையை காங்கிரஸ் கட்சி சார்பில் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அந்தக் கழகங்களில் பொறுப்பை ஏற்றிருக்கும் அந்த பப்ளிக் ட்ரஸ்ட் பொறுத்தவரை ஒரு பெரிய கருத்து இருக்கிறது. கோவில் நிலங்களை எல்லாம் அந்தக் குத்தகைதாரர்களுக்குக் கொடுத்துவிடலாம், அந்த ஏழை எளிய மக்களுக்கு அவர்களுக்கே அந்த நிலங்களை விலைக்குக் கொடுத்துவிடலாம் என்ற ஒரு பெரிய கருத்து இருக்கிறது. அந்த அளவிற்குப் போகாவிட்டாலும் 75–25 தனியார் நிலங்களுக்கு இருந்தாலும் 90–10 நியாயவாரம் பப்ளிக் ட்ரஸ்ட் லான்ட்ஸ்க்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டு என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

அடுத்தபடியாக, சிறிய நிலச்சொந்தக்காரர்கள், இரண்டு மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் அவர்கள். அந்த நிலங்களைப் பூர்வீக நிலங்களாகப் பெற்றிருந்தாலும் கூட அந்த நிலங்களில் இருந்து எந்தவித வருமானமும் பெறாமல் அவர்கள் நகரங்களில் இருக்கிறார்கள். அதில், குத்தகைதாரர்கள் கூட அதிலிருந்து வரக்கூடிய வாரத்தை, அவர்கள் கொடுக்க வேண்டிய வாரத்தை நல்ல முறையில் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். குத்தகைதாரர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு கஷ்டங்கள் காரணமாக அவர்கள் செலுத்த முடியாமல் இருக்கிறர்கள். அதே நேரத்தில் சிறு நிலச் சொந்தக்காரர்கள் அவர்களின் நிலங்களின் பலனை அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். பெரிய பணக்காரர்களைப் பற்றி அல்லது பெரிய நிலச்சுவான்தார்களைப் பற்றிச் சொல்லவில்லை. சிறு நிலச் சொந்தக்கரரர்களின், நகரங்களில் இருப்பவர்களின் அந்த நிலங்களை அரசே எடுத்துக்கொண்டு அதை அந்த குத்தகைநாரருக்கே சொந்தமாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி இது ஒரு நல்ல முற்போக்கான சட்டம், 60–40 என்பதை 75–25 ஆக மாற்றியிருப்பதை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, 60—40 என்பதை 75—25 ஆக குறைக்க வேண்டும் என்று குறைக்கபட்டிருக்கிறது. இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். சென்ற முறை இந்த சப்ஜெக்ட் டிஸ்கஷ்னுக்கு வருகிறபோது நான் குறிப்பாகச் சொன்னேன். கோவில் நிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாதபடி செய்ய வேண்டும் என்று. காரணம், ஏற்கனவே நான் கேட்டுக்கொண்டிருப்பது போல் ''கல்டிவேட்டிங் டேனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்'' கோவில் நிலங்களுக்குப் பொருந்தாத நிலையில் நீங்கள் விதிவிலக்குத் தரவேண்டும் என்று கேட்டேன். ஏன் 60 – 40 ல் இருந்து கோவில் நிலங்களுக்கு விதிவலக்கு அளிக்கவேண்டும் என்று



கேட்டேன். காரணம் கோவில்களை நம்பியிருக்கிற மக்கள் எனக்குத் தெரிந்தவரை தமிழ்நாட்டில் பத்து லட்சத்துக்கு மேல் இருக்கிறார்கள். இந்த நிலங்களிலிருந்து வருமானம் வந்தால்தான் அதைக் கொண்டு சாப்பிடுகிற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். பலருக்கு ஆறு மாதம், ஏழு மாதம் கூடச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்கள் பல இருக்கின்றன. ஆகவே கோவில் நிலங்களில் பயிரிடுகிற நான்கு குத்தகைகாரர்களுக்கு நாம் உதவி செய்கிறபோது அதற்குப் பின்னாலிருக்கிற லட்சக் கணக்கான ஜீவன்களை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் இந்தச் சட்டம் கோவில் நிலங்களுக்குப் பொருந்தாது என்கின்ற ஒரு நிலமையில் இந்த அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நேற்று சட்டத்தில் சொன்னதைப் போல் குத்தகை நிலங்களின் அளவைக் குறைக்கவேண்டும். சொந்தமாகப் பயிரிட வேண்டுமென்று நினைக்கிறவர்கள் கணவனை இழந்த கைம் பெண்கள் இருந்தால் அல்லது அதிகாரத்திலிருந்து ரிட்டயராகி வந்தால், அந்த நிலத்தை நம்பியிருக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற வகையில் இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றிருப்பதால் எல்லாவற்றையும் ஒருசேர நினைத்து ஒருசேர கன்ஸிடர் செய்து தேவையான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மசோதாக்கள் அவையினுடைய ஆய்விற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாக்களினுடைய நோக்கங்களைச் சொல்லும்போது, ஏற்கனவே மத்திய அரசு குறித்திருக்கின்ற சில வழிகாட்டுதல் கொள்கையை நிறைவேற்றும் வகையிலும், குறிப்பாக அரசியல் சட்டத்தின் 4வது பாகம், அதிலேயும் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதி 39, 46 இவைகளின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்ற வகையில் இந்த மசோதாக்கள் இன்றைக்கு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. விதி 39–ஐப் பார்த்தால், இதிலே முக்கியமாகச் சொல்லப்பட்டிருப்பது,

''that the citizens, men and women equally have the right to an adequate means of livelihood'' adequate means of livelihood.

வாழ்க்கை சாதனங்களுக்காக, போதிய ஆதாரங்களை இந்த நாட்டிலே எந்தப் பிரஜையாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பெறுவதற்கான

வசதிகளை, வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. அதேமாதிரி,

"that the ownership and control of the material resources of the community are so distributed as best to subse've the common good''

நம்முடைய உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் சமுதாய மக்களிடையே பொதுநலம் பேணுகின்ற வகையில் பிரித்துத் தருவதற்குச் சட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பது இன்னொரு விதியாகும். இப்படி இதிலே பல்வேறு வகையான சமூக நீதியை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இப்போது இந்தச் சட்டத்தின் வாயிலாக, முக்கியமாக 60–40 என்றிருந்ததை, இப்போது 75–25 என்ற சதவிகிதத்தில் மாற்றியிருக்கிறார்கள். அப்படி மாற்றுவதற்கான சட்டம்தான் இது. இப்படி மாற்றுவதை ஒட்டுமொத்தமாகச் செய்திருக்கிறார்கள். ஒரு பர்ஸ்பெக்டிவ் அசெஸ்மென்ட் செய்யாமல், யார் யார் ந்த எந்தச் சூழ்நிலையிலே இருக்கிறார்கள் என்று ஒவ்வொருவருடைய சூழ்நிலையும் பார்க்காமல், எந்தெந்த அளவுக்கு இதனால் சாதக பாதகங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை எல்லாம் ஆய்வு செய்யாமல் ஒட்டுமொத்தமாக, எல்லோருக்கும் பொருந்தும் வகையில் இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது வேதனைக்குரியதாகும். சட்டத்தின் அடிப்படையான நோக்கம் வரவேற்கக் கூடியதாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இருக்கக் கூடியவர்கள், 75—25 என்று பிரிக்கும்போது, அது அவர்களுக்கு அவ்வளவு பாதகம் ஏற்படக்கூடியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் சமுதாயத்தில் சில பிரிவினர், நலிந்த பிரிவினர், வாழ்க்கைக்குரிய வருமான சாதனங்கள் இல்லாத பிரிவினர், இந்த நிலம் ஒன்றையே வருமானமாக வைத்துக் கொண்டு வாழக்கூடிய சில பிரிவினர், வேறு வழிவகை இல்லாதவர்கள், வக்கற்றவர்கள், உதவியற்றவர்கள் சில பேர்கள் இருக்கலாம்; அப்படி இருக்கிறார்கள். அவர்களுக்கும் இதே விதி என்று சொன்னால், இந்த அனாதைகள் வசதியற்றவர்கள் இந்தச் சூழ்நிலையைச் சமாளித்து, தங்களை தக்கவைத்துக் கொள்ளும் நிலைமைக்கு முடியாமல் போகலாம், இந்தச் சூழ்நிலையில் அவர்கள் அடிப்பட்டு போகலாம். இதிலே விதவைகள், அனாதைகள் பென்ஷனர்கள், அதே நேரத்தில் குறைந்த வருமானம் இருந்து, இந்த வருமானம் ஒன்றையே நம்பியிருப்பவர்கள்; குறைந்த வருமானத்தோடு இதன் மூலம் சரி செய்து கொள்ளலாம் என்றிருக்ககூடியவர்கள், இப்படியெல்லாம் இருக்கக்கூடிய மக்களுக்கும் இதே விதி என்று சொன்னால், இது ஆர்டிகல் 39-ல் என்ன குறிக்கப்பட்டிருக்கின்றதோ, அதற்கு அடிப்படையிலே இது விரோதமானது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்



அரசு துறையினர் இதை கவனித்துப் பார்க்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, 'ஈகுவல் பர்டன்' என்று வரும்போது, 'ஈகுவல் கபாசிடி' இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதுதான் சோஷியல் ஜஸ்டிஸ் என்று சொல்லப்படுகிறது. ஆக, ஆர்டிகல் 39 என்ற இந்த விதியிலே, அரசு அதுவும் பொறுப்பிலே இருப்பவர்களிடத்திலே, அவர்கள் சட்டங்களை இயற்றும்போது, அந்தப் பொறுப்புள்ள, அந்த தன்மையை சமுதாயம் எதிர்பார்க்கிறது:சட்டம் எதிர்பார்க்கிறது.

[முற்பகல் 11—10]

நீங்கள் ஆர்டிகில் 39-ஐ சுட்டிக்காட்டி அதிலே எந்த நோக்கம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்திற்கே மரண அடி கொடுக்கிற காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறீர்கள். அது சமுதாயத்திற்கு நன்மை செய்யாது, சமூக நீதிக்கு வழிவகுக்காது என்று கூற விரும்புகிறேன். ஆர்டிகில் 40-ஐ சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதன்படி என்ன செய்ய வேண்டும்? நலிந்தவர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், மலை ஜாதி மக்கள் மேம்பாட்டுக்கு வழிவகை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தின் வாயிலாக எதைச் சாதிக்கப் போகிறார்கள்? ஷெட்யூல்டு காஸ்ட்ஸ், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் சமூகத்தினரில் யாருக்குமே நிலம் இல்லை, அவர்கள் ஆப்சன்டி லாண்ட் லார்டாக இல்லை என்பது உங்களுடைய அனுமானமா? அதைத்தான் சொல்ல வேண்டும். குறிப்பாக ஷெட்யூல்டு காஸ்ட்ஸ், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் பிரிவினருக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தைப் போக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்வது ''ஆர்னமென்டல்'' என்று சொல்வார்களே அந்த வகையில் சட்ட முன்வடிவை அழகுபடுத்துவதற்குரிய முறையில் அமைந்திருக்கிறது. இதனால் எல்லா மக்களுக்கும் சமநீதி கொண்டு வரும் நோக்கம் நிறைவேறாமல் போகும். உழுபவனுக்கே நிலம் என்று சொல்லுகிறார்கள். அப்படியாவது கொண்டு வந்து விடுங்கள். உழுபவனுக்குத்தான் நிலம் என்று சொல்லிவிட்டால் நிலத்தை நம்பி வாழ்கிறவர்கள் இனிமேல் நிலத்தை நம்பக் கூடாது என்ற நிலமைக்கு வருவார்கள். விதவைகள், அனாதைகள் வைத்திருக்கும் நிலத்தை எடுத்து சப்ஸ்டான்ஷியலாக அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுத்துவிட்டு அந்த நிலத்தை எல்லாம் எடுத்து உழுபவனுக்குக் கொடுத்துவிடுங்கள், அப்படிச் செய்யாமல் நிலம் வைத்திருப்பவர்கள் சாகவும் கூடாது, இருக்கவும் கூடாது என்ற நிலைமைக்குக் கொண்டு போகிறார்கள். உழுபவனுக்கு நிலம் என்ற தத்துவத்தை நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார்கள் அந்தத் தத்துவத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்போது 25 சதவிகிதத்தைப் பெறுகிற நிலச் சொந்தக்காரன் லான்ட் ரெவின்யூ கட்ட வேண்டும். நிலத்திற்கு என்னென்ன கிஸ்திகள் கட்ட வேண்டுமோ அதையெல்லாம் கட்ட வேண்டும். இதிலே ஒரு சட்டப்

பிரச்சினை வருகிறது. எவன் நிலத்திற்கு கிஸ்தி கட்டுகிறானோ அவன்தான் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்பது அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் சட்டத்தின் நிலைமை: —

You have no access to the tenants and tiller of the soil as much in so far as the land revenue from a particular person is collected and that person alone so far as your purpose is concerned, is the perfect landlord. As the tiller of the soil you have no business to interfere in his right as the owner of the land.''

இதுதான் சட்டம். இப்படி சட்டத்தில் இருக்கும்போது நீங்கள் 25 பங்குதான் அவன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறீர்கள். அவன் லான்ட் ரெவின்யூ கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்தச் சட்டம் காலணாவுக்கு மதிப்புப் பெறாது. கோர்ட்டுக்குப் போனால் தூக்கி எறிவார்கள். அப்படிப்பட்ட ஓட்டை உடைசல் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள்.

''You have no right to say that I should pay the land revenue and at the same time that I should pay 75% of the gross produce''

என்று சொல்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. ஆகையால் அதை நீங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்,

அடுத்து மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் ஒரு பேச்சைப் பேசியிருக்கிறார்கள். அருள்மிகு மாரியம்மன் கோயிலில் நடைபெற்ற திருப்பணிக்குப் பிறகு ஒரு விழாவிலே பேசியிருக்கிறார்கள். கும்பாபிஷேகம் நடைபெற்ற பிறகு நடந்த விழாவிலே பேசியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் கோயில்கள் அத்தனையும் பணியாற்றுகிற பணியாளர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க யோக்கியதை இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. பல வருஷங்களாக பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காத இழிநிலை தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கோயில் நிலங்களில் குத்தகைகாரர்களாக இருப்பவர்கள் சட்டப்படி கோயில்களுக்கு, டிரஸ்டுகளுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகையைக் கொடுப்பதில்லை, பல ஆண்டுகளாகக் கொடுப்பதில்லை, இப்போது வருகின்ற வருமானம் போதவில்லை, ஆகவே பணியாற்றுகின்ற கோயில் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஆகம விதிகளின் படி பூஜைகள், புனஸ்காரங்கள் செய்ய முடியவில்லை, ஐந்து வேளை பூசைகள் நெய்வேத்தியங்கள் நடக்க முடியாத சூழ்நிலை இப்போது இருக்கிறது. அதைப்பற்றி பேசினால் அரசியல்வாதிகள் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று பேசி அதைத் தடுத்துவிடுகிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் அப்படி வெளியே பேசினால் என்ன





பிரயோசனம்? இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரப்படுகிறது உள்ளே, ஆனால் வெளியே அரசியல்வாதிகள் தலையிடுகிறார்கள் என்று பேசுகிறார்கள். வெளியே அப்படிப் பேசிவிட்டு உள்ளே அரசியல் காரணங்களுக்காக இதைக் கொண்டுவந்தால் சரியாக இருக்கிறதா? இப்படிப்பட்ட இழிநிலையைப் போக்குவதற்காக நிச்சயமாக சிந்திக்க வேண்டும். இது பிராக்டிகலாக இல்லை. நிலத்தை வைத்திருக்கிறவன் லேன்ட் ரெவின்யூ கட்டுகிறான். (குறுக்கீடு) திரு. அழகர்சாமிக்கு நிலம் இருக்கலாம், அவர் குத்தகைக்கு விட்டிருக்கலாம்................

<u>திரு ஆர். சி. சுப்பிரமணியம்</u>: தலைவர் அவர்களே, திரு லத்தீப் அவர்கள் பேசும்போது இந்து கோயில்களில் 5 கால பூசைகள் நடக்கவில்லை என்று சொன்னார்கள். அது தவறு, 6 கால பூசைகள் என்று அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு எம். ஏ. லத்தீப்:</u> ஒரு கால பூசைக்கே வழிவகை இல்லை என்று சொன்னால் குறைந்தபட்சம் 2 கால பூசைகள் நடத்தட்டும், 5கால பூசைகள், 6 கால பூசைகள் எல்லாம் பிறகு பார்க்கலாம். ஆகம விதிகளின்படி இன்றைக்குக் கோயில்களில் பூசைகள் நடைபெறவில்லை. பூசைகள், புனஸ்காரங்கள். நெய்வேத்தியங்கள் நடைபெறவில்லை என்ற ஒரு கருத்தை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு அக்கறை இருந்தால் 2 கால பூசைக்கு முதலிலே ஏற்பாடு செய்யுங்கள். இப்போது இருக்கிற நிலைமைப்படி ஒரு கால பூசையைக்கூட நடத்த முடியாத நிலைமை, பணியாற்றுகின்ற பல்வேறு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அங்கே இருக்கின்ற ஓதுவார்களுக்குக் கூடச் சம்பளம் கொடுக்கப்பட முடியவில்லை. அந்த ஓதுவார்கள் எல்லாம் ஓதுகிறார்களா அல்லது புலம்புகிறார்களா என்று தெரியாத நிலைமை இருக்கிறது. நான் இப்படிச் சொல்வதற்காக பக்தர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

<u>திரு. சோ. அழகர்சாமி:</u> திரு. லத்தீப் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அந்தக் கோயில் நிலங்களிலே சாகுபடி செய்கிறவர்கள் 3 வேளைகள் சாப்பிடுகிறார்களா அல்லது ஒரு வேளை சாப்பிடுகிறார்களா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடவுள் எத்தனை வேளைகள் சாப்பிடாமல் இருந்தால் அதனால் பாதிக்கப்படுவதில்லை, ஆனால் அதிலே பாடுபடுகிறவன் பாதிக்கப்படுகிறான். இஸ்லாம் நீதிப் பிரகாரம் குத்தகை, வட்டி வாங்குவது எல்லாம் தவறு என்று சொல்லவில்லையா? அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

[1980 பிப்ரவரி 12

திரு எம். ஏ. லத்தீப்: ஆதியிலிருந்தே நான் சொல்லி இருக்கிறேன், எல்லோருக்கும் ஒரே நீதிதான் இருக்க வேண்டும், சமநீதியைத்தான் நான் வரவேற்கிறேன். நம்முடைய மக்கள் பொதுவாக பௌதீக பலனினால் திருப்தி அடையக்கூடிய மக்கள் இல்லை. அவர்களுக்கு ஆத்ம திருப்தி தான் வேண்டும். ஆத்ம பட்டினியை, ஆத்ம பசியை அவர்களுக்கு ஏற்படுத்துவதாக இருந்தால் சரியாக இருக்காது. ஆத்ம பசியைப் போக்குவதற்கு அதன்மூலம் அவர்கள் திருப்தியடையக்கூடிய முறையிலே செயல் படவேண்டும். சாமிக்கு நெய்வேத்தியங்கள், பூசைகள் செய்து ஆத்ம திருப்தி அடையக்கூடிய மக்கள் நம்முடைய நாட்டிலே நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்.

திரு என். கிட்டப்பா: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு லத்தீப் அவர்கள் 5 கால பூசை, 6 கால பூசைகள் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். 75-க்கு 25 என்று ஆக்கப்படுவதை வேறு வகையில் அவர்களுடைய கண்ணோட்டத்தின்படி எடுத்துச் சொன்னார்கள். இருப்பினும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இந்த அவையிலே பல்வேறு முறைகளில் என்னைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கோயில்களுக்கு நிலங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்தக் காரணத்திற்காக நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்களோ அந்த எண்ணம் செல்லுபடியாகவில்லை, நடைபெறவில்லை. 5 கால பூசைகள், 6 கால பூசைகள் நடைபெறவில்லை அதற்குக் காரணம் விளைச்சல் இல்லை என்று சொன்னார்கள். இதையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே அவையிலே ‘‘ ஒரு துளி நிலம் கூட கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கக் கூடாது, ஆனால் கோயில் காரியங்களுக்குத் தடை இருக்கக் கூடாது, அத்தனை நிலங்களும் அவைகளில் நேரடையாக உழுது பயிரிடுகிறவனுக்கு, உழுபவனுக்கு சொந்தம் ஆக்கப்பட வேண்டும் ’’ என்று சொன்னார்கள். இந்த அரசு ஏற்றுக்கொள்கிறதா? மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

திரு எம், ஏ. லத்தீப்; பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். நான் ஏற்றுக் கொள்கிறேனா இல்லையா என்பது அல்ல பிரச்சினை. நாட்டிலே உள்ள பிரத்யட்சமான நிலமைகள் அப்படியிருக்கின்றன. ஆகவே, இது பாரதூரமான தன்மை வாய்ந்த பிரச்சினை. இதிலே நான் பேசும்போழுது மிகவும் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். திரு. கிட்டப்பா அவர்கள்



1980 பிபரவரி 12] [திரு. எம். ஏ. லத்திப்]

இதைப் புரிந்துக்கொண்டு என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், இந்த இக்கட்டான நிலையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதைவிட, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஓட்டுமொத்தமாகக் கொண்டு வந்து விடுங்கள் என்று முதலிலேயே பேசும்பொழுது சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் பிராக்டிகல் டிஃபிகல்டீஸைப் பார்க்க வேண்டும், பிரத்யட்ச நிலைமைகளைப் பார்க்கும்பொழுது சில கஷ்டங்கள் இருக்கின்றன. நீங்கள் ஆயிரம்தான் சொன்னாலும், அது அவரவர்களின் மனப்போக்கைப் பொறுத்ததாக இருக்கிறது. உங்களுடைய மனப்போக்கிலே நான் தலையிட விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரையில், சமுதாயத்தின் மனப்போக்கு எப்படியிருக்கிறது என்றால்,அவர்கள் ஆத்மீகத் துறையை மிகவும் மதிக்கிறார்கள். ஆகவே, ஆத்மீகப் பட்டினியை நாட்டில் ஏற்படுத்தாதீர்கள் என்று சொல்லிக் கொள்வதுதான் என்னுடைய கடமையே தவிர, சரியா தவறா என்று சொல்வது வேறு விவகாரம். அதிலே நான் போகத் தயாராக இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை மதிக்கக் கூடியவன் நான். அது வேறு விஷயம். இன்றைக்கு மக்களின் பிரதிநிதி என்ற முறையில் பேசும்பொழுது, என்னுடைய தொகுதி மக்களில் கணிசமானவர்கள் குறிப்பிட்ட கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட பெரும்பான்மையான மக்களின் கருத்து என்று சொல்கின்ற பொழுது அதற்கு மதிப்புத் தாருங்கள் என்றுதான் சொல்கிறேன்.

இதே பிரச்னை கோயில்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் ‘வக்ப் ப்ராப்பர்டீஸ்’ என்று சொல்லும் வாரியங்கள், தர்ம சொத்துக்கள் இருக்கிறதே அதற்கும் இதே பிரச்னைதான். ஆகவேதான் அந்த நிலைமைகளைச் சொல்கிறேன். அந்த நிலைமைகள் வேண்டாமென்றால், ஒரேயடியாக உழுபவருக்கே நிலம் சொந்தம் என்று கொண்டு வந்து விடுங்கள், பிறகு எல்லோரும் அவரவர்கள் வேறு வழிகளிலே பார்த்துக் கொள்ளலாம். வேறு வழிகளிலே பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லும் பொழுது நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்றால், எந்தெந்த வழியிலே அவரவர்கள் தங்களைக் காப்பற்றிக் கொள்ள முடியுமோ அந்த வகையில், சர்வை வல் ஆப் தி திஃபிட்டஸ்ட் என்ற சூழ் நிலையை உருவாக்கிவிட்டால், கிணற்றிலே தள்ளி விட்டுவிட்டால் கையைக் காலை ஆட்டியாவது நீந்தக் கற்றுக் கொள்வான். எனவே, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஆகிவிட்டால் வேறு வழியில்லாமல், வெவ்வேறு துறைக்கு அவர்கள் போகிறார்கள். இந்த நிலைமையை விட்டுவிட்டு 25 சதவீதம் பெற்றுக் கொள்ள வேண்டும், உனக்கு வைக்கோலில் பங்கு இல்லை, வேறு எதிலும் பங்கு இல்லை, எல்லாம் அவனுக்குத்தான்

ஆனால் நீ தாண்டா நிலவரி, எந்த வரியாக இருந்தாலும், வரிக்கு மேல் வரி நீ தான் போட்டுக் கொள்ள வேண்டும்; அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்றால் அது சட்டப்படியும் சரியல்ல, தர்ம நியாயப்படியும் சரியல்ல, நீங்கள் கொடுத்திருக்கிறீர்களே ஆர்டிகிள் 39, ஆர்டிகிள் 46 அவைகளின்படியும் சரியல்ல. இன்னும் வேறு ஆர்டிகிள் எல்லாம் இருக்கின்றன, நமக்கு ரைட் கொடுக்கும் ஆர்டிகில்ஸ். அந்த ஆர்டிகிள்ஸை இன்னொரு ஆர்டிகிள் சாகடிக்கக் கூடாது. அப்படிச் சாகடித்தால் அந்த ஆர்டிகிளைச் சாகடிக்க இன்னும் சில பல ஆர்டிகில்ஸ் இருக்கின்றன, ஆகையினாலே இது சரியா என்று சிந்தித்துப் பார்த்து, இத்தகைய சட்டங்களைக் கொண்டு வர வேண்டும் மசோதாவின் மூலம் எல்லோருக்கும் சமூக நீதி கிடைக்கும் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தில் அப்படி வழிவகை இல்லாததால் மிகுந்த வருத்தத்தோடு, எதிர்காலத்தையும் நினைத்துப் பார்க்காமல், நிகழ்காலத்தையும் நினைத்துப் பார்க்காமல், பிராக்டிகல் டிஃபிகல்டீஸ் என்று பார்க்காமல். பர்ஸ்பெக்டிவ் அசெஸ்மெண்ட் செய்யாமல் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம், அனுதாபத்திற்குரிய ஒரு சட்டம், பிறந்தவுடனே சாக வேண்டிய சட்டம் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. ர. ஜெபமணி: துணை சபாநாயகரவர்களே, நானும் இந்தச் சட்டத்தின் பேரிலே என்னுடைய ஜனதாக் கட்சியின் சார்பாக அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 60-40 என்று இருந்து இப்பொழுது 75 — 25 என்று கொண்டு வந்து இருக்கிறோம், என்னவோ, விவசாயிகள் நிலம் வைத்திருப்பவர்கள் நிறைய இலாபத்தைச் சம்பாதித்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்வதைப் போலவும், அவர்களிடத்தில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருப்பவர்கள். பாவம், கொடுமையான பட்டினியிலே கிடப்பதுபோலவும், நாம் இப்போது அந்த நிலச் சொந்தக்காரர்களுடைய சௌகரியத்தைக் கொஞ்சம் குறைத்து, குத்தகைதாரர்களுக்கு அதிகமான வசதியை செய்து கொடுக்க இதைக் கொண்டு வந்திருப்பது போலவும் ஒரு தோற்றம் எனக்குத் தெரிகிறது.

நான் உங்களுக்கு முதலிலே பணிவன்போடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டிலே பல தொழில்களை ஆரம்பிக்கும் முதலாளியாகட்டும், சாதரண சிறுதொழில் ஆரம்பிக்கக் கூடியவராக இருக்கட்டும், அவர்கள் தங்கள் வருமானத்தைத் தாங்களே எடுத்துக்கொள்ளக் கூடிய உரிமையை அவர்கள் நன்றாகப் பெற்றிருக்கிறார்கள். நாம் இங்கே பேசும்பொழுதுகூட, முதலாளி ஒழிய வேண்டுமென்று



நம்முடைய தீவிர வாதத்திலே எதையாவது பேசுவது உண்டு, ஆனால், தொழிலைப் பொறுத்தவரை, யார் வேண்டுமானாலும். எவ்வளவு தொழிலை வேண்டுமானாலும் பெருக்கிக்கொள்ள ஒருவருக்கு உரிமை இருக்கும்போது நிலத்திற்கு மட்டும் ஒரு சீலிங் வரவேண்டுமென்ற ஒரு ஆசை நமக்கு ஏன் வருகிறது? அதிலே தான் நம்முடைய தீவிரத்தை மக்கள் புரிந்து கொள்ளப் போகிறார்களா? இப்படி நாம் செய்துவிட்டால், அது தீவிரமான காரியம் என்று மக்கள் ஏதாவது நமக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப் போகிறார்களா என்பதை எல்லாம் நான் நினைத்துப் பார்த்து, மெத்தவும் வேதனைப்படுகிறேன். காரணம் என்ன? 60-40 என்று இருந்தபொழுதே அவர்கள் வைத்திருந்த நிலத்திற்கு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய 40 சதவிகிதம் கிடைக்கவில்லை. அதை அவர்கள் கேட்பதற்கும் முடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். இந்த நாட்டிலே வகுப்புக் கலவரங்களுக்குக் கூட அது ஏதுவாக இருக்கிறது என்பதை இந்த நாட்டிலே உள்ள நல்லெண்ணம் படைத்தவர்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் 40 சதவிகிதம் கூடப் பெறமுடியாமலிருந்து அழுது கொண்டிருந்த அவர்களுக்கு 75-25 என்று சொன்னால் புத்தகத்திலே இருக்கலாம், சட்டத்திலே இருக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நீ நிலம் வைத்திருக்கிறாய், உனக்குப் பட்டா இருக்கிறது, நீ வரி கட்ட வேண்டும், நீ நிலம் பக்கம் போகக் கூடாது என்று போடுவதற்கு ஒப்பாகும் இது. நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த நாட்டிலே உள்ள நிலங்கள் நஞ்சையானாலும், புஞ்சையானாலும், தேசியமயமாக்குங்கள், கூட்டுறவாக்குங்கள். உழுபவர்களே அந்த கூட்டுறவுகளில் உறுப்பினர்களாகட்டும். இலாபத்தை எல்லாம் வேண்டிய வரைக்கும் சாப்பிடட்டும். அதை விட்டுவிட்டு, நிலம் உங்கள் கையிலே இருக்க வேண்டும், நீ வரி கட்ட வேண்டும், நான் அதை அனுபவிக்க வேண்டும். நீ என்னிடத்தில் திருப்பிக் கேட்டால் உதை பட வேண்டுமென்று சொல்லக்கூடிய நிலை நாட்டிலே ஏற்படக் கூடாது. இந்த நாட்டிலே நாம் எல்லோரும் சந்தோஷமாக வாழ வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்றால், இந்தச் சட்டசபையிலே சட்டம் செய்திருக்கிறோம். உழுபவனுக்கு கூலி, நடுபவனுக்குக் கூலி, களை எடுப்பவனுக்குக் கூலி, தண்ணீர் பாய்ச்சுபவனுக்குக் கூலி, அறுப்பவனுக்குக் கூலி, அரைப்பவனுக்குக் கூலி, இவைகளெல்லாம் நாம் நிர்ணயித்திருப்பவை. உழுபவன் என்று சொல்லக்கூடியவன் குத்தகைதாரரா ? குத்தகைதாரர் என்று சொல்லக்கூடியவன் உழக்கூடியவனா? உழுபவன் எங்கோ இருக்கிறான். உங்களைப் போல் வெள்ளைச் சட்டை போடுகிறவன்தான் குத்தகைதாரன். அவர்கள்தான் இன்று

[திரு. ர. ஜெபமணி] [1980 பிப்ரவரி 12

இந்த நாட்டிலே அதிகமாக இருக்கிறார்கள். நான், உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இந்த நாட்டிலே யார் எங்கே போனாலும் நிலத்திலேதான் விளையாடுவார். ஒரு நண்பர் சொல்கிறார், 90–10 என்று இருக்க வேண்டுமாம். ஏன் இந்த 10? அவர் குடும்பத்திற்கு. அவர் குடும்பத்தை அங்கே குழி தோண்டி புதைப்பதற்கு. என்னுடைய ஆசை நிலத்தைப் பூராவும் எடுத்துக் கொள்வோம். நிறைய நிலம் வைத்திருப்பவர்களுக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஈட்டுத் தொகை திருப்பிக் கொடுப்போம். 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு உடனடியாக ஈட்டுத் தொகை கொடுப்போம் நிலப்பண்ணைகள் ஏற்படுத்துவோம். கையிலே காய்ப்பேறியவனும், கலப்பையை உழுபவனும் அதிலே மெம்பராகட்டும். அவன் கூட்டுறவு நிலத்தை உழுது கொண்டு வரட்டும். அது இந்த நாட்டுக்கு நன்மையாக இருக்கட்டும். அதை விட்டுவிட்டு, தொழிலை சுதந்திரமாகப் பண்ணுகிற நாம் அவன் உற்பத்தி செய்யும் பொருளுக்கு அவனே விலையை வைத்து விற்கிறான். ஆனால் 2 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயி, கூண்டோடு தெருவிலே நிற்கிறான். அதைத்தான் உங்கள் மத்தியிலே கேட்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). ஐயா, இது ஜீவாதாரப் பிரச்னை. நீங்கள் எல்லோரும் பயப்படுகிறீர்கள். ஊரிலே போய் ஓட்டுப் போடு, ஓட்டு போடு என்று ஏழைகளை ஏமாற்றுகிறார்கள். 75–25 என்றால், நாட்டிலே நீதி வேண்டாமா? விவசாயி இந்த நாட்டிலே புறக்கணிக்கப்பட்டவன். அவனுக்கு 2 ஏக்கர் இருக்கிறதென்றால் அதை எடுத்துக் கொள்ளுங்கள். குத்தகைதாரன் எல்லாம் உழுபவன் அல்ல அவன் ஆள் வைத்து உழுகிறான், உழுபவன் கூலிக்காரனாக இருக்கிறான், அவனைப்பற்றிப் பேசவில்லை. நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் கிஸ்தி கட்ட வேண்டும். இப்பொழுது 40./• எங்காவது கொடுக்கின்றார்களா? தமிழ்நாட்டிலே உள்ள குத்தகைதாரர்கள் 40./• அளந்திருக்கிறார்களா?

அமைச்சர் திரு. வீரப்பன் தலையிலே அடித்துக்கொள்கிறார், கோயிலுக்கு அளக்க மறுக்கிறான் என்று, சிவன் சொத்து குல நாசம். சிவன் சொத்தை அனுபவிப்பவன் குலம் நாசமடையும். அந்த நிலத்தை நீங்களும் எடுத்தீர்களானால் அதுதான் நமக்கும் வரும். கோயில் என்று சொன்னால், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். அவனுக்கு எதற்கு சிலை? ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பார்கள். கோயிலுக்கு எழுதி வைத்தவர்கள் எதற்கு எழுதி வைத்தார்கள்? அந்தக் கோயிலிலே பூஜை நடக்கவில்லையென்றால் யாருடைய தவறு? ரூ.9 கோடி, ரூ. 10 கோடி கோயிலுக்கு வரவேண்டியிருக்கிறது என்று சொன்னால் இந்த நாட்டிலே அதை நம்மால் வசூல் செய்ய முடியவில்லை. இன்னும், அதை 25% என்று ஆக்கினால், வாய்க்கரிசி கூட வராது. சட்டத்திலே சிக்கல் வரும்.



1980 பிப்ரவரி 12] [திரு. ர. ஜெபமணி]

[முற்பகல் 11-30]

அது கோயில் நிலமாக இருக்கட்டும், தனியார் நிலமாக இருக்கட்டும், எல்லாவற்றையும் தேசிய மயமாக ஆக்கிவிடுங்கள், வீட்டு அடிமனை தவிர. வீட்டு அடிமனை ஒன்று இருந்தால் போதும். அப்படி இல்லை பட்டா இருக்க வேண்டும். கிஸ்தி கட்ட வேண்டும் என்றால் அவனை நீங்கள் மனிதனாக மதிக்க வேண்டும். 3 ஏக்கராவது அவன் வைத்துக்கொள்ள வேண்டும். அவன் உழுகிறவர்களை கூப்பிட்டு உழைக்கலாம், அவனும் உழைக்கலாம். அவன் அந்த 3 ஏக்கரை சொந்தமாக வைக்துக் கொள்ளக்கூடாதா என்பதைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். தஞ்சாவூரிலே நஞ்சை 3 ஏக்கர் சொந்தமாக வைத்துக் கொள்கிறவன் அதை தனக்குச் சொந்தமாக வைத்துக் கொள்ளட்டும். அதிலே தோட்டம் போடட்டும், அதிலே நஞ்சை பயிரிடட்டும், வாழை போடட்டும், கரும்பு போடட்டும் புகையிலை போடட்டும், அவனுக்கு ஒரு உரிமை வேண்டாமா? நிலம் வைத்திருக்கிறவன் உரிமை பூராவையும் பறித்துவிடாதீர்கள். அப்படியானால் நிலத்திற்கு தீர்வை இல்லை என்று சொல்லுங்கள், நிலத்தை . நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்கார் எடுத்துக் கொள்வதிலே தவறு இல்லை. இதற்கு மத்திய சர்க்காரையும் பார்க்கவேண்டாம்' எந்த சர்க்காரையும் பார்க்க வேண்டாம் முன்மாதிரியாக தமிழகத்திலே உள்ள நஞ்சை புஞ்சை அத்தனையும் அரசு உடைமை ஆக்கிய இந்த அற்புதமான நாள் இந்த நாட்டுக்குத் திருநாள், கோவிலுக்கு எல்லா மானியமும் இந்த அரசாங்கம் வழங்குகிறது. ஆறு கால பூஜையும் நடக்கின்றன. அங்கே நாட்டுக்கு வேண்டிய காரியங்கள் சரிவர நடக்கின்றன. மன்னர்கள் கேட்பார்களே மாதம் மும்மாரி மழை பொழிகின்றதா? கோவில்களிலே ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றனவா, நாட்டிலே எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்று கேட்பதுதானே இந்த நாட்டின் முதுமொழி. அப்படி இருக்க ஆலயங்களிலே பூஜை இல்லை. இன்னும் 25 என்றால் எங்கே போவது? ஆகையால் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் இந்த நாட்டு மக்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் நாம். நிலம் வைத்திருப்பது பாவம் என்றால் அந்தப் பாவத்தை அவன் தாங்க மாட்டான். அவன் 3 ஏக்கர் நிலம் எனக்குச் சொந்தம் என்று நினைத்துக் கொள்ளட்டும். அதற்கு மேல் உள்ள நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த 75:25 போட்டு இருப்பது இந்த நாட்டு மக்களை புண்படுத்தும். ஆகையினாலே இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். இந்த நல்ல காரியத்தைச் செய்யும்போது ஒரு வருஷம் கழித்துச் செய்யலாம். அடுத்த ஆண்டு செய்யலாம். எனவே அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். தீர்க்கமாக ஆலோசித்து இந்த நாட்டு மக்களுடன் பழகுவோம், நிலம் வைத்திருப்

பவர்களைப் பார்ப்போம். குத்தகைதாரர்களைப் பார்ப்போம், எல்லோருடைய எண்ணத்தையும் தெரிந்துக் கொண்டு அதற்குப் பிறகு சட்டத்தைச் செய்தால் அது இந்த நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்.

திரு. கூ. ச. முருகேசன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தைக் கொண்டு வந்தது பற்றி, நான், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் சொல்ல விரும்புவது இந்தச் சட்டம் சாதரண சட்டமாகத்தான் இருக்கும். ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நாங்கள் கொண்டு வந்த அந்தச் சட்டத்திற்கும் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஏழை விவசாயிகள், ஏழை உழைப்பாளிகள் கஷ்டப்படக் கூடிய நிலையிலே இருப்பார்கள். 5 ஏக்கர் ஸ்டான்டர்டு ஏக்கர் என்பதை 3 ஏக்கராக ஆக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சுருக்கமான இந்த நேரத்தில் சட்டம் பற்றி மட்டும் பேசினால் பல சட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு; தலைவர் அவர்களே, உச்சவரம்பு இதிலே இருந்தால் பேசுவார். இல்லை என்றால் அவர் பேசவில்லை. 5 ஏக்கர் 3 ஏக்கராக இருப்பதாக நினைத்துக் கொண்டு பேசுகிறார். இதிலே அது இல்லை என்றால் இப்போது அவர் பேசவில்லை. தீர்ந்து போச்சு. மொத்தமாக எடுத்து அவியலாக வைப்பதால்தான் விவகாரம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை. நேற்றைக்கு நான் மாண்புமிகு உறுப்பினர்களை அழைத்துச் சொன்னேன். இந்த மாதிரி எல்லாம் வருகிறபோது பலர் சட்டத்தின் மீது இல்லாமல் வேறு பேசுகிறார்கள். நேற்றே தெரிவித்தேன். வெளிப்படையாகச் சொல்லவில்லை. உறுப்பினர்களைக் கூப்பிட்டுச் சொன்னேன் இன்று வெளிப்படையாகச் சொல்லக்கூடிய நிலைமை வந்திருக்கிறது.



திரு. க. சுப்பு: தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவிலும் 5 ஸ்டான்டர்டு ஏக்கர், 3 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று வருகிறது. அதைப்பற்றிச் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: இப்போது 2, 3, தான் நடக்கிறது. இந்த 2, 3, சட்ட முன்வடிவுகளை மட்டும் தான் நான் மொழிந்திருக்கிறேன். இடையிலே யார், யாரோ பேசி எங்கெங்கோ போய்விட்டார்கள். அப்படிப் போக வேண்டாம் என்பதை உங்களுடைய அனுமதியுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, தாங்கள் இந்த மன்றத்தில் 1961-ம் ஆண்டிலிருந்தே இருந்து கொண்டிருக்கிறீர்கள். இதற்கு முன்பெல்லாம் இங்கே அமைச்சர்களாக இருக்கிறவர்கள் ஒரு பில்லைக் கொண்டு வரும் போது விளக்கம் கொடுப்பார்கள். ஆனால் இப்போது யாரும் விளக்கம் கொடுப்பது இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: விளக்கம் கொடுக்க வேண்டுமானால் இப்போதுகூட கொடுக்க நான் தயார். விளக்கம் வேண்டுமா என்று கேட்டேன்: வேண்டாம் என்று சொன்னார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1962-ல் இருந்து திரு. இராமசாமி அவர்களும் இங்கே இருந்துகொண்டிருக்கிறீர்கள். விதிகளை நன்கு படித்தும் இருக்கிறீர்கள். அமைச்சர்கள் விளக்கம் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று யாரையும் யாரும் கட்டாயப்படுத்த முடியாது. அவர் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டுமென்று விரும்பினால் சொல்லலாம். அல்லது நீங்கள் கூடக் கேட்கலாம் உறுப்பினர்கள் பேசுவதற்கு முன்னால் அமைச்சர் விளக்கம் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இன்றைக்கு இந்த் சட்டத்தை நான் இங்கு கொண்டுவந்திருக்கிற போது இதிலே 75க்கு 25 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசுப் பொறுப்புக் கழகத்திற்கும் தனியாருக்கும் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதற்கு முந்தியச் சட்டத்தில் 60-க்கு 40 என்று இருக்கிறது. 1956 ஆம் ஆண்டு பெரிய போராட்டத்திற்குப் பிறகு அப்போது இருந்த அரசு 60-க்கு 40 என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசுகிறபோது இதெல்லாம் நடைபெறாது என்று சொன்னார்கள். ஆனால் நாம் எல்லாம் நம்பிக்கையோடுதான் அடி எடுத்து வைக்கவேண்டும். நம்பிக்கையோடுதான் காரியங்களை ஆற்ற வேண்டும். இது நடைபெறாவிட்டால் நாட்டு மக்களுக்கு நீதியைச் செய்வதற்கு நாம் எல்லாம் முயற்சி செய்வோம். அதிலே வெற்றி பெறுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர்ணம் அவர்கள் பேசுகிறபோது இதை மிகவும் வரவேற்றுப் பேசி 1956—லே நடந்த போராட்டத்திற்குப் பிறகு வந்தது என்றும் இன்றைக்கு இந்த அரசு கொண்டு வந்ததற்கு வரவேற்கிறேன் என்றும் சொன்னார்கள். அதைச் சொல்கிறபோது கரும்புக்கு விதிவிலக்கு எடுத்ததை அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள், வாழை வெற்றிலை போன்றவைகளுக்கு எல்லாம் விதி விலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் இதுபோன்று வரும் என்று பலமுறை சொல்லி இருக்கிறேன். பல சீர்திருத்தங்கள் இன்றைக்கு வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட நிலச்சீர்திருத்தங்கள் எல்லாம் பிறகு வரும் என்று முன்பே சொல்லி இருக்கிறேன். ஆகவே இவைகள் எல்லாம் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது ஏழை விவசாயி, விதவைகள், ஊனமுற்றவர்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப்பற்றியும் இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் செய்யும் என்பதையும் இன்றைய தினம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இங்கே சிலர் பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக்கழக அரசு உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருந்தது என்றும், அந்தச்சட்டத்தைக்கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முன்னாலே கலைத்துவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். அதை இந்த அரசு கொண்டுவருமா என்று கேட்டார்கள்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூட அதைப்பற்றி சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அதை கொண்டு வந்தபோது அதன் நிலைமை என்ன ஆனது என்று மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு இப்பொழுது தெரியாது.





ஏனென்றால் அப்படி கொண்டுவந்து, இந்த அவையிலே நிறைவேற்றி இந்திய அரசுக்கு சென்று, இந்திய அரசில் இருக்கிற எல்லா துறைகளுக்கும் போய், அங்கே இருக்கக் கூடிய சம்பந்தப்பட்ட துறைக்கும் சென்று கையெழுத்து போடப்பட்டு ஏற்றுக் கொண்ட பிறகு இந்திய குடியரசுத் தலைவருடைய கையெழுத்திற்கு சென்றது. அதைப்பற்றிப் பேசுகிறபோது. நான் இங்கே உங்களுடைய தலைவரிடத்திலே, எதிர்க் கட்சித்தலைவரிடத்திலே கூட குறிப்பிட்டுச் சொன்னேன். அங்கே போனபோது எந்த நிலைமையிலே திரும்பி வந்தது என்பதையும் சொன்னேன். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவருடைய கையொப்பம் போடுகிற நேரத்திலே, தஞ்சையிலே இருக்கிற விவசாயிகள் அந்தச் சட்டத்தை எதிர்த்ததன் காரணமாக, இங்கே சம்பந்தப்பட்ட விவசாயத் துறை அமைச்சர் கையெழுத்து போட்டு, வருவாய் துறை அமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போட்டு, முதலமைச்சர் அவர்கள் கையெழுத்து போட்டு, முதலமைச்சரின் அனுமதி பெற்று, ஒரு கடிதம் எழுதப்பெற்று அது திரும்பிப் பெறப்பட்டு வந்து விட்டது.

ஆகவே அதை அப்போதே எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே சொன்னேன். தாங்கள் தானே அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள் என்று சொன்னேன் சிரித்துக் கொண்டே இருந்தார்கள். பல காரணங்களால் அது நிறுத்தப்பட்டு விட்டது. அவைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. அந்தச் சட்டம், 1972—ல் கொண்டுவரப்பட்டிருந்தால் அந்த கால கட்டத்தில் அது சீர்திருத்தச்சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் விவசாயிகள் பணம் கொடுத்து வாங்குகிற நிலைமையிலே இல்லை என்பதையும், விவசாயிகளுக்கு இதைவிட முற்போக்கான ஒரு நிலைமைக்குச் சீர்திருத்தமாக என்ன செய்யலாம் என்று அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது குடியரசுத் தலைவரின் கையெழுத்துக்குப் போகும் போது சூழ்நிலை ஏற்பட்டதைபற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே காம்பன்சேஷன் கொடுத்துதான் எடுக்க வேண்டும் என்று இருந்தது உண்மைதான். காம்பன்சேஷன் கொடுக்காமல் நிலங்களை எடுக்க முடியாது. கொடுக்க வேண்டிய காம்பன்சேஷனை 20 தவணைகள், 40 தவணைகள் என்று பேசிக் கொடுக்கலாம் என்று கொண்டு வரப்பட்டது. கேரளாவிலும் அப்படிப்பட்ட சட்டம்தான் இருக்கிறது. அப்போது அந்தச் சட்டத்தை கொண்டு வந்தபோது இங்கே இருந்த, அதாவது இந்த மன்றத்தில் அப்போது இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். மன்றாடியாரும், கல்யானசுந்தரமும்

[திரு. க. சுப்பு] [1980 பிப்ரவரி 12

பெரிதும் எதிர்த்து வாதாடினார்கள். நீங்கள் கூட அப்போது இருந்தீர்கள். அப்போது அவர்கள் எங்களை எதிர்த்தார்கள். இப்போது கம்யூனிஸ்ட் தோழர்கள் உங்கள் பக்கம் இருக்கும் போதே அதைக் கொண்டு வந்தால், நாங்கள் ஏற்கெனவே அதை வரவேற்பவர்கள், அதனால் அதை சுலபமாக நிறைவேற்றி விடலாம். நல்ல சூழ்நிலை இருக்கிறது. அதைதான் நான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்பதில் ஒரு பாதியை மட்டும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அப்பொழுதும் நல்ல சூழ்நிலை இருந்து இங்கே எல்லோரும் ஏற்றுக் கொண்டு, அங்கே இருக்கிற விவசாயத் துறை அமைச்சர் கையெழுத்துபோட்டு ஹோம் அமைச்சர் கையெழுத்துப் போட்டு, எல்லோரும், கையெழுத்துப் போட்டபிறகு இந்திய குடியரசுத் தலைவரின் கையொப்பத்திற்காகச் சென்றிருக்கிற நேரத்தில் இங்கே இருந்து ஒரு கடிதம் மூலமாகத் திரும்ப வாங்கப்பட்டது என்று தெரிவித்தேன். அது என்ன என்பதைப்பற்றி யெல்லாம் விளக்க வேண்டாம் என்று விட்டு விட்டேன். அன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில், 1972–லே இருந்த சூழ்நிலையில் யார் யார் வேளாண்மை செய்கிறார்களோ, குத்தகை செய்கிறவர்கள் விரும்பினால் நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கலாம் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. அன்றைக்கு இருந்த கால கட்டத்தில் அது சீர்திருத்தமாக, சீர்திருத்த கருத்தாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும். கேரளாவில் அந்த சட்டம் தான் இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையில், இன்றைக்கு இருக்கிற வேளாண்மைக்காரர்கள், குத்தகைகாரர்கள், அந்த நிலங்களை வாங்குவதற்கான அளவுக்கு வசதி படைத்தவர்கள் இல்லை.

[முற்பகல்—11.50)

ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் அது நடை பெறவேண்டாமா, இன்றைக்குக் கொண்டுவந்துவிட்டால் வோட்டு வாங்குவதற்காகக் கொண்டுவருகிறீர்கள், இப்படியெல்லாம் சீர் திருத்தக் கருத்து என்று சொல்லிவிட்டு நடைமுறைப்படுத்த முடியுமா, குத்தகை வாங்க முடியுமா, என்றெல்லாம் பேசு வார்கள். 60–40 கொடுக்க முடியவில்லையே, 75–25 கொடுக்க முடியவில்லையே என்றெல்லாம் பேசுவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இதற்கு வேறு வழி செய்வதற்கு இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதை விட சீர்திருத்தம் என்று சொன்னேனே தவிர வேறு அல்ல. அதுமட்டுமல்ல. என்ன செய்யப்போகிறேன் என்பதைப் பற்றி இப்போது இந்த அவையில் சொல்ல மாட்டேன். நேரம் வரும்போது, நான் இதற்கு முன்னால் சொல்லியபடி பல வந்துகொண்டிருக்கின்றன என் பதற்குஇது எடுத்துக்காட்டு.



1980 பிப்ரவரி 12]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி:—''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) ஆய்வுக்கு எடுத்துககொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன..

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்''
என்று மொழிகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

<u>(இ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.</u>

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்முடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட் முன்வடிவு எண் 15/1980) அறிமுகம் செய்யப்பெற்று ஆய்வுக்கு *எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

---

*1980 பிப்ரவரி 7-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

பிரிவு-5.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 5 இச் சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move the following Amendment

"In clause 5, in New Sub-Section (2), *omit* the word "Second".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5, திருத்தப்பெற்றப்படி, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —

"பிரிவு 1 இச் சட்டமுன்வடிவினை உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move the following Amendment:

"In clause 1, *omit* the word "Second".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1980) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று ,சட்டமுன்வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.



1. தகவல் கோரல் (தொடர்ச்சி).

இ. நகராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சித் தேர்தல்கள் எப்ரலிலே நடைபெறும் என்று அறிவித்தார்கள். அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். இப்போது, ஜூன், ஜூலை மாதங்களில் நடக்கும் என்று சொல்லுகிறார்கள். எது உண்மை என்று தெரிவித்தால், வேலை செய்வதை நிறுத்தி வைக்கலாம்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து, ஏற்கனவே, உள்ளாட்சிகளுக்கு ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறும் என்று சொன்னார். ஆனால், இப்போது காரைக்காலிலே போய், அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்லியிருக்கிறார். இன்னும் ஒரு படி மேலே போய் சொன்னார், ஏப்ரல் மாதம் முதல் தேதி, இந்தச் சென்னை மாநகர மேயர் பதவி ஏற்பார் என்று. ஏப்ரல் முதல் தேதி என்ன என்று தெரியும். அப்படித் தான் மக்களைப் பண்ணைப் பார்த்தாரா என்று தெரியவில்லை. அப்படியென்றால், தேர்தல் ஏப்ரலில் நடைபெறுமா ? ஜூன், ஜூலைக்குப் போகுமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது, சபை நடக்கும்போது ஏப்ரலில் நடககும் என்று சொல்லிவிட்டு, காரைக்காலில் உட்கார்ந்து, பாண்டிச்சேரி மண்ணுக்குப் போன 'உடனே மனம் மாறி அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்வது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது அமைச்சர் அவர்களின் காதில் விழுந்தது. பதில் சொல்வதும், சொல்லாததும் அவர் விருப்பம். உட்காருங்கள்.

5. அறிக்கை அளித்தல்

அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பஞ்சப்படி உயர்வு குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி தமிழக அரசு அறிவித்த ஊதிய விகிதங்கள் சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 320 என்ற அடிப்படையில் அமையப் பெற்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இச் சராசரி 8 புள்ளிகள்

அதிகரிக்கும்போது ஒரு தவணை அகவிலைப்படி அளிக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. இதன்படி சராசரி புள்ளி 328, 336 என்ற நிலைகளை எட்டியபோது அரசு இரண்டு தவணைகள் அகவிலைப்படி அளித்தது. இப்போது சராசரி புள்ளி 344ஐத் தாண்டியபடியால் அடுத்த தவணை அகவிலைப் படி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இது இந்த (பிப்ரவரி) மாதத்திலிருந்து அமுலுக்கு வரும். அதாவது 1—3—1980 அன்று வழங்கப்படும். இது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகியோருக்கும் பொருந்தும். இதன் விளைவாக தற்போதுள்ள ரூ. 13 குறைந்த அளவு அகவிலைப்படி ரூ. 19 ஆக உயர்த்தப்படும். உயர்ந்த அளவு அகவிலைப்படி ரூ. 60 லிருந்து ரூ. 90 ஆக உயர்த்தப்படும். இதற்காக ஆண்டுச் செலவு ரூ. 12 கோடி ஆகும்.

இதற்கு ஏற்றவாறு ஓய்வு ஊதியம் பெறுபவர்கட்கும் தக்க அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.

கல்லூரி ஆசிரியர்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் பற்றி அரசு நன்கு ஆராய்ந்தது. ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சரும், கல்வித்துறைச் செயலாளரும் விரிவாக பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆசிரியர்களின் 21 கோரிக்கைகளில், 18 கோரிக்கைகள் பற்றி அரசு ஏற்கனவே ஆணைகள் வெளியிட்டு விட்டது. அவர்களின் முக்கிய கோரிக்கைகளுள் ஒன்று அரசு ஊழியர்களைப் போலவே குறிப்பிட்ட ஆண்டுகள் பணி செய்த உதவிப் பேராசிரியர்கள் (Assistant Professors) பேராசிரியர்களாகப் (Professors) பதவி உயர்வுப் பெறவேண்டும் என்பதே. இதை அரசு ஏற்று 10 ஆண்டுக் காலம் உதவிப் பேராசிரியர்களாகப் பணி புரிந்தவர்கள் 1—4—1980லிருந்து பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. பல பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிப் படுத்தும் வகையில், இனிமேல் 10 ஆண்டுகள் பணி செய்தவர்கள் மட்டுமே பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த நல்ல முடிவுகளை ஆசிரியப் பெருமக்கள் வரவேற்றுத் தங்கள் கிளர்ச்சியினைத் திரும்பப் பெறவேண்டும் என்று அவர்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அமைச்சர் அவர்களிடம் சில கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அரசு ஆசிரியர்களைப் பற்றி இந்த மன்றத்திலே........

[நண்பகல் 12.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 106-ன் கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பித்த பிறகு, அதன்மீது எந்த விவாதமும் இல்லை, விளக்கமும் கேட்கக்கூடாது. ஆனால், யார்





யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கின்ற தொகுதியிலுள்ள மக்கள் தெரிந்துகொள்வதற்காக நான் படிக்கிறேன். இந்தப் பிரச்சினை பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் : திருவாளர்கள் சி. கோவிந்தராஜன், கு. ரமணி, ஆர்.உமாநாத், ஆர்.கிருஷ்ணன், பி:ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம்.ஏ.லத்தீப், கோ. இளங் கோவன், சோ. அழகர்சாமி, செ.சிவசாமி, பொ.உத்திராபதி, மா.மணிமாறன், ஜே. ஜேம்ஸ், ரா.மார்க்கபந்து, அ. ரகுமான் கான், டி. பி. எம். பெரியசாமி, இராமலிங்கம் ஆகியோர் ஆவர்.

திரு. அ.ரகுமான்கான்: பாயிண்ட் ஆப் ஆர்டர், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையில் ஒரு தவறான தகவல் சபையில் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கோரிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. அதுவல்ல பிரச்சினை. அவற்றை அமல்படுத்துவதில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் இப்படிப் பேச முனைந்தால் மறுபடியும் நீக்கவேண்டி வரும். தவறான தகவல் என்றால் விதிகளைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் தர வேண்டும். 106-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் மேல் எதையும் பேசக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன விதியின்கீழ் ஸ்டேட்மென்ட் கொடுத்தால் கேள்வி கேட்க முடியாது என்பது உண்மை. ஆனால் ஒரு சிக்கலான நிலைமை. இன்றைக்குக் கடைசி நாள். உங்களிடத்திலே ஒரு அப்பீலாகக் கேட்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாள் என்று முற்றுப்புள்ளி வைத்துப் பேசாதீர்கள். கடைசி நாளா என்பதைப் பின்னால் தெரிவிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: உங்களுடைய ரூலிங்குக்குக் கட்டுப் பட்டே சொல்லுகிறேன். அட்ஜார்ன்மென்ட் மோஷன் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் தெளிவு கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கும் போது நீங்களும், அவை முன்னவர் அவர்களும் எல்லோரும் ஒத்துக்கொண்டு சில கிளாரிபிகேஷன் கேட்க அனுமதிக்க வேண்டும். எக்சப்ஷனல் கேஸ் என்ற நிலைமையில் அட்ஜார்ன்மென்ட் மோஷன் அனுமதிக்கப்படாத நிலையில் நீங்கள் சில கிளாரிபிகேஷன் கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: இரண்டே இரண்டு கேள்விகள் தங்கள் அனுமதியோடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 106 வது விதியின்கீழ் அனுமதி இல்லையென்று சொன்னேன். மீண்டும் மீண்டும் அனு மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது சரியல்ல.

1. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஈ.) மின்சாரப் பற்றாக்குறை குறித்து அறிக்கை கோரல்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நான் இதிலே நுழையவில்லை; நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் கேரளா சென்று வந்திருக்கிறார்கள். கிராமங்களில் மின்சாரப் பற்றாக்குறையினால் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல செய்தியை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால் இப்போதே அறிக்கையைப் படித்துவிடுகிறேன்.

5. அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி)

ஆ. கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவது குறித்து.

கேரள மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு மின்சாரம் வாங்குவதற்கான ஒரு வருட ஒப்பந்தம் இன்றோடு (12-2-80) காலாவதி ஆகிறது. நான் கேரள மாநில மின்துறை அமைச்சருடன் 10-2-80, 11-2-80 ஆகிய தினங்களில் பேச்சு வார்த்தை நடத்தினேன். இதன் மூலம் இன்று முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு இம் மாநிலம், கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் கீழ் கேரள மாநிலம் அம் மாநிலத்தின் சொந்த மின் தேவை மற்றும் கர்நாடக மாநிலத்திற்கு ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின் படி கொடுக்க வேண்டிய மின்சாரம் போக அனைத்து உபரி மின்சாரத்தையும் தமிழ்நாட்டிற்கு வழங்கும்.

2. தமிழ்நாடு கேரள மாநிலத்திற்கு மத்திய ஆயத் தீர்வை உட்பட யூனிட் ஒன்றுக்கு 28-பைசா மின்கட்டணம் செலுத்தும்.

3. இந்த ஒப்பந்தம் 12-2-80 முதல் மூன்றாண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். ஆனால் இரண்டு மாநிலங்களும் விருப்பப்பட்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் மறு பரிசீலனை செய்யலாம்.



4. மால்கோ நிறுவனம் ஒவ்வொரு மாதமும் மூன்னூறு டன் அலுமினியம் கேரளத்திற்கு வழங்குவதற்குத் தேவையான மின்சாரத்தை கேரளாவிலிருந்து பெறப்படும் மின்சாரத்திலிருந்து மால்கோவிற்கு கொடுக்கப்படும். இதற்கென, மால்கோவிற்கு வழங்கப்படும் கூடுதல் மின்சக்திக்கு, தமிழ்நாடு மின்வாரியம் மால்கோவிற்கு விதிக்கும் கட்டண விகித அடிப்படையிலேயே கேரள மாநிலத்திற்கு வழங்கப்படும்.

5. சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு உண்டான மின் வெட்டை தமிழ்நாடு உடனடியாக நீக்கும். இதனால் உற்பத்தியாகும் கூடுதல் சிமெண்டை தமிழ்நாடும் கேரளாவும் முறையே 30:70 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

6. மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி இப்பொழுது அமுலிலிருக்கும் மின் உச்சத்தேவை மற்றும் மின்சக்திவெட்டை மேலும் உயர்த்தாமல் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம், விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின்தேவையை அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குப் பெருமளவிற்கு நிறைவு செய்ய உதவும்.

இந்த மின்சக்தி கிடைப்பதின் மூலம் இப்போது இருக்கிற தட்டுப்பாடான நிலைமையை ஓரளவுக்கு சரிக்கட்டுவதற்கு வாய்ப்புகள் நிரம்ப உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரம் பெற்று வந்திருக்கிறார்கள். நான் நன்றி தெரிவிக்கிறேன். கிராமங்களிலே உள்ள விவசாயிகள் இன்றைய தினம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலேயே அவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து இரண்டொரு தினங்களிலே மின்சாரம் கிடைக்கும் என்ற உறுதியை கொடுத்தால் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு அது உதவியாக இருக்கும். அவர்கள் இன்றைக்கு பயந்துகொண்டிருக்கிறார்கள், அந்த மின்சாரம் எப்போது கிடைக்கும்? விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் தேவை. ஆகவே அதைப்பற்றி அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தரப்படுகிற மின்சாரம் திடீர் திடீர் என்று நின்று விடுவதால் அவர்கள் பல வேதனைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை அரசு உணர்கிறது. அந்த நிலையைச் சரிக்கட்டுவதற்கு எந்த அளவிற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறதோ அதைத் தொடர்ந்து நிறுத்தாமல் கொடுப்பதற்கு, நாளொன்றுக்கு குறைந்தது 4 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் சீர்திருத்தி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேரளாவிலிருந்தும், நெய்வேலியிலிருந்தும்

1980 பிப்ரவரி 12]

நமக்குக் கூடுதலாக மின்சாரம் கிடைக்குமானால் 4 மணி நேரம் என்பதை இன்னும் கூடுதலாக்குவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, மின்சார விநியோகத்தை பொறுத்தவரையில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேரளாவிலிருந்து மின்சாரத்தை வாங்கிக் கொடுத்ததைப் பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். நான் என்னுடைய தொகுதி பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை உங்களிடத்திலே கொடுத்தேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது அனுமதிக்கப்போவதில்லை, உட்காருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேரளாவிலிருந்து மின்சாரம் வாங்கிவந்த நல்ல செய்தியை சொன்னதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம். மின்சாரம் விவசாயிகளுக்கு 4 மணி நேரம் விட்டு விட்டுக் கொடுக்காமல் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம். இப்போது இரவு நேரங்களில் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. மின்சாரம் கொடுக்கும்போது இரவு நேரங்களிலே கொடுக்காமல் பகல் நேரங்களிலேயே தொடர்ச்சியாக கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.10]

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்துடன், மின்சார சப்ளையானது ஒவ்வொரு பிரதேசத்திலேயும், எந்த அளவிலே, எந்த மணியில் இருக்கும் என்று முன் கூட்டியே தெரிவிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தால் அதற்குத் தகுந்தவாறு விவசாயிகள் தங்கள் வேலைகளைச் செய்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். எனவே, அவ்வாறு முன் அறிவிப்பு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. து. இராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நான்கு மணி நேரம் தொடர்ந்து கொடுப்போம் என்றார்கள். ஏற்கனவே 4 மணிநேரம்தான் கொடுக்கிறார்கள். கேரளாவில் இருந்தும், நெய்வேலியில் இருந்தும் அதிக மின்சாரம் பெறுவதால் நான்கு மணி நேரம் என்பதை பத்து மணி நேரம் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும்; அதைப் பகலிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 12]

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. மாநிலம் முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்பது பொதுவான நிலைமையென்றாலும், வடார்க்காடு மாவட்டத்திலே எங்கும் கிடைக்காத நிலையில் மிகப்பெரிய அளவில் வரண்டு இருக்கிறது; மின்சாரம் சரிவரக் கிடைப்பதும் இல்லை; இந்த நிலைமை மாவட்டம் முழுவதும் இருக்கிறது. எனவே, விசேஷக் கவனம் எடுத்துக் கொண்டு, வடார்க்காடு மாவட்டத்தில் ஏன் இந்த நிலைமை என்று கவனம் செலுத்தி, அங்கே மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, நமது மாநில அரசு கேரளாலேயிருந்து இப்பொழுது மின்சாரம் வாங்கியிருப்பதைப் பற்றி நான் மகிழ்ச்சி தெரிவிப்பதோடு, 28 பைசாவுக்கு மின்சாரம் வாங்குவதாக ஒப்பந்தம் செய்திருப்பதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். அதனால் இப்போது இருக்கும் 12 பைசா, 14 பைசா கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு ஏதாவது இருக்கிறதா? இரண்டாவதாக, இப்பொழுது மின்பற்றாக்குறை காரணமாக பல ஊர்களில் மின்னிணைப்பு கேட்டு விவசாயிகள் போட்டிருக்கும் மனுக்கள் பைசல் ஆகாமல் இருக்கின்றன. அவர்களுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு உத்தரவிடப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் கேரளாவிற்குச் சென்று ஒப்பந்தம் செய்து கொண்டு வந்திருப்பதற்காக மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், விவசாயிகளைப் பொறுத்தவரையில் சில விவசாயப் பயிர்களுக்கு இரவில் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே பகலில் 6 மணி நேரம் கொடுத்துவிட்டு மீதியை இரவு நேரத்திலே கொடுக்கலாம். ஏனென்றால் இரவு 10 மணி 12 மணிக்கு மின்சார சப்ளை வருகிறது. மனிதர்கள் தூங்க வேண்டிய நேரமாக இருக்கிறது. எனவே இரவிலே எட்டு மணி முதல் 12 மணி வரை கொடுத்து விட்டு, காலையிலே 6 மணி முதல் 12 மணி வரை அல்லது 12 மணிக்குமேல் 6 மணி வரை என்று மாற்றி மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, இப்பொழுது இரவிலே வரும் மின்சாரம் கூட சரியாக வருவதில்லை. இரவிலே மிகவும் தொந்தரவாக இருக்கிறது. அடிக்கடி நின்று விடுகிறது; பாய வேண்டிய நீர் பாயாமல் இருக்கிறது. ஆகவே, பகல்

நேரத்திலே, உறுதியாக இவ்வளவு நேரம் தான் கொடுக்க முடியும், இந்த நேரத்தில்தான் வரும் என்று ஏற்பாடு செய்ய முடியுமா? விட்டு விட்டு வராமல் 4 மணி நேரம், 5 மணி நேரம் என்று ஒரே சீராக வரும் அளவிற்கு அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பெருமாள் வருவார், பெருமாள் வருவார் என்று எப்பொழுது வருவார் என்று...... (மணி அடிக்கப்பெற்றது)

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாக, வடார்க்காடு மாவட்டத்திலே ஏறக்குறைய ஒரு வார காலமாக மின்சாரம் இல்லை. ஆகையால் எல்லாப் பயிர்களும் உலர்ந்துவிடும் நிலைமையில், வடார்க்காடு மாவட்டத்தில் பெருவாரியான பஞ்சம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக மின்சாரம் தர முயற்சியெடுத்துக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். அதற்கு அடுத்தபடியாக, மின்சார பாக்கி ஏறக்குறைய 13 கோடி ரூபாய் இருப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு நேற்று கொடுத்த சலுகையைப்போல் சிறு விவசாயிகளுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விவாதம் அல்ல. சுருக்கமாகக் கேள்விதான் கேட்கலாம்.

திரு. ரா. மார்க்கபந்து: 5 ஏக்கர்களுக்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கு மின்சார பாக்கியைத் தள்ளுபடி செய்யும் உத்தேசம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மின்சார விநியோகம், குறிப்பாக விவசாயிகளுக்குச் சரிவர கிடைக்கப் பெறவில்லையென்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். கேரள மாநிலத்தோடு நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு இங்கே பாராட்டுகளையும் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்ள விரும்புவது, கேரள மாநில அரசினுடைய முதலமைச்சர் அவர்களையும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும்தான் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், நம்முடைய நெருக்கடியை உணர்ந்து நிலைமைகளை எடுத்துச் சொன்ன உடனேயே அவர்கள் எந்த அளவிற்குத் தங்களால் இயன்ற அளவிற்குக் கூடுதல் மின்சாரம் தமிழகத்திற்குத் தர வேண்டுமென்று விரும்பினார்களோ, அந்த அளவிற்குத் தர ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே, உண்மையிலேயே நாம் நன்றி செலுத்த வேண்டியது கேரள மாநில அரசிற்கு என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



விவசாயிகளைப் பொறுத்தவரையில் கொடுக்கப்படுகிற மின்சாரம் தொடர்பாகக் கொடுக்கப்பட வேண்டும், இடையிலே நிறுத்தப்படுவதனால் மின்சாரமும் வீணாகிறது, தண்ணீரும் நிலங்களை எட்டி அடைவதில்லை. ஆகையினாலே, அது பலன் இல்லாமல் போகிறது என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம். பகல் நேரத்தில் குறைந்தது 4 மணி நேரமாவது தொடர்ந்து மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். அதனாலேயே இரவு நேரத்தில் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்காது என்பதல்ல. இரவு நேரத்திலேயும் அவர்களுக்கு மின்சாரம் எந்த அளவு கொடுத்துக் கொண்டு வருகிறோமோ அது இப்பொழுதும் கிடைக்கும். பகல் நேரத்தில் 4 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்குதான் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

நமக்குக் கடந்த ஒரு வார காலமாக ஏற்பட்டிருக்கிற கஷ்டம் எந்த அடிப்படையிலே என்றால், ஒன்று, மேட்டூர் அணை மூடப்பட்டதனால், மேட்டூர் அணையிலிருந்து விடப்படுகின்ற தண்ணீர் வழியாகக் கிடைத்த மின்சாரம் கிடைக்கவில்லை. இரண்டாவதாக, நெய்வேலி அனல் மின் திட்டத்தில், சுமார் 80 இலட்சம் யூனிட்டுகள் நாள் ஒன்றுக்குத் தரவேண்டும். ஆனால், அவர்கள் 30 இலட்சம், 40 இலட்சம் யூனிட்டுகள் கூடத் தர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மத்திய சர்க்காருடைய மின்சாரத் துறை அமைச்சருக்கு நான் கடிதமும் எழுதியிருக்கிறேன். தமிழகம் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறது. அதுவும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள், உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது, உடனடியாகத் தலையிட்டு, நெய்வேலி நிறுவனத்திலே என்ன குறைகள் இருக்கின்றன, ஏன் இந்த அளவிற்கு மின்சார உற்பத்தித் தடையாக இருக்கிறது என்பதைப் பார்த்து, சீரமைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலே உள்ள மின்சார அமைச்சருக்கு இந்த அரசாங்கத்தின் சார்பிலே கடிதமும் எழுதி இருக்கிறேன். மாண்புமிகு துரை ராமசாமி அவர்கள்கூட இங்கே ரொம்ப ஆவலாகக் கேட்டார்கள். அதே ஆவலோடு அவர் மத்திய சர்க்கார் அமைச்சரையும் வற்புறுத்து வாரானால் உடனடியாகப் பலன்கள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

நமது மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் பேசுகின்ற பொழுது, எந்த எந்தத் திட்டத்தில், எவ்வளவு நேரம் தரப்படும் என்பதை முன்கூட்டியே அறிவிக்க வேண்டுமென்றார்கள். அது சம்பந்தமாக இன்னும் ஓரிரு தினங்களில் அதிகாரிகளை வரவழைத்துப் பேசி, முடிவெடுத்து, பத்திரிகைகளிலேயும் வானொலியின் மூலமாகவும் அறிவித்து, விவசாயிகளுக்கு அது எட்டுகின்ற வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கட்டணங்கள் உயர்த்தப்படுமா, பாக்கிகள் தள்ளப்படுமா என்ற பிரச்னைகள் நிச்சயமாக இதிலே எழவில்லை.

**2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).**

**(இ) பேரவை அலுவல் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாளைக்கும் பேரவை காலை 9.00 மணி அளவில் கூடும். கேள்வி நேரம் உண்டு. நாளை எதிர்கட்சித் தலைவர் உரையாற்றுவார். பின்னர் முதலமைச்சர் அவர்கள் பதிலுரையுடன் இந்தப் பேரவைக் கூட்டம் முடியும். தற்போது ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது திரு. எஸ். ஆர். இராதா தொடர்ந்து பேசுவார்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12.20)

**6. ஆளுநரின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)**

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணை தலைவர் அவர்களே, நான் அன்றைக்குப் பேசுகின்ற நேரத்தில், என்னுடைய உணர்வுகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து விட்டுப் போன இடத்திலே இருந்து தொடரவேண்டும் என்ற உணர்வோடு தற்போது ஏற்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களைப் பற்றி இந்த மாமன்றத்திலே விவாதித்தோம். 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் கட்டுக்கோப்பாக இருந்தபோது நாம் காங்கிரஸ் கட்சியினுடைய உறவைப் பெற்றிருந்தோம். அந்த உறவைப் பெற்றிருந்த அந்த நேரத்தில் காமராஜ் அவர்களை எதிர்த்து நாம் போராடுகிற நிலைமையில் இருந்த நேரத்தில் காமராஜரை எதிர்த்து நாம் அன்றைக்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றோம். அதற்குப் பின்னால் 1977 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாயிற்று. அந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய துணையோடு தேர்தல் நடத்துகிற நிலைமை ஏற்பட்ட நேரத்தில் அன்றைக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை எந்த அளவுக்கு விமர்சித்தார்கள் என்பதை நான் என்னுடைய நினைவிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். அன்றைக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை யார் யார் கேலி பேசினார்கள், என்னென்ன சொன்னார்கள் என்றெல்லாம் ஆண்டுகள் பல கடந்துவிட்டது என்றாலும்கூட என் நினைவிலே இருக்கிறது. ஒரு வார்த்தை கூட மறையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அதைத் தெரிவிப்பதற்கு முன்னாலே என் அருமை நண்பர்கள் நினைவுக்கு ஒன்றைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949-லே திராவிட முன்னேற்றக் கழகம் துவக்குவதற்கு முன்னாலே,





தந்தை பெரியார் அவர்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்ற காரணத்தால், அண்ணா அவர்கள் திராவிட நாட்டிலே எழுதினார். ''குல்லுகப் பட்டர் வந்தார், குழப்பம் வந்தது என்று''. அந்த வார்த்தையை நான் மறக்காமல் இருக்கிறேன். திராவிட கழகத்திலே இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தோம். அவர் யாரை குல்லுக பட்டர் என்று சொன்னாரோ அவர்களை எதிர்த்து 20 ஆண்டு காலத்திற்கு மேலாகப் போராடி இருக்கிறோம்.

அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் குல்லுகப்பட்டர் என்று இராஜாஜி அவர்களை வர்ணித்தாலும்கூட, அதே இராஜாஜி அவர்களை வைத்துக் கொண்டுதான் 1967-லே தேர்தல் நடைபெற்ற காலத்தில், எந்த இராஜாஜியால் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டதாக சொல்லப்பட்டதோ, அதே இராஜாஜி அவர்கள் துணையோடு, எந்தக் காங்கிரஸ் கட்சியை தமிழ்நாட்டிலே இருந்து அகற்ற முடியாது என்று பேசிக் கொண்டிருந்தார்களோ அதே காங்கிரஸ் கட்சியை, காமராஜரும், இந்திரா காந்தியும் ஒன்றாக இணைந்திருந்த காங்கிரஸ் ஆட்சியை, இராஜாஜி அவர்களை வைத்துக் கொண்டு அன்றைக்கு அகற்றினார்கள். அந்த ஆட்சி அகற்றப்பட்டதற்குப் பின்னாலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. 1977-லே நாங்கள் ஒப்பந்தம் செய்த நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆனாலும் கூட, எந்தக் காரணத்திற்காகவும் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பான்மையான இடம் கொடுத்துவிடக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் 25-லே இருந்து 23-ஆக மாறினாலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த அந்தஸ்து இருந்ததோ, அதே அந்தஸ்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்குமாறு ஒப்பந்தம் பேசுவோம் என்ற உணர்வோடு நாங்கள் வற்புறுத்தினோம். ஆனால், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் உறுதியாகச் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த அந்தஸ்து இருந்ததோ, அதே அந்தஸ்து இருக்குமாறு நிச்சயமாக ஒப்பந்தம் பேசுவோம் என்று சொன்னார்கள். அதே அடிப்படையில் ஒப்பந்தம் பேசப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மையான இடங்களில் போட்டிபோடுவது என்று முடிவு ஆயிற்று. அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே பத்திரிகைகளிலே ஒரு செய்தி அன்றைக்கு வந்தது. அதை நான் நினைவில் வைத்திருக்கிறேன். அன்றைக்கு எழுதிய அந்த வார்த்தை இன்றைக்கும்—பல பேர்கள் மறந்திருந்தாலும், அவர்களுக்கு நினைவுக்காக சொல்ல விரும்புகிறேன். நான் இங்கே ஒரு வேதத்தை எடுத்து வைக்கிறேன். அதை வாதத்திற்குக்கொண்டு வரத் தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்குச் சொன்னார்கள். காஷ்மீரத்து பார்ப்பன பரம்பரைக்கு அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகம் அடிமையாகிவிட்டது என்ற மிகப் பெரிய குற்றச்சாட்டை இந்த நாட்டிலே சுமத்தினார்கள். அந்தக் குற்றச்சாட்டு வந்த நேரத்தில் என்னைப் போன்றவர்கள், திராவிடர் இயக்க உணர்வு உள்ள பலர் நாம் எங்கே பார்ப்பன பரம்பரைக்கு அடிமையாகிவிட்டோமோ என்று பயந்தோம். ஆனால், எங்களுடைய தன்மான உணர்வோடு எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் திராவிடர் இயக்க வரலாற்றை விட்டுவிடக் கூடாது என்று சொல்லி, சில வெற்றிகளைப் பெற்றிருந்தோம். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நிலைமை மாறுபட்டிருக்கிறது; வேறு விதமாகப் போய்விட்டது. இன்றைக்கு சொல்லப்படுகிற கருத்தெல்லாம், அழுத்தமாகச் சொல்லப்படுகிற கருத்து—ஒரு கையைப் போட்டு குறிப்பிட்டுக் காட்டி, சுவரொட்டிகள் ஒட்டி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை கேலி செய்வதற்காக இன்றைக்கு சுவரொட்டி ஒட்டப்படுகிறது என்றால் அதிலே இருக்கிற கருத்துகளை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் இன்றைக்கு ஒரு சுவரொட்டியைப் பார்த்தேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கையைப் போட்டு, என்னுடைய மரியாதைக்குரிய கலைஞர் அவர்களைப்போட்டு ஒரு சுவரொட்டி இருக்கிறது. அண்ணா அவர்களுடைய கை இல்லை என்றாலும் அண்ணாவின் கையை வெட்டி, அதிலே போட்டிருக்கிறார்கள். அண்ணா கலைஞரிடத்திலே சொல்கிறார், தம்பி; பார்த்தாயா, தமிழ்நாடு எம்.ஜி.ஆருக்கு இரண்டே இரண்டு தந்திருக்கிறது என்று அதிலே போட்டிருக்கிறது. அதைப் பார்த்த பின்னால் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. 1977-ம் ஆண்டிலே, அண்ணா அவர்கள் சொல்வது மாதிரி......

திரு. துரை முருகன் : மாண்புமிகு இராதா அவர்கள் அண்ணாவின் கை இல்லை, பிறகு அது ஒட்டப்பட்ட கை என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன ஆதாரம்? போட்டோ இருக்கிறது அவர்கள் சொந்தக் கையாலே இப்படிக் காட்டியது. அதை வைத்துதான் பிளாக் பண்ணி போட்டிருக்கிறார்கள். ஆனால் அது இல்லை; வேறு, அண்ணாவின் கையை வெட்டியெடுத்துப் போட்டிருக்கிறார்கள் என்கிறார்கள். அண்ணாவை வெட்டி எடுத்து, வேறு இடத்தில் ஒட்டுவது நீங்கள்தான். அண்ணாவின் கையை, காலை வெட்டுவதெல்லாம் நாங்கள் அல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : நான் நண்பர் துரை முருகன் அவர்களுக்குச் சொல்வேன். அந்த படத்திலே இருக்கிற கை அண்ணாவின் கை என்று சொல்கிறார். அவர் இன்றைக்கு கையை நம்பிக் கொண்டிருக்கிறார்; நான் கையை நம்புவதில்லை.





திரு. சென்னை மு. அரங்கநாதன் : துணை தலைவரவர்களே, கடந்த காலத்தில் அந்தக் கையை நம்பி, கை பின்னாலே ஓடியவர்கள்தான் நீங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : திரு. அரங்கநாதன் அவர்களுக்குத் தெரியும். நாங்கள் கையை நம்பிப் போகவில்லை. நாங்கள் அனுப்பி வைத்தது வேறு. அது பாதி வேளையிலே டில்லியிலே விற்பனையாகிவிட்டது. அதற்கு பின்னாலே வந்ததுதான் கை என்பது அரங்கநாதனுக்குத் தெரியாது. அவர் பலவற்றை மறந்து விடுவார்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : துணை தலைவரவர்களே, தஞ்சை தொகுதியிலே அந்தக் கையைத்தான் எங்கு பார்த்தாலும் காட்டிவிட்டு காலை வாரிவிட்டீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் விவாதத்திற்குப் பதில் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தஞ்சையிலே இருந்த கை உங்கள் கைக்கு மாறிவிடக் கூடாது என்பதாலே நாங்கள் மிகவும் அந்த கையை சுத்த கையாக ஆக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம்.

திரு. சென்னை மு, அரங்கநாதன் : அந்தக் காரணத்தாலே அந்த கை கறைபடிந்த கையாக மாறிவிட்ட காரணத்தால் அந்தக் கையை நம்பக் கூடாது; இந்த கலைஞரின் கை நேர்மையான கை நியாயமான கை என்று நம்பினார்கள்,

திரு. எஸ். ஆர். இராதா : நான் அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். இராதா அவர்கள் அண்ணாவினுடைய கை அல்ல; வெட்டப்பட்ட கை என்று சொன்னார்கள். (குறுக்கீடு) தலைவரவர்களே, அந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது, என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின்போது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள். என்னுடைய தொகுதியில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் அது. அவர்கள் சொல்கிற மாதிரி கையை வெட்டக்கூடிய அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. நாங்கள் எல்லாம் ஒரிஜனலாக இருந்ததைத்தான் அந்தப் படம் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: ஒரு முக்கியமான பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைவிட முக்கியமான பிரச்சனை. தயவு செய்து உட்காருங்கள். இடையே 46 பேர்களும் சொல்லப் போகிறீர்களா? ஒருவர் சொன்னால் போதாதா? அவர் தொடர்ந்து பேசட்டும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நேற்றைய தினம் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் எங்களுக்கு எல்லாம் ஒரு விருந்து கொடுத்தார். சுற்றுலா வாரியத்திலே விருந்து கொடுத்தார்கள். அப்போது எங்களுக்கு சுற்றுலா வாரியச் செய்திப்படம் காட்டப் பட்டது. அதிலே கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடங்கள் வருகின்றன...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராதா, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

(பிற்பகல் 12.30)

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, நான் கோபப் படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நான் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற உணர்வோடுதான் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர யாரையும் கோபப்படுத்தி விவாதத்திலே குறுக்கிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை இல்லை. நான் இந்த நிலையைச் சொன்னதற்கான காரணத்தைச் சொல்கிறேன். 1977-ம் ஆண்டிலே இதே படத்தை வேறு விதமாக மாற்றிப் போட்டு நாங்கள் காட்டி இருக்க முடியும். அண்ணா அவர்கள் தம்பிக்குச் சொல்கிறார்கள் என்று போடா விட்டாலும் வேறு ஏதாவது சொல்கிற மாதிரி போட்டு பார்த்தாயா அண்ணா உங்களுக்கு தமிழ்நாடு ஒன்றே ஒன்று தான் தந்தது என்று சொல்லி இருந்தால் நீங்கள் வேதனைப்பட மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உங்களுக்கு வேதனையை உண்டாக்கக் கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை உள்ளவர்கள் நாங்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? ஏதோ அப்படி ஒரு சுவரொட்டிப் போட்டுக் காட்டுவதாலேயே சிலபேருடைய மனம் மகிழ்ச்சியடையும் என்பதாலே அப்படியொரு விளம்பரத்தைப் போட்டால் அதை நாடு நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது.

இன்றைக்கு இன்னொன்றைச் சொல்கிறார்கள். அதாவது இரண்டே இரண்டுதானே இவர்களுக்கு இருக்கின்றது இவர்களால் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு வருகின்ற தெம்பு என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றைப் பதினாறு



என்று ஆக்கக்கூடிய சக்தி உங்களுக்கு வருமானால் இரண்டு 32-ஆக ஆகாது என்பதற்கு யாரும் உத்தரவாதம் தர முடியாது. ஆகவே ஒன்றைப் பதினாறு ஆக்கக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்குமானால் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இரண்டை முப்பத்திரண்டாக ஆக்கக் கூடிய சக்தி இருக்கின்றது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்வேன். ஆனால் இன்றைக்கு இதையெல்லாம் ஒரு கேலிப் பொருளாக வைத்து இப்படிப் பேசுவதனாலே சில நிலைமைகளை உண்டாக்கி விட முடியுமா என்றால் தமிழ்நாடு அந்த நிலைமைக்கு ஆளாகவில்லை.

ஆனால் இன்றைக்கு என்ன நிலை? நீங்கள் கேலி பேசுகிறீர்கள், ஏற்றுக் கொள்கிறோம். தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் கொஞ்சம் வேகமாகப் பேசுவது நிலைமைதான். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? இதுவரை வரலாற்றிலே ஆயாராம், கயாராம் என்றுதான் இருந்தது. ஆனால் தமிழ்நாட்டிலே அந்த நிலைமையை உண்டாக்குவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அப்படிச் செய்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த நிலை வரும் என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் எந்த நிலையிலும் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை நம்பி நாட்டை மறந்துவிட்டு போகக் கூடாது. ஏதோ நாட்டு மக்களே சொல்லிவிட்டார்கள் என்று மக்களுக்கு ஏகபிரதி நித்துவம் போல பலர் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். நாங்களும் மக்களைச் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறோம். நான் கும்பகோணத்தில் 17 ஆயிரம் வோட்டுகள் இழந்து விட்டேன் என்றவுடன் கும்பகோணத்து மக்களிடம் நான் ராஜினாமா செய்து விடலாமா என்று கேட்டேன். அப்போது கும்பகோணத்து மக்கள் சொல்கிறார்கள் நாங்கள் ஜனதாக் கட்சிக்குத்தான் வோட்டு போடவில்லையே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்தால் நாங்கள் ஓட்டு போடுவோம் என்று சொன்னார்கள். இதை நான் அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். (குறுக்கீடு).. அதேபோல வேறு ஒரு ஊரிலே நான் சென்று கேட்டபோது....(குறுக்கீடு).. தேர்தல் என்பது பல்வேறி டங்களிலே மாறி மாறி வரக்கூடிய ஒன்று. அப்போது ஒவ்வொரு கட்சிக்கும்......

திரு. ர. ஜெபமணி: துணைத் தலைவரவர்களே, யாரோ ஒருவரிடம் கேட்டிருக்கிறார், அதற்கு அவர் ஜனதாக் கட்சிக்குப் போடவில்லை என்று சொல்லி இருக்கிறார். அதற்காக என்னமோ, ஊரிலே உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து சொன்னதாகவும், ஏதோ அபூர்வம் கிடைத்துவிட்டது மாதிரி நினைத்துக் கொண்டு எப்படியாவது உள்ளே புகுந்து ஊடு செய்யலாம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கக்கூடாது. அவர்களுக்கு ஓட்டுப் போட்டது கூட தங்கம் 300 ரூபாய்க்குக் கிடைக்கும் என்று நம்பித்தான் போட்டிருக்கிறார்கள். தங்கம் குறைவான

விலைக்குக் கிடைக்கவில்லை என்றால் உங்களை ஊருக்குள்ளே நடமாட விடமாட்டார்கள். அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, தங்கத்தை 800 ரூபாய்க்கு விற்றதினால்தான் மக்கள் அவர்களை தூக்கி எறிந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத் தலைவர் அவர்களே, தங்கத்தை காட்டித்தான், அதை வைத்துத்தான் மக்கள் ஓட்டு போட்டார்கள், இவர்கள் ஓட்டு வாங்கினார்கள் என்று ஜெபமணி அவர்கள் சொன்னார்கள். தங்கம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ அதை பற்றி பிரச்னை இல்லை. வைத்திய லிங்கம் ரிப்போர்ட் தான் வேலை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு, ர. ஜெபமணி : துணைத் தலைவர் அவர்களே, வைத்திய லிங்கம் ரிப்போர்ட் வந்தபோது அதை கோர்ட்டுக்கு கொண்டு வருகிறாயா நாங்கள் தயார் என்று சொன்னோம். ஆனால் அப்படி சர்க்காரியா ரிப்போர்ட்டை கோர்ட்டுக்குக் கொண்டு வந்தால் நீங்கள் தயார் என்று சொல்ல முடியுமா ? (கூச்சல் குழப்பம்).

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனில் குறுக்கு விசாரணைக்கு வருகிறாயா என்று கேட்டபோது சேலம் கண்ணன் சொன்னான், அவன் அண்ணன் சொன்னான் என்று ஓடியது யார் ? குற்றச் சாட்டு கொடுத்து விட்டு, குறுக்கு விசாரணைக்கு கால் பிடரல்பட பேடியைப் போல் புறமுதுகு காட்டி ஓடியது யார் என்று கேட்கிறேன் ? (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். எஸ். ஆர். இராதா நீங்கள் தொடர்ந்து பேசப் போகிறீர்களா இல்லை யாரையாவது பேச கூப்பிட்டு விடட்டுமா ?

திரு. சி. ஆறுமுகம் : இராதா அவர்கள் பேசட்டும், அவர் பேச்சில் நாங்கள் குறுக்கிடவில்லை. சர்க்காரியா ரிப்போர்ட்டை சந்திக்கத் தயார் என்றுதான் சொன்னோம்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து என்மீது கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் பேச வேண்டும் என்று நினைக்கையில் சில உண்மைகளை



எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லிக் கொண்டிருக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்றைக்கு நாட்டில் பல்வேறு சூழ்நிலைகளை பற்றிச் சொன்னார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் பல பத்திரிகைகள் இருக்கின்றன. பத்திரிகைகள் எல்லாம் ஒன்று போல எழுதுவது இல்லை. அவைகளின் ஆசிரியர்களுக்கு ஏற்ப, அவர்களின் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்று பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இன்றைக்கு லட்சக்கணக்கில் விற்றுக் கொண்டிருக்கிற, தமிழ் நாட்டையே பெருமை படுத்துகிற ஒரு பத்திரிகை குமுதம் என்ற பெயரில் இருக்கிறது. அவர்கள் எங்களை எதிர்த்தும் போட்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் ஏற்பட்ட நேரத்திலும் அது எங்களைக் கண்டித்து எழுதியது. அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. ''இந்திரா காந்திக்கு மக்கள் ஓட்டு போட்டார்கள் என்றால், அது எம்.ஜி.ஆருக்கு எதிராக போடப்பட்ட ஓட்டுகள் அல்ல.'' என்று எழுதியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கருத்தை ஒரு பத்திரிகை லட்சக் கணக்கில் வெளி வருகிற ஒரு பத்திரிகை எழுதுகிறது என்றால், அதை லட்சக் கணக்கான மக்கள் படிப்பார்கள், அந்தக் கருத்து அந்தப் பத்திரிக்கையின் கருத்தாக இருந்தாலும், அதுவும் மக்களுடைய கருத்தைதான் சொல்கிறது. அந்த பத்திரிகை மிக நல்ல பத்திரிகை. அப்படி ஒன்றும் எங்களையே ஆதரிக்கும் பத்திரிகை அல்ல அது. மதுவிலக்கு கொள்கையைப் பற்றி அரசை எதிர்த்துக்கூட எழுதிய பத்திரிகை அது. ஒரு நல்ல பத்திரிகை எழுதியிருக்கிறது. அதுவும் லட்சக்கணக்கான மக்களின் எண்ணக் கருத்துக்கு இடமளிக்கிறது என்பதைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பத்திரிகைகளில் வருகிறது என்று சொன்னால், அது நாட்டு மக்களுடைய கருத்துக்கு மாறானது என்று சொல்ல முடியாது......

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய பாரம்பரியம் உள்ள பத்திரிகை ''தினமணி''. அதிலே என்ன எழுதியிருக்கிறது என்பதையும் கொஞ்சம் பார்க்கச் சொல்லுங்கள்..(மணியடிக்கப்பட்டது)

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, அதை நான் பின்னாலே தெரிந்து கொள்கிறேன். இப்படிப் பட்ட விவரங்களை எல்லாம்.... (கூச்சல் குழப்பம்).

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன விவேகானந்தர் மாதிரி கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டீர்களே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பின் என்ன செய்வது? நான் என்ன சொன்னாலும் நீங்கள் கேட்பது இல்லை. அதனால் நீங்களே கத்தி முடியுங்கள் என்று உட்கார்ந்து விட்டேன்.

திரு. துரை முருகன் : கத்தி முடியுங்கள் என்று சொல்லலாமா ? ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசி முடியுங்கள் என்று திருத்திக் கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நேரமாகக் கேட்கிறேன் தங்கள் ஆணைக்குக் கட்டுப்படுகிறவனுக்கு மட்டும் கொடுக்க மாட்டீர்கள் இல்லையா ?....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு ஏன் அந்த குறை, நீங்களும் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்.

திரு. என். கிட்டப்பா : வேண்டாம். அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, அதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் நாட்டு மக்களைப் பற்றி எல்லோருமே பேசுகிறோம். அப்படிப் பேச வருகிறபோது, அவரவர்களுக்கு சம்பந்தப்பட்ட நிலைமையில் ஏற்றுக்கொண்டு பேசிக் கொள்ளலாம். இன்றைக்கு ஒரு கருத்தைச் சொன்னார்கள். ரொம்ப ஆழமாக, ரொம்ப வேகமாக அண்ணன் மனோகரன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் அண்ணன் மனோகரனை வெகு நாட்களாக அறிவேன். கேரள தென்றல் என்று சொல்லப்பட்ட நேரத்திலிருந்தே எனக்கு அண்ணன் மனோகரன் அவர்களைப்பற்றித் தெரியும். அவரைப் பற்றி சொல்லும்போது சொன்னார்கள் வட சென்னையிலே நின்றீர்கள் தோற்றீர்கள், பாளையங் கோட்டையிலே போனீர்கள் தோல்வியுற்றீர்கள், இனி எங்கே போகப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். அண்ணன் மனோகரன் அவர்களை எனக்கு அந்த காலத்திலிருந்தே தெரியும்.

திரு. துரை முருகன் : எங்களுக்கும் தெரியும் அவர்களை. இராதா அவர்களுக்கு என்ன வயதாகிறது என்று சொல்லச் சொல்லுங்கள். அவர் என்னவோ டி.. எம். நாயரோடு இருந்த மாதிரி பேசுகிறார்.





[பிற்பகல் 12-40]

திரு. எஸ். ஆர். இராதா : அந்த மனோகரன் அவர்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962-ல் நாகப்பட்டினம் போ என்று சொன்னார்கள். நாகப்பட்டினத்தில் அவர்கள் 1957-ல் தேர்தலில் போட்டியிட்டு அவர்கள் அமைத்த அஸ்திவாரம் தான், திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக இன்று மாளிகையாக எழுப்பப் பட்டிருக்கிறது. அந்த மாளிகையில் நண்பர் கிட்டப்பாவும், நண்பர் கணேசன் அவர்களும், நண்பர் சுப்ரவேலு அவர்களும் தான் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அஸ்திவாரம் அன்று அப்படி அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அண்ணா சொன்னார், தம்பி மனோகரா, நீ சிங்கத்தை அதன் குகையில் சந்திக்க வேண்டும். தென் சென்னைக்கு வா என்றார்கள். வந்தார்கள். அதற்குப் பின்னால் 1967-ல் அவர் சொன்னார், சூழ்ச்சி என்கிறார்கள், யாரோ தடுக்கிறார்கள் எனவே தென் சென்னையை நான் எடுத்துக்கொள்கிறேன், என்று சொல்லிவிட்டு, உன்னை வட சென்னைக்கு அனுப்புகிறேன் என்றார்கள். அன்று அவர் தொண்டர். தலைவர் சொல்கிற இடத்திற்குப் போகிற ஒரு நல்ல தொண்டரை நான் அன்றைக்குப் பார்த்தேன். இன்றைக்கும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதில் எந்த வேறுபாடும் கிடையாது. தலைவர் எந்த வழியைக் காட்டுகிறாரோ அந்த இடத்திற்குப் போக வேண்டும் என்பது அவர்களுடைய நல்ல உணர்வு. நான் சொல்வதற்கு யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் சொல்லப் போகிறேன் என்பதற்காக யாரும் ஆத்திரப்படக் கூடாது. எங்கேயிருந்து ஜெயிக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள், எந்த ஊரில் நின்றால் ஜெயிக்கலாம் என்று முன்னாலேயே தொகுதி வாக்காளர் பட்டியலை வாங்கி எந்த ஊரில் யார் ஜெயிக்கலாம் என்று பாாத்து அந்த ஊரில் பணியாற்றிய தொண்டனை விட்டுவிட்டு நான் ஊர் மாறிப் போவேன், நான் எங்கே போனாலும் கேட்காதீர்கள் என்று நான் யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னால் நீங்கள் கோபப்படுவீர்கள். நான் நிச்சயமாக கலைஞரைச் சொல்ல மாட்டேன். தயவுசெய்து நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது—

(கூச்சல்-குழப்பம்.)

திரு. க. அன்பழகன் : திரு. இராதா அவர்கள் பேசும்போது நான் குறுக்கிட்டுத் தடுக்கவோ மாற்றவோ விரும்பவில்லை. அவர்கள் பேசிக்கொண்டு போகிற முறையில் எந்தக் கட்சிக்கு அறிவுரை சொல்கிறார்கள் என்று புரியவில்லை. ஒருவேளை தேவைப்படுகிறதோ என்னவோ அதற்காக அவர்கள் தெரிவிக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பேராசிரியர் அவர்களுக்கு விளக்கம் சொல்வதற்காக வருத்தப்படுகிறேன். காரணம் என்னவென்றால் நான் அதிகமாக அவர்களை மதித்துக் கொண்டிருப்பவன். பல நேரங்களில் அவர்கள் சொல்கிற அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு செயல்பட்டவன். ஆனால் இன்றைக்கு நான் யாருக்கு அறிவுரை சொல்கிறேன் என்று ஒரு பேராசிரியர் கேட்க ஆரம்பித்து மாணவன் அதற்குப் பதில் சொல்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன். நான் யாருக்குச் சொல்ல வேண்டுமோ அவருக்குத்தான் சொல்கிறேன். நான் சொல்லிக் கொண்டிருப்பது யாருக்குப் புரிய வேண்டுமோ அவருக்குப் புரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் நிச்சயமாக நான் சொல்கிற உணர்வு பேராசிரியர் அவர்களுக்கும் புரிகிறது. ஆனால் அவர்களால் இன்றைக்குச் சொல்ல முடியவில்லை என்பதால் நான் அவருடைய சிறந்த மாணவன் என்ற முறையில் சொல்லவேண்டும் என்பதால் அவர்கள் சார்பில் நான் இன்றைக்கு பேச முன்வந்திருக்கிறேன். இடம் மாறியிருக்கலாம். அது ஒரு பெரிய விஷயமல்ல.

திரு. க. அன்பழகன் : இடம் மாறுவது பெரிய விஷயம் அல்ல என்று அரசியலில் இடம் மாறுவதை வரவேற்கும் ராதா தேர்தலில் இடம் மாறுவதுபற்றி பெருத்த அக்கறையோடு பேசுகிறார். இடம் மாறாத ஒரு தலைவரை அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இதற்கு என்ன பதில் சொல்வது? நான் சொன்னால் கோபித்துக்கொள்வீர்கள். ஏனென்றால் இடம் மாறுவது என்றால் அன்றைக்கு திராவிட இயக்கத்தில் இருந்தவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்டார்கள். கண்ணீர் துளிகள் பயந்து ஓடிவிட்டார்கள் என்று சொல்கிற நேரத்தில் நானும் அவர்களும் மாறித்தான் வந்தோம். ஆனால் அன்று அவர்கள் பேராசிரியராக இருந்த காரணத்தினால் இன்றும் பேராசிரியராகத்தான் இருக்கிறேன், மாறவில்லை என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் எல்லாம் அன்று பதில் சொல்ல முடியாமல் திண்டாடினோம். கட்சி மாறிவிட்டார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களை ரோடில் ஓட ஓட விரட்டினார்கள். ஆனால் அன்று கட்சி மாறியது ஒரு கொள்கைக்காக, இடம் மாறியது ஒரு கொள்கைக்காக.

திரு. க. அன்பழகன் : திராவிடர் இயக்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது பற்றி ஒரு தவறான கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுகிறபோது இருந்த ராதா



அவர்கள் இங்கே ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். பயன்படாது என்று கருதுகிறேன். பெரியார் அவர்களை விட்டு விலகி வந்தோமே தவிர கட்சியின் கொள்கையிலிருந்து விலகிவோம் என்ற கருத்தில் சொல்வது அந்தக் கால சூழ்நிலையில் பொருந்தாது. பெரியார் அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டு ஒரு தனி அமைப்பு வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட வழி அது. இதில் குறை காணும் ஆற்றல், வல்லமை, தெளிவு நமக்கு ஏற்பட்டு விட்டதாகக் கருதினால் அது நம்முடைய நிலையைக் குறைவு படுத்தும்.

திரு. எஸ். ஆர். இராதா ; நான் இதையும் பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும். அதே நிலை தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உருவாயிற்று. ஏதோ கட்சி மாற வேண்டுமென்ற உணர்வில் அல்ல. ஒரு கொள்கையை எடுத்தோம். அந்தக் கொள்கைக்காக வெளியேற்றப்பட்டோம். வெளியேற்றப்பட்டதைக் கண்டித்தோம். அப்படிக் கண்டித்தவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். அதனாலே, வெளியேறினோமே தவிர, பதவி கிடைக்கும், பரிசு கிடைக்கும், பதவியிலே உட்காரலாம் என்ற ஆசையில் நாங்கள் வரவில்லை. நான் இன்றைக்கும் சொல்கிறேன். ஆட்சி போய்விடும் என்று பயமுறுத்துகின்றவர்களுக்குச் சொல்கிறேன். ஆட்சிக்காக நாங்கள் பயப்படவில்லை. இன்னும் சொல்கிறேன். மக்களைச் சந்திக்க வேண்டிய நிலை வந்தால், இந்த இயக்கத்தில் லட்சக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் தைரியமாகச் சொல்லத்தான் வேண்டும். எங்களுக்கு அந்த உணர்வு இருக்கிறது; தைரியம் இருக்கிறது.

ஆனால், இன்றைக்கு மனு போட்டுக் கொண்டிருக்கிறீர்கள், கலைத்து விடுங்கள், கலைத்து விடுங்கள் என்று. ஒன்றை நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் சொல்வதை எடுத்துக் கொள்வதாக இருந்தால், ஒன்றை நான் கவனப்படுத்துகிறேன். யார் சொன்னார்கள் என்பதை பின்னாலே சொல்கிறேன். ''மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து, ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை மாற்ற ஐந்தாண்டுக்கால அவகாசம் இருக்கிறது. அதற்குப் பிறகு மக்கள் தங்கள் வாக்குச்சீட்டில் அந்த அரசை மாற்ற வேண்டுமே தவிர, இடையிலே குறுக்கு வழியிலே கிளர்ச்சியின் வாயிலாக அப்புறப்படுத்த முயற்சிகள் நடைபெறுவதை நாங்கள் ஆதரிக்க மாட்டோம்''. நான் ஏதோ ஆளும் கட்சியிலே இருக்கின்ற காரணத்தினால், இப்படிச் சொல்வதாக பத்திரிகை நிருபர்கள் கருதலாம். எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில், இதே கொள்கையைத் தான் நான் சொன்னேன். அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். இதை நான் படிக்கிற நேரத்தில்,

இதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற அண்ணன் மனோகரன் சொன்னாரோ, வேறு யாராவது சொன்னார்களா என்று நினைக்கலாம். அவர்கள் எல்லாம் சொல்லவில்லை. யார் சொன்னார்கள் என்று சொன்னால், அருமை நண்பர்களே, நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், இன்றைக்கு வேகமாக மனுப் போட்டுக் கொண்டிருக்கின்ற, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அன்றைக்கு இதே சூளுரையைச் சொன்னார்கள். அந்த சூளுரை இன்றைக்கும் இருக்கிறது. நான் அதை நம்பிக் கொண்டிருக்கிறேன். அந்த சூளுரையைத் தான் நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

அந்த நிலையில் ஆட்சி கலைக்கப்படுமானால் அன்றைக்கு சொல்லப்பட்ட சூளுரை இருக்கிறதே, கலைஞர் அவர்களால் சொல்லப்பட்ட சூளுரை இருக்கிறதே, அந்த சூளுரையை நிச்சயமாக நான் சொல்ல வேண்டும், எந்த நிலையிலும் அவர் மாற மாட்டார் என்பதிலே அழுத்தமான நம்பிக்கையை வைத்திருக்கிறேன். அந்த நம்பிக்கையிலே தான் நான் அவர்களுக்குச் சொல்லவேண்டும். இந்தச் சூளுரை என்பது ஒரு புத்தகத்திலே அச்சடிக்கப்பட்டு, எழுதப்பட்ட கருத்தல்ல. தலைவனின் வாதமாக, ஒரு வார்த்தையாக இல்லாமல், ஒரு பதிவு ஏட்டிலே ஏறக்குறைய ஒரு சிறந்த தத்துவமாக அந்த வார்த்தைகள் இருக்கின்றன. அந்த வார்த்தைகள் இன்றைக்கு மாறப் போகிறதா ? அந்த வார்த்தைகளுக்கு இன்றைக்கு மரியாதை இல்லாமல் போகுமா என்பதுதான் காலத்தினுடைய கேள்வி என்பதை நான் இங்கே சொல்லவேண்டும். காலம்தான் இதற்கு பதில் சொல்லும்.

எங்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு நான் சொல்லவேண்டும். எனக்கு ஒரு நண்பர் சொன்னார். இந்த பதவிப் போய்விட்டால், உங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். கோடம்பாக்கம் போய்விடுவார்; நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். நானும் திரும்பி பார்த்தேன். அந்த நண்பர் கேவலமாக, கோடம்பாக்கம் என்றால் ஏதோ போகக் கூடாத இடம், அந்த இடத்திற்குப் போகலாமா என்று கேட்பதுபோல் 'கோடம்பாக்கத்திற்கு அவர் போய்விட்டால் நீங்கள் எங்கே போவீர்கள்?' என்று. நான் அவர்களுக்குச் சொல்லுவேன். (குறுக்கீடு) கோடம்பாக்கத்தைப் பற்றி அனுபவம் எனக்கில்லை. ஆனால், அந்த இடத்திலே இருந்துதான் கலைவாணர் என்.எஸ்.கே யிலிருந்து நம்முடைய கே.ஆர்.ஆர். அவர்களிலே இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் வரையிலும் சுயமரியாதை கருத்துக்களைப் பரப்புவதற்காக, பகுத்தறிவு சமுதாயத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் யாவரும் அதற்கு அந்த இடத்தைத் தான் தேர்ந்தெடுத்தார்கள். இன்றைக்கும் போக வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால்......





திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, கோடம்பாக்கத்தைப் பற்றி நான் ஏதோ இழிவுபடுத்தி பேசியதைப் போன்ற ஒரு நிலையை உருவாக்குகிறார். உங்களுக்கு கோட்டை விடை தருகிறது, கோடம்பாக்கம் அழைக்கிறது, அவர் அங்கே போகப் போகிறார், நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று தான் கேட்டேன். கோடம்பாக்கத்தை இழிவுபடுத்திச் சொல்லவில்லை. ஹாலிவுட் என்று சொல்லுவது போல் கோடம்பாக்கம் என்றால் சினிமா ஸ்டுடியோக்கள் இருக்கும் இடம் என்ற வகையிலேதான் சொன்னேன். கோடம்பாக்கத்தை இழிவுபடுத்தி நான் சொன்னதாக நீங்கள் ஒரு பதிலைத் தயார் பண்ணிக் கொண்டு வந்தால் நீங்கள் பேசுங்கள்.

(பிற்பகல் 12-50)

திரு. எஸ். ஆர். இராதா : விளக்கத்திற்கு நன்றி. நானும் கோடம்பாக்கத்தைக் கேவலமான ஒன்று என்று சொல்லவில்லை. யார் போகாமல் இருந்தார்கள் அந்த இடத்திற்கு? யாருக்கு இடம் அங்கே கிடைக்கவில்லையோ அவர்கள் எல்லாம் அந்த இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. சொல்லுகிற பழக்கம் கூட எனக்குக் கிடையாது.

திரு. துரை முருகன் : திரு. வீரப்பன் அவாகள் மீது கோபம் இருந்தால் நேரடியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, திரு. துரை முருகன் அவர்கள் ஆத்திரத்தில் சில கருத்துக்களைச் சொல்லுவது எந்தெந்த பக்கத்தில் யார் யாரைத் தாக்குமென்று நினைவில் வைத்துப் பேசவேண்டும். நிச்சயமாக நான் கலைஞரைப் பற்றிப் பேசவில்லை. தேவையில்லாமல் ஆர்.எம்.வீ. அவர்களை இழுக்க வேண்டியதில்லை.

திரு. துரை முருகன் : சினிமா ஸ்டுடியோவுக்குப் போவது கேவலம் என்று யார் சொன்னது ? நடிப்பதை, எழுதுவதை கேவலம் என்று சொல்லவில்லை.

(பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.)

திரு. எஸ். ஆர். இராதா : இன்று அந்த இடத்திற்குப் போனால் என்ன ? சுயமரியாதை இயக்கம் அந்த இடத்தை வைத்துத்தான் பல்வேறு சாதனைகளை உருவாக்கிற்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் இந்த இடத்தைப் பிடிக்க அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இன்றைக்குக் கூட நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே

போவார்கள் என்று சொன்னால் நான் அவர்களுக்குச் சொல்வேன். இன்றைக்கு இருக்கிற நிலைமையைச் சொல்வேன். சினிமா பாஷையில் சொல்ல வேண்டுமானாலும் சொல்வேன். நான் அதிகமாகச் சொல்லிப் பழக்கப்பட்டவன் அல்ல. புரிய வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். சில நண்பர்கள் தேர்தலில் தோல்வி ஏற்பட்டதற்குப் பின்னால் பெரிய சுவரொட்டி வந்தது. எங்களுக்குக் காலம் பதில் சொல்லும் என்று அவர்கள் பயமுறுத்தினார்கள். காலத்தின் பதிலை ஏற்றுக் கொண்டோம். ஏற்றுக்கொண்ட பிறகுதான் திருப்பி அவர்களுக்குப் பதில் சொல்லுகிறேன். ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது, ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்லுகிறேன். வெள்ளாடு வேங்கையாகிறபோது நீங்கள் யாருடைய துணையுடனோ துள்ளி வருகுது வேல் என்று பயமுறுத்தப் பார்க்கிறீர்கள். எந்த வேல் வந்தாலும் நாங்கள் தாங்குகிறோம் இதயத்தில். இமயத்தின் உச்சிக்கு அழைத்துக் போகிறேன், தயாராக இரு என்று சொன்னார்கள். காலத்தின் பதில் நாட்டுக்குப் புரியும். நாடு புரிந்து கொண்ட பின்னால்தான் இன்றைக்குப் பல்வேறு விவாதங்கள் இங்கே வருகின்றன. சினிமாவைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் இங்கே நேற்றைக்கு பேசும்போது அருமை நண்பர்கள் நாடோடி மன்னன் சினிமாவைப் பார்த்ததாகச் சொன்னார்கள். எனக்கும் பார்க்கவேண்டுமென்று ஆசை. பார்க்க முடியவில்லை, டெலிவிஷன் இல்லை. டெலிவிஷன் வைத்திருக்கிறவர்கள் நாடோடி மன்னனைப் பார்க்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இரவு முழுவதும் சிந்தித்துப் பார்த்தேன். நாடோடி மன்னன் கதையை நினைத்துப் பார்க்கிறேன். ஒரு சர்வாதிகாரியை வீழ்த்துவதற்காக அழிப்பதற்காக நாடோடியோடு மன்னனும் ஒன்று சேர்ந்து வீழ்த்துவதுதான் அந்தக் கதை. அந்தக் கதை இன்று நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மன்னன் எங்கே இருக்கிறான்? ஊழல் கோட்டையில், கமிஷன் குகையில் அடைக்கப்பட்டிருக்கிறான்! நாடோ சர்வாதிகாரியிடத்தில். சர்வாதிகாரியிடத்திலிருந்து அந்த நாட்டு மன்னனை மீட்டு இந்த நாட்டைப் பொதுவுடைமைப் பூங்காவாக, சமதர்மப் பூங்காவாக ஆக்க வேண்டுமென்று இன்றைக்கும் அந்த நாடோடி மன்னன் தயாராக இருக்கிறான் என்பதை......

திரு. க. அன்பழகன் : உணர்ச்சியோடு பேசுகிறார்கள். யாரையோ சர்வாதிகாரி என்கிறார். யார் அந்த சர்வாதிகாரி ? யாரை நாடோடி என்கிறார் ? அது இந்த அவைக்குத் தெரிந்தால் நல்லது.

திரு. எஸ். ஆர். இராதா : பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன. உங்களுக்குச் சந்தோஷமாக இருந்தால் நீங்களே நாடோடியானாலும் சரி. (திரு. ரகுமான்கான் குறுக்கீடு) திரு. ரகுமான்கானுக்கு சந்தேகம் வரக்கூடாது. பல



தடவை ரகுமான்கான் யாரை சர்வாதிகாரி' என்று காட்டினார் என்பது அவருக்குத் தெரியும். திரு. ரகுமானகான் யாரைக் காட்டினாரோ அவர்தான் சர்வாதிகாரி. நீங்கள் இரண்டாண்டுக் காலத்திற்கு முன்னால் இந்த மன்றத்தில் யாரை சர்வாதிகாரி என்று சொன்னீர்கள் ?

திரு. க. அன்பழகன் : இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்னால நெருக்கடி நிலை இருந்தது. ஏற்படுத்திய நெருக்கடி நிலையை அடிப்படையாக வைத்து அன்று பேசப்பட்டது. இன்றைக்கு நெருக்கடி நிலை இல்லை. நெருக்கடி நிலை இனி வராது என்றும் கூறிவிட்டார். இப்போதும் அவரே தான் சர்வாதிகாரி என்று திரு. ராதா கூறுகிறாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. நெருக்கடி நிலை மாறிய பின்னாலேயும் சர்வாதிகாரி என்று சொல்லியிருக்கிறார்களே, யாரைச் சொன்னீர்கள்?

திரு. க. அன்பழகன் : நெருக்கடி நிலைக் கொள்கையை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டிருந்த நேரத்திலே அந்தக் கருத்து இருந்தது. நெருக்கடி நிலை இனி இந்த நாட்டிலே கூடாது என்று சொன்னதற்குப் பிறகு அந்தக் கருத்து மாறியுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சர்வாதிகாரி இன்றும் இருக்கிறார் என்று சொல்கிறார். ஆகவே இந்திரா காந்தி அவர்களை நண்பர் திரு. இராதாவும் அவருடைய கட்சியினரும் சர்வாதிகாரி என்று கூறுகிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் திரு. சுந்தரராஜ் அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உதாரணங்களைச் சொல்ல முற்படுகிற வேகத்தில் அல்லது சில சினிமாக்களின் தலைப்புகளைச் சொல்லி அவை உறுப்பினர்கள் சோர்ந்து இருக்கும்பொழுது அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற்காகப் பயன்படுத்துகின்ற அந்த முனைப்பில் தேவையற்ற கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன என்பதை எண்ணி நான் வருந்துகிறேன். நீங்கள் என்ன கருதுகிறீர்கள். இந்திரா காந்தியைப் பற்றி என்று சொல்கிற நண்பர்களுக்கு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களாலே மகத்தான வெற்றியில் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற அந்த அம்மையாரை சர்வாதிகாரியாக அண்ணா தி. மு. க. கருதவில்லை

என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு மேற்கொண்டு அனாவசியமான சர்ச்சைகளில் ஈடுபடவேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து சபைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த அரசைப்பற்றிப் பல் வேறு கருததுக்களைச் சொன்னார்கள். போட்ட உத்திரவை வாபஸ் வாங்குகிறீர்களே, நீங்கள் அரசாளத் தெரிந்தவர்களா என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக பின்தங்கியோர் பற்றிய வருமான வரம்பு உத்திரவு போட்டீர் கள், அந்த உத்திரவை நீங்கள் திரும்பப் பெற்றீர்கள், இப்படி ஒரு அரசு நடக்கலாமா என்றெல்லாம் பேசப்பட்டது. அவர் களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன் நாட்டினுடைய ஒரு சூழ்நிலையைத் தெரிந்துகொண்டு, நாட்டு மக்களுடைய விருப் பத்தைப் புரிந்துகொண்டு ஆள்வது தான் ஒரு ஆட்சிக்கு சிறப்பாக இருக்குமே தவிர, நாங்கள் சொல்கிற கொள்கையை நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும், அதற்காக நாங்கள் எதையும் செய்வோம் என்ற நிலையில் போவது என்பது நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதது.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் நான் கொஞ்சம் வேகமாகவே சொல்கிறேன். அந்த உத்திரவு வாபஸ் வாங்கப்பட்டது என்றெல்லாம் சொல்கிற நண்பர்களுக்கு நான் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே பயிற்சி மொழி தமிழ் என்று ஒரு நல்ல அருமையான கொள்கையை நாம் அன்றைக்குச் சொன்னோம். ஆனால் எந்த மாணவர்களை நாம் வளர்த்து வைத்தோமோ அந்த மாணவர்கள் அன்றைக்கு கிளர்ச்சி செய்தார்கள். அந்த மாணவர்களுடைய கிளர்ச்சியை ஏற்று தமிழ் மொழி பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற உணர்வு நமக்கு இருந்தாலும் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று ஆக வேண்டுமென்ற ஆசை நமக்கெல்லாம் இருந்தாலும் அந்த ஆசையை விட்டுவிட்டு, நாம் மாணவர்களுடைய நிலையைத் தெரிந்துகொண்டு, நாட்டின் நிலையைத் தெரிந்துகொண்டு நாம் அந்த உத்திரவை வாபஸ் வாங்கினோம். வாபஸ் வாங்குவதால் தமிழ் மீது நமக்கு பற்று இல்லையா என்றால் தமிழ் மீது நமக்கு பற்று இருக்கிறது. தமிழ் வளர வேண்டாமா, தமிழ் எல்லா இடங்களிலும் வர வேண்டாமா, தமிழ் மொழி பயிற்சிமொழி யாக இருக்க வேண்டாமா என்றால் நிச்சயமாக அந்தக் கொள்கையை நாம் யாரும் மறுக்கமாட்டோம். ஆனால் அன்றைக்கு அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாம், போட்ட உத்திரவை வாபஸ் வாங்கினோம் என்றால் நிச்சயமாக கேவலமாகக் கருதமாட்டோம். காலத்தினுடைய நிலையைத் தெரிந்து ஒரு உத்திரவை எப்படிப் போடவேண்டுமோ அப்படிப் போடுவதற்கு அதை மாற்றிக் கொள்வது ஒரு அரசுக்கு இருக்கிற நல்ல லட்சணங்களில் ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



[பிற்பகல் 1–00]

இங்கே பேசுகின்ற நேரத்திலே ஒரு நண்பர் ரொம்ப வேகமாகச் சொன்னார்; கப்பலோ, பஸ்ஸோ அல்லது இரயிலோ என்றெல் லாம் என்னென்னவோ பேசினார். இப்படி நானும் அவருக்குப் பதில் சொல்வதாக இருந்தால், வீராணமோ, கூவமோ, பூச்சி மருந்தோ என்று ஆரம்பித்தால் அவர் கோபப்படுவார்.

ஏனென்றால் பழைய விஷயத்தை இவன் கிளறுகிறானே என்று. அவர் பேர ஊழல் என்று சொன்னதும் எனக்கு நினைவிற்கு வருகிறது, ஒரு காலத்திலே, சென்னை மாநகராட்சியை முதன் முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றிய நேரத் திலே நம்முடைய மேயர் உட்கார்ந்த நேரத்திலே, ஒரு பேர ஊழல் வழக்கு வந்தது. அன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் சொன்னார் கள், அன்றைக்கிருந்த நம்முடைய மாநகராட்சியிலே பெட்ஃ போர்ட் லாரி வாங்கப்பட்டது, அவ்வாறு பெட்ஃபோர்ட் லாரி வாங்கப்பட்டதும் காங்கிரஸிலே சொன்னார்கள் லாரி பேர ஊழல் என்று. உடனே அது நாடுபூரா பற்றி எரிந்தது. லாரிகளை வாங்கினார்கள், பேரம் பேசி விட்டார்கள், லாரி பேர ஊழல் தெரியுமா என்று கொட்டை எழுத்துக்களிலே, பெரிய எழுத்துக் களிலே வந்தது. அன்றைக்கு நான் நகராட்சியிலே கும்பகோணத் திலே உறுப்பினராக இருந்தேன். நான் கும்பகோணத்திலே பார்த்தேன், நகராட்சியிலே லாரிகள் வாங்கினார்களா என்று. அவர்களும் மூன்று லாரிகள் வாங்கியிருந்தார்கள். உடனே, 15 நாளிலே நான் நகராட்சியிலே சொன்னேன், இந்த நகராட்சியிலே காங்கிரஸ்காரர்கள் வாங்கிய லாரிகளிலே ஊழல் வைத்தீர்களா, பேரம் பேசினார்களா என்று.

நான் இதைப் பேசுவதற்குக் காரணம், வாங்காத கப்பலுக்கு என்றால், வாங்கிய கப்பலுக்கு என்று நான் சொல்ல மாட்டேன்; எங்களுக்கு மனநிலை சரியாக இருக்கிறது. நீங்கள் யார் யாரையோ பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதாலே தான் பல்வேறு தவறுகள் உங்களுக்கு ஏற்படுகின்றது. (மணியடிக்கப்பட்டது)

துணைத் தலைவரவர்களே, நீங்கள் மணியடித்துவிட்ட பிறகு நான் பேசுவது நல்லது அல்ல. ஆனால் கடைசியாக அவர் களுடைய நிலைக்காக ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். எங்களை அன்புக் கரத்தை நீட்டி ரொம்பக் கனிவோடு வாருங்கள் வாருங் கள் என்று அழைத்தார்கள். எங்கே போவது என்று தெரியாத நிலையில், யார் எங்கே அழைத்துப் போகிறார்கள் என்று தெரி யாத நிலையிலிருக்கும் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், நீங்கள் வர வேண்டிய இடம் இங்கு தானே தவிர, வேறு இல்லை. இன்றைக்குக் காப்பாற்றக்கூடிய மன்னன் நாடோடி மன்னன் தான் என்று சொல்லி, அவர்கள் வர வேண்டுமென்று ஆசையோடு, பணி வோடு கூறி அழைத்து, துணைத் தலைவரவர்களே, தாங்கள் இவ்வளவு நேரம் அனுமதி அளித்தமைக்காக நன்றி கூறி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: துணைத்தலைவரவர்களே, இன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் அவர்களின் உரையின்மீது இந்திய தேசிய ஃபார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். பலவிதமான கருத்துக்களைக் கொள்கை அளவிலே அரசு தெரிவிக்க முற்பட்டிருந்தாலும் நடைமுறையில் பார்க்கின்ற பொழுது, எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, விலைவாசிகளைப் பொறுத்தவரையில் அரசு பலவிதமான நடவடிக்கைகளை எடுத்தும்கூட கட்டுப்படுத்த இயலாத நிலைமையிருக்கிறது. அதற்கு மாற்று நடவடிக்கையாக, குறிப்பாக விவசாயிகளின் விளை பொருட்களுக்குக் கட்டுப்படியாகும் அளவிற்குச் செய்ய மத்திய அரசின் ஒத்துழைப்போடு சில கேந்திரங்களை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, இதுவரை விவசாயப் போராட்டம் பல கோணங்களை அடைந்து அதன் மூலம் பல உயிர்ச் சேதங்களும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்ட பிறகும்கூட, அரசு அது சம்பந்தமாக நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, தயவுசெய்து விவசாயிகள் விஷயத்தில், அவர்களுடைய உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலையைக் கொடுத்தாக வேண்டுமென்ற அவசர அவசிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்தால் ஒழிய இன்றைக்குக் குறிப்பாக நெல் அதிகமாக விளைந்திருக்கிறது நாட்டிலே. அதற்கு உற்பத்திச் செலவு அதிகம் ஏற்பட்டிருக்கிறது. நோய்வாய் அதிகம் பயிர்களுக்கு ஏற்பட்ட பொழுது அதற்குத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது போலவே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு வருமானம் கூடியிருக்கிறது என்று விவசாயிகள் உணர்ந்திருந்தாலும் விலைகளைப் பார்க்கின்றபொழுது மிகவும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. ஆகவே, அரசு சமீப காலத்தில் சில மாதங்களுக்கு முன் என்று கருதுகிறேன், மாண்புமிகு முதல்வரவர்களும், விவசாய அமைச்சரவர்களும் குறைந்தபட்சம் ஒரு குவிண்டாலுக்கு 129 ரூபாய் பெற்றுத் தர வேண்டுமென்று மக்கள் மன்றத்திலேயும், மாமன்றத்திலேயும் கூறினார்கள் என்ற நினைவு இருக்கிறது. (குறுக்கீடு) டெல்லியில் 15ஆம் தேதி மீட்டிங் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே பேசும்பொழுது கரும்புக்கு ஒரு டன்னுக்கு 150 ரூபாய், கோதுமைக்கு 127 ரூபாய், அதிலும் மானியமாக 27 ரூபாய் வடநாட்டுக்காரர்களுக்கு மத்திய அரசு கொடுக்கும்பொழுது, இமயம் முதல் குமரி வரை அனைவரும் இந்தியர்கள் என்று இந்திய ஒருமைப்பாட்டைப்பற்றிப் பேசிப் பயன் என்ன?



நாங்கள் முயன்றோம், கேட்டோம், அரசு கொடுக்க மறுக்கிறது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தபொழுது நான் சொன்னேன், அவர்கள் கொடுக்க மறுத்தால், unreasonable discrimination என்ற நிலையில் காரணம் இல்லாது, பொருத்தம் இல்லாது வேறுபாடு நமக்குள்ளேயே. விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் ஒருவர் என்ற தாய் உணர்வு இல்லாமல் வேறுபாடு காட்டுவார்களானால், அவர்களை எதிர்த்துப் போர்க்கொடி கூட ஏன் உயர்த்தக்கக் கூடாது என்று நான் கேட்டேன். அந்த நிலை ஏற்படுமானால், எங்களைப் போன்றவர்கள், உங்கள் பின்னணியிலே நிற்கத் தயாராக இருக்கிறோம், தமிழகமே நிற்கும், எந்தக் கட்சி வேறுபாடும் இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்று திருவள்ளுவர் அந்தக் காலத்திலே, விவசாயிகளுக்கு பெரும் மரியாதை கொடுத்து பாடிய பாட்டை இன்றைக்கு நாம் தெருவெல்லாம் பாடினால், விவசாயி ரத்தக் கண்ணீர் வடிக்கிறான். ஆனந்தக் கண்ணீர் வடிக்கிற விவசாயி யாரும் இல்லை. ஆக, (குறுகீடு) நம் பகுதியில் ஆடிக்காற்று தூசி அடிக்கிறது, ஆண்டிப்பட்டி, தேனி பகுதியிலே. அதுவல்ல, களத்தில் தூசிகள் அடிக்க வேண்டும். ஆஸ்பத்திரிக்குப் போகக் கூடப் பணம் இல்லாத ஒரு துர்பாக்கிய நிலையில விவசாயிகள் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் காலையில் கூட, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அளவுக்கு கோஷத்தை இங்கே பேசுகிறோம், சட்டத்தைப் பற்றிப் பேசுகிறோம். உழுகிற நிலக்காரனுக்கு கிஸ்திப் பணம் கட்ட வாய்ப்பில்லை.

நெல்லை பெரியார் ஜெபமணி அவர்கள் குறிப்பிட்டத்தைப் போல், சிக் மில்ஸ், சிக் இன்டஸ்ட்ரீஸ் என்று டிக்ளேர் பண்ணி, எப்படி தொழிற்சாலைகளை அரசு மேற்கொண்டு, நஷ்ட ஈட்டை வருஷா வருஷம் கொடுத்து வருகிறார்களோ, அப்படி, நிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள், சர்க்காரே முதலாளியாகட்டும், நாங்கள் கூலிக்கார ஆட்களாக மாறிவிடுகிறோம். நீங்கள் சொல்கிற 8 மணி நேரத்திற்கு 10 மணி நேரம் நாங்கள் வேலை செய்யத் தயாராக இருக்கிறோம். கம்புக் கூழை கரைத்துக் கொடுங்கள், சாப்பிடுகிறேம். அதை விட்டுவிட்டு, சம்சாரி ரூ 5 இலட்சம், 10 இலட்சம் சொத்துக்காரன் கூட வருஷத்திற்கு ஒரு காஞ்சிபுரம் பட்டு எடுக்க முடியவில்லை. சாதாரண சின்னாளப்பட்டு கூட எடுக்க முடியவில்லை. ரூ. 5,000-க்கு பெட்டிக் கடை வைத்திருப்பவன் காஞ்சீபுரம் சில்க் எடுக்கிறான், டூர் போகிறான், உல்லாசப்பயணியாக. இந்த அளவுக்கு சமுதாயத்தில் விவசாயிகள் பாதுகாப்பற்ற நிலையில் அனாதைகளாக இருக்கிறார்கள் என்பதை மாமன்றம்

தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அமைச்சர் பெருமக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். கட்டுபடியாகிற விலையைக் கொடுத்தாக வேண்டும். It is a must. அதிலே ஒன்றும் வேறுபாடு இல்லை. அதிலே Postponement இருந்தால், நான் முன்பே சொன்னேன், சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று. போன வருஷம் சொன்னேன். போராட்டம் நடந்தது, பெரும்வி ளைவுகளை நாம் சந்தித்தோம். நானும் என்னுடைய மனைவியும் கூட உறுப்பினர்களாக இருக்கிறோம் விவசாயிகள் சங்கத்திலே, என்று சொன்னேன். அங்கே அவர்கள் சொல்கிற வன்முறையை நாங்கள் ஆதரிக்கத் தயாராக இல்லை. அதே நேரத்தில், அவர்கள் சொல்கிற நியாயத்தை நாம் ஆதரிக்க கடமைபட்டிருக்கிறோம்.

ஆகவே தயவுசெய்து கட்டுபடியாகிற விலைக்கான முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். அல்லது, 'இன்புட்ஸ்' என்று சொல்கிறார்களே, விவசாய உற்பத்திக்குத் தேவைப்படும் பொருள்களின் விலையை நீங்கள் குறைத்தாக வேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்யவேண்டுமென்று மிக்க பணிவன்போடு கேட்டுகொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறைந்தது ரூ. 129 என்று சொன்னாலும், அதைக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை, இந்த உலகத்திலே. மாண்புமிகு மத்திய விவசாய அமைச்சர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் வந்தபொழுது, பாராட்டு விழா வைத்தார்கள். அப்பொழுது சொன்னேன். நம் ஜனநாயகத்தில் நாமே சட்டமன்ற உறுப்பினர்களாக வருகிறோம். இங்கே ஒரு தீர்மானம் வந்தால் ஓட்டுப் போடுகிறோம். 200 பேர் மொத்தம் இருக்கிறோம் என்றால் 101 பேர் ஓட்டு போட்டால், மெஜாரிட்டி என்று சொல்கிறோம். 99 பேர் ஓட்டுப் போடுவது, மைனாரிட்டி, தீர்மானம் தோற்றுவிடுகிறது. இப்படி ஒரு ஓட்டு வித்தியாசத்தில் முடிவு செய்கிறோம் மெஜாரிட்டியை. ஆனால், விவசாயிகள் 100-க்கு 80 பேர் இந்தியாவிலேயும், தமிழகத்திலேயும் இருக்கிறார்கள். அந்த 100-க்கு 80 பேருடைய உற்பத்திப் பொருள்களின் விலையை நிர்ணயிப்பது 20 பேர், What is this wonderful fantastic democclacy? I do not understand at all. Is it becase of my inability tou nderstand or is it because of the total negligence of the Government. என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. Or is it because of the inabiliality in spite of the earnest efforts of the Government. என்னால் புரிந்து கெள்ள முடியவில்லை. ஆகவே, தயவு செய்து ஜனநாயகம் என்றால், ஜனநாயகத்தை மொத்தமாக மதிப்பதற்கு, விவசாயி ஏழைப்பயல், உங்களுக்குள் ஒற்றுமை இல்லை, ஆகவே, உங்களுக்கு ஒன்றும் கிடையாது என்று சொன்னால் என்ன நியாயம்? Let us fight with the Centre. No matter whether it is Indira Gandhi or Morarji. We are not concerned with the individuals. We are concerned with the society at large.





Therefore let us have reasonable justice done to the agriculturist who are in majority in the society. ஆகவே, அருள் கூர்ந்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அதிகாரிகள் பிள்ளைகளுக்கு, போலீசார் பிள்ளைகளுக்கு, அல்லது மில் தொழிலாளிகள் பிள்ளைகளுக்குக் கூட, ரிட்டையர் ஆனால் அவர்களுக்கு பிரிஃபரன்ஸ் அடிப்படையில், வாரிசுபடி உத்தியோகம் கொடுக்கிறார்கள். வாரிசு அடிப்படையிலே மில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். அமைச்சர் அண்ணனுக்கும் தெரியும். ஏர்லியர் ரிட்டையர்மெண்ட் என்றால், என் மகன் எக்ஸ் இருக்கிறான், ஒய் இருக்கிறான், எடுத்துக்கொள்ளுங்கள் என்றால், எடுத்துக் கொள்கிறார்கள். அந்த மாதிரி விவசாயிகள் வீட்டுப் பிள்ளைகளுக்கு, மெஜாரிட்டியாக இருப்பவர்களுக்கு இங்கே நீங்கள் சலுகை தருகிறீர்களா? உத்தியோகத்திலே ஏன் சலுகை தரக் கூடாது? கிராமத்திலே இருக்கக்கூடிய சம்சாரி வீட்டுப் பிள்ளை படிக்காமல், எலிமென்ட்டரி ஸ்கூலில், கள்ளர் ஸ்கூலில், யூனியன் ஸ்கூலில் படிக்கிறான். அவன் 45, 50 மார்க் எடுக்க சிரமப்படுகிறான்.

[பிற்பகல் 1–10]

நகர்ப்புற படித்தவர்களுடைய பிள்ளைகள் அதிக மார்க்கு வாங்கி வருகிறார்கள். அவர்களுக்கு மார்ஜினைக் குறைத்து ஏழைகளாக கிராமப் புறங்களில் இருந்து வந்தால் அவர்களுடைய பிள்ளைகளுக்கு, விவசாயத்தை நம்பி உழைக்கிறவர்களுடைய பிள்ளைகளுக்கு குறிப்பாக விவசாயத் துறை அக்ரி, பி. எஸ். சி. வருகிறது. நீங்கள் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கலாம் விவசாயிகள் நிலம் இல்லாத ஏழைப் பிள்ளைகளை வைத்தியம், கால்நடை வைத்தியத் துறையில் சேர்க்கலாம். மாட்டை தொட்டுக் கும்பிடுகிற ஜாதி விவசாயி. அவன் பிள்ளைகளுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைவிட்டு ஒரு ஐ. ஏ. எஸ் ஆபிசா பிள்ளைக்குக் கொடுத்தால் அவன் 'என்ன மாடு', 'ப்ளடி நான்சென்ஸ்' என்று ஒதுங்கிப் போவான். ஆகவே இப்படிப் பட்ட துறைகளில் எல்லாம் நீங்கள் சலுகைகள் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக படித்தவர்கள், அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. Unemployed graduates, unemployed youths. They are going to be a very great menace to society. அதை முன்னாலே கலைஞர் ஆட்சியிலேயே சொன்னேன். செய்வோம் என்று சொன்னார்கள். நேரம் இல்லை. இன்றைக்குப் படிக்க வைக்காமல் இருந்துவிட்டால் 'லெஸ் மெனேஸ்'. லெஸ்

ஹார்ம்புல்'. படித்தவர்கள் 'இன்டலிஜென்ட் பிரெயி'இ ரொம்பத் தவறு பண்ணுவதற்கு தூண்டும். எனவே படித்தவர்களுக்கு வேலை கொடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசுகிறபோது முன்னாலே ஒரு சினிமாவிலே கையிலே அட்டை பிடித்துக் கொண்டு வேலை கொடு இல்லை எனில் சோறு போடு என்று சொல்லி நடித்ததாகச் சொன்னார். அது படித்தவன் படிக்காதவன் இரண்டு பேருக்கும் சொல்லப்பட்டது. இங்கே படித்தவர்களுக்*குப் போய் அரசு மானியம் கொடுத்து காணி அரைமா என்று நெல் தானியத்தை விற்று கடனாளியாக்கி, அரசு பணத்தை செலவு பண்ணி You have made the useful youth as useless. மாண்புமிகு லத்தீப் அவர்கள், கட்சியின் தலைவராக இருப்பவர், இடம் மாறி அமர்ந்து, நான் உரையாற்றிக் கொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்காத அளவுக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள்....

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் ;</u> துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொல்லுகின்ற முக்கியமான ஆலோசனையைப் பற்றித்தான் இங்கே விவாதித்து கொண்டு இருக்கிறோம்.

<u>திரு. கே. கந்தசாமி :</u> மிக்க நன்றி. ஆக படித்த இளைஞர்களுக்குத் தயவுசெய்து மகாராஷ்டிரத்தில், வங்காளத்தில் இப்போது பாண்டிச்சேரியில் கொடுப்பதைப் போல இங்கேயும் குறைந்த பட்சம் கொடுங்கள்.

Till he gets an employment either in private sector or in Governmenr உத்தியோகம் கிடைக்கிறவரையிலும் கொடுங்கள். 100ரூபாய் குறைந்த பட்சம் கொடுங்கள். சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்-தற்போது அரசு ஊழியர்கள் சஸ்பென்ஷனில் இருக்கும்போது கொடுக்கப்படுகின்ற சப்சிஸ்டன்ஸ் அலவன்சைப் போல கொடுங்கள். அவன் மானத்தோடு வாழ்வதற்காவது கொடுங்கள் இல்லை என்றால் அவனைப் பற்றி குறை சொல்லிப் பயன் இல்லை. நாளைக்கு கொள்ளை அடித்தான் கொலை செய்தான் என்று சொல்லக் கூடாது.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

சாதாரண நபர் சொல்லவில்லை. வள்ளுவப் பெருந்தகை சொன்னார். தெய்வப் புலவர் சொன்னார் பிச்சை எடுத்து உயிர்வாழக் கூடிய நிலை வந்தது என்றால் இந்த உலகத்தைப் படைத்தவர் ஒரு கடவுள் என்று இருந்தால் அந்தக் கடவுளே நீ நாசமாகப் போ



என்று சபிக்கிறார். ஆகவே தயவு செய்து அரசே படித்த இளைஞர்களுக்கு உத்தியோகம் கொடுங்கள். அல்லது உத்தியோகம் கிடைக்கும் வரையில் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுங்கள்.

அடுத்தபடியாக, நேற்று விவசாயிகள் பற்றி மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் என்று சொல்லி நல்ல சலுகைகள் வழங்கி இருக்கிற மாதிரி பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது. 210 கோடி ரூபாய் என்று 'தினத்தந்தியில்' போட்டிருக்கிறார்கள், ஆனால் நண்பர்கள் சொல்லுகிறார்கள் 2000 சில்லரை கோடிக்கு இருக்கும் என்று. எது என்ன என்று விளக்கம் தெரியவில்லை. நான் இன்றுதான் ஊரிலே இருந்து வந்தேன். எதுவாக இருந்தாலும் வட்டிக்குக் கடன் வாங்கியவர்கள் பிரைவேட் இன்டிவிஜுவல் இடம் கடன் வாங்கியவர்கள் அவர்களுக்கு நிவாரணம இருப்பதாகத் தெரிகிறது. அது கிடைத்த அளவிற்கு நன்றி. ஆனால் கிடைக்க வேண்டிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டி அதைச் செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் என்று சொல்லி, 5 ஸ்டான்டர்டு ஏக்கராவை 3 ஸ்டான்டர்டு ஏக்கராகக் குறைத்திருக்கிறோம். அப்படிக் குறைத்ததற்குப் பின்னால் 'பிக் மிராஸ்தார்' எங்கே இருக்கிறார்கள்? If they are available, prosecute them. Take legal action. தெரிந்து கொண்ட பிறகு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் தவறு. Is it not our negligence or fault? இதிலே எதுவாக இருந்தாலும் மறைக்கக் கூடியது அல்ல. எக்ஸ்.ஆர்.ஓய், யாராக இருந்தாலும் உங்களுடைய கவனத்திற்கு வந்தால் ஏன் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது? சட்டத்திற்கு மாறாக வைத்திருப்பது தப்பு. அது தெரிந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? நில உச்சவரம்பு என்று கொண்டு வந்த பிறகு பெரிய விவசாயி, சிறு விவசாயி என்று முறைப்படுத்துவதற்கு இடமில்லை. அந்த வகையிலே, உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டு, வருமான வரி கட்ட தகுதி இல்லாத அனைத்து விவசாயிகளும் சிறு விவசாயிகள், சாதாரண விவசாயிகள் என்று கருதப்பட வேண்டும்.

சென்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் நான் சொன்னேன். மதுவிலக்கைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லை; எந்த மக்களுக்காக நீங்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ அந்த மக்கள் இதை ஆதரிக்கவில்லை என்று சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. மதுவிலக்கைத் தளர்த்தி விட்டால் 350 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அந்தப் பணத்தைப் பெற்று சம்சாரிகளுக்குக் கொடுத்தால், எல். டி. பாங்க்கடனைத் தீர்த்து விட்டால் எல்லா சம்சாரி வீட்டிலும் எம். ஜி. ஆர். படத்தை மாட்டிவிடுவார்கள்.

இன்னும் 5 வருஷத்திற்கு குறையாமல் நீங்கள் ஆட்சி நடத்தலாம் என்று சொன்னேன். நீங்கள் அன்று செய்யவில்லை; ஆனால் இன்று செய்திருக்கிறீர்கள். அதுவும் 'பார்ட்லி, நாட் ஃபுல்லி' இது வேண்டாம். பாதிக் கிணறு தாண்டினால் ஆபத்து. ஒன்றில் முழுதும் தாண்டிவிடுங்கள், அல்லது சும்மா இருந்துவிடுங்கள். 25 ரூபாய் கட்டினால் லைசென்ஸ் எடுத்து குடிக்கலாம் இல்லை. என்றால் Kandasamy will be prosecuted, inspite of his desire to drink Is it because of his inability to pay Rs. 25/-, what is this? Socially equitable justice should be rendered to all. ஆகவே இதை ரத்துசெய்து விட்டு, இல்லிசிட் லிக்கர் காச்சுபவர்களை உள்ளேபிடித்துப்போடுங்கள். Illicit liquor is a menace to society. It is harmful to health also. இல்லிசிட் லிக்கரை தடுத்துவிட்டு, கள்ளைத் திறந்துவிடுங்கள். அது நல்லது என்று உடற்கூறு நிபுணர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். கள்ளில் இரும்புச் சத்து இருப்பதாகக் கூறுகிறார்கள். காலையில் இரண்டு சொம்பு குடித்தால் கேப்பைக்கூழ், கம்புக் கூழ் குடித்த மாதிரி இருக்கும்; காலைப் பொழுதை ஓட்டி விடுவான். வேலையும் நன்றாக நடக்கும். உணவுப் பஞ்சம் தீரும். உடம்புக்கு நல்லது. அரசாங்கத்திற்கு வருமானம் வரும். இது என்னுடைய சொந்தக் கருத்து அல்ல. பல டாக்டர்களை கலந்து பேசி விட்டுத்தான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன் இதனால் 200 கோடிக்கு மேல் அரசாங்கத்திற்கு வருமானம் வரும் என்று சொல்கிறார்கள், கிட்டத்தட்ட 350 கோடி வரும் என்று நான் கருதுகிறேன். அந்த வருமானத்திலிருந்து சம்சாரிகளுக்கு இருக்கிற 350 கோடி ரூபாய் கடனை ரத்து செய்து விடலாம்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுக்குத் தெரியும். மதுவிலக்கை எடுத்து விட்டால் ஓட்டு தானே வந்து குவிந்து விடும். தாய்மார்கள் கழனிக்கு வேலை செய்யப் போகிறார்கள். அப்போது குழந்தை பசி இல்லாமல் இருந்தால் அதுபாட்டுக்கு அங்கே உருண்டு கொண்டு இருக்கும். அந்தத் தாய் கவலைப் படாமல் களை வெட்ட போகலாம். அதை யார் செய்தால் என்ன? இன்றைய முதலமைச்சர் செய்தால் என்ன அல்லது முன்னாள் முதலமைச்சர் செய்தால் என்ன? They are not bothered about the individuals. They are worried about their grievances to be redressed. ஆகவே, அமைச்சர் அண்ணன் நாஞ்சிலார் அவர்கள் கொஞ்சம் வலியுறுத்திச் சொல்லவேண்டும். நடைமுறையில் இருக்கிற சிக்கல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். வேண்டுமானால் நீங்கள் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி வைத்து, முடிவு எடுங்கள். இப்போது நீங்கள் செய்திருக்கின்ற முறை நடைமுறையில் 'கரப்ஷனை' வளர்க்கும். அப்படி இல்லாமல் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக, காலேஜ் டீச்சர்ஸ் ஸ்டிரைக் செய்து நேற்று அரஸ்ட் ஆகியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை கனிவோடு கவனித்து ஆவன செய்ய வேண்டும். அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். போலீஸ்காரர்களில் 600 பேர்களை விடுதலை செய்து விட்டதாகச் சொன்னார்கள். இன்னும் கிரிமினல் குற்றத்திற்காக பலர் உள்ளே இருக்கிறார்கள். அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். அதைப் போல விவசாய சங்கத்தைச் சேர்ந்த சிலரும் இன்னும் விடுதலை ஆகவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களையும் விடுதலை செய்து எல்லோருக்கும் ஜெனரஸ் ட்ரீட்மென்ட் காட்ட வேண்டும். இனிமேல் அந்தக் காரியங்களில் இறங்காமல் இருக்க எச்சரிக்கை செய்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

[பேரவைத் தலைவர் தலைமை]

அடுத்தபடியாக, விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நிர்ணயிக்கப்படுகின்ற விலை பற்றி இன்றைக்கு நாடே அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அருள் கூர்ந்து நீங்கள் அவர்களுக்கு மானியமாகக் கொடுங்கள். அவ்வாறு ஏன் கொடுக்கக் கூடாது? எத்தனை தொழில்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் Whether Centre is prepared to give or not you should get some revenue and give it as a 'manyam'. பருத்தி விதையின் விலை 3 ரூபாய் என்றால் அதை ஏன் 2 ரூபாய்க்குக் கொடுக்கக் கூடாது? கொடுங்களேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறீர்கள். அவனுடைய முதுகெலும்பை சம்மட்டியால் அடித்து உடைத்து விட்டு வாடா ஓட்டத்திற்குப் போகலாம் என்றால் எப்படி வரமுடியும்? It connot be postponed. It is an imminent problem to society. ஆகவே அருள்கூர்ந்து முழு கவனத்தையும் செலுத்தி ஆவன செய்ய வேண்டும். விவசாயச் சங்கத் தலைவர் மட்டும் தான் விவசாயிகளுக்காகச் சொல்கிறார் என்று எண்ணக் கூடாது. நானும் விவசாயிகள் சங்கத்தில் மெம்பர் தான். ஆனால் நான் அமைதியை விரும்புகிறவன். அதே நேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு உள்ளடங்கிய கருத்துக்களை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட ஒரு பெரிய விவசாயி. ஆகவே அருள் கூர்ந்து வன்முறைச் சம்பவங்களுக்கு இடம் அளிக்காத வகையில் பிரச்சினைகளை முன்பே தடுத்து நிறுத்துவது தான் சிறப்பு. ஆகவே இதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன். வணக்கம்.

## 2. அறிவிப்பு (தொடர்ச்சி)

### (ஈ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 12–2–1980 பகல் சுமார் 12–50 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து திரு. கோ. செல்வம், திரு. ஏ. ஜோசப் மற்றும் திரு.ஜே. அமரேந்திரன் ஆகியோர் கோஷங்கள் எழுப்பி, துண்டுப் பிரசுரங்களை பேரவையில் வீசியுள்ளனர், அவர்கள் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள், விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது.

அவர்களது இச்செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

## 3. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

### (ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :–

''இன்று 12–2–1980 பகல் சுமார் 12–50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை–7, வடமலைப்பிள்ளை தெரு, 59 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் மகன் திரு. கோ. செல்வம் என்று கூறிக் கொள்ளும் நபரும், சென்னை–12. ஓட்டேரி, பிரிக்லின் ரோடு, 162 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. ஏ. டி, அந்தோணி அவர்கள் மகன் திரு. ஏ. ஜோசப் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை–7, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, 152 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. வால்டர் அவர்கள் மகன் திரு. ஜே, அமரேந்திரன் என்று கூறிக்



கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக் கிறது.''

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் செய்தது குற்றம் என்பதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். இருந்தாலும் 7 நாட்கள் என்பது மிகவும் அதிக மாக உள்ளது. ஏற்கெனவே இம்மாதிரி செய்கைகளுக்கு 3 நாட்கள் தான் கொடுத்திருக்கிறோம். ஆகவே அதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் சொல்ல வருவது வேறு விஷயம், இருந்தாலும் இதற்குத் தொடர்புடையதுதான். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் பேசுகிறார்கள் என்ற காரணத்திற்காக வெளியே கெடுபிடி தாங்க முடியவில்லை. எதிர்க் கட்சித் தலைவருக்கு என்று ஒரு ரூம் இருக்கின்றது. அதிலே உட்கார வைப்பதற்காக கூட்டிக்கொண்டு வந்தால் கூட தடுத்து நிறுத்திவிடுகிறார்கள், நீ மட்டும் உள்ளே வா, மற்றவர்கள் வரக் கூடாது என்று சொல்கிறார்கள்.

அடுத்து பொதுவாகவே நாமும் சத்தம் போடுகிறோம் சில சமயங்களில். இது அடிக்கடி நடக்கின்றது. ஆனால் பார்க்க வருகின்றவர்கள் இப்படி என்றைக்கோ ஒருநாள் நடந்து கொள்கிறார்கள், அவர்கள் அன்னை இந்திரா வாழ்க என்று சொன்னார்கள், அது ஒரு பெரிய குற்றம் கிடையாது. இவ்வாறு முன்பு தண்டனை அளிக்கும்போது கூட நான் சொன்னேன், தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன், இவர்களை கிரிமினல் குற்றவாளிகளோடு கொண்டுபோய் சேர்த்து விடுகிறார்கள் என்று. ஏற்கெனவே ஒருவாரம் தண்டனை என்று தீர்மானம் கொண்டுவந்தபோதே நான் அவை முன்னவர் அவர்களிடம் சொன்னேன், அரசாங்க உத்தரவுக்கு விரோதமாக செய்யக் கூடாது என்று. இந்த மாதிரி செய்வது எல்லாம் காந்திய வழி என்று விளக்கம், நீங்களே ஜி ஓ.வி-லே கொடுத்திருக் கிறீர்கள். அதாவது பொருளுக்குச் சேதம் இல்லாமல், ஆளை க்ளோஸ் பண்ணாமல் இந்த மாதிரி சத்தியாகிரகமான முறையில் செய்வது காந்திய வழி என்று அந்த ஜி. ஓ. வி-லே உள்ள டெஃபினிஷனிலே வருகிறது. ஆகவே இப்படி காந்திய வழியில் ஈடுபட்ட ஒரு காந்திய வாதியை கிரிமினல் குற்றவாளிகளோடு கொண்டுபோய் அடைப்பது தவறு. ஆகவே அப்படிப்பட்டவர்

களுக்கு என்று தனியாக ஒரு பங்களா வாங்கினால் கூட தவறு கிடையாது. மொரார்ஜி தேசாய்க்கு பங்களா இல்லையா? ஆகவே ஒரு பங்களா வாங்கி அதிலே வைத்தாலும் அவர்களுக்கு 7 நாட்கள் சாப்பாடு போட்டாலும் எங்களுக்குச் சந்தோஷம் தான். ஆனால் நடத்தப்படக்கூடிய முறை என்ன? அந்த முறை அரசாங்க உத்தரவுக்கு விரோதமாக இருக்கிறது என்பதுதான் நான் சொல்வது. சென்ற முறை கூட இந்தமாதிரி குற்றவாளிகளை சென்ட்ரல் ஜெயிலிலே அடைத்து வைத்திருந்தார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் மாடத்திலேயிருந்து அன்னை இந்திரா வாழ்க என்று சொல்லி துண்டு பிரசுரம் வீசியது சரி என்று சொல்ல விரும்புகிறாரா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : சுதந்திரத்திற்கு முன்னாலே வெடி குண்டையே வீசினார்கள். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துண்டு பிரசுரத்தை நேரிடையாக பேரவையில் வீசுவதை விரும்புகிறாரா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : இது வெறும் துண்டு பிரசுரம் தானே. அந்தக் காலத்தில் அவர்கள் வெடி குண்டை வீசினார்கள். பகத்சிங் போன்றவர்கள் அப்படி வீசவில்லை என்றால், இன்றைக்கு நீங்களும் நானும் இப்படி இங்கே உட்கார்ந்திருக்க முடியாது. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

''இன்று 12–2–1980 பகல் சுமார் 12.50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-7, வடமலைப்பிள்ளை தெரு, 59ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் மகன் திரு. கோ. செல்வம் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-12, ஓட்டேரி, பிரிக்லின் ரோடு, 162ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. ஏ. டி. அந்தோணி அவர்கள் மகன் திரு. ஏ. ஜோசப் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-7, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, 152ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. வால்டர் அவர்கள் மகன் திரு.



ஜே. அமரேந்திரன் என்று கூறிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 5 நிமிடங்களுக்கும் குறைவாக இருப்பதினால் உறுப்பினர் திரு. அழகிரிசாமி அவர்கள் இன்று பேச விரும்ப மாட்டார் என்று கருதுகிறேன். அதனால் பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

—எதுவுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

* 13. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183 ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1980).

* 14. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1980).

* 25. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1980).

* 16. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும்

*8–2–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1980).

* 17. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1980).

* 18. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183-ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1980).

* 19. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1980).

* 20. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1980).

** 21. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 10/1980).

** 22. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைத்தாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவின் நகல் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980).

---

* 8–2–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 10–2–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை 125ஆம் விதியில் கண்டவரம்பு நிபந்தனைக்கேற்ப மாண்புமிகு பேரவைத் தலைவரின் பேரில் வெளியிடப்பட்டது.



** 23. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும்.

** 24. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும்.

25. 27–8–1969ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு.

1. மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்
2. திரு. ர. ஜெபமணி
3. திரு. எம். அண்ணாமலை
4. திரு. துரை முத்துசாமி

31–3–1979ஆம் தேதியன்று உள்ளவாறு.

1. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
2. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்
3. திரு. ரா. கிருஷ்ணன்
4. புலவர் கா. கோவிந்தன்
5. திரு. ந. சங்கரய்யா
6. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்
7. திரு. ர. ஜெபமணி
8. திரு. கு. ரமணி
9. திரு. துரை முத்துசாமி
10. திரு. எச். ஜி. ஆறுமுகம்
11. திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு

*** 26. உடுக்குறியிடாத வினா–விடை பட்டியல் (201 முதல் 350 வரை).

---

** 10-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

*** 11–2–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன. 10-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 125ஆம் விதியில் கண்ட வரம்பு நிபந்தனைக்கேற்ப மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையின் பேரில் வெளியிடப்பட்டது.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-1.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-3.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tinnelvelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-7.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

21.2.80
1474
DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
2.[illegible].1980
EGMORE, MADRAS-600 008.

வெளியீடு—26-6-1980] [Issued—26-6-1980]

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன் கிழமை 1980 பிப்ரவரி 13-தொகுதி XXXVIII-எண் 4

Wednesday 13th February 1980—Volume XXXVIII—No 4

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

## உள்ளடக்கம்.

13—2—1980


பக்கங்கள்.

வினாக்கள்—விடைகள் .. .. .. 485-526

ஒழுங்குப் பிரச்னை—

அரசியலமைப்புச் சட்டம் 45-வது சட்டத்திற்கு பேரவை ஏற்பளிப்பது குறித்து .. .. 527–528

தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து .. 528–529

(ஆ) உள்ளூர்க்காரர்களுக்கே வேலை என்கிற கார்நாடக மாநில கொள்கை அறிவிப்பு குறித்து .. .. .. .. .. 601–602

1. கவன ஈர்ப்புகள்—

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதால் பக்கத்து ஏழு கிராம மக்களின் பாதிப்பு குறித்து .. .. .. .. .. 529–531

(ஆ) மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவ வேண்டிய அவசியம் குறித்து.. 531

(இ) தஞ்சை மாவட்டம், திருவையார் வட்டம் மகாராஜபுரம் பகுதிகளில் பயிர் பாதிப்பு குறித்து .. .. .. .. 531–53

(ஈ) குடகனாறு அணை மீண்டும் கட்டப் பெற வேண்டிய அவசியம் குறித்து .. .. 533

(உ) வட ஆற்காடு மாவட்டத்தில், மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லாமை குறித்து. 534–536

(ஊ) நீலகிரி மாவட்டத்தில், புயல், மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை, பாலங்களை செப்பனிடுவது குறித்து .. .. .. 536–5 8

எ) திருச்சி காவேரி ஸ்டரக்சுரல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து .. .. 599–601

(ஏ) கல்லூரிகள் குறித்து .. .. .. 602–605

(ஐ) தஞ்சாவூர் மாவட்ட வடிகால் வாய்க்கால் ஈரமைப்புக் கோட்டங்கள் குறித்து .. 605

(ஒ) மதுரை மாவட்டஆலைய மகாசிவராத்தி விழா குறித்து .. .. .. .. 606

5. அரசினர் சட்ட முன்வடிவு—

நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1980 .. .. 538

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—

விவாதம்—(தொடர்ச்சி).

திரு. சோ. அழகர்சாமி .. .. .. 538–554

திரு. மு. கருணாநிதி .. .. .. 555–583

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் .. 583–598

7. அரசினர் தீர்மானம்—

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.. .. .. .. 607

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 607–608


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

## புதன்கிழமை, 1980 பிப்ரவரி, 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திட்டப் பணிகளுக்கு கூடுதல் நிதி உதவி.

*வினா எண். 121—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80 வருடத்திற்கு மாநிலங்களுக்கு மேற்கொண்டு உதவி அளிக்கத் திட்டக் கமிஷன் திட்டமுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தமிழகத்திற்கு எவ்வளவு ருபாய் கிடைக்கும்?

(இ) எதன் அடிப்படையில் தொகை நிர்ணயிக்கப்படுகிறது?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்திற்கு ருபாய் 30 கோடி கூடுதல் நிதியுதவி கிடைக்கும்.

(இ) இந்தக் கூடுதல் நிதியுதவி நமது மாநிலத்தில் மக்கள் தொகை, நபர்வாரி வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டம் எங்கு நடந்தது? எப்போது நடந்தது? அதில் யார்யார் பங்கு பெற்றார்கள்? பல்வேறு விவாதங்கள் நடைபெற்றதில், தமிழக அரசுக்கு

அதிகம் வேண்டுமென்று நமது அமைச்சர்கள் அதிகம் வாதாடியதால், அதன் அடிப்படையில் எவ்வளவு தொகை கிடைத்தது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டம் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24, 25 தேதிகளில் டெல்லியில் நடந்தது. அதில் அனைத்து மாநில முதல் அமைச்சர்களும், நிதி அமைச்சர்களும் கலந்துகொண்டனர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்களும் தமிழகத்திற்காக வாதாடி 27 கோடி ரூபாய் அதிகம் பெற்றார்கள். அதிகாரிகள் மட்டத்தில் விவாதித்து அதிக நிதி உதவி வேண்டுமென்று கேட்டுப் பெற்றது ரூ. 603 கோடியே 12 இலட்சம். பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, அமைச்சர் வாதாடி வந்ததற்குப் பிறகு, அது ரூ. 630.12 கோடி ஆயிற்று.

திரு. க.மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ் நாட்டின் திட்ட மதிப்பீடு எவ்வளவு ? அதற்கு மத்திய அரசு எவ்வளவு நிதி தருகிறது? அப்படித் தரவில்லை என்றால், மத்திய அரசிடம் மாநில அரசு வாதாடி, அந்த நிதியைப் பெறுவதற்கு வற்புறுத்துமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)— பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் திட்ட மதிப்பு ரூ. 2,150 கோடி ஆகும். மாநிலத்தின் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் நிதி உதவி ரூபாய் ரூ. 630.12 கோடி என்று மத்திய திட்டக் குழு அறிவித்து, முடிவாக வந்திருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தமிழக அரசு வாதாடி ரூ.27 கோடி அதிகம் பெற்றதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், நம்முடைய கோரிக்கைக்கு ஏற்ப அந்தத் தொகை நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்படவில்லை. என்னுடைய கேள்வி என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை * * * * * * நடைபெறுகின்ற இந்த நேரத்தில் பண உதவி சம்பந்தமாக இழுத்துப் பிடிக்கின்ற ஒரு நிலை இருக்கின்ற போது, காங்கிரஸ் அல்லாத மற்ற மாநிலங்கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். தயவு செய்து இந்த நேரத்தில் மற்ற அரசுகளை * * என்ற வாதம் தேவையில்லை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் அகற்றப்பெற்றது.



1474.



Thiru R. UMANATH : This is a serious point beeause it concerns finance. This is a genε ral question ag:ced to by all Opposition parties. It is a quettion of financial assistance. That was what I was coming to...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தத் தேவையில்லை.

திரு. ரா. உமாநாத்: என்னுடைய வாதம், அரசியலில் இந்த மாதிரி செய்வதற்கு இல்லாமல்போகிறது............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தத் தேவையில்லை. அதுவேண்டாம். அதை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாநில அரசுகளுக்குச்சிக்கலான நிலைமையை உண்டாக்கி, கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுக்காமல், அதன் பேரிலே பிரேக் போடுவது, அதைத் தடுப்பதற்கான நிலைமையை உண்டாக்குவது, அதைச் சந்திப்பதற்கு மற்ற காங்கிரஸ் அல்லாத மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நம்முடைய முதல் அமைச்சர் முன்கை எடுப்பார்களா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்த விதத்தில் ஒரு எண்ணம் கொண்டிருப்பதாக மாநிலத் அரசுக்கு தகவல் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய திட்ட உதவி ஆண்டுதோறும் ஒரே குறிப்பிட்ட தொகை கிடைக்கிறதா அல்லது வேறுபட்ட தொகை கிடைக்கிறதா ? இந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, இந்த ஆண்டு ஏதாவது குறைப்பதற்கு முயற்சிகள் தொடர்ந்தால், மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : நார்மல் பிளான் அசிஸ்டன்ஸ் ஒரே குறிப்பிட்ட தொகை எந்த ஆண்டும் கொடுத்ததில்லை. மத்திய அரசு நிர்ணயம் பண்ணும் தொகைதான் கிடைக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் “காட்கில்விதி”யின்படி மத்திய அரசு நிர்ணயம் பண்ணி நடப்பு ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 79.10 கோடி ரூபாய் ஆகும்.

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 122, 123 ஆகியவை கடைசியில் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண். 124, 125 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

"டயோஸ்கோரியா" மூலிகை வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் டயோஸ்கோரியா என்ற மூலிகை வளர்க்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் என்றால், எங்கு எவ்வளவு தொகை செலவில் அமுல் செய்யப்படுகிறது /

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) டயோஸ்கோரியா என்ற மூலிகை அரசு சின்கோனா துறையினரால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கும் சின்கோனாத் தோட்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1978 முதல் 1982 வரையிலான நான்காண்டுகளில் ரூ. 80.27 இலட்சம் மூலதனத்தில் டயோஸ்கோரியா பயிரிடவும் அதிலிருந்து ஆண்டுக்கு 3 டன் டயோஸ்ஜெனின் தயாரிக்கவும் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : டயஸ்கோரியா என்பது என்னவென்று புரியவில்லை. அதற்குத் தமிழில் பெயர் இருந்தால் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : "டயோஸ்கோரியா" என்பது "டயோஸ்ஜெனின்" என்ற ஒரு மருந்தைத் தயாரிக்கப் பயிரிடப்படுகிற ஒரு கிழங்கு வகையாகும். அந்தக் கிழங்கில் இருந்து எடுக்கப்பட்ட டயோஸ்ஜெனின் இருதய நோய்க்கும் கருத்தடை மாத்திரைகள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



1980 பிப்ரவரி 13]

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது போல் "டயோஸ்கோரியா" என்பது ஏதோ "பயாஸ்கோப்" என்று சொல்லுவது போல் இருக்கிறது. அந்த மூலிகை தயாரிப்பதற்கான கிழங்கு வகையைப் பற்றி அமைச்சு செயலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த நாட்டைச் சேர்ந்த கிழங்கு வகை என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): நம்முடைய நாட்டிலே தான் அந்த டயோஸ்கோரியா என்ற கிழங்கு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிலே இருந்து டயோஸ்ஜெனின் என்ற மருந்து தயாரிக்கப்படுகிறது. அது நம்முடைய நாட்டில்தான் தயாரிக்கப்படுகிறது.

திரு. க. மருதாசலம் : டயோஸ்கோரியா மருந்து எதற்குப் பயன்படுத்தப்படுகிறது ? இந்தத் திட்டத்தினால் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இப்போதுதான் அமைச்சர் செயலர் பதிலளித்தார். அதையே திருப்பிக் கேட்டால் எப்படி ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு உறுப்பினரின் முதல் கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். இந்தத் திட்டத்தினால் 350 தொழிலாளர்களும், 17 அலுவலர்களும் பயன் அடைவார்கள் என்று தெரிய வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : டயோஸ்கோரியா என்பது கர்ப்பத் தடைக்குப் பயன்படுத்தப்படுவதாக அமைச்சு செயலாளர் அவர்கள் சொன்னார்கள். அது பரிட்சார்த்தமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டதா ? வெற்றிகரமான நிலை ஏற்பட்டிருக்கிறதா ? கர்ப்பத்தை எத்தனை ஆண்டு காலத்திற்குத் தடுக்கக்கூடிய சக்தி இந்த மருந்துக்கு இருக்கிறது ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை இங்கே சொல்லிவிட்டேன். மேற்கொண்டு தகவல் தேவைப்படுகிறவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : டயோஸ்கோரியா என்ற மூலிகை மேற்கு தொடர்ச்சி மலையில் பயிரிடுவதற்குத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சரின்

பேரவைச் செயலர் ஏற்றுக் கொண்டார்கள். அதை முண்டந்துறை காடுகளில் அமலுக்குக் கொண்டுவர முயற்சி இருந்தது கைவிடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

சென்னை மத்திய சிறையில் திரைப்படம் பிடிப்பு:

*வினா எண். 127—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறையில் தனிப்பட்ட திரைப்பட நிறுவனங்களுக்குச் சிறைச்சாலைக்குள் சென்று திரைப்படம் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த திரைப்பட நிறுவனங்களுக்கு யாரால் அனுமதி வழங்கப்பட்டது ?

(இ) அப்படி திரைப்படம் பிடிக்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்: (அ), (ஆ) மற்றும் (இ) இது குறித்து * அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

[பிற்பகல் 9-10]

திரு. மு. சென்னை அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையிலே உள்ள உள்பகுதிகளிலே இருப்பவைகளையெல்லாம் படம் பிடித்துக் காட்டுவதால், அது பொது மக்களுடைய உணர்வுகளைப் பாதிக்கிற அளவிலே—சில குற்றவாளிகளுக்கு உள்ளே இருக்கிற நிலைகளை வெளியே எடுத்துக் காட்டுகிற வகையிலே, குற்றம் செய்யும் மன நிலைக்குச் சாதகமாக சில நிலைமைகளை மனத்திலே பதிய வைக்கிற அளவுக்கு — வாய்ப்புக்கள் உருவாகும் என்பது அரசுக்குத் தெரியுமா? ஏற்கெனவே சிறைச்சாலையிலிருந்து வெளியே வர அந்தச் சுவரிலே எகிறிக் குதித்து வெளியே வந்த பல பிரச்னைகள் இருக்கின்றன. அப்படி இருக்குபொழுது, சிறைச்சாலையிலே உள்ளே எல்லா

* 609 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சடிக்கப்பெற்றுள்ளது.





நிலைமைகளையும் காட்டுவதால் குற்றவாளிகள் தப்புவிக்கிற நிலைமையை ஏற்படுத்தக்கூடிய, குற்றங்கள் செய்யக்கூடிய மன நிலையை, சிந்தனையை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருப்பதால், இதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, சிறைச்சாலையின் உள்ள எடுக்கப்படுகிற திரைப் படக் காட்சிகள் எப்படி எடுக்கப்பட வேண்டும், அவை எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் தணிக்கை செய்வதற்கு மத்திய அரசு நியமித்திருக்கிற ஒரு தணிக்கைக் குழு இருக்கிறது. அதனுடைய அங்கீகாரம் பெற்றதற்குப் பின்னாலே தான் எந்தத் திரைப்படமும் திரைப்படமாக வெளிவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திரைப்படங்கள் எடுப்பதற்காக ஆங்காங்கு லொக்கேஷன்களில் படம் எடுக்கிறபோது, முன்வைப்புத் தொகை வசூலிப்பது உண்டா? அப்படியென்றால் அந்தப் பணம் படம் எடுத்து முடிந்தவுடன் திருப்பிக் கொடுக்கப்படாமல் ஆண்டுக்கணக்கில் காலதாமதம் ஆகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாக அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலோ அல்லது தோட்டங்களிலோ அல்லது கட்டடங்களிலோ திரைப்படங்கள் எடுப்பதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதற்காக முன்வைப்புத் தொகை ஆயிரம் முதல் 2 ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. அந்தத் திரைப்படங்கள் எடுத்து முடித்ததற்குப் பின்னாலே திரைப்படங்கள் எடுத்தபொழுது அரசினுடைய சொத்துக்களுக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அதிகாரிகள் பார்த்து அரசுக்குத் தெரிவித்த பின்னாலே உடனடியாக அவர்கள் கொடுத்த முன்வைப்புத் தொகை திரும்பக் கொடுக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையில் தனிப்பட்ட நிறுவனங்களுக்குத் திரைப்படம் எடுக்க அனுமதிக்கப்படுவதைப்போல் மாநில அரசே செயல்பட வேண்டுமென்ற முறையிலே ஒரு படத்தைத் தயாரித்து—மாறுபட்ட கருத்தாக இருக்கலாம்—அந்தப் படத்தில் சிறைச்சாலையிலே உள்ள நிலைகளை மக்களுக்கு விளக்கிக் காட்ட முன் வந்தால், சாதாரண மக்களாக இருக்கிறவர்கள் குற்றம் செய்ய விரும்பினால் அல்லது குற்றவாளியாகக் கூடியவர்கள் அந்தப்

படத்தைப் பார்த்தாவது திருத்திக் கொள்வதற்கு வழிவகை ஏற்படும் என்று என்னைப் போன்றவர்கள் கருதுகிற காரணத்தால் அரசு அதைச் செய்வதற்கு முன்வருமா:

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களை, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, அமைச்சரின் பேரவைச் செயலர் அளித்திருக்கிற பதிலில் சென்னை மத்திய சிறைச்சாலையின் உள்ளே திரைப்படங்களை எடுத்த நிறுவனங்களின் பெயர்களைத் தான் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மத்திய சிறைச்சாலையை மட்டும் அல்லாமல், மதுரை திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள சிறைச்சாலைகளிலும் படம் எடுக்கப்படுகிறதா? தஞ்சைசேலயுள்ளே திறந்தவெளிச் சிறைச்சாலையிலேயும் எதாவது படம் எடுக்கப்பட்டதா என்பதையும் அங்கேயெல்லாம் கைதிகள் நல்ல முறையிலே இருக்கிறார்கள் என்பதை படம் பிடித்துக் காட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்களுக்குக் கூறியதைப் போல் நிச்சயமாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ். கே. கோதண்டராமன்: சார், இந்தச் சிறைச்சாலையில் படம் எடுப்பது என்பது எந்த ஆண்டிலிருந்து அனுமதிக்கப்பட்டது? எந்த அளவுக்குக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது? அவ்வளவும் வசூலிக்கப்பட்டு விட்டதா அல்லது மேலும் வசூலிக்க வேண்டிய தொகை இருக்கிறதா? வசூலிக்க வேண்டிய தொகை எந்த அளவற்கு இருக்கிறது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயல்ர்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே சட்டமன்றத்தில் முன்வைக்கப் பட்டுள்ள குறிப்புகள்ல் 1978 முதல் 1979 முடிய 13 திரைப்பட நிறுவனங்களுக்கு அனுமதி அள்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தியதற்குப் பின்னாலேதான் எந்த அனுமதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையிலே மதச் சார்புடையவர்கள் அங்கு சென்று, பஜனை, காலட்சேபம் போன்றவைகளை கைதிகளுக்





கென நடத்துவதாக அறிகிறோம். அங்கே நடத்தப்படுகிற அத்தகைய நிகழ்ச்சிகளை நம்முடைய மாநில அரசு திரைப்படமாக ஆக்கி, பொதுமக்களுக்கு அதனைக் காட்டக்கூடிய திட்டம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்: பேரவைத தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் படம் எடுக்கின்றபொழுது அங்கேயுள்ள தண்டனை அடைந்திருக்கிற கைதிகளை; பயன்படுத்துகிறார்களா? அப்படி பயன்படுத்தவில்லையென்று சொன்னால், தேவைப்படுகிற நேரத்தில் அவர்களையே பயன்படுத்தி அதற்கான பணம் வசூலித்து, அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவுகின்ற திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, சிறைக் கைதிகளை நடிகர்களாக இதுவரை பயன்படுத்தியதில்லை.

திரு. என். கிட்டப்பா: மதச் சார்பு உடையவர்களும் சிறைச்சாலைகளில், வந்து பிரச்சாரம் செய்வதாகவும், பஜனைகள் நடைபெறுவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை அனுமதிக்கின்ற அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களைப் பின்பற்றுகின்ற நிலையிலே உள்ளதாகக் கூறிக்கொள்கிற இந்த அரசு, தந்தை பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த அரசு, பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் சிறைச் சாலைகளில் நடத்த ஆவன செய்ய முன் வருமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத தலைவரவாகளே, இதுவரை சிறைச்சாலைகளிலே மதப் பிரச்சாரம் எதுவும் செய்வதில்லை. பொதுவாக நீதிப் பிரச்சாரங்களையே செய்து வருவதாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: அமைச்சரின் செயலர் பதிலலே எவ்வளவு கட்டணம் என்பதைத் தெரிவிக்கவில்லை. (1) எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது? (2) எந்த விதி முறைகளைப் படம் பிடிப்பவாகள் கடைபிடிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது? (3) தந்தை பெரியாருடைய கருத்துக்கள் அடங்கிய, அண்ணாவினுடைய கருத்துக்கள் அடங்கிய திரைப்படங்களை, சுயமரியாதைக் கருத்துக்கள்

[1980 பிப்ரவரி 13

அடங்கிய திரைப்படங்களை, ''நல்லதம்பி'' போன்ற திரைப் படங்களை, மாதத்திற்கு ஒரு முறையாவது, சிறைச்சாலையிலே போட்டுக் காட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

திரு. அசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, அரசு கட்டிடங்களுக்கும் கோயில் களுக்கும் நீர்ப் பாசனத் திட்டங்கள், அணைகள், சிறைச்சாலை கள் முதலியவற்றில் படம் பிடிப்பதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 250 வசூலிக்கப்படுகிறது. அவைகளுக்கு வைப்புத் தொகை யாக ரூ. 1,000 வசூலிக்கப்படுகிறது. மீன் பிடிப்புத்துறை, காடுகள் இவைகளில் படம் எடுப்பதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 100 வசூலிக்கப்படுகிறது. அவற்றிற்கு வைப்புத் தொகை யாக அதே ரூ. 1,000 வசூலிக்கப்படுகிறது. உதகமண்டலத் திலுள்ள பூங்காக்கள், கொடைக்கானலிலே உள்ள அரசைச் சேர்ந்த பூங்காக்கள் இவைகளில் நாள் ஒன்றுக்கு ரூ. 500 வசூலிக்கப்படுகிறது. வைப்புத் தொகையாக ரூ. 2,000 வசூ லிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கடைசிக் கேள்வியை, நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

சிறைத்துறையிலுள்ள நன்னடத்தைப் பிரிவு அலுவலர்கள்.

*வினா எண். 128—திரு. செ. மெ. ராஜு: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) நன்னடத்தைப் பிரிவு அலுவலர்களை சிறைத் துறை யிலிருந்து தனியாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கும் உத்தேசம்?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு இதுபற்றி பரிந்துரை செய்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே, சட்ட அமைச்சர் சொல்கின்ற போது, தனியாகப் பிரிப்பதற்கான அவசியத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறது, அதற்காகப் பரிசீலனை செய்யும் என்று சொன்னார்கள், ஆகவே, அந்தத் துறையிலே பரிசீலனை செய் கிறார்களா ? அல்லது பொதுவான பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 பிப்ரவரி 13]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சிறைச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை இந்த அரசு ஆய்வு செய்து உயர்நீதிமன்றத்தைக் கேட்டது. உயர்நீதிமன்றமும் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. அது இப் பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சிறை சீர்திருத்தக் குழு எப்போது அமைக்கப் பட்டது ? அந்தக் குழுவிலே யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் ? அவர்களுடைய பரிந்துரை என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அந்தப் பரிந்துரைகள் அடங்கிய ஒரு விவர அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, குழு எப்போது அமைக்கப்பட்டது? யார் யார் அங்கம் வகிக் கிறார்கள்?

திரு. ரா. உமாநாத் : 2, 3 வால்யூம்கள் கொண்ட ஒரு பெரிய அறிக்கையை டிஸ்டிரிபுட் பண்ணினார்கள்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பிரிசன் ரிபார்ம்ஸ் கமிஷன் என்று அதற்கு ஆங்கிலத்திலே பெயர். ஓய்வு பெற்ற நீதிபதி திரு. நரசிம்மன், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டு, அவர்களாலே ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே? அந்தக் குழுவிலே சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட அரசியல்வாதிகள் யாராவது அங்கம் வகிக்கிறார்களா என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியைக் கேட் டேன். அப்படி யாராவது இருக்கிறார்களா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, யார் யார் உறுப்பினர்கள் என்பது அந்த அறிக்கையிலே இருக்கிறது. அரசியல் கட்சிகளைச் சார்ந்த வர்கள் யாரும் இல்லை.

[1980 பிப்ரவரி 13

## பட்டுக்கோட்டையில் துணை நீதிமன்றம்.

*வினா எண். 129—திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூரில் இயங்கிவரும் சப்-கோர்ட்டை பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், மன்னார்குடியில் இயங்கிவரும் குற்ற இயல் துணை நீதிமன்றத்தையும் பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்வதற்கான காரணங்கள் யாவை?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தஞ்சாவூரில் இயங்கி வருகின்ற நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு மாற்றுவதாக உத்தேசம் இல்லை. ஆனால் பட்டுக்கோட்டையிலேயே தனியாக ஒரு துணை நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இயங்கி வருகின்றது.

## வாணியம்பாடியினை தனி ஊராட்சி ஒன்றியமாக்கல்.

*வினா எண். 130—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பத்தூர், பேரணாம்பட்டு, நாட்ராம்பள்ளி ஒன்றியங்களை மாற்றியமைப்பதன் மூலம் வாணியம்பாடியினை புது ஊராட்சி ஒன்றியமாக மாற்றும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இது குறித்து ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் சம்பந்தமான பிரிவினை எவ்வளவு காலத்திற்குள் நடக்கும். ஏனென்றால் இந்தப் பிரிவினை என்று வருகிறபோது அடுத்து வரக்கூடிய தேர்தல் காலத்தில் நடக்காமல் போகும். அப்படியானால் தேர்தல் எப்போது? இன்னும் வேறு சீர்திருத்தங்களை யெல்லாம் செய்வதாகச் சொல்கிறார்கள். பெண்களுக்கென்று, அரிசனங்களுக்கென்று, அதெல்லாம் முடிய காலதாமத ஆகுமா? என்றைய தினத்திற்குள் என்பதெற்கென ஒரு கால வரையறை உண்டா? இதற்கெல்லாம் அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒன்றியங்களின் பிரிவினைகள் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் ஏற்பாடு 18 வயதுக்குள்ளாக அனைவரையும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற பணியும் பெண்கள் அரிசனங்கள் மற்றும் பிற்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் என்ற வகையிற் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சில பகுதிகளையும், நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து சில பகுதிகளையும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்ப்பதும், திருப்பத்தூர் ஊராட்சியில் இருந்து சில பகுதிகளை நாட்ராம்பள்ளி ஒன்றியத்தில் சேர்ப்பதான திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை அரசு எப்போது செயல்படுத்தும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே தேர்தலுக்கு முன்னாலே செயல் படுத்தாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் புதிய ஊராட்சி ஒன்றியம் அமையும் என்றார்கள். அப்படி அமைக்கப்படுகின்ற ஒன்றியத்தினுடைய பெயர் என்ன? ஜவ்வாது மலையில் உள்ள சில பகுதிகளைச் சேர்த்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி இந்த ஒன்றியம் மலையில் ஆரம்பிக்கப்படுமா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து 13 ஊராட்சிகள் நாட்ராம்பள்ளி மற்றும் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 3 ஊராட்சிகள்; மொத்தம் 19 ஊராட்சிகள் அதோடு சேர்க்கப்பட்டு வாணியம்பாடி ஒன்றியம் என்று அதற்குப் பெயர் வைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருக்கிறார்.

## திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

*வினா எண். 131—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா ;

(ஆ) ஆம் எனில், எப்போது நகராட்சியாக்கப்படும் ;

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சென்ற நிதி நிலை அறிக்கையில் சில பேரூராட்சிகள், நகராட்சிகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது வரையில் அந்த அறிவிப்பு அமல் படுத்தப்படவில்லை. இளையான்குடி, கீழக் கரை போன்ற பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தற் பொழுது அரியலூர், கள்ளக்குறிச்சி, திருக்கோயில், பெருந்துறை ஆகியவைகள் நகராட்சியாக அறிவிக்கப்படும் தருவாயில் இருக் கின்றன. மற்றவைகளைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கம் சொல்லப்படும்.

## தெள்ளார் ஒன்றியம்.

*வினா எண். 132—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தெள்ளார் பஞ்சாயத்து யூனியனை தெள்ளார், தேசூர் என இரண்டாகப் பிரிக்கக்கோரி அப் பகுதி பொதுமக்களிடத்திலிருந்து கோரிக்கை வரப்பெற்று ள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நவைடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சித் தேர்தலுக்கு முன் இவ்விதமான ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் செயற் குறிப்பை அரசு பரிசீலிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ஊராட்சி ஒன்றியம் பெரியதாக இருப்பதால் நிர்வாகம் சிறப்பாக நடைபெற முடியவில்லை என்பதால் இந்தக் கோரிக்கை மூன்றாண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. இந்தக் கோரிக்கையைப் பொதுமக்கள் வலியுறுத்துகிறார்கள். எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தேர்தல் முடிந்த பிறகு இவைகளை எல்லாம் அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பெண்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு, அரிசன மக்களுக்கு எத்தனை சதவீதம் இந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு இடம் அளிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பிற்பட்டோருக்கு 45 சதவீதம், பெண்களுக்கு 35 சதவீதம், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்க அரசு கருதுகிறது. சட்ட முன் வடிவு சட்டமன்றத்தின் ஆய்வுக்கு வரும்பொழுது உறுப்பினர்கள் கூறும் கருத்துக்களையும் பரிசீலித்த பிறகு சட்டமாக ஆக்கப்பட இருக்கிறது.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிகப் பெரிய ஒன்றியமாகக் கருதப்படும் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தகுந்த நேரத்தில் பிறகு யோசிக்கப்பெறும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் சமீபத்திலே தேர்தல் நடப்பதாகச் சொன்னார்கள். இப் பொழுது வாக்காளர்கள் பட்டியலைத் திருத்துவதிலே சில குறிப்பிட்ட அளவு பெண்கள், அரிசனங்கள் போன்றவர்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார் கள். இதை எல்லாம் செய்து முடித்து, இந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல்களை எந்த மாதத்தில் நடத்தப் போகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற் கனவே ஏப்ரல் இறுதியில் தேர்தல் நடத்தப்படும் என்கிற வகை யில் நாம் பழைய முறையின் அடிப்படையில் நடத்தப்படலாம் என்ற வகையில் அறிவித்திருந்தோம். 18 வயதானவர்களையும் கூட வாக்காளர் பட்டியலிலே இடம்பெறச் செய்ய வேண்டும் என்று, ஏற்கனவே முதலமைச்சரவர்கள் அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில் அவர் களுக்கும் வாக்குரிமை அளிக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதற்குத் தேவைப்படக்கூடிய காலம் ஒரு

மாத காலம். ஆகவே, ஏப்ரலுக்குப் பிறகு, அறிவிக்கப்பட்டதற்கு ஒரு மாத காலத்திற்குள் நிச்சயமாகத் தேர்தல்கள் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 133 மற்றும் 134 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

Construction of a jetty at Rameswaram – Dhanushkodi.

*Q. No. 135 Thiru R. E. CHANDRAN JAYAPAL: Will the Hon. Minister for Transport be pleased to state:

a) Whether the Government have any proposal for the construction of a permanent pier or a jetty at Rameswaram and Dhanushkodi for the berthing of the ferry steamer plying between India and Sri Lankha; and

b] If so; the details thereof.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 1970-ல் இந்திய அரசு அமைத்த குழு ஒன்று கப்பல்கள் நங்கூரம் இறக்கி நிற்பதற்கு வசதியாக, அவை தாங்கிப் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு இராமேசுவரம் மிகவும் பொருத்தமான இடம் எனப் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, போக்குவரத்து நீராவிக் கப்பல்கள் நெடுகவும் நங்கூரம் இறக்கவும் அது தொடர்பான அனைத்துப் பணிகளை கவனிப்பதற்கும் இராமேசுவரத்தில் வலுவூட்டப்பெற்ற சிமிண்ட் கான்கிரீட் தோணித்துறை ஒன்றைக் கட்டுவதற்கு வகை செய்கின்ற செயல் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறுவதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் செயல் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஒரு கோடியே 80 இலட்சமாகும். இத் திட்டத்திற்கான ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கூதக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, 1970 லேயிருந்து இப்பொழுது பத்தாண்டுகள் ஆகின்றது. கடந்த கால அரசுகளைப் பற்றி, நிறைவேற்றுவதிலே தாமதம் இருந்தாலும், மத்திய அரசிடமிருந்து சீக்கிரமாக இதற்கான அனுமதியைப் பெற்று இந்த அரசு இதை உடனடியாக நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பலமுறை மைய அரசுக்கு நாம் நினைவூட்டியதோடு அல்லாமல், மைய அமைச்சரைச் சந்தித்து இதுபற்றி நேரிலேயே நான் வலியுறுத்தியிருக்கிறேன். இது குறித்து நான் மைய அமைச்சரை மீண்டும் சந்தித்து வலியுறுத்தி விரைவில் இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.



பரமக்குடி—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

*வினா எண். 136—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடிக்கும் சென்னைக்கும் இடையே தற்போதுள்ள விரைவு பேருந்துகளை அதிகப்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அங்கு பல்லவன் போக்குவரத்துக் கழகம் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, பரமக்குடிக்கும் சென்னைக்கும் தற்போது 2, 3 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் பரமக்குடி வழியாக இரண்டு பஸ்கள் ஓடுகின்றன. மிக முக்கியமான இந்த இடத்தில் போக்குவரத்துப் பணிமனை ஒன்று இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்துவருகிறது. அந்தக் குறையைப் போக்க அங்கே ஒரு பணிமனை ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : தலைவரவர்களே, 4, 5 பேருந்துகளுக்கு ஒரு பணிமனை என்று அமைத்தால் '' இன் ப்ரா ஸ்ட்ரக்சர் '' செலவு அதிகமாகும் என்பதால் இன்னும் அங்கே பணிமனை அமைக்கவில்லை. அங்கே புதிதாக சில வழித் தடங்களில் பேருந்துகள் விட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பேருந்துகளை விடுகின்றபோது பணிமனை ஏற்படுத்துவதுபற்றியும் பரிசீலிக்கப்படும். தற்போது அங்கே பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை இருப்பதால் அங்கே வருகின்ற பேருந்துகள பராமரிக்கும் பணியை அவர்களிடம் விட்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே அமைச்சரவர்கள் தூத்துக்குடிக்கும் பரமக்குடிக்கும் ஓடிக் கொண்டிருக்கின்ற பஸ்ஸில் '' ஏ.சி. '' பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது ஏ.சி.பஸ் விடப்படும்என்று சொன்னார்கள்; அந்த பஸ்ஸை விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, விரைவில் அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

12 3046

[1980 பிப்ரவரி 13

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு சற்று ஒதுங்கியிருந்தாலும் தாங்கள் மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன் இத்தகைய விரைவுப் பேருந்துகளை அதிகமாக விட வேண்டும் என்பதில் எனக்கு அதிக ஆசையும் உண்டு, அக்கறையும் உண்டு. ஆனால் அதே நேரத்தில் கடந்த 9-ந் தேதி தஞ்சையி லிருந்து மாயூரம் வந்து கொண்டிருந்த சோழனில்—அந்த பேருந்தை எவ்வளவு வேகமாக ஓட்ட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓட்டிய காரணத்தால், ஏதோ ''மாலை முரசு'' பண்டில் இருந்ததால் நான் தப்பித்தேன். பிரேக் அப்ளை ஆகவில்லை. அவ்வளவு வேகமாக ஓட்டுகிறார்கள். நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. கவனிக்க வேண்டிய அதிகாரிகள் கவனித்திருந்தால் பிரேக் அப்ளை ஆகாத அளவுக்கு வேகமாக ஓட்டுவதைப் போன்ற இடையூறுகள் ஏற்பட்டிருக்காது. ஆகவே, அரசு விரைவுப் பேருந்துகளை விடும்போது அவைகளைத் தகுந்த முறையிலே கட்டுப் படுத்தி, பராமரிப்பதற்கு தகுந்த நடவடிக்கைக எடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கடந்த காலத்தில் விரைவுப் பேருந்துகளை பராமரிப்பதற்கான ''இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்'' செலவு அதிகமாக இருந்ததால் சில குறைபாடுகள் இருந்தன. தற்போது தமிழகத்தை 3 பிரிவு களாக, ரீஜன்களாகப் பிரித்து 3 ரீஜினல் மேனேசர்களை,—அவர்கள் டெக்னிக்கல் பீப்பிள்—போட்டிருக்கிறோம். திருச்சியில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், சென்னையில் ஒன்று மாக அமைக்கப்பட்டு, ஒழுங்கான பராமரிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை கடந்த ஓராண்டுக் காலமாக செய்து வருகிறோம். அதற்காக இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்க இருக்கி றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, தற்போது சென் னைக்கும் பழனிக்கும் ஓடிக் கொண்டிருக்கும் பஸ்கள் மிகவும் மோசமாக இருப்பதால் குறிப்பிட்ட நேரத்திற்கு இங்கே வந்து சேர முடியவில்லை. ஆகவே, அந்த பஸ்களை மாற்றிவிட்டு, நல்ல பஸ்களாக விட ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, பழனிக்கு ''குளு குளு'' பஸ் விடப்படும், இன்னும் ஒரு மாதத்தில் விடப்படும் என்று போன சட்டமன்றக் கூட்டத்தில் சொன்னார்கள். அது தற்போது எந்த நிலை யில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் பாண்டியன் தலைமை.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ''குளு குளு'' பஸ் விடுகின்ற செயற்குறிப்பு இன்னும் பரிசீலனை யில்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



1980 பிப்ரவரி 13]

புதிய பேருந்துகளை விடவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார் கள். கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நிதி நிலைமைக்கு ஏற்ப கிட்டத்தட்ட 200 பேருந்துகளை மாற்றியிருக்கிறோம். இன்னும் 44 பேருந்துகள் மாற்றப்பட வேண்டும். அவைகளை மாற்றும்போது அந்த வழித் தடங்களிலும் புதிய பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, இந்தப் பேருந்து களை ஓட்டுகின்ற அந்த ஓட்டுநர்கள் சரியான முறையில் ஒரு குறிப்பிட்ட தூரம் ஓட்டிய பிறகு அதாவது குறைந்தது 100 மைல் சென்ற பிறகு ஓய்வு பெறும் திட்டம் இருக்கிறதா? அப்படித் திட்டங்கள் இருந்தாலும் டிரைவர்கள் இல்லாத காரணத்தால் 100 மைல் ஓட்டிய பிறகு மேலும் ஒரு 100 மைல் ஓட்ட வேண்டுமென்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். அதை நானே பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையினால்தான் இப்படிப்பட்ட விபத்து ஏற்படுகிறது என்பது ஒன்று. இரண்டாவதாக சரியான முறையிலே இயந்திரங்கள் பழுது பார்க்கப்படும் திறமை பெற்றவர்கள் இல்லை என்பது எங்களுடைய கவனத்திற்கு வருகிறது. அதையும் போக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நூறு மைலுக்கு அப்பால் விடப்படுகின்ற விரைவுப் பேருந்து தைப் பொறுத்த வரைக்கும் இரண்டு ஓட்டுநர்கள் நியமிக்க வேண்டும் என்ற முறை ஏற்படுத்தப்பட்டு, அது இப்போது நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த வழித்தடத்தில் அவ்வாறு நூறு மைலுக்கு மேலே செல்லுகின்ற பேருந்தில் ஒரே ஓட்டுநர் ஓட்டுமாறு உத்தரவிடப்பட்டுள்ளார் என்பதைக் கூறுவார்களானால் கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகவே ஆதாரம் இல்லாமல் எதையும் கூற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, பட்டுக் கோட்டை சாலையில் ஓடுகின்ற பேருந்தில் நான் சென்ற போது பலமுறை அப்படிப் பார்த்திருக்கிறேன் என்பதை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நான் தவறாகச் சொல்கிறேன் என்று கருத வேண்டாம் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் வேண்டுமானால் ஒரு முறை அந்தப் பேருந்தில் சென்று பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். நூறு மைலுக்கு மேலே செல்லுகின்ற விரைவுப் பேருந்தில் ஒரு ஓட்டுநர் செல்லக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது, ஆகவே நூறு

[1980 பிப்ரவரி 13

மைலுக்கு மேலே செல்லுகின்ற அனைத்து பேருந்துகளுக்கும் இரண்டு ஓட்டுநர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே என்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் போகும்போது ஒரே ஓட்டுநர் இருந்தார் என்பதைப் புள்ளி விவரத்தோடும், ஆதாரத்தோடும் கண்டிப்பாகத் தரவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டு கொள்கிறேன். அடுத்து பேருந்துகளை பழுது பார்ப்பதற்கு ஆங்காங்கு பட்டரைகள் அமைப்பது பற்றிக் கேட்டிருக்கிறார்கள். துரிதப் பேருந்தைப் பொறுத்த வரைக்கும் கடந்த காலத்திலே பி.ஏ., பி.எஸ்.ஸி. எம்.ஏ., போன்ற படிப்பு படித்தவர்களை நியமிக்கக்கூடிய நிலை இருந்தது. அதையெல்லாம் மாற்றி தற்போது ஆட்டோ மொபைல் என்ஜினீயரிங் படித்தவர்களையே பட்டரைகளில் போடவேண்டும் என்று ஒரு உத்தரவு போடப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, பல குக்கிராமங்களுக்கெல்லாம் பஸ் வசதி இல்லாதிருக்கக்கூடிய இக் காலத்திலே ''குளு குளு'' பஸ்கள் எல்லாம் விடப்படுகின்றனவே, பல கிராமங்களுக்கு பஸ் வசதி ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்கின்ற நேரத்திலே இந்த மாதிரி ''குளு குளு'' பஸ்கள் எல்லாம் விடுவதை நிறுத்த முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கடந்த இரண்டரை ஆண்டுக்காலமாக கிட்டத்தட்ட 3,500 கிராமங்களுக்கு பேருந்துகள் விடவேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து பட்டிதொட்டிகளுக்செல்லாம் பேருந்துகளை விட்டிருக்கிறோம். ஆகவே ''குளு குளு'' பேருந்து விடப்படுகின்ற நடைமுறை கிராமங்களுக்குப் பேருந்து விடுவதிலே குறுக்கே நிற்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே அமைச்சரவர்கள் பதில் கூறுகின்றபோது போக்குவரத்து அலுவலகங்கள் மூன்று இடங்களில் நிறுவப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதாவது சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதேபோல் நாகர்கோவிலிலும் கடைசி டெப்போவாக இருப்பதால் அங்கும்கூட அந்த மாதிரி ஒன்று அமைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவைர்களே. நெல்லை கோவை, நாகை என்ற மூன்று இடங்களிலும் அடுத்த கட்டமாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 13]

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த பரமக்குடி சென்னை துரித வண்டி கிட்டத்தட்ட 12,13 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது. ஆகவே அது மிகத் தொல்லையாக இருக்கின்றது. ஆகவே பரமக்குடியிலிருந்து சென்னைக்கு நேர்வழியாக அதாவது 10 மணி நேரத்தில் செல்கின்ற வகையில் பேருந்து விட அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை எழுத்து மூலமாகக் கொடுப்பார்களேயானால் கண்டிப்பாக, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பேருந்துகளைப் பழுதுபார்ப்பதற்கு பணிமனைகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்தப் பட்டரைகளிலே முன்பு தனியார் பேருந்தாக இருந்தபோது 5 பேர்களுக்கு மேல் இருந்தார்கள். அரசு பேருந்தாக மாற்றப்பட்ட பிறகு இரண்டுபேர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அந்தப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அந்தக் குறை இருந்து வந்தது உண்மைதான். மெயின்டினன்ஸ் பிரிவிலே இருக்கின்ற பணியாளர்களை அதிகபடுத்தினால் இந்தக் குறை நீங்கும் என்று ஆய்விலே கண்டுபிடித்திருக்கிறோம். ஆகவே அதைச் சீர்செய்ய விரைவிலே நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. அ.க. அரங்கநாதன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் பழையதாகவும், அடிக்கடி பழுது பார்க்க வேண்டியவையாகவும் இருக்கின்றன. குறிப்பாக வாணியம்பாடி-திருப்பூர் பேருந்தும், வேலூர் -வாலாஜா பேருந்தும், வேலூர்-ஹாசூர் வேலூர்-அணைக்கட்டு போன்ற பேருந்துகள் மிகவும் பழையதாக உள்ளன, நிறைய வசூலும் கிடைத்து வருகிறது. இப்படி பழையதாக இருப்பதனால் சில நேரங்களில் நின்றுவிடுகின்ற நிலை ஏற்படுகிறது. இந்த நிலையை நீக்க அவைகளை புதியதாக மாற்றி அமைப்பதற்கு ஏதாவது உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தந்தைபெரியார் போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரைக்கும் ஏனைய போக்குவரத்து கழகங்களில் இருந்து எடுக்கப் பட்டவை இந்த பேருந்துகள். அந்த வாகனங்கள் கிட்டத் தட்ட 10 வயதுக்கு மேற்பட்டவை, அவைகள் ஓட்டப்படுகின்ற காரணத்தினால் இந்தக் குறைபாடு இருந்து வருகிறது. அதை மாற்றி அமைத்து 8 வயதுக்குள்ளான பேருந்துகள் அனைத் தையும் தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்திற்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அந்த வேலை, நடப்பு ஆண்டிற்குள் முடிந்து விடும் என்று நம்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திருச்சி, விழுப்புரம் போன்ற இடங்களில் ''எக்ஸ் பிரஸ்விங்'' நிற்கக்கூடிய பஸ் ஸ்டேண்டில் பஸ்கள் நிற்கக்கூட இடம் இல்லாத காரணத்தினால், இரவில் பஸ்கள் அதிகமாக வரக்கூடிய நேரங்களில் அவைகளை பஸ் ஸ்டேண் டுக்கு வெளியே நிற்க வைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக் கிறது. திருச்சியில் அதற்காக ஓர் இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது என்று கமிட்டியில் சொன்ன பிறகும் ஏராளமான பஸ்கள், டீசல் பிடிப்பதற்காக இரவு நேரங்களில் கொண்டு வரப்படும் பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே நிறுத்தப் படுவதால், பயணிகளுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. அந்த பஸ் ஸ்டாண்டை எக்ஸ்டெண்ட் பண்ணுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே' திருச்சியைப் பொறுத்த வரைக்கும் போர்டு மெம்பரிடம் வேலை கொடுக்கப்பட்டு, அந்த பஸ் ஸ்டாண்டை கையகப் படுத்துவதற்காக இடமும் பார்க்கப்பட்டது. அதை மாண்புமிகு திரு உமாநாத் அவர்களிடம்கூட அந்த குழுவில் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். குழுவில்கூட சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. துரித நடவடிக்கை எடுத்து விரைவில் முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவ ருக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த உத்தரவை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப் படும். விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் இந்தக் குறைபாடு இருந்து வருகிறது என்பது உண்மைதான். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டு இடத்தை கையகப்படுத்து வதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு மாற்றுத தலைவர் அவர்களே, தற்பொழுது ஆர்.டி.ஏ. என்று கூறப் படுகிற ரீஜினல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டிதான் பெர்



1980 பிப்ரவரி 13]

மிட்டுகள் வழங்குகின்றார். அப்படி பெர்மிட்டுகள் கொடுக்கப்படும்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு தாற்காலிக பெர்மிட்டுகள் தான் கொடுக்கப்படுகிறது. நிரந்தர பெர்மிட்டுகள் எல்லாம் தனியார்களுக்குப் போய்விடுகிற நிலைமை இருந்து வருகிறது. இந்த நிர்வாகச் சிக்கலை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆர்.டி.ஏ. மீட்டிங் போட்டு அதன் மூலமாகப் பேருந்து உரிமங் களை வழங்குகிறபோது நிரந்தர உரிமங்கள் தனியாருக்குப் போகின்ற சூழ்நிலை இருந்துதான் வருகிறது. அதற்கு காரணம் இன்னும் பல இடங்களில் பல்லவன் போக்குவரத்துக் கழகங்களுக்கு பணிமனைகள் இல்லாத நிலையினால் 2 எண்கள் அவைகள் குறைவாக பெற்று, அந்த உரிமங்கள் பெறுகின்ற தகுதியை இழந்து விடுகின்றன. ஆனால் சில இடங்களில் உடனடியாக பேருந்துகள் வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் மக்கள் போராட்டம் முதலியவை கள் நடத்தும்போது, மீட்டிங் போட்டு அத்தகைய உரிமங்கள் கொடுக்கப்படுவதால் தனியாருக்கே செல்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கு சட்ட சிக்கலும் ஒரு காரணம். 155 ஏ பிரிவில் உள்ள சந்து பொந்துகளை உபயோகப்படுத்தி தனியார் துறையினர் அந்த உரிமங்களைப் பெற்று விடுகின்றனர். அந்தச் சட்டத்தை மாற்றி அமைப்பதானாலும் 3, 4 மாதங்கள் அதற்குத் தேவைப்படும் அமுலில் கொண்டு வருவதற்கு. ஆனால் இப்படிப் போராட்டம் நடத்தி மக்கள் பேருந்து வழிகளை அவசர மாக வேண்டும்போது, அவைகளைத் தனியாருக்கே கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகையினால் அந்த 155-ஏ விதியின் சட்டத்தைத் திருத்தி அமைப்பதற்கான நட வடிக்கை எடுத்து வருகிறோம். அது நிறைவேற்றப்பட்டால், இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்.

திரு. செ. சிவசாமி: நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் கூட போக்குவரத்து அதிகாரிகள் தேவை இல்லாமல் தகாத நேரங்களில் சென்று செக் செய்கிறார்கள். அது தேவைதானா? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நீண்ட தூர துரித பேருந்துகள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்ட பேருந்து கள். ஏன் அதிகாரிகள் சோதனை செய்கிறார்கள். எந்த காரணத்திற்காக எப்போது என்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**புழலேரியிலிருந்து வெளிவரும் உபரி நீர்.**

**வினா எண் 137—திரு. பொ. சிகாமணி :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையை அடுத்துள்ள புழலேரியிலிருந்து மழைக் காலங்களில் வெளிவரும் உபரி நீரை எண்ணூர் அடுத்துள்ள கடலில் வடியவிடும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இல்லை. புழலேரியிலிருந்து மழைக் காலங்களில் வெளிவரும் உபரி நீர், தானாக வடிகால் வழியே ஓடி பக்கிங் ஹாம் கால்வாய் மூலம் கடலில் கலந்து விடுகிறது.

**திரு. பொ. சிகாமணி :** இந்த புழலேரியில் உள்ள அதிகப்படியான உபரி நீர் அங்குள்ள விவசாயத்தைப் பாதிக்கக்கூடிய அளவில் பெரிய அளவில் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இதற்கான மனு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் கூட இரண்டு முறை பார்வையிட்டு அதற்கான நிவாரணங்கள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு உறுதி அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவசாய நிலங்கள் பாதிக்காத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல மழைக்காலங்களில் வருகிற உபரி நீரைத் தேக்கி வைக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நாம் பல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். அதே போல் மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் கூட அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த அளவில் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பொ. சிகாமணி :** இந்த உபரி நீரால் அந்தப் பகுதியில் உள்ள வயல்கள் பாதிக்கப்படுகின்றன. அதற்கான நிவாரணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** உறுப்பினர் அவர்களின் யோசனை சிரமேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. சென்னை மு. அரங்கநாதன் :** புழலேரி நீர்தான் சென்னை நகர மக்கள் குடிநீராகப் பயன்படுத்துவது என்பது அரசுக்குத் தெரியும். இந்த புழலேரி கரைப் பகுதிகளில் சோழவரம் போன்ற ஏரி கரைப் பகுதிகளில் அந்தப் பகுதியில் உள்ள





மக்கள் சிலர் கால்நடைகள் கழித்து வருகிறார்கள் ஆகவே, சென்னை நகருக்கு வரும் குடிநீர் சுகாதாரக் கேடு பயக்கும் நிலை ஏற்படுகிறது அதை நான் நேரடியாகப் பார்த்தேன். ஆகவே அதைப் பாதுகாக்கிற வகையில், அதைச் சுற்றிலும் வேலி போட்டால் கால்நடைகளை, துறையோரங்களில் கழிக்கக்கூடிய நிலைமை ஏற்படாது தவிர்க்கலாம். ஆகவே, அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** குடிநீருக்காக இருக்கக்கூடிய இடங்களை அசுத்தம் செய்யக் கூடாது என்பது விதி. மாண்புமிகு உறுப்பினர் மாநகராட்சி உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்ணுறுகிற நேரத்தில் அவர்களே கூட உடனே நடவடிக்கை எடுத்து யார் யார் செய்கிறார்களோ, அவர்களைச் சந்தித்து அப்படிச் செய்யக் கூடாது என்று அறிவுரைகள் கூறியிருக்க முடியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரது யோசனையை ஏற்றுக் கொண்டு அதை அரசு நடைமுறைப்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சென்னை மு. அரங்கநாதன் :** மாநகராட்சி உறுப்பினராக இருந்தேன். சுகாதாரக் குழு தலைவராகவும் இருந்தேன். இந்தப் பணிகளை அரசுதான் செய்ய வேண்டும். அதற்கான நிதி வசதி மாநகராட்சிக்குக் கிடையாது. ஆகவே, இப்போது நகராட்சி உறுப்பினராக இல்லாததால், இப்போது நடப்பதை நேரடியாகப் பார்க்கிற காரணத்தால் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஏற்கெனவே நீங்கள் சார்ந்திருக்கக்கூடிய கட்சி மாநகராட்சியில் ஆளும் கட்சியாக இருந்திருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். அப்போது கூட நடவடிக்கை எடுத்திருக்க முடியும். இருந்த போதிலும் உங்கள் கருத்தை இந்த அரசு நடைமுறைப்படுத்தும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** ஒரு ரிவர் பேஸினிலிருந்து அங்குள்ள உபரி நீரை இன்னொரு ரிவர் பேஸினுக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? மேற்கு நோக்கி ஓடுகிற ஆற்றின் நீரை கிழக்கு நோக்கி திருப்பிவிடும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஒரு ரிவர் பேசினிலிருந்து இன்னொரு ரிவர் பேசினுக்கு உபரி நீரை மாற்றுகிற செயற்குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை. நதிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை இந்த

[1980 பிப்ரவரி 13

அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல் மேற்கு நோக்கி பாயும் நதிகளை கிழக்கு நோக்கி ஓடும்படி மாற்றினால் பல்வேறு பகுதிகளை தமிழ்நாட்டில் பாசன வசதிக்கு கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தோடு தமிழக முதல்வர் கூட நடவடிக்கை எடுத்து அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தினால் தமிழ்நாட்டில் பாசன வசதியற்றிருக்கக் கூடிய பலவேறு பகுதிகள் எல்லாம் பாசனவசதி பெறுகிற நிலை ஏற்படும்.

## திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலைப் பணிகள்

* வினா எண். 138—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச்செல்ல வசதியாக சர்க்கரை ஆலையினரால் பரிந்துரைத்த ரோடுகளின் விபரம் என்ன ?

(ஆ) இதில் எத்தனை ரோடுகளில் பணி முடிந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) சட்டப்பேரவையின் முன் ஓர் அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில், ஆறாவதாக குறிக்கப்பட்டிருக்கின்ற தரைப்பாலத்தை சர்க்கரை ஆலைகள் இயக்குநர் பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி ஏறத்தாழ 10 ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கின்ற காரணத்தால், இந்தத் தரைப்பாலம் அமைக்கப்பட்டால் பல்லாயிரக்கணக்கான டன்கள் கரும்பு புதியதாக இந்த ஆலையில் பதிவு செய்யப்பட இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இந்த தரைப் பாலத்தைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்த அம்பலூர்-ஏக்லாஸ்புரம் தரைப் பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆயிவில் இருந்து வருகிறது. உடனடியாக அது செயல்படுத்தப்படும்.

---

** 610-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 13]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் பகுதியில் சாலைகள் அமைப்பது கரும்பு செஸ் நிதியிலிருந்து என்று தெரிகிறது. இந்த குறிப்பிட்ட சர்க்கரை ஆலைக்கு எவ்வளவு பணம் கரும்பு செஸ் நிதியிலிருந்து பயன் படுத்தப்பட்டது? அதே போல், இதர சர்க்கரை ஆலைகள பகுதிகளில் இப்படிப்பட்ட சாலைகள் போடுவதற்கு இந்த கரும்பு செஸ் நிதியைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ. 5 ஒவ்வொரு ஆலையிலிருந்தும் அரசு வசூல் செய்கிறது. அந்தத் தொகையிலிருந்து சாலை அபிவிருத்தித் திட்டம், ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள், புதிய சர்க்கரை ஆலைகளுக்குப் பங்கு தொகைகள் இவைகள் எல்லாம் போடப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 1973–74 லிருந்து பல்வேறு சாலைகள் நாம் போட்டிருக்கிறோம். கடந்த 1978–79லேகூட ரூ 66 கோடியே 30 ஆயிரம் வசூலானது. ஆனால் செலவு செய்த தொகை ரூ 1 கோடி 79 இலட்சத்து 12 ஆயிரம். இந்த நடப்பு ஆண்டில் கூட ரூ. 1 கோடியே 50 இலட்சம் இந்த ரோடுகள் வசதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அம்பலூர்-ஏக்லாஸ்புரம் தரைப்பாலம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விரைவில் என்று சொன்னால் எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்படும்? மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதன் மதிப்பீடு சுமார் 6 இலட்சம் ரூபாய். உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும்; இன்னும் 2, 3 மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையிலிருந்து கரும்பு சப்ளை செய்யப்படுகின்றது. அந்தப் பகுதி விவசாயிகள் சாலைப் போக்குவரத்து இல்லை என்று முறையீடு செய்திருக்கிறார்கள். அது ஏதாகிலும் பரிசீலனை செய்யப்பட்டதா? அல்லது இனிமேலாவது இப்படிப்பட்ட புகார்கள் வந்தால், அந்தச் சாலை போட்டுக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சாலை வசதிகள் ஒழுங்காக செய்யவேண்டுமென்ற எண்ணத்தொடு தான் நாம் பாடுபட்டு வருகிறோம். எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் ஒழுங்காக இல்லையோ, அங்கே சீர்செய்ய வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடியதும் உடனடியாக கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்படி வசூல் செய்யக்கூடிய இந்தப் பணம் முழுக்க முழுக்க சாலைகள் பராமரிப்புக்காக, சாலைகள் போடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றதா? அல்லது வேறு எவற்றிற்காவது பயன்படுத்தப்படுகின்றதா? அப்படி சாலைகள் பராமரிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற நேரத்தில் எந்தெந்த சாலைகள் போடுவது என்பதைப் பற்றி முடிவு கட்டுவது யார் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே பதிலில் விவரமாக எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கவில்லை என்று கருதுகிறேன். கரும்பு மேல் வரியாக டன்னுக்கு ஐந்து ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதன் மூலம் கிடைக்கக்கூடிய மொத்தத் தொகை சாலை அபிவிருத்தித் திட்டம், ஆராய்ச்சிப் பணிகள், புதிய சர்க்கரை ஆலைகள் துவங்குகிற நேரத்தில் பங்கு மூலதனம் போடுவது என்ற வகையிலே செலவழிக்கப்படுகிறது. பூராப் பணத்தையும் சாலைகளுக்காகவே செலவு செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனாலும் எவ்வளவு தொகை வசூலாயிற்றோ அதைக் காட்டிலும் அதிகமாக கடந்த ஆண்டில் சாலை அபிவிருத்திக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 66,30,000 வசூலானது. ஆனால் செலவு செய்யப்பட்ட தொகை ஒரு கோடி ஒன்பது இலட்சம் ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போன்று சாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தர்மபுரி மாவட்டம் திருப்பத்தூர் ஷுகர் மில்லுக்கு அறியூர் தொகுதி வழியாக கரும்புகள் சப்ளை செய்யப்படுகின்றன. என்னுடைய தொகுதியில் இருந்து திருப்பத்தூர் ஷுகர் மில்லுக்குக் கரும்பு ஏற்றிச் செல்ல வழித்தடங்கள் சரி இல்லாமல் இருக்கின்றன. அங்கு நடப்பாறு ஆறு ஒன்று இருக்கிறது. அந்த ஆற்றுக்கு பாலம் கட்டித் தந்தால் குன்றத்தூர், சாம்பல்பட்டி வழியாக திருப்பத்தூருக்குப் போக முடியும். திருப்பத்தூருக்கு அதிகமான அளவு கரும்பு கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் குன்றத்தூர் பாலத்தையும் கட்டித் தர இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கையின் படி ஆறு சாலைகளை அமைக்கின்ற பணியினை இந்த அரசு மேற்கொண்டிருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தச் சாலைகளைப் பற்றி அவர்கள் விவரமாக எழுதி அனுப்பினால் கண்டிப்பாக பரிசீலிக்கப்படும்.

திரு. ப. சுந்தரம் : கூடப்பட்டு—வெவ்வால் தோப்பு துறைப் பாலம் அமைப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்? கூடப்பட்டுக்கும் வெவ்வால் தோப்புக்கும் இடையே பாம்பாறு ஓடுவதால் மழைக்





காலங்களில் பாதிப்பு ஏற்படுகிறது. சர்க்கரை ஆலையிலிருந்து இரண்டு சிமெண்ட் பைப்தான் போட்டிருக்கிறார்கள். மழைகாலங்களில் அது அடித்துச் செல்லப்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட சிரமங்களைப் போக்க உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒதுக்கப்பட்ட தொகை மூலமாக பல்வேறு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய நேரங்களில் அந்தப் பணிகள் தடைப்பட நேரிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தத் திட்டங்கள் எல்லாம் உடனடியாக செயல்படுத்துவதற்கான செயற் குறிப்பு இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பணகுடியிலுள்ள அரசு மருந்தகம்.

*வினா எண் 139—திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, பணக்குடியிலுள்ள அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) பணகுடி அரசு மருந்தகத்தை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் தற்போது ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பணகுடியிலுள்ள அரசு மருந்தகமானது தனியாரால் உருவாக்கப்பட்டு, மாவட்ட ஆட்சிக் கழகத்திற்கு அதாவது டிஸ்ட்ரிக் போர்டுக்கு மாற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டு இப்போது அங்கிருந்து அரசு மருந்தகமாக இயங்கி வருகிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டுக்குத் தரும் நேரத்தில் ஆறு படுக்கை வசதிகள் கொண்ட கட்டட வசதியுடன் தந்தார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பாவது போல் இப்போது படுக்கை வசதி இல்லாமல் புற நோயாளிகளை மட்டும் கவனிக்கும் மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே படுக்கை வசதி கொண்டதாக இருந்த அந்த மருந்தகத்தை பத்து படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகவாவது உருவாக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u> இது ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகமாக இருந்து இருக்கிறது. அதை அரசு 30—11—1975-ல் ஏற்றுக் கொண்டது. இதற்கு அருகில் 10 கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருந்தகம் இருக்கிறது. நாங்குநேரியில் அரசு மருந்தகம் 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அரசு தலைமை மருத்துவ மனை நாகர் கோவிலில் 24 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும் ஆறு படுக்கைகள் கொண்ட பிரசவ அறுவை சிகிச்சை கூடமும் புதிதாக ராதாபுரத்தில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே, பணகுடியிலுள்ள அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

<u>திரு. யா. சை. மு. யூசுப் :</u> தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியிலே நான் கேட்டது, இருபது ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பெற்று வந்த வசதிகளைப் பெறுவார்களா என்பதுதான். ஆகவே பக்கத்திலே உள்ள இடங்களைப்பற்றிச் சொல்லாமல் அதிலே 6 படுக்கைகள் வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u> தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை எடுத்துக் கொண்ட போது என்ன வசதிகள் இருந்தனவோ அந்த வசதிகள் தற்போதும் இருந்து கொண்டிருக்கின்றன.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ;</u> தலைவர் அவர்களே, மருந்தகங்களை, அரசு மருத்துவ மனைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டு படிப்படியாகச் செய்யப்படவேண்டுமென்று இருக்கிறது. படிப்படியாகச் செய்யும் பொழுது பணக்குடியில் உள்ள மருந்தகத்தை அரசு மருத்துவ மனையாக பிரையாரிடி கொடுத்து மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u> தலைவர் அவர்களே, மருந்தகங்களை மருத்துவ மனைகளாக்க வேண்டும் என்ற திட்டம் அரசின் நடைமுறையில் இருந்து செயல்பட்டுக் கொண்டு வருகிறது. குறிப்பாக மருத்துவ மனைகள் இல்லாத இடங்களிலே அவைகளை மருத்துவ மனைகளாக ஏற்றுக்கொண்டு வருகிறோம் ; வசதிகளைப் பற்றிருக்கின்ற இடங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.



<u>திரு. ரா. கிருஷ்ணன் :</u> தலைவர் அவர்களே, 60 ஆயிரம், 70 ஆயிரம் மக்கள் உள்ள நகராட்சிப் பகுதியிலே உள்ள மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றும் திட்டம் உண்டா ? திருநெல்வேலி மாவட்டத்திலே புளியங்குடி என்ற கிராமத்திலே உள்ள மருந்தகத்தின் கட்டடம் உடைந்த கட்டடமாக இருக்கிறது ................. (மணியடிக்கப்பட்டது).

<u>மதுரை மாவட்டத்தில் மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்.</u>

<u>*வினா எண். 140—திரு. நா. பழனிவேல் :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்பட்டுள்ளதா ?

(ஆ) அக் குழுக்களில் எதிர்க்கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u>

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

<u>திரு. என். பழனிவேல் :</u> தலைவர் அவர்களே, இதற்கு முன்பெல்லம் மருத்துவமனைகளுக்கு ஆங்காங்கு ஆலோசனைக் குழுக்கள் இயங்கிக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி வந்து இரண்டரை ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆலோசனைக் குழுக்கள் ஏன் போடப்படவல்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, அம்மாதிரிக் குழுக்களிலே சர்வ கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து அவைகள் அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்:</u> தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண். 1494, சுகாதாரம், நாள் 22—8—1978 மற்றும் அரசாணை (நிலை) எண். 64, சுகாதாரம், நாள் 14—1—1980-ல், திருத்தியமைக்கப்படவிருக்கும் மருத்துவ மனைகளின் ஆலோசனைக் குழுக்களில் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (1) மாவட்ட ஆட்சியாளர், (2) மாவட்ட குடும்ப நல தாய் சேய் நல அலுவலர், (3) முன்னாள் படை வீரர்கள் நலத்துறையின்

உதவ் இயக்குநர், (4) நிர்வாகப் பொறியாளர் 12 பேர்கள், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் இவர்களில் யாராவது இருவர். இதைத்தவிர பொது மக்கள் பணியிலே, சோஷியல் ஒர்க்கிலே அக்கறை உள்ள 2, 3 பேர்கள் பங்கு பெறுவார்கள். அந்த அந்த இடத்திற்குத் தகுந்தபடி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் அதிலே பங்கு பெறுவார்கள்

## மின்சார உற்பத்தி.

*வினா எண் 122. : திரு சின்னசேலம் மா. சுப்பிரமணியம், திரு. என். கிட்டப்பா. திரு. கே. பன்னை சேதுராம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் மின்சார உற்பத்தியை அதிகப் படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) இப்பொழுது எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) நமது மாநிலத்தில் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் 7 மின்உற்பத்தி நிலையங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. 10 மின் திட்டங்களை மத்திய மின் ஆணைக்குழு/மத்திய திட்டக்குழு ஆகியவற்றின் அனுமதிக்காக அனுப்பியுள்ளது. 8 மின் திட்டங்களை ஆராய்வதிலும். அதற்கான திட்டப்படிமங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

(ஆ) 1978-79-ம்ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் 661 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்தது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே வேறு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது கேரளத்திலே மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகளை கிழக்கு நோக்கி ஓடக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வதற்கு குழு அமைக்கப்பட்டு நமது அரசும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதாகக் குறிப்பிட்டார்கள். முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக நான் அறிகிறேன். அப்படி



மற்கு நோக்கி ஓடக்கூடிய ஆறுகளை கிழக்கு நோக்கி ஓடுவதற்கு ற்பாடு செய்தால் அதிலிருந்து மின்சாரம் அதிகமாக உற்பத்தி சய்வதற்கு வழிவகை ஏதேனும் உண்டா ? அதைப்பற்றி அரசு தேனும் அறிவிக்க இயலுமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ந்தக் குழு. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலேயிருந்து எந்த ளவிற்கு. எந்த இடத்தில் தண்ணீரைக் கிழக்கு நோக்கித் திருப்பு தற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவிக்கிறதோ அதைப் பாறுத்துத்தான் மின் உற்பத்தி வாய்ப்பு.

திரு. கே. பன்னை சேதுராம் : தலைவரவர்களே, தமிழ் ாட்டில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக அனல் மின்சார நிலையங்களை இன்னும் அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா ? சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை மூடிவிட்டதற்குப் பிறகு அங்கே மின்சாரத் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை மறுபடியும் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மேட்டூரிலே ஒன்றும், சென்னை பெரு நகரத்தின் வடபுறத்தில் ஒன்றும் வேண்டுமென்ற அடிப்படையில் மின்வாரியம் திட்டமிட்டுள்ளது. சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்குக் குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, புதிய மின் நிலையங்களை அமைக்கின்ற பணியில் அரசாங்கம் முன் முயற்சி எடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலே மாத்திரமல்லாமல், உலகம் முழுவதற்குமே பாய்லர் பிளான்டைப் பலயிடங்களுக்குச் சப்ளை செய்கின்ற நமது பாரத் ஹெவி எலக்ட்ரிகல் லிமிடெட். திருச்சியில் அதனுடைய தன்மையை முன்னிட்டாவது அங்கே மின் வெட்டு இல்லாமல் இருந்தால்தான் நாம் இந்த மாதிரி ஆக்சிலரி யூனிட் எல்லாவற்றிற்குமே செய்ய முடியும். எனவே. பாய்லர் பிளான்டை உற்பத்தி செய்கின்ற அந்த இடத்திலே 35 சதவீதம் மின்வெட்டு இப்பொழுது அமுல்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே. அதற்காவது விதிவிலக்குக் கொடுத்து அந்தத் திட்டங்களுக்கெல்லாம் மின்வெட்டு இல்லாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே. தமிழ் நாட்டில் ஹைட்ரோ பவர் ஜெனரேஷன், காஸ்ட் ஆப் ஜெனரேஷன் பர் யூனிட் எவ்வளவு ஆகிறது? கேரளாவிலிருந்து யூனிட் 28 பைசாவிற்கு வாங்கப்பட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது அதிகம் என்று சொல்கிறார்கள். அதைக் குறைக்க ஏதாவது வாய்ப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. தற்பொழுது என்னிடத்தில் விவரம் இல்லை. ஆனால் ஆங்கிலத்திலே சொல்வார்கள். No power is so costly as no power ஆகையினாலே வேறு எங்கும் கிடைக்காது இருக்கும் பொழுதுகிடைக்கின்ற இடத்திலேயிருந்து வாங்குவதுதான் புத்திசாலித்தனம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சிலயிடங்களில் புதிதாக மின்சார உற்பத்திக்காக நிலையங்கள் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள். அதிலே அனல் மின் நிலையங்கள் எத்தனை என்பதையும். புனல் மின் நிலையங்கள் எத்தனை என்பதையும் அறிவிக்க இயலுமா? அதைப்போலவே, அந்தத் திட்டங்களின மூலமாக அது நிறைவேற்றப்படும்பொழுது பாசன வசதிக்கோ, குடிநீர் வசதிக்கோ உபரி நீர் கிடைக்க ஏதேனும் வழிவகை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இரண்டு இடங்களில் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் ஒரு, இடத்தில் அணு மின் உற்பத்தி நிலையம் கேட்டிருக்கிறோம். மொத்தம் 25 இடங்களில் இந்த மூன்று இடங்கள் போக மீதி உள்ள 22 இடங்கள் புனல் மின் உற்பத்தி நிறுவனங்கள்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே. மின் உற்பத்தி செய்வதில் பழனி அருகே சண்முகா நதி ஆற்றில் நீர் மின் நிலையம் அமைக்க அங்கே சமீபத்தில் அதிகாரிகள் வந்து ஆய்வு செய்தார்கள். அதனுடைய நிலைமை தற்போது எப்படியிருக்கிறது? அங்கே நீர் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. சண்முகா நதித் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.



1980 பிப்ரவரி 13]

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே. இப்பொழுது கேரளாவிலிருந்து அதிகமான விலைக்குக் கரண்ட் வாங்கப்பட்டு தமிழகத்திற்குக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் ஹொகேனக்கல் மின்சாரத் திட்டம் எந்த நிலையில் மள்ளது? அதை உடனே ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. ஹொகேனக்கல் திட்டம் ஒரு நல்ல திட்டம். அது குறித்து ஏற்கனவே இருந்த கர்நாடக முதல்வரோடு நம்முடைய முதல்வரவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதுபற்றி மீண்டும் வற்புறுத்தப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே. மின்சார வெட்டு அமுல் படுத்தப்பட்ட காலத்திலேயே விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலேபாய்லர் பிளாண்டும் ஒன்று. அமைச்சர் தகவல் இல்லை என்று சொன்னார். தகவல் இல்லாவிட்டால் பரவாயில்லை. அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. மின் வெட்டு சம்பந்தமான கேள்வி அல்ல இது. மின் உற்பத்தித் திட்டங்கள் சம்பந்தமான கேள்வி. ஆகையினாலேதான் தகவல் இல்லை என்று சொன்னேன். ஏற்கனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்திருக்குமேயானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10-10]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே. தமிழ்நாடு மின உற்பத்திக்கு நெய்வேலி திட்டம் பிரதான பாத்திரம் வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அதற்காகத்தான் இரண்டாவது சுரங்கத் திட்டத்தை வெட்ட நமது அரசு முயற்சி செய்கிறது. அங்கேயும் அதற்கான ஆரம்பத்தைச் செய்து வைத்தார்கள். ஆனால். 11-ஆம் தேதி 'எக்கனாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. அந்த இரண்டாவது திட்டத்தை ஆரம்பித்தால் ஆபத்து ஏற்படும், சமுத்திரமே அங்கே நுழைந்து விடும், ஆகவே. அது செயல்படுத்துவதற்குரிய திட்டம் இல்லை என்று எழுதியிருக்கிறது. அரசு அதையெல்லாம் கருத்தில் கொள்ளாது, அப்படிப்பட்ட கட்டுரைகளுக்குச் செவி சாய்க்காமல் அந்த இரண்டாவது திட்டத்தை ஆரம்பிக்க தீவிர முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. அந்தக் கட்டுரையை நான் பார்க்கவில்லை. 'சைலன்ட் வாலி' (silent valley) திட்டத்தைப் பற்றி பல கட்டுரைகள் வருவதைப் போல் அதைப்பற்றியும் வருகிறதோ என்னவோ.

திரு. சொ. ந. பழனிசாமி: தலைவரவர்களே. நீலகிரி மாவட்டத்தில் பாண்டியாறு புன்னம்புழா என்ற நதிகளின் நீரைக் கொண்டு. மின்சக்தி எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அது எப்பொழுது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் தெரிவித்த திட்டங்களிலே அதுவும் ஒரு திட்டம். ஆனால், அதிலே இருந்து வருகின்ற நீர் கோவை மாவட்டத்திற்கு பாசன வசதிக்கு வேண்டுமென்று கேட்டு வருவதனால். அது இன்னும் பேச்சு வார்த்தையிலேயே இருந்து வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, கல்பாக்கம் அணுமின் உற்பத்தி திட்டம் வருவதனால் தமிழ்நாட்டில் மின் தேவை பூர்த்தியாகும் என்று சொல்கிறார்களே, இப்பொழுது கேரளாவிடமிருந்து அதிகத் தொகைக்கு மின்சாரம் வாங்குவதனால் கஷ்டமாக இருக்கிறதே, எப்பொழுது கல்பாக்கம் திட்டம் நிறைவேறும்? அதனை விரைவில் நிறைவேற்ற மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கல்பாக்கம் அணுமின் உற்பத்தி திட்டம் நிறைவேறினாலும் நமது தேவையை அது நிறைவு செய்யாது. நமக்கு இருப்பது யானைப் பசி; அது வெறும் சோளப்பொறிதான். அது எப்பொழுது நிறைவேறும் என்பது மத்திய அரசுக்கே இன்னும் தெரியாது என்று நம்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: புதிய திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மின் உற்பத்தியைப் பெருக்குவது என்பது ஒரு வகை. ஏற்கனவே உள்ள மின் உற்பத்தி நிறுவனங்களுடைய உற்பத்தித் திறனைச் செம்மைப்படுத்தி அதிகப்படுத்துவது என்பது இரண்டாவது வகை. இப்பொழுது பேசின் பிரிட்ஜிலே உற்பத்தி செய்கிற மின்சாரம் எண்ணூரிலே உற்பத்தியாகிற மின்சார அளவைவிட அதே சக்தியைக் கொண்டு அதே செலவைக் கொண்டு மிகமிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த நிலைமைகளை ஆய்வு செய்து ஏற்கனவே உள்ள நிலையங்களைச் செம்மையாகவும், அதிகமாகவும் மின் உற்பத்தி செய்ய என்ன நடவடிக்கைகளை எடுக்க அரசாங்



1980 பிப்ரவரி 13]

கம் உத்தேசித்துள்ளது. அப்படிக் குறைவாக உற்பத்தியாகிற எந்த எந்தத் திட்டங்கள் இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நல்ல யோசனையை தமிழ்நாடு மின்சார வாரியம் கவனத்தில் கொண்டு செயலாற்றும்.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த மாவட்டந்தோறும் அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அனல் மின் உற்பத்திக்கு நிலக்கரியை வட மாநிலங்களிலேயிருந்து கொண்டு வரவேண்டும். ஆகவே அவற்றைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்து வசதி இவைகளையெல்லாம் பார்த்துத்தான் அனல் மின் உற்பத்தி நிலையங்களை மத்திய அரசு அனுமதிக்கிறது. ஏற்கனவே மேட்டூருக்கும், சென்னைக்கும் வட வடபுலத்திலே ஒன்றை அமைப்பதற்கு திண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் மாவட்டங்களைப்பற்றி யோசிப்பதற்குக்கூட இயலாது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே, கோவைக்குக் குடிநீருக்கு போடப்பட்டிருக்கிற சிறுவாணித் திட்டத்துடன் மின் உற்பத்தித் திட்டம் போடப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையம்.

*வினா எண் 123—திரு. தி. சு. நல்லதம்பி மற்றும் திரு. சே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தின் தற்போதைய உற்பத்தி அதனுடைய உற்பத்தி திறனைவிட குறைவானதென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாது?

(இ) இது குறித்த மறு ஆய்வுப் பணி எதனையும் மின்சார வாரியம் மேற்கொண்டுள்ளதா?

(ஈ) தற்போதைய நிலையினை மேம்படுத்த எடுக்கப்பெற்றுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலுள்ள பெரும்பான்மையான கொதிகலன்களும் மின் உற்பத்தி இயந்திரங்களும் 21 முதல் 27 ஆண்டுகள் வரை இயக்கப்பட்டு வந்துள்ளதால் அதன் தற்போதைய உற்பத்தி அதனுடைய உற்பத்தித் திறனைவிடக் குறைவாக உள்ளது.

(இ) (ஈ) இம் மின் நிலையத்திலுள்ள 8 கொதிகலன்களையும் 3 டி.ஏ. செட்டுகளையும் நீக்கிவிட்டு ஒரு புதிய நவீன 60 மெகா வாட் யூனிட்டினை நிறுவ மின் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே அமைச்சரவர்களுடைய பதில் அந்த இயந்திரம் பழுதடைந்திருப்பதால் அதை மாற்றுவதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்கிற தோரணையில் இருக்கின்றது. ஏறக்குறைய 1976 ஆம் ஆண்டு வரையிலே இருந்து வந்த உற்பத்தித் திறன் இன்றைக்கு ஓரேயடியாகக் குறைந்திருப்பதற்குக் காரணம் அங்கே இருக்கின்ற அதிகாரிகளுடைய கவனக்குறைவா? அடுத்து இந்த அளவுக்கு மின் உற்பத்தித் திறனை உண்டாக்குவதற்கு வேண்டிய நிலக்கரி தேவையைப் பற்றி அவர்கள் அரசுக்கோ அல்லது வாரியத்திற்கோ அறிவிக்காததால்தான் இன்றைக்கு அதன் உற்பத்தித் திறன் குறைந்ததா? புதிய யூனிட்டை நிறுவ இருப்பதாகச் சொல்கிறார்களே அது இரட்டிப்புச் செலவாகாதா? ஆகவே இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

அடுத்து எனக்கு நேரம் கிடைக்காத காரணத்தினால் இன்னொன்றையும் இப்போதே கேட்டு விடுகிறேன். அந்த மின் உற்பத்தி நிலையத்தில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. ஆகவே அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் அதனுடைய உற்பத்தித்திறன் 90 மெகாவாட். ஆனால் அது இப்போது உற்பத்தி செய்துகொண்டிருப்பது 45 முதல் 50 மெகாவாட்......(குறுக்கீடு).... அந்த உற்பத்திக் குறைவுக்குக் காரணம் அது பல ஆண்டுகளாக இயங்கி வருவதுதான். ஆகவே,





அதை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே உள்ள யூனிட்டுகளை மாற்றிவிட்டு ஒரு புதிய 60 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட நவீன யூனிட்டினை நிறுவ வேண்டும் என்பதுதான் திட்டம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 மெகாவாட் என்று சொல்வது சரியல்ல.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி போட்டு வெகுநாட்கள் ஆகிவிட்டன. அதற்கு இப்போதுதான் பதில் வருகின்றது. குறைந்தது 45 நாட்களுக்குள் வரவேண்டிய பதில் இப்போதுதான் வந்தது? ஆகையால்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்டால்தான் அனுமதிக்க முடியும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : ஆகவே உற்பத்தித் திறனைப் பற்றிய தவறான அறிக்கையை அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அரசுக்கும் வாரியத்திற்கும் கொடுக்கிறார்கள் என்பதை சட்டசபையிலேயே சொல்கிறேன். ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் அதற்கென்று தனியாக யாராவது ஒரு சி.ஐ.டி.யை அனுப்பி விசாரிக்க ஏற்பாடு செய்வார்களா? அதன் மூலம் உண்மையை அறிந்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியாக சி.ஐ.டி. அனுப்ப வேண்டியதில்லை. மாண்புமிகு திரு. நல்லதம்பி அவர்களே போதும். அங்கே இருக்கின்ற மொத்த யூனிட்டுகள் 4. அதிலே யூனிட் நம்பர் 1, 15 மெகாவாட்; யூனிட் நம்பர் 2, 15 மெகாவாட்; யூனிட் நம்பர் 3, 30 மெகாவாட் யூனிட்; நம்பர் 4, 30 மெகாவாட் ஆக மொத்தம் உற்பத்தித்திறன் 90 மெகாவாட். ஆனால் தற்போது அங்குள்ள உற்பத்தி விவரம் என்னவென்றால் யூனிட் நம்பர் 1, 12 மெகாவாட்; யூனிட் நம்பர் 2, 12 மெகாவாட்; யூனிட் நம்பர் 3, 24 மெகாவாட் யூனிட் நம்பர் 4, 26 மெகாவாட்; ஆக மொத்தம் 74 மெகாவாட் ஆகும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, இந்த பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் இயந்திரங்கள் பழுதடைந்து தேய்மானம் அடைந்திருப்பதால் மின்சார உற்பத்தியிலே குறைவு ஏற்பட்டிருக்கின்றது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்படிப்பட்ட மின் இயந்திரங்களைப் பொறுத்தவரையில் அவை கிட்டதட்ட 50 ஆண்டுகளுக்குக் குறையாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்ற நிலை மற்ற மாநிலங்களில் இருந்து வருகின்றது. ஆனால் இங்கே இப்படிக் குறைவான காலத்

திற்குள்ளாகவே இயந்திரங்கள் பழுதடைந்து விட்டதற்கான காரணம் என்ன என்பதையும் அதற்கான அதிகாரிகள் மூலமாக கண்டறிந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சாதாரணமாக இத்தகைய யூனிட்டுகளுடைய ஆயுட்காலம் 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு மேல் போவதில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த இயந்திரங்களின் திறன் 50 ஆண்டுகள் என்ற ஒரு கருத்தை வைத்திருப்பார்களேயானால் அதை மாற்றிக்கொள்வது நல்லது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த அனல் மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் ''ஹெவி வாட்டர்'' என்று சொல்லக்கூடிய ஒரு நீர் மிகவும் அவசியம் என்று சொல்லப்படுகிறதே, அது தூத்துக்குடியில் தான் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அது போதிய அளவில் இல்லை என்றும் சொல்லப்படுகிறதே, கல்பாக்கத்திலும் உற்பத்திக் குறைவு என்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்த நிலைகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எல்லா மின் உற்பத்தி நிலையங்களுக்கும் ஹெவி வாட்டர் தேவை. தூத்துக்குடியில் உற்பத்தி செய்யப்படுவது மட்டுமே நம்முடைய நாட்டிலே உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்குப் போதாது. ஆகவே இந்த ''ஹெவி வாட்டரை'' அமெரிக்காவிலேயிருந்து கொண்டு வர வேண்டும் என்று முன்பு மத்திய அரசு முயற்சி செய்தது. இப்போது ரஷ்யாவிலே இருந்து கொண்டுவருவதற்காக முயற்சி செய்யப்பட்டு அதுபற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்லிமென்டிலே இந்தக் கேள்வியைக் கேட்டால் இன்னும் பல விவரங்கள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்திற்கு நிலக்கரி சரியாக வந்து சேராததும், மின் உற்பத்திக் குறைவுக்கு ஒரு காரணம் என்று அறிகிறேன். நிலக்கரி கொண்டு வருவதற்கு ஏற்கனவே இருந்த கப்பல்தான் இருக்கிறது, புதிதாகக் கப்பல் வாங்கப்படவில்லை, அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. ஏனென்றால் வாடகைக்கு கப்பல் அமர்த்தப்படுகிறது. அதற்குச் செலவு அதிகமாகிறது. இந்தச் செலவுகளையெல்லாம் உற்பத்திச் செலவில் சேர்த்துக் கொள்வதால் உபயோகப் படுத்தும் யூனிட் செலவு அதிகமாகிறது. எனவே கரி கொண்டு வருவதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. கப்பலை வாங்கிக் கொண்டு வர வேண்டும் அல்லது இரயில் மூலம் கொண்டு வர வேண்டும். இரயில் மூலமாகக் கொண்டு வர வேண்டுமானால் போதுமான அளவுக்கு 'வாகன்'கள் கிடைப்பதில் தடை இருக்கிறது. கப்பல் வாங்க காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் இருக்கிற கப்பலையும் வாடகைக் கப்பலையும் பயன்படுத்துகிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தில் 90 மெகாவாட் உற்பத்தி செய்யும் பிரிவில் 40 அல்லது 45 மெகாவாட்தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது டெக்னிக்கல் டிஃபக்டிவ் காரணமாக ஏற்படுகிறதா அல்லது 'நான் டெக்னிகல்' காரணமா? எப்போதிருந்து இந்த நிலைமை இருக்கிறது? அது தொடர்பாக அந்தத் துறையினர் அரசுக்கு எப்போது செய்தி அனுப்பினார்கள்? அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? எப்போது அது சீர் செய்யப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. பொதுவாக இதை 'ட்யூ டு ஏஜ்' (due to age) என்பார்கள். நீண்டகால உபயோகத்தில் இருப்பதால் உற்பத்தி குறைகிறது. ஆகையால் பழைய யூனிட்டை மாற்றி வேறு ஒரு நல்ல யூனிட்டை அமைப்பதற்கு மின்சார வாரியத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதற்கான திட்டத்தைப் போட்டு இன்னும் அனுப்ப வில்லை. அவர்கள் அனுப்பியவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் அதிகாரிகளுடைய கவனக் குறைவால் பாய்லர் குழாய் வெடித்து, அதனால் 9 பேர் இறந்து விட்டார்கள். அந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்பதை அறிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிசீலனைக் குறிப்பு சர்க்காருக்கு அனுப்பப்பட்டு விட்டதா? அதில் யார் மீது தவறு இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. அந்த அறிக்கை வந்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, அந்தக் கேள்வியை ஒட்டியே நானும் கேட்க விரும்புகிறேன். இறந்து போன அந்த 9 பேர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்

பட்டதா? அல்லது அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா. இரண்டாவதாக, அதிகாரிகளுடைய கவனக் குறைவுதான் இதற்குக் காரணம் என்று அரசுக்கு வந்திருந்தால் ஏன் இதுவரை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி முற்றிலும் தனிக் கேள்வி ; விவரம் இல்லை.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

குறுகிய கால வினா எண் 4--திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பகுதியாக கலசபாக்கம் ஒன்றிய எல்லையை சேர்க்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில், உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இப்போது கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை எல்லைக்குள்ளும் சேர்க்கப்படவில்லை ; திருக்கோயிலூர் சர்க்கரை ஆலை வரம்புக்குள்ளும் சேர்க்கப்படவில்லை. கலசப்பாக்கத்தை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்கனவே அங்கே நிர்வாக போர்டு இருந்தபோது தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படி இல்லை என்றால் அதைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கலசப்பாக்கத்தைப் பொறுத்தமட்டில் எந்தச் சர்க்கரை ஆலைக்கும் அந்த இடம் ஒதுக்கப்படவில்லை. ஆனால் 1976-ல் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கேட்டுக் கொண்டதன் பேரில் கலசப்பாக்கம் அந்தப் பகுதியில் சேர்க்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



2 ஒழுங்குப் பிரச்சினை.

அரசியலமைப்புச் சட்டம் 45-வது திருத்தச் சட்டத்திற்கு பேரவை ஏற்பளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைதியாக ஒவ்வொருவராக பாயினட் ஆப் ஆர்டர் கேளுங்கள். முறையாக இருந்தால் அனுமதிக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு குண்டுராவ் அவர்கள் ' மண்ணில் பிறந்த மகனுக்குதான் வேலை' என்று அறிவித்திருக்கிறார். தமிழ் நாட்டில் இருந்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டா அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 13 (2)-ன் கீழ்

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலை ஜாதியினருக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை மேலும் பத்தாண்டுகள் நீடிக்க வழிவகை செய்யும் 45 வது அரசியல் சட்ட திருத்த மசோதாவுக்கு தமிழ்நாடு சட்டமன்றம் அங்கீகாரம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிய ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நீங்கள் இப்படித் தீர்மானம் கொண்டு வரக் கூடாது. இதனை எழுத்து மூலமாக முன்கூட்டியே என்னுடைய அறையிலே வந்து கொடுக்க வேண்டும். அதுதான் முறை. அவ்வாறு கொடுக்கப்பட்டு அது பின்னர் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாவிட்டால்தான் நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, இது முக்கியமான பிரச்சினை. அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் செய்வது பற்றி கான்ஸ்டிட்யூஷனிலே அமென்ட்மென்ட் கொண்டு வரப்பட்டிருக்கின்றது, இந்தக் கூட்டத்தொடர் முடிய இருக்கின்ற காரணத்தால் இந்த அமென்ட்மென்டை ரேட்டிபை செய்வது பற்றி அரசாங்கத் தரப்பிலே ஒரு விளக்கம் தரப்படுமா என்றுதான் கேட்கிறார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்கிறேன,

[1980 பிப்ரவரி 13

திரு, எஸ், ஜே, சாதிக் பாட்சா : இது முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கத்திலே ஒரு விளக்கம் கோருகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு விளக்கம் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கி, மனோகரன் : தலைவரவர்களே. 45-வது அரசியல் சட்டத் திருத்தத்தை ரேட்டிபை செய்வதற்குரிய அந்த முயற்சி அரசின் கொள்கை என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், இது குறித்த பார்லிமென்ட் ப்ரொசீடிங்ஸ் அனைத்தையும் அனுப்பி வைக்குமாறு இங்கிருந்து எழுதப்பட்டிருக்கின்றது, அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம், அந்த ப்ரொசீடிங்ஸ் வந்ததற்குப் பிறகு ரேட்டிபிகேஷன் செய்வதைப் பொறுத்தவரை இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த அரசு ஊப் படிப்பட்ட......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அரசு தரப்பிலே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. அமருங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த ரேட்டிபிகேஷனைப் பொறுத்த வரையில் ஆந்திர மாநிலத்திலே ரேட்டிபிகேஷன் முடிந்துவிட்டது. ஆகவே இந்த அரசாங்கம் அந்தக் கொள்கைக்கு விரோதமாக இல்லை என்றால் உடனடியாக ஒரு நாள் அசெம்பிளியைக் கூட்டி ரேட்டிபிகேஷன் செய்து தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டிலிருந்து அதனுடைய ப்ரோசீடிங்ஸ் வந்த பிறகு நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று அரசின் தரப்பிலே சொல்லப்பட்டு விட்டதே.

## 3. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நான் ஒன்று சொல்லி விடுகிறேன். கூட்டத்தொடரில் கடைசி நாள் அன்று நிகழ்ச்சி நான் ஒரு முறையை வைத்துக்கொண்டிருக்கிறேன். எல்லாம் முடிந்த பிறகு, நீங்கள் கொடுத்ததை அவையிலே



1980 பிப்ரவரி 13]

கொண்டுவரவில்லை என்றால் அந்த நேரத்தில் எழுந்து சொன்னால் அது குறிப்பிலே ஏறி அது நியாயமாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற காரணத்திற்காகத்தான் நான் அனுமதித்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் அதற்குரிய நேரம் இதுவல்ல.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மிக முக்கியமான பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறேன். அது தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகவே அது எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கெல்லொம் நான் அரை மணி நேரம் ஒதுக்குகிறேன். ஆகவே அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைக் கேட்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களும் இருக்கவேண்டும் என்று தாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். அவர்கள் இல்லாமல் இருந்தால் எங்களுக்கு என்ன பிரயோஜனம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை இருக்குமானால் அவர்களும் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

## 4. கவன ஈர்ப்புகள்.

### அ. நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதால் பக்கத்து ஏழு கிராம மக்கள் பாதிப்பு குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“ தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டுவதால் ஏழு கிராமங்களைக் காலி செய்யப்படும் நிலைமையும் அதனால் அப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து ”

திரு. பி. முசிறிப்புத்தன்: [அமைச்சரின் பேரவைச் செயலர்] எம்மாபுரம் வட்டார விவசாயிகள் நல உரிமைச் சங்கம் அஜிஸ் நகர ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் திரு. துரை முத்துசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள் பற்றி ஏற்கனவே அரசின் பரிசீலனைக்கு மனுக்கள் அளித்துள்ளனர் :—

(1) தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காக இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக கையகப்படுத்திய நிலங்களுக்குத் தகுந்த ஈட்டுத் தொகை அளிக்க வேண்டும் ;

(2) அஜிஸ் நகர செட்டில்மெண்ட் நிலங்கள் ஏற்கனவே அரசினருக்கு உரிய நிலங்களாகும். மேலும் மற்ற கிராமங்களிலும் அரசு நிலங்களை நிபந்தனைக்குட்பட்ட நிலப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்கள் விஷயத்திலும் பிற பட்டா நிலங்களுக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகையே அளிக்க வேண்டும்.

(3) நிலம் கையகப்படுத்துவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில உள்ள நபர்களுக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

(4) நிலம் கையகப்படுத்துவதால் வீடு நிலம் இழக்கும் எல்லா மக்களுக்கும் அம்மேரி காட்டுப் பகுதியில் குறைந்தது மூன்று ஏக்கர் நிலமும் வீடு கட்ட மனையும் மற்றும் பிற அனைத்து மறு வாழ்விற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் ;

(5) நில ஆர்ஜிதம் செய்யும்கால் நில ஆர்ஜித அலுவலர் வழங்கிய தொகையைக் காட்டிலும் அதிகமான ஈட்டுத் தொகை அரசு வழங்க வேண்டும் என்பதைப்பற்றிய வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட் ஏற்படுத்த வேண்டும் ;

(6) கம்மாபுரம், வடக்கு வெள்ளூர், வேப்பன்குறிச்சி ஊ மங்கலம், அஜிஸ் நகர், ஊத்தங்கல் குன்னங்குறிச்சி அம்மேரி மற்றும் நெய்வேலியில் உள்ள விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள் மற்றும் தேசீய வங்கிகள் மூலமாகப் பெற்ற கடன் தொகைகள், 1388-ஆம் பசலிக்கான நிலவரித் தொகை நிலவரி பாக்கிகள், பஞ்சாயத்து வரிகள் செலுத்துவதிலிருந்து வஜா செய்யப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் பற்றி தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளரும் வருவாய் வாரியமும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தாரும் அறிக்கைகள் அளித்துள்ளனர். அவ்வறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. மேற்படி விஷயங்களில் அரசு விரைவில் முடிவுகள் எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே இதுபோன்ற எத்தனை ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது ? அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. முசிறிப்புத்தன் : தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் தனியாக எழுதிக் கேட்டால் அதற்குரிய பதில் தரப்படும்.



திரு. துரை முத்துசாமி : இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதால் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதாக முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அதை நிறுத்தி வைக்க இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

பதில் இல்லை.

### ஆ. மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவவேண்டிய அவசியம் குறித்து.

திரு. சே. பன்னீர் சேதுராம் : தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவ வேண்டிய அவசியம் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, the Government have accepted the proposal of the High Court, Madras for the constitution of a Sub-Court at Periakulam and have considered the same as Part II Scheme for 1980 and 1981 and the approval of the Standing Finance Committee has been obtained. The above scheme will be implemented during the year 1980-81.

### இ. தஞ்சை மாவட்டம் திருவையார் வட்டம் மகாராஜபுரம் பகுதிகளில் பயிர் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. இளங்கோவன் திரு. அ. செல்லப்பா ஆகியோர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே மேட்டூர் அணை நீர்ப்பாசனத்திற்காக சென்ற ஆண்டு ஜூன் மாதம் 12 ம் தேதியன்று திறந்துவிடப்பட்டது. வருவாய் மற்றும் விவசாயத் துறைகளைக் கலந்து கொண்டு இவ்வாண்டு ஜனவரி இருபத்து எட்டாம் நாள் மூடப்பட்டது. எனினும் காவிரி 'டெல்டாவில்' ஆங்காங்கே உள்ள சில பகுதிகளில் அமைந்துள்ள பயிர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேட்டூர் அணைத் தண்ணீரையும் ஊற்றுநீர் மூலம் கிடைக்கும் நீர்வரத்தையும் பயன் படுத்தித் தேவையான அளவு நீரை வழங்கும்படி மேற்பார்வைப் பொறியாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. கோ. இளங்கோவன்: மேட்டூர் அணை மூடப்பட்ட தால் தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகள் பாதிக்கப் பட்டிருந்தாலும் நான் ,நான்கு ஊர்களைக் குறிப்பிட் டிருப்பதற்குக் காரணம் வெள்ளத்தால் அவை பாதிக்கப்பட்ட காரணத்தால் முன்பு நட்ட பயிர்களை அழித்து மீண்டும் நட்டிருக் கிறார்கள். ஆகவே அந்த ஊர்களுக்கு தனிப்பட்ட சலுகை காட்ட அரசு முன்வருமா? மகாமகத்திற்கு காவிரித் தண்ணீர் விடப்போவதாகச் சொல்கிறார்கள். அதைச் சற்று பயன்படுத்தி இந்த ஊர்கள் பயன் அடையக்கூடிய சூழ்நிலையை உருவாக்கு வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எப்போதும் மேட்டூர் அணையிலிருந்து ஜூலை மாதம்தான் தண்ணீர் திறந்து விடப்படு கிறது. ஆனால் கடந்த ஆண்டு முதன்முதலாக 15 ஆண்டு களுக்குப் பின்னால் ஜூன் மாதம் 12-ம்தேதி அன்று அணை திறந்து விடப்பட்டது. ஆகவேதான் ஜனவரி 28-ம் தேதி தண்ணீர் மூடப்பட்டது. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் எந்தப் பகுதியிலும் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக அரசுக்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. ஒரு சில இடங்களில் மட்டும் பாதிப்பு இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார் கள். அந்தப் பாதிப்பிற்காகத்தான் இன்று மேட்டூர் அணைத் தண்ணீரையும் ஊற்று நீர் மூலம் கிடைக்கக்கூடிய தண்ணீரையும் அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மேற்பார்வை பொறியாளருக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10-40]

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, இந்தப் பகுதியை போர்டு மெம்பர் வந்து பார்வையிட்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டிருக் கிறார். எனவே இதனை அரசு கவனத்தில் கொண்டு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே கண்டிப்பாக அரசு கவனிக்கும்.





## ஈ. குடகனாறு அணை மீண்டும் கட்டப்பெற வேண்டிய அவசியம் குறித்து.

திரு. சீ. மு. வாசன்: பேரவைத் தலைவர் அவர்களே கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது உடைந்த குடகனாறு அணை மீண்டும் கட்டப்பட வேண்டிய அவசியம் குறித்து".

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் அழகாபுரி கிராமத்தில் குடகனாற்றின் குறுக்கே ஓர் நீர்த்தேக்கம் அமைக்க அரசு ரூ. 212 லட்சம் மதிப்பீட்டிற்கு 1973-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தின் கீழ் 434 மி. கன அடி கொள்ளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதுடன் இருமருங்கிலும் இரு கால்வாய் கள் வெட்டத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைகள் அநேகமாக முடிக்கப்படும் நிலையில் இருந்தபோது 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இதற்கு முன்னர் கண்டிராத பெரிய அளவில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அணை உடைந்து போயிற்று.

2. குடகனாறு அணைக்கு 1977-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ள சேதத்தினை ஆராய்வதற்கும் இது சம்பந்த மாக எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகளை நிர்ணயிக்க வும் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தன் அறிக்கையை அரசுக்கு இரண்டு பாகங்களாக சமர்ப்பித்துள்ளது. அறிக்கை ஆய்வில் உள்ளது. இந்த அறிக்கையின் மீது அரசு ஒரு முடிவு எடுத்த பின்னர் குடகனாறு அணையை மீண்டும் கட்டுவது பற்றி தீர்மானிக்கப்படும்.

திரு. சீ.மு. வாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அணை உடைந்து கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆய்வில் இருக்கிறது என்று மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனடி யாக இந்த அணையைக் கட்டுகின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வரும்.

[1980 பிப்ரவரி 13

## உ. வட ஆற்காடு மாவட்டத்தில் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாமை குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் இல்லாமையால் பொதுமக்கள் அவதியுறுவது குறித்து".

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தலைமை மருத்துவ மனைக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 35. இதில் எல்லாப் பதவிகளிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர இம் மாவட்டத்திலுள்ள ஆம்பூர், ஆரணி, அரக்கோணம், செங்கம், செய்யாறு, குடியாத்தம், கலவை, போளூர், சோளிங்கர், தானிப்பாடி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வாணியம்பாடி, வாலாஜா, வந்தவாசி ஆகிய எல்லாத் தாலூக்கா தலைமை மருத்துவமனையிலும் மற்றைய எல்லா மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

2. இம் மாவட்டத்தில் மொத்தம் 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 99. இவற்றுள் தற்சமயம் 26 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

3. தமிழ்நாடு மருத்துவப்பணியில், காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பொதுப் பணித் தேர்வாணைக் குழு மொத்தம் 1,523 வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. இவர்களில் 884 பேர்கள் ஏற்கனவே தமிழ்நாடு மருத்துவப்பணியில் தற்காலிகமாக நியமனம் பெற்றிருந்தார்கள். மற்றைய 639 பேர்களையும் அவர்களின் தேர்வு அரசால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னால் தற்காலிகமாக நியமனம் செய்து 1979 ஆம் வருடம் மார்ச் மாதம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய 639 பேர்களில் 360 பேர்களே அவர்களுக்குப் பணி நியமன உத்தரவில் குறிப்பிட்ட நாளுக்குள் பணியில் சேர்ந்தனர். 150 பேர்களுக்கு பட்ட மேல் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் காரணத்தினால், அவர்கள் படிப்பினை முடிக்கும் வரையில், பணியில் சேர்வதற்காக காலத்தை நீட்டித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மற்றைய 129 பேர்கள் இது வரை பணியில் சேரவில்லை. அவர்களிடமிருந்து எத்தவிதமான தகவலும் பெறப்படவில்லை. அவர்கள் பணியில் அமர்த்தி



1980 பிப்ரவரி 13] [திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

வழங்கப்பட்ட உத்தரவு பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பணியில் சேர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் அவர்கள் பணியில் சேரவில்லை. ஆகவே நியமன உத்தரவை பெற்றதற்கு அத்தாட்சி உள்ளவர்களின் பெயர்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குவதற்காக அனுப்பி வைக்குமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் கோரப்பட்டுள்ளார். அவைகள் வந்து சேர்ந்தவுடன் அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மருத்துவர்கள் அவ்வப்போது பட்ட மேல்படிப்பு, பயிற்சி, விடுப்பு ஆகியவற்றில் சென்று விடுவதால் காலியிடங்கள் அடிக்கடி தோன்றுகின்றன. எனினும் மேலே கூறப்பட்ட 26 காலி இடங்களையும் மருத்துவர்களையும் தற்காலிகமாக நியமித்து நிரப்புவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மொத்தம் 26 பணியிடங்கள் காலியாக இருந்த போதிலும் மருத்துவர்களே இல்லாத ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எதுவும் இல்லை. ஆகவே இத் தீர்மானத்தின் மீது மேற்கொண்டு விவாதம் நடத்தத் தேவையில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை மருத்துவ மனை அனைத்திலும் மருத்துவ அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். கடந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட ஏ.டி.எம்.ஓ. மருத்துவ அதிகாரிகள் இல்லையென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இதிலே அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்களில் பல்வேறு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெண் மருத்துவ அதிகாரிகள் இல்லை. பிரசவம் பார்க்க வேண்டும் என்றால் தாய்மார்கள் சிரமப்படுகிறார்கள். இந்த நிலைமைகளைப் போக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது காலியாக இருக்கும் 26 இடங்களை நிரப்புவதற்கான ஆய்வினை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நம்முடைய ஆரணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட ஆரணியில் மருத்துவ அதிகாரி இல்லை என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைமை மருத்துவ மனையிலும் ஏனைய அரசாங்க மருத்துவ மனைகளிலும் மருத்துவர்கள் இல்லை என்ற குறை இல்லையென்று அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 90 மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடங்களில் 26 இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஊ; நீலகிரி மாவட்டத்தில், புயல், மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை, பாலங்களை செப்பனிடுவது குறித்து.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"நீலகிரி மாவட்டத்தில் கடந்த புயல் மழையினால் சேதமுற்ற சாலைகள், பாலங்கள் செப்பனிடப்பட வேண்டிய அவசியம் குறித்து".

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் 1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத்தின்கீழ் 869 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் உதகமண்டலம் குன்னூர் நகராட்சிப் பணிகளும் அடங்கும். அவற்றுள் 88 பணிகளைத் தவிர மற்ற பணிகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. இந்த 88 பணிகளில் 10 பெரிய பாலப் பணிகளும் அடங்கும். இந்த 10 பாலப் பணிகளில் ஒரு வேலை தவிர மற்ற பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள குன்னூர்—கோத்தகிரி சாலையிலுள்ள ஒரு பெரிய பால வேலை இரயில்வே இலாகாவின் ஒப்புதலை எதிர் நோக்கியுள்ளது.

1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தில் 183 பணிகள் நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலம் மற்றும் குன்னூர் நகராட்சிப் பணிகள் உட்பட, எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லா தற்காலிக நிவாரணப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. எவ்விடத்திலும் போக்குவரத்திற்குத் தடையில்லை. கூடலூர் வட்டாரத்திலுள்ள இரண்டு பெரிய பாலங்கள் தவிர மற்ற எல்லா பணிகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளன. இவை தவிர நிரந்தர பணிகள் மற்றும் தடுப்பு நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. உச்சி : இங்கு ஆரம்பிக்கப்பட்ட பால வேலைகள் துரிதமாக எடுக்கப்பட்டு முடிக்கப்படவில்லை. அதோடு 1978 ஆம் ஆண்டு புயலால் சேதமுற்ற பாலங்களைச் சீரமைக்கும்



1980 பிப்ரவரி 13] [திரு. கே. உச்சி]

வேலைகள் ஆரம்பிக்கப்படவே இல்லை. கூடலூர் பகுதியில் ஒவலில் பெரிய பாலம் ஒன்று ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. உதகை எப்பநாடு சாலை, கூக்கல் சாலை, உதகை எடக்காடூர் சாலையில் இரண்டு பால வேலைகள் ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்றன. சாலைகள் அத்தனையும் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அவற்றுக்குத் தார் போட கவனம் செலுத்துவதோடு கூட பல வேலைகளையும் உடனடியாக எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் கொடுத்த பதிலிலேயே பத்துப் பாலப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டேன். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக நடைபெற்ற சம்பவங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பெரும் வெள்ளத்தைத் தாங்க முடியாது சிறிய பெரிய பாலங்கள் இருந்த இடம் தெரியாமல் அடித்துச் செல்லப்பட்டன. பெரிய பாறைகளாலும் மண் சரிவுகளாலும் சாலைகள் அடைக்கப்பட்டன. பெரிய மரங்கள் நிலைகுலைந்து வேரோடு சாய்ந்தன. உறுப்பினர் அவர்களுக்கு இதெல்லாம் தெரியும். துண்டிக்கப்பட்ட போக்குவரத்தை இரவு பகல் எனப் பாராது மழையையும் குளிரையும் பொருட்படுத்தாது நெடுஞ்சாலைத் துறையினர், பாறைகளையும் மண் சரிவுகளையும் மரங்களையும் அப்புறப்படுத்தி குறுகிய காலத்தில் சீர் செய்தனர். இப் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டுமென்ற காரணத்தால் தனித் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகையில் ஆண்டிற்கு ஐந்து மாதத்திற்கு மேலும், நாளொன்றுக்கு ஐந்து மணிக்கு மேலும் பணியாற்றுவது மிகக் கடினம், செய்யவும் இயலாது. தவிர மிகவும் அதிகமான வெள்ளச் சேதப் பணிகளை ஒரே சமயத்தில் எடுத்துச் செய்ய போதிய ஒப்பந்தக்காரர்களும் ஆட்களும் இல்லை. வேலை செய்ய ஆட்கள் மற்ற மாவட்டங்களிலிருந்து வர வேண்டியிருப்பதால் சற்று தாமதம் ஏற்படலாம் எப்படி இருந்தாலும் அந்த வேலைகள் எல்லாம், எனக்குக் கிடைத்த தகவலின்படி, 88 பணிகளில் 48 பணிகள் இந்த மாதத்தில் முடிக்க வேண்டும். எஞ்சிய 40 பணிகளும் 30—6—1980-க்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைகளின் ராணி என்று எல்லாம் வீணாகப் புகழப்படுகிறதே தவிர அங்கே பணிகள் தாமதமாகச் செய்யப்படுகின்றன, ஆகவே அரசு அக்கறை காட்டி வருகிற சீசனுக்குள்ளாக அந்தப் பணிகளை முடிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே நல்ல முறையிலே அந்தப் பணிகள் நடக்க வேண்டுமென்ற முறையிலேதான் உதகமண்டலத்தில் தனிக் கோட்டப் பொறியாளர்களும் உதவிக் கோட்டப் பொறியாளர்களும், உதவிப் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நல்ல முறையிலே அந்தப் பணிகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

### நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் —விவாதம் (தொடர்ச்சி.)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே சில சொல்ல நான் முன்வருகிறேன். வழக்கமாக இந்த அவையிலே ஆளுநர் உரை மீது நடக்கக்கூடிய விவாதங்கள் பூராவும் தமிழகத்தினுடைய வளர்ச்சி, தமிழகத்திலே நடக்க வேண்டிய ஏனைய பல காரியங்கள், பல விவரங்கள்பற்றித்தான் அதிகமாக இருக்கும், ஆனால் அதற்கு நேர்மாறாக இப்போது விவாதம் வேறு ஒரு விஷயத்திற்குப் போய், பாராளுமன்றத் தேர்தலையொட்டிய பல விவரங்களுக்குச் சென்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலே வேறு ஒரு கட்சி அதிகமான இடங்களைப் பிடித்துவிட்டதன்



காரணமாக நீங்களும் மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும், இந்த அரசு விலக வேண்டும் இல்லையென்றால் இந்த அரசின் மீது நடவடிக்கையை எடுப்பதற்கோ அல்லது இந்த அரசைக் கலைப்பதற்கோ வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது போன்ற காரியங்கள் பற்றி வெளியிலே மட்டுமல்ல, இங்கேயும் பிரமாதமாகப் பேசப்பட்டது. நடந்து முடிந்த தேர்தலிலே மத்தியிலே இந்திரா காங்கிரஸ் மெஜாரிட்டியோடு ஆட்சிக்கு வந்திருக்கிறது. இருந்தாலும் கூட அந்த அமைச்சரவை முழுமையாக அமைக்கப்படவில்லை. என்ன என்ன முரண்பாடுகளோ; நான் அதற்கு உள்ளே செல்ல விரும்பவில்லை.

அது மட்டுமல்ல, அஸ்ஸாம் மாநிலத்திலே இன்னும் சில இடங்களிலே பாராளுமன்றத் தேர்தலே நடத்தப்படவில்லை. அஸ்ஸாம், மேகாலயா, அருணாசலப் பிரதேசம் இவைகள் மட்டுமல்ல, நாட்டினுடைய வடகிழக்குப் பகுதியிலே பதட்டமான நிலைமை இருந்து வருகிறது. நேபாளம், பங்களாதேஷ் ஆட்கள் வந்து விட்டார்கள், அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற கிளர்ச்சியோடு சேர்ந்து, ரொம்ப நாட்களாக இங்கே இருக்கக் கூடிய ஆட்களையும் தாக்கக்கூடிய திசை திருப்பக்கூடிய இயக்கம் நடந்து ஒரு மோசமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் தூண்டுதல் செய்து கொண்டு சிக்கலான பிரச்சினைகளை எழுப்பக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், பாகிஸ்தான் அதிகமான அளவில் மீண்டும் பலத்தை உயர்த்துவதன் மூலம், இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆபத்தான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆப்கானிஸ்தான் பிரச்னையில் பக்கத்து நாடுகளான பாகிஸ்தான், சீனா, அதையொட்டி அமெரிக்காவும் சேர்ந்து கொள்ளும் பேராபத்தும் உண்டாகி, நாட்டின் சுதந்திரத்திற்கே, ஆபத்து ஏற்படக் கூடிய பதட்டமான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, இதையெல்லாம் கவனிப்பதை விட்டுவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பல பிரச்னைகள், வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார நெருக்கடி, இந்த நாட்டிலே இருக்கின்ற விலை ஏற்றம் ஆகிய இவைகளை எல்லாம் எப்படித் தீர்ப்பது, என்ன செய்வது என்பதில் கவனம் செலுத்தாமல், தங்களின் ஒரே கட்சியின் ஆட்சியை நாடு பூராவும் கொண்டுவர வேண்டும் என்பதில் ஈடுபட்டிருக்கின்ற மத்திய அரசின் போக்கும், அது இன்றைக்கு இறங்கி இருக்கும் நடவடிக்கைகளையும் பார்க்கின்ற பொழுது அவையிலே இருக்கின்ற எதிர்க் கட்சியிலே உள்ள காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றில் ஏற்கனவே உள்ள சிலருக்கு வாஸ்தவத்திலேயே உடன்பாடு இல்லை என்று தெரிகிறது. நான் பல பேர்களிடத்திலே பேசிக் கொண்டு இருந்தேன், அவர்கள் சொல்வதிலிருந்து இப்படித் தெரிகிறது. மத்திய அரசானது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சர்க்காரை சீர்

குலைப்பதும் சர்க்காரை நடத்தவிடாமல் சீர் குலைவு ஏற்படுத்துவதும், வேறு மாதிரியான முயற்சிகளிலே ஈடுபடுவதும் சரியல்ல. இப்படியே நடவடிக்கைகள் சென்று கொண்டிருந்தால் எங்கே போய் முடியும் ? மாநில சர்க்கார்களைக் கலைத்துவிட்டு, கடைசியாக மத்திய சர்க்காரிலே நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட முடியுமா ? மீண்டும் இப்படியே சென்று கொண்டு இருந்தால் அது எங்கே போய் முடியும் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், உங்களுக் கெல்லாம் தெரியும், 1967 ஆம் ஆண்டிலே 8 மாநிலங்களிலே காங்கிரஸ் தோற்றது, மத்தியிலே காங்கிரஸ் வந்தது. தமிழகம் உள்பட எட்டு மாநிலங்களிலே காங்கிரஸ் தோற்றது. அப்பொழுது அந்த மாநிலங்களிலேயிருந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இயக்கம் நடத்தினார்களா என்றால் கிடையாது. எனவே, மாநிலத்திலே ஒரு கட்சிக்கும், மத்தியிலே ஒரு கட்சிக்கும் என்று ஓட்டுப் போடக் கூடாது என்று சட்டம் இருக்கிறதா? அப்படிச் சட்டம் இருக்கிறது என்றால் சரி. இல்லை என்றால் அரசியல் சட்டத்தையாவது திருத்துங்கள், மத்தியிலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அதே கட்சிதான் மாநிலங்களிலும் வர வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே திருத்துங்கள், அப்பொழுது கவலை இல்லை. அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்குச் சில அதிகாரங்கள், உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போல மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அமைப்பையே சீர் குலைக்கும் வகையில், ஜனநாயகத்திற்கு விரோதமாகத் தேவையற்ற இடைஞ்சல்களைச் செய்ய முற்படுவது சரியல்ல. எமர்ஜென்சி காலத்தில் செய்தது தப்பு, இப்பொழுது அந்த எமர்ஜென்சி திட்டங்கள் வராது, மாநிலங்களோடு சீராக உறவு வைக்கப்பட்டிருக்கிறது, மதித்து நடக்கிறது என்று சொல்லும் இந்திரா காந்தி ஆட்சியிலே நம்முடைய வங்காளத்திற்கு ஒரு அமைச்சர் சௌத்திரி போகிறார், போய், இந்தச் சர்க்காரைக் கடலிலே தூக்கி எறிவேன் என்று சொல்லுகிறார். அதைப்போல இங்கே வந்து ஏதாவது சொல்கிறார்கள். அன்றைக்கு நண்பர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். எனவே, இங்கே வருகின்ற அமைச்சர்கள் என்ன பேச வேண்டுமோ அதை விட்டுவிட்டுப் பேசுகிறார்கள். ஒரு கட்சியின் தலைவராக வந்து பேசுவது என்றால் பேசட்டும், ஆனால் அமைச்சராக இருப்பவர்கள், மத்திய அமைச்சராக இருப்பவர் இங்கே மாநில அரசாங்கங்களின் உரிமைக்கு மேலாகப் பேசுவது என்றால் என்ன அர்த்தம் ? உதாரணமாக, இன்றைக்கு மாநிலத்தின் முதலமைச்சர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம், ஊராட்சி ஒன்றியத்தின் சேர்மன்—பெருந்தலைவர் இன்னொரு கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம். இவர் அங்கே செல்லும்பொழுது அவரை எதிர்த்துப் பேசுகிறார் என்றால் என்ன அர்த்தம் ?

உத்தரப் பிரதேசத்திலே அல்லது வேறு பல மாநிலங்களிலே இப்படி நடக்கிறது. நம்முடைய ஒரு கட்சியின் பிரதமர் போகிறார் என்றால் அங்கேயுள்ள அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்





கூட விரோதமாகக் கோஷம் எழுப்பி வெளியேறு என்று ஆர்ப்பாட்டம் நடக்கும் நிலைமைகள் இருக்கின்றன, இது எங்கே போய் முடியும் ? இதைப்பற்றி ஜனநாயகம் என்று விரும்புகின்றவர்கள், இந்திய ஒருமைப்பாடு வேண்டுமென்று நினைப்பவர்கள், சிந்தனை செய்து பார்க்க வேண்டும்,

அதே மாதிரியாக, இன்றைக்கு நம்முடைய பாராளுமன்றத்தில் ஏற்பட்ட வெற்றி எல்லாயிடங்களிலும் ஒரே மாதிரியாக ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது, மொத்தத்தில் கிடைத்த வாக்குகளில் 42·67 சதவீதம் தான் இன்றைக்கு ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் எதிர்த்து வாக்களித்திருப்பவர்கள் அதிகம். அதாவது 57 சதவீதம் பேர். வேறு மாதிரி சோஷலிச நாடுகளில், சோவியத் நாட்டில் வாக்களிக்கும் மக்களும் 50 சதவீதம் வாக்களித்தால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள். ஆனால் இங்கு அப்படி அல்ல. எனவே, இங்கே எதிர்த்து வாக்களித்தவர்கள், அமைந்த ஆட்சிக்கு மாறாகக் கருத்துள்ளவர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகம் பேர். அதாவது 57 சதவீதம் பேர் அப்படி இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை மறந்து பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

[பிற்பகல் 11-00]

அது மட்டுமல்ல, ஒரு இடதுசாரி ஜனநாயக அணி பலமாக இருக்கக்கூடிய இடங்களில் இந்த வெற்றியை அவர்கள் பெற முடியவில்லை. இன்றைக்கு வங்காளத்திலே, திருபுராவிலே, கேரளாவிலே இடதுசாரி அணி வெற்றி பெற்றதற்குப் பின்னால் கூட, நம்முடைய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அந்த மாநிலங்களுக்குச் சென்று, அம்மையார் பெற்ற வெற்றி பலத்தோடு அங்கு சென்றால், மாநிலங்களிலும் தாம் வெற்றி பெற்றுவிடலாம் என்று எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, இரண்டு நாள் போய் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்தார். ஆனால், மக்கள் அந்த அம்மையாருக்கு வாக்களிக்கவில்லை. அதைவிட முற்போக்கான தீவிரமான திட்டங்களை அந்த அரசு, அந்த அணி நிறைவேற்றும் என்ற ஒரு நிலைமையோடு அங்குள்ள மக்கள் இந்திரா காந்தியினுடைய அணியை எதிர்த்து வாக்களித்து இடதுசாரி ஜனநாயக அணியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவேதான் நாடு பூராவிலும் நிலைமைகள் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவேதான் நான் சொல்கிறேன்.

மாநிலத்திலே ஒரு கட்சிக்கும் மத்தியிலே யாருக்காவதும் ஓட்டு போடக் கூடாது என்பது என்ன நியாயம் ? இந்தியா பூராவிலும் இப்படி ஒரு அணி, மாற்றான அணி, மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு அணி உருவாகாததன் காரணத்தால் தான் இன்றைக்கு இந்த வெற்றி இந்திரா அணிக்குக்கிடைத்து

இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று
நினைக்கிறேன். வெளியே சொல்ல மாட்டார்கள். மனதிற்குள்
ஒப்புக் கொள்வார்க என்று நினைக்கிறேன். ஆகவேதான்
அந்த நிலையிலே பார்க்கும்போது, இன்றையதினம் நாட்டிலே
பல பிரச்னைகள இருக்கின்றன. விலைவாசி ஏற்றம், வேலை
இல்லாத் திண்டாட்டம், விவசாயிகள் நெருக்கடி, இவற்றை
எல்லாம் தீர்ப்பதற்குப் பதிலாக, என்ன என்று கவனிப்பதற்குப்
பதிலாக அங்கங்கே போய், யார், யார் எந்தக் கட்சியில் இருக்
கிறார்கள், எப்படி இழுக்கலாம், எப்படி அரசாங்கத்தை மாற்ற
லாம் என்பதிலே ஈடுபடுகிறார்கள். நம்முடைய பிரதமருடைய
தூதர் யஷ்பால் கப்பூர் கூட, எம்.எல்.ஏ—க்கள் ரொம்ப மலிவான
சரக்கு, குறைந்த விலையிலே கூட வாங்கிவிடலாம் என்று
பேசக் கூடிய நிலைமை நம்முடைய நாட்டில், ஜனநாயகத்தில்
ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.
ஆகவேதான், இன்றைக்கு மக்கள் பூராவும் ஒரே மாதிரி ஒட்டு
போடுவார்கள் என்று சொல்ல முடியாது. 1977-லே மக்கள்
ஜனதாவுக்கு வாக்களித்தார்கள். 1980-லே இந்திரா காந்திக்கு
வாக்களித்துள்ளார்கள். ஆகவே, திரும்பவும் மக்கள் இதே
மாதிரிதான் வாக்களிப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

தேர்தல் வரப் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.
உத்தரப் பிரதேசத்திலே, பீகாரிலே இந்த அம்மையார் வாங்கிய
வாக்குகள் 35 சதவிதம். நாளைய தினம் தேர்தல் வந்தால்
அந்த இடங்களிலே இந்திரா காங்கிரஸ் அப்பொழுது தோற்று
விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். வேறு கட்சிகள்
ஜெயித்து விட்டன என்று சொன்னால், அந்த மாநிலத்திலே
உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ராஜிநாமாச்செய்
வார்களா? அப்படியானால் ஒரு ஏற்பாட்டை செய்துகொண்டு
தேர்தலிலே இறங்குங்கள். ஆகவேதான் இதை எல்லாம் நான்
ஏன் சொல்கிறேன் என்றால், இந்த மாதிரி ஒரு நிலைமையை
மக்களுடைய உரிமைகளைப்பறிக்கக்கூடிய, மாநிலங்களுடைய
உரிமைகளைப் பறிக்கக்கூடிய, மாநிலத்திலே மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்டு உட்கார்ந்திருக்கிற அரசை சீர்குலைக்கிற நட
வடிக்கைகளை ஊக்கப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான்.
அது நாளை மத்திய அரசிற்கே ஒரு வினையாக ஏற்படும்.
அதையும் கலைக்கக்கூடிய, சீர்குலைக்கக்கூடிய பெரிய இயக்கங்
கள் நாட்டிலே வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவே
தான் மக்கள் எல்லாம் சரியாகத் தங்களுடைய கடமைகளைக்
காலாகாலத்திலே செய்வதிலே எந்தவிதத்திலும் பின் வாங்க
மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அதே மாதிரி, இன்று நாட்டைச் சுற்றி ஏற்பட்டுள்ள பதட்ட
நிலை மட்டுமல்ல, இன்று எல்லாப்பிரச்சனைகளுக்கும் தீர்வு
காண்பதற்கு இந்த மாநில மத்திய உறவுகள் சீராக இருக்க
வேண்டும். அதை விட்டுவிட்டு, மாநில மத்திய உறவுகளைச்





சீர்குலைக்கின்ற நடவடிக்கைகளை இன்றைக்கு மத்தியில் ஆளு
கின்ற கட்சி எடுத்துக்கொண்டு வருகிற ஒரு நிலையை அத்தனை
பேரும் கடுமையாக எதிர்த்து நிற்பதிலே முன்னணியிலே நிற்க
வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால்,
நம்முடைய அரசு கூட அதிலே தயக்கம் காட்டுவதாக நான்
நினைக்கிறேன். தைரியமாக இருக்க வேண்டும், அதைப்பற்றி
கவலைப்பட வேண்டியதே கிடையாது. சீர்குலைக்க யார்
நடவடிக்கை எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பதிலே, அதற்கு
வாசல் விடுவதிலே, நாம் தைரியமாக நிற்க வேண்டும். தமிழக
மக்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அதற்கு ஆதரவாக
இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதே மாதிரியாக, இன்றைக்கு இவ்வளவு பெரிய வெற்றி
பெற்று விட்டதாகச் சொல்கிற இந்திரா காங்கிரஸ், இடதுசாரி
ஜனநாயக அணி இருக்கக்கூடிய இடங்களிலே ஏன் வெற்றி பெற
முடியவில்லை என்பதை நாம் பார்க்க வேண்டும். இடதுசாரி
அணியின் அந்த வெற்றி நாடு பூராவும் உள்ள உழைக்கக்கூடிய
மக்களுக்கு நல்ல ஒரு நம்பிக்கையையும் அவர்களுக்கு எதிர்
காலத்திலே இது ஒரு பாதை என்று சொல்லக்கூடிய நிலைமையை
யும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன்.

அதே மாதிரி, இன்றைக்கு மக்களுடைய பிரச்னைகளைத்
தீர்ப்பதிலே நாம் பிரதானமாகக்கவனம் செலுத்த வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த மாதிரி
மத்திய சர்க்காருடைய நிர்ப்பந்தத்திற்கோ அல்லது மத்திய
சர்க்கார் செய்கிற வேலைகளுக்கோ நாம் தைரியமாக அவர்கள்
செய்யக்கூடிய அந்தச்சீர்குலைவு முயற்சிகளை எதிர்த்து நிற்
பதிலே அரசைப் பொறுத்தவரையில் தீவிரமாக இருக்க வேண்டும்.
அதே மாதிரியாக மக்களுடைய பிரச்னைகளிலே, நேற்றும்
முன் தினமும் பல மசோதாக்கள் கொண்டு வரப்பட்டு, சட்டங்கள்
ஆக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் முன்னாலே, காலா
காலத்திலே செய்திருக்க வேண்டிய விஷயங்கள் என்பது உங்
களுக்குத் தெரியும். நாட்டிலே இன்றைக்கு உள்ள பிரச்னைகள்,
தொழிலாளி பிரச்னையானாலும் சரி, ஆசிரியர்கள் பிரச்னை
யானாலும் சரி, விவசாயிகள், மாணவர்கள் பிரச்னையானாலும்
சரி, எத்தனையோ பிரச்னைகள் இருக்கலாம். மக்களுடைய
கோரிக்கைகளை உடனடியாகக் காது கொடுத்து கேட்டு, தீர்க்கக்
கூடிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்க வேண்டும்.
இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டங்களைக் கொஞ்
சம் முன்பே கொண்டு வந்திருந்தால், குறிப்பாக, கடன் சம்
பந்தப்பட்ட விஷயங்களிலே சட்டங்களைக் காலா காலங்களில்
கொண்டு வந்திருந்தால் கொஞ்சம் பிரயோஜனமாக இருந்து
இருக்கும். இப்பொழுதுதாவது, சட்டம் கொண்டு வந்ததற்கு
வருவாய்த்துறை அமைச்சரைப் பாராட்டுகிறேன். அந்தச்
சட்டத்தைச் சீராகச் செயல்படுத்தினால் கூட, விவசாயிகளுடைய
கடன் சுமை, விவசாயிகள் தனியாரிடத்திலே பட்டுள்ள கடன்

சுமை தீரும். ஆனால், அதே நேரத்திலே கூட்டுறவுக் கடன்கள் தான் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கடன்கள் ஏன் வந்தன ? எப்படி வந்தன என்பதை எல்லாம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் மொத்தத்திலே இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியில் மூன்றில் ஒரு பகுதி கிணற்றுப் பாசனத்தில் தான் நடைபெறுகின்றது. அதனால் உற்பத்திச் செலவு அதிகமாகி விவசாயிகள் கடன் பட்டுள்ளார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 12 இலட்சம் கிணறுகள் இருந்து, பம்பு செட்டுகள் வைத்து நீர் இறைப்பதன் காரணமாகத் தான் உற்பத்தி பெருகி யிருக்கிறது அதனால்தான் இந்த அளவுக்கு தன்—னிறைவு பெற்றிருக்கிறோம். 12 இலட்சம் கிணறுகள் என்றால், ஒரு கிணற்றுக்கு சுமார் 15,000 அல்லது 12,000 என்று சொன்னாலும் கூட, 2,000 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறார்கள். இது இப்போது ஏற்பட்டது இல்லை. 1952-லிருந்து துவங்கி, இதற்காக விவசாயிகளுக்குக்கடன் கொடுத்து, கொடுத்து விவசாயிகள் இந்த மாதிரியான காரியங்களைச் செய்தார்கள். அந்தக் கடன்களை அவர்கள் பெற்று, அவைகளைப் பராமரித்து இந்த நீர்பாசன வசதிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்படி அன்றிலிருந்து கடன் வாங்கியதன் காரணமாக, அவர்களுடைய கடன் வளர்ந்து, அதிகமாகிக் கொண்டே வந்திருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீர்ப்பாசனத் திற்காக அரசாங்கத்தினுடைய கால்வாய்கள் மூலமாகவோ அல்லது அணைக்கட்டுகள் மூலமாகவோ தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்தால், ஏக்கருக்கு 50, 60 ரூபாய் பில் வருகிறது. கிணற்றுப் பசைனத்திற்காகச் செலவு என்ன வருகிறது என்றால் ஒரு ஏக்கருக்கு 1,000 ரூபாய் என்று வருகிறது கிணறு வெட்டுவதற்கு 15,000 ரூபாய், 20,000 ரூபாய் ஆகிறது. அதற்கு பம்பு செட்டுகள் வைப்பதற்கு, வாங்கின கடனுக்கு வட்டி மட்டும் ரூ. 1,500. அதற்கு மின்சாரக் கட்டணம் ரூ. 1,500. மொத்தம் ஒரு ஏக்கருக்கு வருடத்திற்கு ரூ. 3,000 செலவு செய்கிறார்கள். 3 ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமென்றால், இன்னும் அதிகம் செலவாகிறது. அதற்காக, அதிகம் கடன் வாங்கி, அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் இருப்பதற்கு அதுதான் கராணம். ஆகவே, நீர்பாசன வசதிக்காக அவர்கள் கிணற்றுப் பாசனத்திற்கு பம்பு செட்டுகள் வைத்து அதிகம் செலவழிக்க வேண்டியிருக் கிறது. அதனால் கடன் சுமை தாங்க முடியாமல், இன் றைக்கு போராட்டமாக தமிழகத்தில் வெடித்து, அது இன்றைக்கு அதிகமாகிக் கொண்டு வந்திருக்கின்றது.

அது மட்டுமல்ல; விளைபொருள்களுக்கு சரியான விலை கொடுக்கப்படவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரை யிலே, மத்திய அரசு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற காரியங்கள் செய்யப் போவதாகச் சொல்லப



படவில்லை. இன்றைக்கு மகாராஷ்டிர மாநிலத்தைப் பார்த்தால் பருத்தியை வாங்குவதற்காக கார்ப்பரேஷன் ஆரம்பித்திருக்கி-றார்கள். அந்தக் கார்ப்பரேஷனே பருத்தியை வாங்குகிறார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்திலும் நெல்லையும், வேறு பொருள்களையும் அம்மாதிரி மொத்தமாக நல்ல விலை-யைக் கொடுத்து வாங்கி, அதைச் சரியாக விநியோ கிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம். அதேமாதிரி செய்வதாக இன்றைக்கு பதிலாகச் சொல்லப் படுகின்ற-தே தவிர, இன்றைக்கு மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யக்கூடிய நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த நேரத்திலே அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மத்திய சர்க்கார் முன்பு பதவி ஏற்ற காலத்திலே, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது வீட்டுக்கு ஒருவருக்கு சீட்டு கொடுக்கின்ற நிலைமை ஏற்பட இருக்கிறது. அதாவது இப்போது மத்திய அரசு பதவியேற்றவுடன், 10 சதவீதம் நீக்கப் போகிறோம் என்று பத்திரிக்கை செய்தி வந்தது. இந்த ஆட்சி வந்த பிறகு, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதற்குப் பதிலாக வீட்டுக்கு ஒருவருக்கு சீட்டு கொடுக்கின்ற நிலைமை மத்திய அரசு அலுவலகங்களிலே, இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. இதுதான் முதலாவதாக இந்திரா காந்தி ஆட்சி தொழிலாளர் களுக்குக் கொடுக்கின்ற முதற் பரிசு என்று நினைக்கிறேன்.

நம்முடைய இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தான் செய்ய வேண்டுமென்று இல்லாமல், நம்முடைய மாநில அதிகாரத்திற்கு உட்பட்ட சில காரியங் களைச் செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். கேரளா விலும், மேற்கு வங்காளத்திலும் இப்படி செய்திருக்கிறார்கள். வேலை இல்லாமல் இருப்பவர்கள், வேலை தேடிதரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்திருப்பவர்களுக்கு மாதம் 50 ரூபாய் உதவித் தொகை என்று கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திலே, கஷ்டப்பட்டு தங்கள் குழந்தைகளை படிக்கவைத்து, வயதுக்கு வந்த பிறகு வேலைக்குப் போவார் கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே மாதம் 50 ரூபாய் கொடுக் கின்ற இந்த ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்யலாம். இதிலே ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் ? முதலமைச்சர் அவர்கள் அதை அறிவிக்க வேண்டும். காரணம், மற்ற மாநிலங்களிலே இப்படிச் செய்திருக்கிறார்கள்.

அதே மாதிரியாக, இன்றைக்கு நம்முடைய தொழிலாளர் களுடைய பிரச்சினைகளைப் பார்த்தாலும், நீண்ட நாட்களாகத் தொடர்ந்து வேலை நீக்கம் செய்கின்ற போக்குதான் காணப்படுகின்றது. அதனால் அவர்களை

[திரு. சோ. அழகர்சாமி] [1980 பிப்ரவரி 13

நம்பி வாழ்கின்ற குடும்பம் தெருவிலே திண்டாடி வாழும்
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல பிரச்சினைகள் கோர்ட்
டிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, உடனடியாக அவைகள்
தீர்க்கப்படாமல் நாட்கள் கடத்தப்படுகின்றன. வருடங்கள்
ஆகின்றன. இப்படி இருந்தால், தொழிலாளர்கள் பிரச்சினை
எப்படி சீக்கிரம் தீரும்? எப்படி அவர்கள் குடும்பத்தை
நடத்த முடியும் என்பதை சிந்தித்து உடனடியாக அந்தப்
பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

[முற்பகல் 11-10]

அதேமாதிரி பல அறிவிப்புகளை எல்லாம் செய்தார்கள்.
இன்றைக்குப் போலீஸ்காரர்கள் சங்கம் வைப்பதில் தவறு
இல்லை. சங்கம் வைப்பது சம்பந்தமாக நடந்த பேராட்டத்
தில் பலர் கைதானார்கள். இறுதியாக 700 பேர் ஜெயிலிலே
இருந்தார்கள். அவர்களில் 600 பேர்களை விடுதலை செய்து
அறிவித்திருக்கிறார்கள். மீதமுள்ள 100 பேர் இன்னும்
உள்ளே இருக்கிறார்கள். 600 பேரை மட்டும் விட்டுவிட்டு,
100 பேர்களை உள்ளே வைப்பதில் அர்த்தம் இல்லை. இதிலே
ஒரு தாராளப் போக்கைக் கையாண்டு எல்லோரையும் விடுதலை
செய்து, அவர்கள் அத்தனை பேர்களையும் மீண்டும் வேலை
யில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அதேமாதிரி எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும்
என்று சொன்னார்கள். விவசாயிகள் சம்பந்தப்பட்ட போராட்
டத்தில் நாராயணசாமி உட்பட அத்தனை பேர்களையும்
விடுதலை செய்ய வேண்டும். எல்லா வழக்குகளையும் வாபஸ்
பெற்று, பிரச்சினைக்குத் தீர்வுகாண உடனடியாக சுமுகமான
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் போராட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டது
அல்ல. அது எப்போதிருந்து இருக்கிறது என்பதை சிந்திக்க
வேண்டும். 1970—ல் பெருமாள் நல்லூரில் துப்பாக்கிப் பிரயோ
கம் நடைபெற்று, அதிலே இரண்டு பேர் இறந்து போனார்கள்.
அது மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்காக நடத்தப்
பட்ட போராட்டம். அதற்குப் பின்னாலே 1972-ல் நடை
பெற்ற போராட்டத்தில் 17 பேர் இறந்து போனார்கள்.
பின்னால் 1978ல் நடைபெற்றிருக்கிறது. இப்போ விவசாயிகள்
போராட்டம் தொடர்ந்து ஏற்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்ட காலத்திலிருந்தே அவர்
களுக்குக் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைக்
களைய இதுவரையில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?
அவர்களுடைய விளைபொருளுக்கு நியாய விலை கிடைக்க
உத்தரவாதம் வேண்டுமென்று கேட்டார்கள். உத்தரவாதம்
கொடுக்க வில்லை. பாசன வசதி சரியாகக் கிடைக்க வேண்டு



1980 பிப்ரவரி 13] [திரு. சோ. அழகர்சாமி]

மென்று கேட்டார்கள். அதுவும் சரியாக கிடைக்க வழியில்லை.
நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அவர்களுக்கு
கடனைத் தாராளமாகக் கொடுத்தார்கள். கோதுமை போன்ற
உணவுப் பொருட்களை, சோளம் போன்ற உணவுப் பொருட்
களை இறக்குமதி செய்வதற்கான ஏராளமான பணத்தை
செலவிடுகிறார்கள். அப்படி இருக்கும்போது விவசாயி
களுக்கு உற்பத்திப் பெருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட
கடனில் ஏன் சலுகை காட்டக் கூடாது ?

உற்பத்தியைப் பெருக்கு, கடனைத் தருகிறோம் என்றார்
கள் தாராளமாகக் கொடுத்தார்கள், அவர்களும் வாங்கிக்
கொண்டார்கள். கடனைக் கொடுத்து அவர்களை ஏமாற்றி
விட்டார்கள். 1952 லிருந்தே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலி
ருந்தே அவர்களுக்குக் கடன் கொடுத்து, அவர்களை கடனாளி
யாக்கிவிட்டார்கள். அந்தக் கடனை அவர்களால் திரும்ப
செலுத்த முடியவில்லை. கடன் சுமையினால் இன்றும்
அவர்களுடைய கஷ்டம் தீரவில்லை.

தொழில் தொடங்குவதற்காக பலர் கடன் வாங்குகிறார்கள்.
பலர் அந்தக் கடனைத் திருப்பிக் கட்டாமல் இருக்கிறார்கள்.
அதை வசூல் செய்வதில் அரசாங்கம் நடவடிக்கைகள்
எடுக்கவில்லை; கடனை வாங்குகிறார்கள்; பின்னால் தொழில்
அபிவிருத்தி என்று சொல்லி, ஏமாற்றிவிடுகிறார்கள்; அந்தக்
கடனை ''ரைட் ஆப்'' செய்கிறார்கள். விவசாயிகளுக்கு
ஏன் அந்த மாதிரிக் கடனை ரைட் ஆப் செய்யக்கூடாது?

தொழில் கடன் வாங்கிவிட்டு அதைக் திருப்பிச் செலுத்த
வில்லை என்பது சம்பந்தமாக, திரு. அனந்தசாமி என்று நினைக்
கிறேன். அவர்மீது வழக்கு இருக்கிறது. இப்போது அந்த
வழக்கு வாபஸ் பெறப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
அதை ஏன் வாபஸ் வாங்கினார்கள் என்பதை முதலமைச்சர்
அவர்கள் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நேரத்தில், நாட்
டின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயி வாங்கிய
கடனை ஏன் ரத்து செய்யக்கூடாது என்பது பற்றி சிந்திக்க
வேண்டும். 1950, 1952 லிருந்தே கடன் வாங்கியிருக்கிறார்
கள். அதை திருப்பிச் செலுத்த முடியாமல், வட்டி அசல்
இரண்டும் சேர்ந்து பெருகி, இன்றைக்கு கோடிக்கணக்கில்
அவர்கள் தலையில் விழுந்திருக்கிறது. அதிலிருந்து அவர்களுக்கு
விடுதலை தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

நேற்றைக்கு இங்கே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர
வர்கள் அறிவித்திருக்கிறார்கள். தனியார் கடன் செலுத்தப்
படுவது பற்றிச் சொன்னார்கள். 4,800 ரூபாய் வருமானம்
வரக்கூடியவர்கள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த
வேண்டாம் என்று அறிவித்து, அந்தச் சட்டத்தை நேற்று

நிறைவேற்றினார்கள். அதில், சாதாரண விவசாயிகள் அத்தனை பேர்களும் பலன்பெறும் வகையில் இந்தச் சட்டத்தின் உட்கருத்தைப் புரிந்துகொண்டு அதிகாரிகள் சட்டத்தை அமுல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது அதற்கு வேண்டி ஒரு கமிட்டியை அல்லது வேறு ஏதாவது ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அரசாங்கக் கடன் சம்பந்தப்பட்ட வரையில் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதே மாதிரி கூட்டுறவு சம்பந்தப்பட்ட கடனையும் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது சம்பந்தமாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட மத்திய வங்கியில் கடன் பெற்றவர்களுக்கு மீண்டும் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு 14 கோடியிலிருந்ததை 29 கோடிக்கு உயர்த்தி, அவர்களுக்குக் கடன் கொடுக்கச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அதனால் பயனில்லை. கடன் பெற்றவர்கள் வாங்கிய கடனைக் கட்டுகின்ற நிலையை இழந்திருக்கிறார்கள். ஒருவருக்கு 3 பேர். ஜாமீன் போட்டிருந்தால், ஒருவர் பணத்தை கட்டியிருந்தாலும் மற்றவர்கள் கட்டாத காரணத்தால் கட்டியவர்களுக்கும் கடன் கிடைக்கவில்லை; கட்டாதவர்களுக்கும் கடன் கிடைக்க வழியில்லே. ஆகவே, எல்லாக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். முதலில் மாநில அரசு முடிந்த அளவுக்கு தள்ளுபடி செய்ய வேண்டும். இப்போது மத்திய வங்கிகளில் பெரும் லாபம் இருக்கிறது; வராக் கடன் நிதி என்று தனியாக இருக்கிறது; ரிசர்வ் நிதி இருக்கிறது. அதையெல்லாம் ஈடுகட்டிவிட்டு, மீதித் தொகையை அரசாங்கம் கொடுக்க வேண்டும்.

அண்மையில் மத்திய அமைச்சர் கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆர். வி. எஸ். ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்கள். மாநில அரசு முன்வந்தால் உதவி செய்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் தைரியமாகச் செய்யுங்கள். முடிந்த அளவு மாநில அரசு தள்ளுபடி செய்துவிட்டு, நாங்கள் இவ்வளவு செய்துவிட்டோம்; நீங்கள் ரிசர்வ் வங்கி மூலமாகக் கொடுத்த கடனை தள்ளுபடி செய்யுங்கள் அல்லது கொஞ்சம் கொஞ்சமாக எங்களுக்குக் கொடுக்கும் உதவியில் இருந்து கழித்துக் கொள்ளுங்கள் என்று மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள்.

விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனைத் திரும்பக் கட்டக்கூடிய நிலையிலே இன்றைக்கு இல்லை, ஆகவே இதிலே தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் நாட்டிலே உற்பத்தி குறைந்து, விலைவாசி பெருகி மேலும் சிக்கலான நிலை நாட்டிலே ஏற்பட்டுவிடும்,





அடுத்து தற்போது ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறை காரணமாகப்பல இடங்களிலே பயிர் காய்ந்துபோய் இருக்கின்றது. தண்ணீர் இல்லாமல், தற்போது கேரள அரசோடு உடன்படிக்கை செய்திருக்கிறோமே, இதனைச்சற்று முன்பே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், தற்போது பல இடங்களில் பயிர்கள் காய்ந்துபோய் இருக்கின்றன என்று தந்தி வந்திருக்கின்றது எனக்கு, இப்படி திடீரென்று மின்சாரம் இல்லாமல் தண்ணீர் இல்லாமல் போனால் போட்ட மகசூலை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் இப்போது மின்சாரத்திற்காக செய்யப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்திற்காக நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆனால் இதனை சற்று முன்பே செய்திருக்க வேண்டும், ஆகவே அந்த மின்சாரத்தை விவசாயிகளுக்கு நியாயமாக வினியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,

அது மட்டுமல்ல. 2 ரூபாய் மீட்டர் வாடகை என்றும் வசூலிக்கப்படுகிறது, அது வசூலிக்கப்பட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன், ஆகவே இந்த மீட்டர் வாடகையைக் கம்ப்ளீட்டாக நீக்கிவிட வேண்டும், விவசாயிகளிடம் மின்சாரக் கட்டணத்தை மட்டும் வசூலித்தால் போதும், இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் தீர்ந்து உற்பத்தி பெருகி நாட்டிலே விலைவாசி குறைந்தால் தான் பல பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும், அரசாங்கத்திற்கு நஷ்டம் வருகிறதா என்று பார்க்கக் கூடாது, விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பது மிக முக்கியமான ஒன்று,

அடுத்து சில விவசாயிகள் டீசல் என்ஜினை உபயோகிக்கிறார்கள், அதனை சீராக வினியோகம் செய்வதன் மூலம் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம், டீசல் வருகின்றது. அதனைப் பெரிய டிரம்மிலே அடைத்து வைத்து விடுகிறார்கள், விவசாயி போய்க் கேட்டால் கிடைப்பதில்லை, ஆகவே டீசல் என்ஜினை உபயோகிக்கின்ற விவசாயிகளுக்கு கார்டு கொடுத்து அதன்மூலம் இந்த டீசல் வினியோகிப்பதை ஒழுங்கு படுத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு டீசல் கிடைப்பதற்கு உத்தரவாதம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

இன்றைக்கு பழைய விவசாய முறைகள் எல்லாம் மாற்றப்பட்டு புதிய முறைகள் கையாளப்பட்டு நவீன உரங்கள் எல்லாம் போடப்பட்டு விவசாயத்தை வளர்க்க வேண்டிய சூழ்நிலையிலே விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய நெருக்கடிகளைப் போக்கக்கூடிய முறையிலேயும் நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன், ஆகவே அவர்களுக்கு இருக்கக்கூடிய கூட்டுறவுக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும், அதோடு தனியார் கடன்களைப் பொறுத்தவரையில் 4.800 ரூபாய்க்குக குறைவாக இருந்தால்தான் அவர்களுக்குக் கடனைத் தள்ளுபடி செய்வது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு

சட்டம் கொண்டு வந்தார்கள், அது போதாது, 5.000 ரூபாய். அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகை கிடையாது என்று சொல்லப்படுவது சரியல்ல, ஆகவே 5.000 ரூபாய்க்கு மேலே என்று அறிவிக்கவேண்டும், அதனை ஒரு அவசரச் சட்டமாகவாவது அறிவிக்கவேண்டும், ஏனென்றால் இன்றைக்கு விவசாயிகள் எல்லாம் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே இதுபோன்ற நடவடிக்கைகளை நீங்கள் தைரியமாக எடுக்கவேண்டும்,

விவசாயிகளுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர்களை யார் தூண்டிவிடுகிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கக்கூடாது, அவர்களை யாருமே தூண்டவில்லை, திரு, நாராயணசாமிநாயுடு அவர்களும் தூண்டவில்லை. வேறு யாரும் தூண்டவில்லை. விவசாயிகள் தாங்களாகவே தங்களது பிரச்சினைகளுக்காகப் போராடுகிறார்கள், ஆகவே இந்தப் பிரச்சினைக்கு யார் காரணம் என்று பார்க்காமல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடவேண்டும், இது சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்ற வழக்குகளையும் வாபஸ் வாங்கவேண்டும்,

அடுத்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுப்பது பற்றி கவர்னர் அவர்களுடைய உரையிலே சொல்லி இருக்கிறார்கள். அதாவது '' வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்களின் விலைகளைக்கட்டுக்குள் வைத்து. அதன் மூலம் சாகுபடிச் செலவை நியாயமான அளவில் இருக்கச் செய்ய வேண்டும், அதே நேரத்திலே பெரும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல். சீரான விலையில் வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்படவேண்டும், முக்கியமான பல்வேறு விளை பொருள்களின் அடிப்படை விலைகள் பெரிதும் வீழ்ச்சி அடைந்து விடாமல் இருப்பதற்கேற்றவண்ணம். விவசாயிகள் நம்பிக்கையுடன் அவற்றை விளைவிக்க ஊக்கம் அளிக்குமுகமாக. பல்வேறு விளை பொருட்களுக்குத் தக்க அடிப்படை விலையை நிர்ணயிக்கவேண்டும் '' என்று சொல்லப்பட்டிருக்கிறது,

விலையினை யார் நிர்ணயிப்பது / மத்திய அரசிடம் கேட்டால் மாநில அரசைக் கையைக் காட்டுகிறார்கள். மாநில அரசைக் கேட்டால் மத்திய அரசைக் கையைக் காட்டுவது என்கின்ற நிலை இல்லாமல் நாமே இந்தப் பிரச்சினையைக் கவனித்து நாமே விலையை நிர்ணயம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்,

[முற்பகல் 11.20]

அடுத்து பருத்தியைப் பொறுத்தவரையில் மகாராஷ்டிரா மாநிலத்திலே விளைகின்ற பருத்திக்கு நல்ல விலை கொடுத்து பருத்தி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் வாங்கிக் கொள்கிறதுது





அந்த மாதிரி நாமும் விவசாயிகளிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். நமக்குத் தேவையான பருத்தியோ 11 இலட்சம் பேல்கள், ஆனால் விளைவது 4 இலட்சம் பேல்கள் தான், தேவையான அளவு உற்பத்தியே ஆகவில்லை, ஆனால் உற்பத்தி பண்ணுகின்ற விவசாயிக்குப் போதிய விலை கிடைக்கவில்லை, உதாரணத்திற்குச் சொல்கிறேன், ரூபாய் 250 வரவேண்டியது 115-க்குப் போகிறது, எவ்வளவு பெரிய மோசடி இந்த வியாபாரத்தில் நடக்கிறது, ஆகவே அரசாங்கமே அந்தக் கூட்டுறவு பெடரேஷன்மூலமாக ஒரு அமைப்பைதனியாக ஏற்படுத்தி பூராவையும் கொள்முதல் செய்து, நியாய விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும், அப்படிச் செய்வதை விட்டுவிட்டு பல்வேறு விளை பொருள்களுக்கு தக்க அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் விலை ஏற்பட்டு விடாது.

அதற்கு மேல் '' மேலும் விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் மற்ற வழிகளிலும் பெறும் கடன்களைப் பருவநிலை தவறும்போது திருப்பிச் செலுத்த முடியாமல் தொடர்ந்து இன்னலுறும் நேரத்தில், அந்தக் கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய முடியாவிட்டாலும், அவர்களுக்குத் தக்க சலுகைகளை அளிப்பதற்கான, நாடு தழுவிய கொள்கை யொன்றை மத்திய அரசு உருவாக்கி, அதற்கேற்றதொரு நிதி அமைப்பினையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்''. என்று போட்டிருக்கிறார்கள். அப்படி ஏற்பாடு பண்ணுங்கள் என்று அவர்களிடம் கேட்பதை விட, இங்கேயே எல்லோரும் சேர்ந்து தீர்மானம் ஒன்று போடுங்கள், நிறைவேற்றுங்கள், மத்திய அரசையும், ரிசர்வ் வங்கியையும் தள்ளுபடி செய்ய உதவ வேண்டும் என்று கேட்டு தீர்மானத்தை நிறைவேற்றுங்கள். அதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறோம். ஒரு 20 கோடி 30 கோடியாவது எங்களுக்குத் தள்ளுபடி பண்ணுங்கள் என்று தீர்மானம் நிறைவேற்றுங்கள். அப்படிப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயம் சம்பந்தப்பட்ட விஷயத்திலே நீர்பாசனத்தை எடுத்துக் கொண்டால நாம் அதிகமாக நிலத்தின் நீரைப் பயன்படுத்தி யிருக்கிறோம். தமிழகத்திலே பல வருஷங்களாக குளங்கள், குட்டைகள். கண்மாய்கள், கிணறுகள் முதலியவை பல இடங்களில் தூர்ந்து போய் இருக்கின்றன. அவைகளை ஆழப்படுத்தி, சரிப்படுத்தி நீரைப் பயன்படுத்துவதற்கு திட்டங்கள் போடப்பட்டன. ஆனால் கணக்கிட்டுப் பார்க்கையில் செலவு அதிகமான காரணத்தினாலும், மற்றும் பல இடையூறுகளாலும் அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை பல இடங்களிலே தூர்ந்து போய் இருக்கின்ற கண்மாய்களை, குளங்களை குட்டைகளை, வாய்க்கால்களை ஆழப்

[திரு. சோ. அழகர்சாமி] [1980 பிப்ரவரி 13

படுத்தி அவற்றின் நீரைப் பயன்படுத்தி விவசாய அபிவிருத்திக்கு உதவி செய்யும்படியான அந்தத் திட்டங்களை மீண்டும் செயல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்,

அடுத்து தீப்பெட்டியை எடுத்துக் கொண்டால் '' இவ்வாண்டு 2.000 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டதற்கு மாறாக. இதுவரை மொத்தம் 2.600 நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன'' என்று சொல்லியிருக் கிறார்கள், என்னுடைய மாவட்டத்திலேயே விவசாயம் சரி யாக இல்லாத காரணத்தினால் சிறு சிறு தீப்பெட்டிகள் செய் கின்ற அந்தத் தொழிலை நிறையபேர் எடுத்திருக்கிறார்கள், அதற் கான எக்ஸைஸ் வரியில் சலுகைகளை மத்திய அரசு கொடுத் திருப்பதினால் நிறையபேர்கள் அதற்கு முன் வருகிறார்கள்.. அவர்கள் அப்படி உற்பத்தி பண்ணுவதற்கான லைசன்சுகளையும் வாங்கி வைத்து விட்டார்கள். வீட்டில் இருக்கிற நகை நட்டு எல்லாம் வைத்து இந்த லைசன்ஸை வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு கூட்டுறவு முறையில் தொழிலை ரிஜிஸ்தர் செய்து கொடுங்கள் என்றால், முடியாது, நாங்கள் 3 அல்லது 4 தான் ரிஜிஸ்தர் செய்வோம் என்று மறுக்கிறார்கள். அவர்கள் கூட் டுறவு முறையில் 10. 20 பேர்கள் சேர்ந்து செய்தால். தீப் பெட்டிக்கான மூலப் பொருள் வாங்கவும். உற்பத்தி செய்த தீப்பெட்டிகளையும் நல்ல விலைக்கு விற்க முடியும் என்ற நிலை இருக்கிறது. தனியாக நடத்தினால், பெரிய ஆட்களுடன் போட்டி விட முடியாது. மூலப் பொருள்களையும் மொத்தமாக நியாய விலையில் வாங்க முடியாது. நல்ல விலையில் விற்க முடியாது எனறுதான் கூட்டுறவு முறையில் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டால் 3. 4 தான் ரிஜிஸ்தர் செய்து தருவோம். அருப்புக் கோட்டையாக இருந்தால்தான் அதிகமாகச் செய்ய முடியும். இராமநாதபுரம் ஜில்லாவில் அருப்புக்கோட்டை பகுதிகளில்தான் பதிவு செய்வோம் என்று மறுக்கிறார்கள். அதனால் எங்கெங்கே யார் லைசன்ஸ் வாங்கியிருந்தாலும். அவர்கள் பலபேர் சேர்ந்து கூட்டாகச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு பதிவு செய்து தர வேண்டும். ஆளும் கட்சி ஆட்களுக்குத்தான் பதிவு செய்து கொடுப்போம் என்று சொல்வது சரியல்ல. நியாய மும் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது 30,000 வீடுகள் கட்ட திட்டமிட்டதற்கு 38.00ச் வீடுகள் கட்ட மனுக்கள் வந்துள்ளன. அவைகளின் மேல் நட வடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன் பெல்லாம் 5,000 ரூபாய் கிராமப் புறங்களில் வீடு கட்டுவதற்கு கொடுக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காலனிகளாக வீடுகட்டிக் கொடுக்க 6,000 கடனாகக் கொடுக்கப்



1980 பிப்ரவரி 13] [திரு. சோ. அழகர்சாமி]

பட்டது. அந்தக் கடன் 5,000, 4,000 ஆக குறைந்து இப்போது 2,400 ஆக மாறியிருக்கிறது. 2,400 ரூபாயில் வீடு கட்ட முடி யுமா? மேற்கொண்டு ஒரு 500 ரூபாய் போட்டால் கூட கட்ட முடியாது. சாதாரண கிராம மக்கள் 2,400 ரூபாயில் கட்டிவிட முடியுமா? ஆகையால் குறைந்த பட்சம் 5,000 ஆக அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதில் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் கடன் கிடையாது மானியம் உண்டு. அதேபோல் விவசாயிகளுக்கு அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் வட்டியில்லாமல் கடன் கொடுங்கள். அல்லது மானியம் கொடுங்கள் அவர்கள் வீடுகட்டிக் கொள்ள. இந்த அரசு இவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது கொண்டு வந்த ஒன்றிரண்டு சட்டங்கள் மாதிரி நல்ல பல சட்டங்களைக் கொண்டு வாருங்கள். நிறைவேற்றுங்கள். நாங்களும் ஆதரவளிக் கிறோம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் நடவடிக்கைகள் சீர்குலைக்கும் வேலை களைச் செய்வது என்றால், மத்தியில் மக்கள் சபைக்கும் ராஜ்ய சபாவிற்கும் இடையே கூட முரண்பாடு இருக்கிறது. மக்கள் சபை நிறைவேற்றுகிற திட்டத்தை ராஜ்யசபா எதிர்க்கிறது என் றால் ராஜ்யசபாவைக் கலைக்க முடியுமா? அதற்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை. அதேமாதிரி அரசியல் சட்டத்தில் மாநில அரசுகளுக்கு இன்னின்ன அதிகாரங்கள், மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி வரையறை செய்யப்பட்டதற்கு விரோதமாக மத்தியில் ஆளுகிறவர்கள் தப்பாகப் போகிறார்கள் என்றால் அப்படி தப் பாகப் போகிற காலத்தில் அதை எதிர்த்து தைரியமாக நிற்க வேண்டும். மக்களை அதற்குச் சாதகமாகத் திரட்ட வேண்டும். அதற்கு மக்கள் ஆதரவாக இருப்பார்கள். ஏழை எளிய மக் களுக்குச் சாதகமாக திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதே மாதிரி மத்திய அரசு சரியான திட்டங்களைக் கொண்டுவந்தால், ஏகாதிபத்தியத்தை, ஏகாதிபத்திய நிர்ப்பந்தங்களை எதிர்த்து இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருப்பார்களானால் எங்கள் கட்சி அதை உறுதியாக ஆதரிக்கும். ஆகவே தவறு எங் கிருந்து வந்தாலும் அது மத்தியில் இருந்து வந்தாலும் சரி எங்கிருந்து வந்தாலும் சரி அதை எதிர்ப்பதில் முனைப்பாக இருக்க வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு மு. கருணாநிதி:—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைமீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

உடல்நிலை மிகவும் சரியில்லாத சூழ்நிலையில் 7-ம் தேதியோ அல்லது 9-ம் தேதியோ என்னுடைய உரை அமையும் என்று எதிர்பார்த்து, நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்ட காரணத்தால், இப்

போது உடல் நலிவோடு இந்த மன்றத்தில் சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய ஆளும் கட்சி, அதனுடைய தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள் எடுத்துரைத்த கருத்துக்களும் எதிர் கட்சிகளின் சார்பில் எடுத்துரைத்த கருத்துக்களும் இந்த மாமன்றத்தின் குறிப்பேடுகளில் ஏறியிருக்கின்றன. நான் முதலிலே ஒன்றை மிகுந்த கவலையோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தோன்றி சற்றொப்ப இரண்டரை ஆண்டுக் காலம் ஆகிறது. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் பல சமயங்களில் நடைபெற்றிருக்கின்றன.

சட்டமன்ற நடவடிக்கைகளில் கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. இன்றியமையாதது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றிருக்கிற இலாக்காக்கள் முக்கியமான இலாக்காக்கள். காவல் துறை இலாகா, இதுவரை ஏற்றுக்கொண்டிருந்து இடையில் வேறு இடத்திற்குச் சென்று மீண்டும் திரும்பிவிட்ட தொழில் இலாக்கா, பொதுத்துறை இப்படி மிக முக்கியமான இலாக்காக்களை எல்லாம் நிர்வகித்து வருகிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் அந்த இலாக்காக்கள் பற்றிய கேள்விகளுக்கு ௬ அல்லது எட்டு கேள்விகளுக்குத் தான் இந்த மன்றத்திலே பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் நூற்றுக் கணக்கான கேள்விகள் தொழில் துறையைப் பற்றியும், காவல் துறையைப் பற்றியும் வேறுபல அவர் நிர்வகிக்கிற இலாக்காக்கள் பற்றியும் எழுப்பப்பட்டும் கூட அவைகள் எல்லாம் ஒரு மூலையில் தள்ளப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் அவைக்கே வராமல் முதல்வருக்கு உரிய கேள்விகள் கேள்வித்தாளில் இடம் பெறாமல் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய பல்வேறு விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் கவலையோடு தெரிவிப்பது மாத்திரமல்ல அது கண்டனத்திற்குரிய ஒன்று என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு தடவை கூட்டத் தொடர் நடைபெற்ற நேரத்தில் நான் இடையில் எழுந்து பல நேரங்களில் இப் பிரச்சினையை எழுப்பலாமா என்று எண்ணிய நேரத்தில் எனக்கேகூடக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் ஏன் முதல் அமைச்சர் வரவில்லை. ஏன் கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை என்று கேட்பது எதிர்கட்சித் தலைவருக்கு வழக்கமாகிவிட்டது என்றளவிற்கு நிலைமை ஆகிவிடுமோ என்ற கூச்சத்தின் அடிப்படையில் நான் அப் பிரச்னையைக்கூட எழுப்பவில்லை. இருந்தாலும் இவ்வளவு துறைகளையும் தன்னகத்தே வைத்திருக்கிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மக்களுக்கு சட்ட மன்ற உறுப்பினர்கள்





வாயிலாகத் தெரிவிக்க வேண்டிய பல கருத்துக்களைத் தெரிவிக்கத் தவறியதும் அல்லது தெரிவிக்க மறுத்தோ அல்லது புறக்கணித்தோ அவர்கள் கேள்வி நேரத்தில் வராமல் இருந்ததும் பெரும் குற்றம் என்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-30]

கடந்த கூட்டத் தொடரில் கண்டனத் தீர்மானத்தின் மீது நான் உரையாற்றியபோது, சில முக்கிய பிரச்னைகளை எடுத்துவைத்தேன். பல்கேரியா பால்டிகா கப்பல் பேர சம்பந்தமாக நடைபெற்ற முறைகேடுகள், விதிமுறை மீறல்கள், ஊழல்கள் இவைகளைப் பற்றி ஒரு விசாரணை நடத்தவேண்டுமென்று சொல்லி, உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு நடத்தப்பட வேண்டும், அப்படி நடத்தப் படுமானால், நான் அதற்குரிய ஆதாரங்களை இந்த அவையிலே எடுத்து வைக்கத் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிடும்போது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், அதை ஏற்றுக் கொண்டு உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு இந்த அவையிலே உறுதிமொழி அளித்தார்கள். ஆனால், அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று? கேள்விக்குறியாக ஆகிவிட்டது. இன்றுடன் அந்த உறுதிமொழி 100-வது நாள் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்த உறுதிமொழியைத் தொடர்ந்து ஏற்கெனவே இருந்து மறைந்துவிட்ட லோக்தள் சர்க்கார், காபந்து சர்க்கார், அந்தச் சர்க்காருடைய பிரதமருக்கு எழுதப்பட்டதாகவும், உச்ச நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி இப்போது யாரையும் இதற்காக ஒதுக்குவதற்கு இயலாது என்று பதில் அனுப்பியதாகவும், அந்தப் பதில் ஒன்றே இந்தப் பிரச்சினையை தாங்கள் சமாளித்துக் கொள்ளப் போதுமானது என்ற நிலையில் முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் வாளாக இருந்துவிட்டதை எண்ணும்போது நான் இதையும் ஒரு பெருங் குற்றமாக சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அளிக்கப்பட்ட உறுதிமொழியை காப்பாற்ற தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அப்படி மேற்கொள்ளப்படவில்லை. சுப்ரீம் கோர்ட்டினுடைய ஜட்ஜின் மூலமாகக் கிடைத்த கடிதம் ஒன்றையே வைத்துக்கொண்டு, விசாரணை தேவையில்லை என்கின்ற முடிவுக்கு வருவது, அளிக்கப்பட்ட உறுதிமொழியைக் காப்பாற்றியது ஆகாது என்று மீண்டும் மீண்டும் நான் குற்றம் சுமத்துகிறேன்.

காபந்து சர்க்கார், சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுக்கு எழுதி, காபந்து சர்க்காருக்கு எழுதிய பதில் தமிழக அரசுக்கு வந்து, அவர்கள் அனுப்பி இப்படி நடைபெற்ற ஒரு ஏற்பாடு, காபந்து சர்க்காருக்கும் தமிழக சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட ஒரு ஏற்பாட்டின் மூலமே நிலைமையைச் சமாளித்து விடலாம்

என்று கருதுவது நல்லதல்ல. புதிதாக உருவாகி இருக்கின்ற மத்திய அரசிடம் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமித்து, விசாரணை நடத்துவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஏன் முன்வரவில்லை என்ற வினாவை நான் இங்கே தொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கவர்னர் உரையைத் தொடங்குவதற்கு முன்பே நம்முடைய முதலமைச்சர் அவர்களால் பல அறிவிப்புகள் நாட்டு மக்களுக்கு வெளியிடப்பட்டன. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் வருமான வரம்பு பற்றிய அறிவிப்பும், மதுவிலக்கு கொள்கையில் ஏற்பட்ட தளர்ச்சி அல்லது மாறுதல் குறித்த அறிவிப்பும் கவர்னர் உரைக்கு முன்பே, கவர்னர் உரை தொடங்குவதற்கு, 4, 5 நாட்களுக்கு முன்பே வெளியிடப்பட்டது.

இப்போது, நிதி நிலை அறிக்கை இந்த மாத இறுதியில் அல்லது மார்ச்சு மாத முதல் வாரத்தில் அறிவிக்கப்படுவதற்கு. முன்பே, கவர்னர் உரை விவாதத்திற்கு இடையே, இந்தக் கூட்டத் தொடரில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் பல சலுகைகள், பல சம்பள உயர்வுகள் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் எந்த ஒரு அறிவிப்பும் தொடர்புடையவர்களைக் கலந்து பேசி அல்லது தொடர்புடையவர்கள் சொல்லுகிற நேரத்தில் அதை உற்றுக் கவனித்து சிந்தித்து அதன் சார்பாக எடுக்கப்பட்ட முடிவுகளாக இருக்கின்றனவா என்றால் இல்லை.

உதாரணத்திற்கு, நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல் போலீஸ் இலாகாவில் அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்குச் சலுகைகள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு அவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டு பிரச்சினை முடிவடைந்துவிட்டது என்று நாம் ஆறுதல் பெறுகிற நேரத்தில் அது முடிவடையவில்லை, அரைக் கிணறு தாண்டிய நிலையில்தான் இருக்கிறது என்ற அளவில் அவர்கள்—காவல்துறை சார்நிலைப் பணியாளர்கள் சார்பாக விடுத்துள்ள வேண்டுகோளில்—'டிஸ்மிஸ் ஆனவர்களுக்கு நிபந்தனையின்றி மீண்டும் வேலை அளிக்க வேண்டு என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றும். போலீசார் மீது தொடரப்பட்ட வழக்குகளையும் இலாக்கா நடவடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றும். இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பணியில் சேர்ந்த போலீசாருக்கு வழங்கப்பட்ட பதவி இறக்கம். சம்பள உயர்வு நிறுத்தம் போன்ற தண்டனைகளை ரத்து செய்ய முன்வரவில்லை என்றும் போராட்ட காலத்தில் முறைகேடாக வழங்கப்



பட்ட பதவி உயர்வுகளை ரத்து செய்யவில்லை என்றும் வேலை நிறுத்த காலத்தில் இறந்த காவலர்கள் குடும்பத்திற்கு பென்ஷன். குடும்ப நல நிதி பத்தாயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்ற புனிதாபிமானக் கோரிக்கை கூட மறுக்கப்பட்டது என்றாலும் போராட்டத்தின் போது காலிசெய்யப்பட்ட போலீசார் வீடுகளுககுப் பதிலாக அவர்களுக்கு வீடுகள் ஒதுக்க வேண்டுமென்பதற்குப் பதில் இல்லையென்றும் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அவர்கள் தங்களுடைய கோரிக்கையை இந்த அரசின் முன்னால் மீண்டும் வைத்திருக்கிறார்கள்,

எனவேதான் அழைத்துப் பேசி, அணுகுமுறை செம்மையாக இருந்து காரியங்களை ஒழுங்காக நிறைவேற்றத் தவறுகிற அரசாக இந்த அரசு இருந்து வருகிறது என்ற குற்றத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிற சம்பவம் கேட்பதற்கு அல்லது படிப்பதற்கு சாதாரணமாக இருக்கலாம். தஞ்சையில், குடந்தை நகரில் விரைவில் மகாமகத் திருவிழா நடைபெற இருக்கிறது. மகாமகத் திருவிழாவுக்கு அதிலே நம்பிக்கையுள்ளவர்கள் செல்லுவதைப் பற்றி நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967-ஆம் ஆண்டு உருவாகி அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நான் குடந்தைக்குச் சென்று மகாமகத்திற்கு வருகிற பிரயாணிகள் வந்து நீராடிவிட்டு உடனடியாக ஊர் திரும்புகிற வசதி வாய்ப்புகளைச் செய்தால்தான் அவர்கள் ஒரே இடத்தில் கூடியிருந்து தொத்து நோய்களுக்கு ஆளாகாமல் தடுக்கப்பட முடியும் என்பதால் 'ரிங் ரோடு' குடந்தை மாநகரத்தைச் சுற்றி சுற்றுச் சாலை ஆறு லட்சம் ரூபாயில் செலவில் அமைத்து அந்த குளத்தை தூர் வாரி மகாமகம் ஒழுங்காக நடைபெற, அதிலே நம்பிக்கை கொண்டவர்கள் வந்து தங்களுடைய யாத்திரையை முடித்துவிட்டுச் செல்ல முன்னேற்றக் கழக அரசு 1967-68-ஆம் ஆண்டில் முனைந்து காரியங்களைச் செய்திருக்கிறது. அதே போல் இப்போதும் இந்த அரசு அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதை நான் குறை கூறவில்லை. அவரவர்கள் எண்ணத்திற்கு, அவரவர்கள் நம்பிக்கைக்கு குறுக்கே இந்த அரசு நிற்க வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் நடிப்பது என்ன? அங்கே ஒரு பதக்கம் விற்பனை செய்யப்படுகிறது. பதக்கத்திலே ஒரு புறத்திலே லிங்கத்தின் படமும், இன்னொரு பக்கத்திலே மகாமகக் குளத்தின் படமும் பொறிக்கப்பட்டு அந்த ஒரு டாலர் 100 ரூபாயில் ஒரு டாலர், 50 ரூபாயில் ஒரு டாலர் என்று விற்பனை செய்யப்படுகிறது. இந்த விற்பனையை மேற்கொண்டு நடத்துகிறவர் யார் என்றால் தஞ்சை மாவட்டாட்சித் தலைவர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தவிற்பனையை மேற்கொண்டு அதனை நடத்துவதற்கு ஆர்வம் காட்டுகிற

[திரு. மு. கருணாநிதி] [1980 பிப்ரவரி 13

மானம் உள்ளவர்களுக்கு ஒதுக்கப்படுகிற வீடுகள், அடுத்தது, லோயர் இன்கம் குரூப்—எல்.ஐ.ஜி. பிளாட்—ஆண்டு வருமானம் ரூ. 9,600 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு. அடுத்தது, மிடில் இன்கம் குரூப்—எம்.ஐ.ஜி, பிளாட்—ஆண்டு வருமானம் 9,600 ரூபாய் முதல் 24, 000 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு. அடுத்தது, எச்.ஐ.ஜி. பிளாட்—ஹையர் இன்கம் குரூப்—ஆண்டு வருமானம் 24, 000 ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு.

அரசாங்க ஆணை என். ஜி. ஒ. எம். எஸ். எண். 399, தேதி: 2—3—1979-ன்படி கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மனுக்கள் கோரி விளம்பரம் செய்யப்பட்டு, கடைசி தேதிக்குள் வரப்பட்ட மனுக்களைப் பரிசீலித்து, கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தின்படி குலுக்கல் முறைப்படி வழங்கப்படவேண்டும். நன்றாகக் கவனிக்க வேண்டும். மனுக்கள் கோரி விளம்பரம் செய்யப்பட்டு, கடைசி தேதிக்குள் வரப்பட்ட மனுக்களைப் பரிசீலித்து, கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தின்படி குலுக்கல் முறைப்படி வழங்கப்பட வேண்டும். குலுக்கல்படி.

விகிதாசாரம் என்ன? தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10 சதவீதம். மாநில அரசு ஊழியர்களுக்கு 18½ சதவீதம், மத்திய அரசு ஊழியர்களுக்கு 11 சதவீதம், பாதுகாப்புத் துறை ஊழியர்களுக்கு 7½ சதவீதம், முடி திருத்துவோர், துணி வெளுப்போர், 5 சதவீதம், மற்ற பொதுமக்களுக்கு 48 சதவீதம்.

இதற்கு அடுத்து அரசாங்கம் 23—4—1979 அன்று எண். 21244, கே. 2/79-ன் படி ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறது. அதாவது, மொத்தம் உள்ள வீடுகளில் 90 சதவீதம் முன்னால் சொன்ன அரசாங்க ஆணைப்படி ஒதுக்கப்பட வேண்டுமென்றும், மீதியுள்ள 10 சதவீதம் வீடுகளை அரசாங்கமே தன்னிச்சையாக ஒதுக்கும் என்றும் அரசு தன்னுடைய மெமோவில குறிப்பிடுகிறது.

நான் சொன்ன கணக்கு 100 சதவீதத்திற்கு. பிறகு அரசு இன்னொரு ஆணையைப் பிறப்பித்தது 90 சதவீதத்தை முதலிலே குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி ஒதுக்கிவிட்டு 10 சதவீதத்தை அரசாங்கம் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்து ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இந்த ஆணையின்படி இந்த வீடுகளை ஒதுக்கும் பொழுது வீடுகள் தேவைப்படுவோர் முதலில் மனுவைப் போட வேண்டும்; மனு போடும்போதே டெபாசிட் தொகையாக 500 ரூபாய் கட்ட வேண்டும்; அந்த மனுக்கள் அந்த மனுதாரர் பற்றிய முழு விவரங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும். அந்த மனுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட விஷயங்கள் உண்மையானவை என்று கெஜட்ட் ஆபீசர்களால் பரிந்துரைக்கப்பட வேண்டும். இவ்வளவு விதிமுறைகள். ஆனால் நடந்தது என்ன தெரியுமா?



1980 பிப்ரவரி 13] [திரு. மு. கருணாநிதி]

கோட்டூர்புரத்தில் 13 வீடுகளுக்கான ஆணையை 21-1-80இல் கடந்த ஜனவரி மாதம் 21-ஆம் தேதி—13 வீடுகளுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த 13 வீடுகளும் ஆண்டு வருமானம் 24,000 ரூபாய்க்கு மேல் அதாவது ஹையர் இன்கம் குரூப்— உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பெரிய வீடுகள் ஆகும். அந்த 13 வீடுகளில் 3 வீடுகள் ஆர். கணபதி. என். நீலகண்டன். வி.வி. ரவி. என்பவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று பேர்களும் வீடு அவர்களுக்கு ஒதுக்குகின்ற வரை அதற்கான அப்ளிகேஷன்— மனுவைப் போடவே இல்லை. மனு போடப்பட்டு, அதை கெஜட்டட் அந்தஸ்திலே உள்ள அதிகாரிகள் பரிசீலித்து, அதற்குப் பிறகுதான் அலாட்மென்ட் செய்ய வேண்டுமென்று விதி முறைகள் இருந்தாலும்கூட, 13 வீடுகளில் 3 வீடுகள் கணபதி, என். நீலகண்டன், வி.வி. ரவி என்பவர்களுக்கு மனு இல்லாமலே அலாட்மென்ட் செய்யப்படுகிறது.

ஆனால் அலாட்மென்ட் செய்கின்ற அந்த அரசாங்கத்தினுடைய ஆணையில், அந்த அலாட்மென்ட் யாருக்குச் செய்யப்பட்டதோ அவர்களிடம் வீட்டு வசதி வாரியம் மனுவினைக் கேட்டுப் பெற வேண்டுமென்று கூறப்படுகிறது. அலாட்மென்ட் செய்துவிட்ட பிறகு. அவர்களிடத்திலே மனுவினைப் பெற வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது.

அதைப்போலவேதான். வி. வி. சீனிவாசன். அனந்தராமன், டாக்டர் ரகோத்தமன் ஆகிய மூன்று பேர்களுக்கு இந்த ஆணைப்படி மூன்று வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் மூவரும் எம்.ஐ.ஜி. பிளாட்டுக்குத்தான் மனு செய்து கொண்டார்கள். அதாவது. மிடில் இன்கம் குரூப்புக்கு. ஆனால் ஒதுக்கப்பட்டது ஹையர் இன்கம் குரூப் பிளாட்டுகள். அவர்களுக்கு எப்படிப் பணம் கட்ட முடியும் என்று தெரியவில்லை. அவர்களுக்கு முறை கேடாக இந்த வீடுகள் கோட்டூர்புரத்திலே 13 வீடுகளுடைய ஒதுக்கப்பட்ட நிலை இவ்வாறாகும்.

[முற்பகல் 11.50]

அடுத்து, திருவான்மியூரில் கட்டப்பட்ட எம்.ஐ.ஜி. பிளாக் 20-க்கான ஒதுக்கீடு, அரசு ஆணை ஜி. ஒ. எம்.எஸ். எண். 74, அதுவும் தேதி: 23—1—1980தான். கடந்த ஜனவரி மாத, 23-ஆம் தேதி; அரசுக்கு ரொம்ப அவசியம், அலாட்மென்ட், அவசரம் அவசரமாக செய்யப்படுகிறது. அந்த 20 வீடுகளில், 10 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலே, அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிறது. அந்த 10 வீடுகளில் 7 வீடுகள் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த மாதம் நல்ல யோகமான மாதம். ஏனென்றால், நாடாளுமன்றத்தேர்தல் முடிவுக்குப் பிறகு, அவர்களுக்கு மனுக்கள் இல்லாமலே, அப்ளிகேஷன் இல்லாமலே, அலாட்மென்ட் போட்ட ஹவுசிங்போர்ட் வீடுகள், சேஸீஸ் இவை

களெல்லாம் நிரம்பக் கிடைக்கின்றன. பஸ் ரூட்டுகள் எல்லாம் கூடக் கிடைக்கின்றன. ஆளுங் கட்சி எம்.எல்.ஏ.க்கள் இது வரையில் என்னைத் திட்டிக் கொண்டிருந்தாலும்கூட இப்பொழுது வாழ்த்திக் கொண்டிருப்பார்கள், மனதிற்குள்ளாகவே என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் 7 எம்.எல்.ஏக்களுக்கு, அவர்களிடம் மனுக்கள் பெறாமலேயே—என்னிடத்திலே அவர்களுடைய பெயர்கள் எல்லாம் கூட இருக்கின்றன. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அதை முதலமைச்சரவர்கள் தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே அல்லது அமைச்சர்களிடத்திலே கலந்து பேசி அந்தப் பெயர்களை அறிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். அது ஒருவேளை முதலமைச்சருடைய விருப்பத்தின் காரணமாகவே கொடுக்கப்பட்டதோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆக, 7 எம்.எல் ஏக்களுக்கு திருவான்மியூரில் கட்டப்பட்ட எம்.ஐ.ஜி. ப்ளாட்டில் 20-க்கான ஒதுக்கீடு அரசாணை, 23—1—1980, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு, 10 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலே அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போலவேதான் அசோக் நகரிலும் மனுக்கள் இல்லாமல் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 12 வீடுகள் அங்கே, அதிலே 5 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலேயே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இது எவ்வளவு பெரிய முறைகேடு? ஆளுங் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகச் செய்யப்பட்ட முறைகேடா அல்லவா? இந்த முறைகேடு தொடரலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேன். அதற்குரிய, அரசாங்கத்தினுடைய ஆணைகள் என்னிடத்திலே இருக்கின்றன. அப்ளிகேஷன்ஸ் போடாவிட்டாலும் அலாட்மென்ட் செய்த பிறகு அவர்களிடத்திலே அப்ளிகேஷன்களைப் பெறுங்கள் என்று ஹவுசிங் போர்ட் சேர்மனுக்கு எழுதப்பட்ட கடிதத்தினுடைய நகல்களும் என்னிடத்திலே இருக்கின்றன. அந்த ஆதாரங்களுடன்தான் அவைகளை நான் இங்கே எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, பேசின் பிரிட்ஜ். பேசின் பிரிட்ஜில், மாநகராட்சிக்கு, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு இடம், இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள இடம். 1972 ஆம் ஆண்டு அந்த இடத்தைக் குத்தகைக்கு விட வேண்டுமென்று Brilliant Trading Corporation Private Limited சார்பிலும், கே. பி. நாராயணன் என்பவர் சார்பிலும், கோரப்பட்டது. அந்த மனுவை ஆராய்ந்த மாநகராட்சி, 5—12—1972ல் அவர்களுக்குக் கீழ்க் கண்ட பதிலை அனுப்பியது.

Your request for lease of land on Basin Bridge Road cannot be considered, as this land is required for road purposes for the Corporation.

(Sd,) P. N. Subramaniam



என்று 5—12—1972 ல் அந்த இடம் சாலை வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம், அதைத் தனிப்பட்டவர்கள் வ்யாபார ஸ்தலமாகவோ, கடைகளை அமைக்கவோ நிச்சயம் தர முடியாது என்று பதில் தரப்பட்டிருக்கிறது.

ஆனால், அந்த இடத்தை இப்பொழுது, ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. அவர்களுடைய—நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவருடைய—தகப்பனார் பெயரால், அவருடைய 'சன்ஸ்' என்ற பெயரால், அந்த இடம் அவர்களுக்கு வழங்கப்பட்டு, அந்த ஆளுங்கட்சி சட்ட மன்ற உறுப்பினருடைய தந்தையார் இறந்து விட்ட பிறகு, அவரே அந்த இடத்தில் இப்பொழுது சர்வ ஆதிக்கத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

இது குறித்து சிலபேர் மசூதிக்குச் செல்வதற்கு எங்களுக்கு இடம் இல்லை. பாதையின் குறுக்கே அவர்கள் ஒரு விறகுத் தொட்டி—கட்டைத் தொட்டி இன்று அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மசூதிக்குச் செல்ல எங்களுக்கு இடம் தேவை. கோர்ட்டார் இதுவரை செய்யப்பட்டுள்ள காரியங்களுக்கும் ஸ்டே தரவேண்டுமென்று கேட்டபோது கோர்ட்டாரும் இதற்கு மேல் அந்த இடத்தில் எதுவும் கட்டக் கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால் கட்டப்பட்டிருக்கிற கட்டிடங்களின் போட்டோ படங்கள் இங்கே இருக்கின்றன. அந்தப் படங்களை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இங்கே தந்திருக்கிறேன். ஆக முறைகேடுகள் வளர்ந்துகொண்டே போகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இதையும் இங்கே வைத்தேன்.

விவசாயிகளுடைய பிரச்னை பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இங்கே விரிவாகப் பேசி இருக்கிறார்கள். விவசாயிகள் இன்றைக்கு தங்களுடைய மிக முக்கியமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறவில்லை என்பதாலும் அவர்களை அழைத்துப் பேசி தீர்வு காணக்கூடிய முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபடவில்லை என்பதாலும் மிகுந்த கொதிப்புற்றிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்.

நாங்கள் ஜப்தி செய்வதே இல்லை என்று அரசாங்கத்தின் சார்பில் அடிக்கடி சொல்லப்பட்டாலும்கூட இதோ இருக்கிற இந்த அச்சடிக்கப்பட்ட துண்டு அறிக்கை என்ன கூறுகிறது என்பதை இங்கே படித்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

பி. 1453 பரவாக்கோட்டை : கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் பரவாக்கோட்டை '' ஏல விளம்பரம் ''.

பரவாக்கோட்டை கிராம விவசாய கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து கீழ்க்கண்ட பாக்கிதாரர்கள் செலுத்தவேண்டியகடன் பாக்கிக்காக 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள்

5, 6 நாட்களுக்கு முன்புதான்—அன்று ஜப்தி செய்யப்பட்டு கீழ்க்கண்ட ஜங்கம சொத்துக்கள், மன்னார்குடி காசுக்காரச் செட்டித் தெருவில் இருக்கும் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கிக் கிளையில் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் காலை 12 மணி அளவில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

அதில் சொத்து விவரம்—

கு. மா. பாப்பாத்தி அம்மாள்—சொத்து விவரம்—

| | |
|---|---|
| பிலிப்ஸ் ரேடியோ—"மேட் இன் இண்டியா" | 1 |
| மர நாற்காலி .. .. .. .. | 2 |
| சைக்கிள் "அட்லாஸ்" பழையது .. .. | 1 |
| பித்தளை தவலை .. .. .. .. | 1 |
| பித்தளை குவளை (சிறியது) .. .. | 1 |
| பித்தளைக் குடம் .. .. .. .. | 1 |
| பித்தளைச் செம்பு .. .. .. .. | 1 |

அடுத்தது சி. சி. உத்திராபதி—அவருடைய சொத்துக்கள் விவரம்—

| | |
|---|---|
| சைக்கிள் "பி.எஸ்.ஏ." பச்சை கலர் டைனமோ இல்லாதது, பழுதடைந்தது .. .. | 1 |
| மர பெஞ்சு .. .. .. .. .. | 1 |
| பித்தளைத் தவலை—சின்னது .. .. .. | 1 |
| பித்தளை அரைக் குவளை ("பர்மாராணி" என்று பெயர் உடையது) .. .. .. | 1 |

பஞ்சநாதன் சொத்தின் விவரம்—

| | |
|---|---|
| ரேடியோ—பழையது (கன்டெம்ட்) .. .. | 1 |
| இட்லிப் பானை (தட்டும் மூடியும் இல்லாதது) | 1 |
| பித்தளைக் குடம் .. .. .. .. | 1 |

ஓ. ப. விஜயேந்திரன்—

| | |
|---|---|
| பித்தளைக் குவளை .. .. .. .. | 1 |
| இட்லிப் பானை (தட்டும் மூடியும் இல்லாதது) | 1 |
| பித்தளை தவலை .. .. .. .. | 1 |
| பித்தளைத் தாம்பாளம் .. .. .. | 1 |
| மர பெஞ்சு (ஒரு சட்டம் உடைந்துபோனது) .. | 1 |





இவைகள் எல்லாம் 23 ஆம் தேதி ஏலம் விடப்படும் என்றும் கடந்த 7 ஆம் தேதி ஜப்தி செய்யப்பட்டது என்றும் ஏல உத்தியோகஸ்தர் தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கி தஞ்சாவூர் என்று கையொப்பம் இட்டு விளம்பரப்படுத்தப்பட்ட அறிக்கையைத்தான் இங்கே நான் படித்துக் காட்டினேன். எனவே ஜப்திகள் இல்லையென்று பேசுவது விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு மாய்மாலமாக இருக்குமே தவிர வேறில்லை என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துக் காட்டினேன்.

அடுத்து நம்முடைய முதலமைச்சரைப் பொறுத்த வரையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் சரி தேர்தலுக்கும் பிறகும் சரி அவரால் அல்லது அவருடைய பெயரால் சில முரண்பாடான அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன.

அவர்கள் தேர்தல் நடந்து முடிந்த சிவகாசிக்குச் சென்று அங்கு வெற்றிபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினருக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது நம்முடைய முதலமைச்சர் சொன்னார் "சினிமாவுக்கு போ ; சினிமாவுக்குப் போ ; கட்சியிலே இருக்காதே ; என்றால் சரி என்று கட்சியிலே இருப்பவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். என் கட்சியில் ஆள் இல்லையா ? முதலமைச்சர் பொறுப்பு வகிக்கத் தகுதியானவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ; படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். சரியான ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு சினிமாவுக்குப் போகிறேன். இதனால உங்களுக்குத்தான் நஷ்டம் ; எனக்கு நஷ்டம் இல்லை. எனக்குப் படம் வரும், நான் முன்போலவே ராஜா மாதிரி இருப்பேன். நான் இப்போது சினிமாவில் நடிக்கத் தயாராக இல்லை. நடிக்க அழைக்கிறார்கள். நான்தான் வேண்டாம் என்று கூறிக்கொண்டிருக்கிறேன்." இது 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளில் பிறகு 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாளில் "சினிமா எக்ஸ்பிரஸ்" இந்தியன் எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டில் நடைபெற்ற "சினிமா எக்ஸ்பிரஸ்" வெளியீட்டு விழாவில் முதலமைச்சர் பேசியதாக "தினமணியில்" செய்தி வந்திருக்கிறது.

"வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து தாம் சினிமாவில் மீண்டும் நடிக்கப் போவதாகவும் "இமயத்தின் உச்சியில்" என்ற தம்முடைய சொந்தப் படம் வருகிற தீபாவளியின்போது வெளியிடப்படும் என்றும் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இங்கு கூறினார்"

"சட்டம் அனுமதித்தால் முதலமைச்சராக இருந்துகொண்டே தாம் நடிக்கப் போவதாகக் கூறினார் சட்டம் அனுமதிக்கவில்லையென்றால் பொறுப்பை நண்பர்களிடம் ஒப்படைத்துவிட்டு நடிக்கச் செல்வதாகவும்" அவர் கூறினார்.

[நண்பகல் 12—00]

"தினமணியில்" வந்தது; "தினத்தந்தி" பத்திரிகையிலும் இதே செய்தி வந்தது. சொந்தத்தில் "இமயத்தின் உச்சியிலே" என்ற படத்தை எடுக்கப் போகிறேன் என்று வந்தது.

அதன்பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு விளக்க அறிக்கையை முதலமைச்சர் சார்பில் வெளியிட்டார். "மக்கள் என்னை நம்பி ஒப்படைத்த பொறுப்பை விட்டு விலகி நடிப்புத் துறைக்குச் செல்லும் எண்ணம் எனக்கு அறவே இல்லை" என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இன்று தெளிவு படுத்தினார் என்று திரு. வீரப்பன் அவர்கள் சொன்னார்கள்.

ஏற்கெனவே ஓரிரு படங்களில் பெருந்தொகை முதலீடு செய்து கணிசமான அளவுக்கு வளர்ந்துவிட்ட படங்கள் கடந்த இரண்டரை ஆண்டுக்காலமாக முடிக்கப்படாமல் இருக்கின்றன. என்னை நம்பி முதலீடு செய்தவர்களுடைய கஷ்டத்தை மனதில் கொண்டு மீண்டும் நடிப்பது பற்றி சொன்னேனே தவிர அரசியல் துறையிலிருந்து விலகி அல்லது ஒதுங்கி மக்கள் என்னை நம்பி ஒப்படைத்த பொறுப்பை விட்டுவிட்டு நடிப்புத் துறைக்குச் செல்லும் எண்ணம் எனக்கு அறவே இல்லை. அந்த எண்ணத்தில் கருத்துச் சொல்லவில்லை என்று எம்.ஜி.ஆர். விளக்கினார்.

"சினிமா எக்ஸ்பிரஸ்" மாதமிருமுறை வெளியீட்டு விழாவில் சில தினங்களுக்கு முன்பு பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஏப்ரல் மாதத்திலிருந்து மீண்டும் நடிப்புத் துறைக்குச் செல்ல இருப்பதாகவும் சட்டம் அனுமதித்தால் முதலமைச்சராகஇருந்து கொண்டே நடிப்பேன்' என்றும் அனுமதிக்காவிட்டால் வேறொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நடிப்புத் துறையில் ஈடுபடப் போவதாகவும் கூறியதாகச் செய்தி வெளியாகி இருந்தது. இதுபற்றி இன்றைய அரசியல் சூழ்நிலையில் பரவலாக கருத்து தெரிவிக்கப்பட்டதுடன் சட்டப் பேரவையிலும் இப் பிரச்சனை எழுப்பப்பட்டது. இதுபற்றி நிருபர்கள் விளக்கம் கேட்டபோது முதலமைச்சரோடு செய்தித்துறை அமைச்சர் வீரப்பன் தொடர்பு கொண்டு இந்த விளக்கத்தை முதல்வர் சார்பில் இன்று மாலை அளித்தார். இந்தச் செய்தி "தினமணி" 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாளில் வந்திருக்கிறது.

இங்கு சட்டமன்றத்திலே கேட்டபோது முதலமைச்சருக்கு அடுத்த இடத்திலே இருக்கின்ற அவை முன்னவர் மாண்புமிகு மனோகரன் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. முதலமைச்சர் வந்த பிறகுதான் பதில் அளிப்பார் என்று அவர் இடத்திலே தான் பதிலைப்பெற முடியும் என்ற கருத்துப்பட அவைத் தலைவர் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் சட்டசபையிலே சொல்லப்படாமல் வெளியிலே அந்த கருத்துச் சொல்லப்பட்டது. ஆனால் சொல்லப்பட்ட கருத்தில் எவ்வளவு முரண்பாடு? முதலமைச்சர்





சொன்னது சொந்தத்தில் படம் எடுப்பேன். படத்தினுடைய பெயரைக்கூட குறிப்பிட்டார். "இமயத்தின் உச்சியிலே" என்று சொந்தத்தில் படம் எடுப்பேன் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்களுடைய அறிக்கையிலே காணப்படுகின்ற முரண்பாடு ஏற்கெனவே ஒத்துக்கொண்டு பாதியில் நின்று போயிருக்கிற பழைய படங்களை முடித்துக் கொடுப்பதாகத்தான் முதலமைச்சர் சொன்னார்களே தவிர வேறல்ல என்று அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா அவர்களுடைய நினைவு நாளின்போது அண்ணா சதுக்கத்தில் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் மூலமாக அவர்களுடைய கருத்தை நாவலர் படிக்க நாட்டுக்கு வெளியிட்டார். என் இரத்தத்தின் இரத்தமே உடன் பிறப்புக்களே அண்ணா சொன்ன கொள்கைகளை நிறைவேற்றுவதுதான் இலட்சியம்; விரைவில் பொதுக் கூட்டத்தில் பேசுவேன்; மக்கள் தந்த பொறுப்பினை விட்டு ஒதுங்குவது என்பது என் உயிர் உள்ளவரை இல்லை. இல்லை. வெற்றி நமதே, நாளை நமதே, என்றும் நமதே என்று நாவலர் மூலமாக அவர் எழுதித் தந்து அது படிக்கப்பட்டது. ஆக 3,4 நாட்களுக்குள்ளாக இத்தகைய முரண்பாடான அறிக்கைகளில் முதலமைச்சர் தன்னைப்பற்றி நாட்டுக்கு பிரகடனப்படுத்துவது முறைதானா என்பதை எண்ணிப்பார்க்கத்தான் நான் இதை சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

இப்படி பல முரண்பாடான அறிவிப்புகள். மதுவிலக்கைத் தீவிரமாக நான் கடைபிடிக்கப் போகிறேன் என்று சொன்ன போதும் தாய்க் குலத்தைத்தான் காட்டினார். மதுவிலக்குக் கொள்கையை நான் தளர்த்தப் போகிறேன் அல்லது மாற்றி அமைக்கப் போகிறேன் என்று சொன்னபோதும் முதலமைச்சர் தாய்க்குலத்தை தான் சான்றுக்கு அழைத்தார்.

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு என்று கருதுகிறேன். அங்கே பேசும்போது முதலமைச்சரவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற ஒரு தாயைப் பார்த்து, இந்தத் தாய் கேட்கிறாளே, மது விலக்குச் சட்டத்தை நீங்கள் தளர்த்தப் போகிறீர்களாமே என்று கேட்கிறார். நான் அவர்களுக்குச் சொல்வேன். சத்தியமாக. உறுதியாக. என் அன்னையின் மீது ஆணையாக அதிலே மாறுதல் எதுவும் இருக்காது; தளர்த்த மாட்டேன் என்று குறிப்பிட்டார்.

ஆனால் கவர்னர் உரைக்கு 4, 5 நாட்களுக்கு முன்பு மது விலக்குச் சட்டத்திலே அல்லது மதுவிலக்குச்சட்ட நடைமுறையிலே பல மாறுதல்கள் செய்யப்பட்டு. 25 ரூபாய் யாரிடத்திலே இருந்தாலும் அவர்கள் தாசில்தார் அலுவலகத்திலே கட்டி, அதற்கான அனுமதியைப் பெற்று எல்லோரும் குடிக்கலாம் என்று ஒரு ஏற்பாடு இன்றைக்கு அமுலுக்கு வந்து, எல்லோரும் குடிக்கலாம்.

அதாவது 25 ரூபாய் கட்டியவர்கள் எல்லாம் குடிக்கலாம் என்ற ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு அதற்கு என்று கடைகள் வேண்டும் அல்லவா. அந்தக்கடைகள் ஏலம் விடப்படும் என்று முதலிலே அறிவிக்கப்பட்டு. இப்போது ஏலம் கூடவிடப்பட மாட்டாது, குறிப்பிட்டவர்களுக்கு அந்தக் கடைகள் கொடுக்கப்படும். அதிலும் குறிப்பாக சாராயக் கடைகள் கூட ஏலம் விடப்பட மாட்டாது. குறிப்பிட்டவர்களுக்குத் தரப்படும் என்கின்ற வதந்திகள் எல்லாம் பரவிக் கொண்டிருக்கின்றன. நான் அதை உறுதிப்படுத்தி செய்தியாகச் சொல்லவில்லை ; அப்படிப்பட்ட வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. எனவே மதுவிலக்கிலே இவ்வளவு தீவிரம் காட்டப்பட்டபோது, ஏற்கெனவே இருந்த சட்டம் போதுமானது. நீங்கள் கொண்டு வருகிற தீவிரச் சட்டங்களை ஆராய்ந்து முடிவு எடுக்க பொறுக்குக் குழுவுக்கு இந்தத் தீவிரச் சட்டத்தை அனுப்பிவையுங்கள் என்று இந்த மாமன்றத்திலே இருந்த அத்தனை பேர்களும் கேட்டபோது, முடியாது என்று மறுத்துவிட்டு, நான் சொன்னால் சொன்னது தான் என்று ஒரே பிடிவாதமாக இருந்துவிட்டு, முதலமைச்சர் வெளிநாடு சென்றிருக்கிறார். வந்த பிறகு அதைப்பற்றி யோசிப்பார் என்று நிதி அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எல்லாம் தந்த உறுதிமொழிகளுக்கெல்லாம் கூட மாறாக அந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றிவிட்டு, நாடு கடத்துகின்ற வகையிலே சட்டத்திலே பல பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு, திடீரென்று 25 ரூபாய் கட்டியவர்கள் எல்லாம் பெர்மிட் பெறலாம் என்ற அளவுக்கு இன்றைக்கு அந்தச் சட்டம் தளர்த்தப்பட்டு, தொய்வு விழுந்த நிலையிலே இன்று இருப்பதை நாம் காண்கின்றோம்.

பிற்படுத்தப்பட்டோருக்கு வருமான வரம்பின் அடிப்படையிலேதான் உரிமைகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது சலுகைகள் அல்ல. சலுகைகள் என்பது வேறு. உரிமைகள் என்பது வேறு என்பதை பலமுறை நான் ஆதாரத்தோடு எடுத்துக் கூறியிருக்கிறேன். சலுகைகள் என்பது இலவசப் படிப்பு போன்றவை. உரிமைகள் என்பது அவர்களுக்கென்று உரிய இட ஒதுக்கீடுகள், ஆனால் இட ஒதுக்கீடுகளுக்கு வருமான வரம்பு 9 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டபோது அதை திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இன்னும் வேறு பல அரசியல் கட்சிகளிலே உள்ள பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் அந்தச் சமுதாய நலனிலே நாட்டம் கொண்டவர்கள் அத்தனை பேரும் எதிர்த்தோம். அப்படி எதிர்த்தபோது நம்முடைய முதலமைச்சரவர்கள் விருதுநகர் விழாக் கூட்டத்திலே பேசினார். அரசாங்க விழா எதுவாக இருந்தாலும் அங்கெல்லாம் அகப்பட்டுக் கொள்கின்ற ஒரே ஒரு இளித்தவாயன். நம்முடைய முதலமைச்சருக்கு நானாகத்தான் இருப்பேன். இது அரசாங்க விழா மக்களுடைய வரிப்பணத்திலே நடத்தப்படுகிற விழா என்ற கணக்குக் கூட எடுத்துக் கொள்ளாமல் அங்கே பேசுகிறபோது சொன்னார். "அண்ணாவயில் எம்.பி.பி.எஸ். பொறியியல் துறையில் இடம் பெற ரூபாய்





9.000 வரை வருமானம் என்று சொல்லியதை கருணாநிதி வேகமாக எதிர்க்கிறார். பொதுக் குழு கூட்டுவோம். போர்க்கொடி தூக்குவோம் என்று கூறுகிறார். இப்போதுதான் அவர் போராட்டம் நடத்துகிறாரா ? முன்பெல்லாம் நடத்தவில்லையா ? ஏதோ முதன் முதலாகப் போராட்டம் நடத்தப் போகிறவர் போல எழுதியிருக்கிறார். பொருளாதாரம்தான் இங்கே முன் நிற்கிறது. சமுதாய ஏற்றத்தாழ்வு பின்னே இருக்கின்றது. ஆனால் இதை எதிர்த்துத்தான் கருணாநிதி பொதுக் குழுவைக் கூட்டுவேன். போராட்டத்தை நடத்துவேன். போர்க்கொடி தூக்குவேன் என்று கூறுகிறார். எந்தக் கொடியை எங்கே நாட்டப் போகிறாரோ தெரியவில்லை. என்ன போராட்டம் நடத்தப் போகிறார் ? இந்த இராமச்சந்திரனை எதிர்த்து போராட்டம் நடத்தப் போகிறாரா ? அல்லது ஆட்சியை எதிர்த்தா என்பதைப் பற்றி சொல்ல வேண்டும். இதற்கும் சில பேர் அவரோடு சேருகிறார்களே, சட்டமன்றத்தில் முன்பு அண்ணா சொன்ன பதிலையே கருணாநிதிக்குப் பதிலாகச் சொல்வது சரியாக இருக்கும். "கருணாநிதியின் போராட்டத்தை மக்கள் முன் வைப்போம். இதற்கு மக்கள் பதில் சொல்வார்கள்" என்று அவர்களுடைய கட்சியின் அதிகார பூர்வமான ஏடாக இருக்கின்ற "அண்ணா" பத்திரிகையிலே 1979-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ம் நாளிலே வெளி வந்திருக்கின்றது.

அடுத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் எழுதியிருக்கிறார். "பாதாள படிக்கட்டிலே இருப்போருக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே கிடந்து நெளியும் புழுக்களாக, உழலும் ஏழைகளுக்கு பிற்பட்ட சமூக எளியோருக்கு துணை புரிகின்ற அறிவிப்புக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவர்கள் மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளாக, முதலாளித்துவத்தின் பிரதிபலிப்புக்களாகத்தான் இருக்க முடியும்" என்று எழுதுகிறார். நாங்கள் எல்லாம் முதலாளிதுவத்தின் பிரதிபலிப்புகள் என்று அவர் கண்டுபிடித்திருக்கிறார், "அரசு அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் அதிகாரியின் மகனுக்குக் கிடைக்காது. ஆனால் அங்குள்ள பணியாளரின் பிள்ளைக்குக் கிடைக்கும். பண்ணையார் மகள் பங்கஜத்திற்குக் கிடைக்காது. கூலி வேலை செய்யும் குப்பன் மகள் வள்ளிக்குக் கிடைக்கும். இதைத்தான் கூடாது. கூடாது என்கிறார் கலைஞர். ஆபத்து. ஆபத்து என்று அபாய மணி அடிக்கிறார் வீரமணி. கலைஞரின் கூற்றுக்கு கல்யாணசுந்தரம் கட்சியும் மத்தளம் கொட்டுவதுதான் வியப்பிலும் வியப்பு. பணக்காரர்களின் எதிரிகளாக இருக்க வேண்டிய கம்யூனிஸ்ட்டுகள் ஏழைகளின் எதிரிகளாக ஆகிவிட்டதைப் பார்க்கும்போது இதை அரசியலாக்க கம்யூனிஸ்ட்டுகள் முடிவு செய்துவிட்டார்கள் என்பது புரிகிறது. அரசியல் உணர்வோடு இதை எதிர்ப்பவர்கள்—நேரடியாகவே முற்பட்ட சமூகத்தில் ஏழைகளாக இருக்கிறார்கள். பசி வந்தவர்களுக்கு ஆத்திரம் வந்தால் சில அரசியல் கட்சிகள் பறந்துவிடும். ஏழைகளின் கோபத்தைக் கிளறாதீர். கடல் கொதித்தால், மலை வெடித்தால், நிலம்

அசைந்தால் தாங்கிட எவராலும் இயலாது '' இது மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்களின் கட்டுரை. '' அண்ணா '' ஏடு 11—7—1979.

இதை விட பொதுச் செயலாளர் நாவலர் விடுத்த அறிக்கையில் புரட்சித் தலைவர் பிற்பட்ட, பின்தங்கியவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று நீண்டு சிந்தித்துதான் புதிய ஆணையைப் பிறப்பித்துள்ளார். இந்தப் புதிய ஆணையைப் பிறப்பித்ததால் புரட்சித் தலைவரவர்கள் தமிழக மக்களின் ஆதரவையும் வரவேற்பையும் நாள்தோறும் அளப்பறிய முறையில் பெற்றுக் கொண்டு வருகிறார்.

(பிற்பகல் 12–10)

தமிழக மக்கள் கலைஞரின் போரரட்டத்தை எதிர்த்து முறியடித்தே தீருவார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கலைஞரின் போராட்ட முயற்சிகள் அனைத்தும் வழக்கம்போல் அடியோடு விழுந்து என்றேனும் ஒரு நாள் அழிந்து ஒழிந்து போகும் என்ற உறுதிப்பாடு தமிழக மக்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கிறது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் நாவலர் கட்டுரை '' அண்ணா '' பத்திரிகையில். 4—8—1979–ல.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு ஆபத்து வந்தால் அரணாக இருப்பார் என்று நான் எதிர்பார்த்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் கூடப் பேசினார் புதுக்கோட்டை என்று கருதுகிறேன். புரட்சித் தலைவர் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓட்டப்பந்தயம் ஓவக்கும்போது அதில் பங்கு கொள்பவர்கள் சமநிலையில் இருக்க வேண்டும். நொண்டியை மற்றவர்களோடு சேர்க்க முடியாதே. அப்படிப்பட்ட நொண்டிகளுக்குச் சலுகை தர வேண்வம். அந்த சலுகை தான் 9,000 வரம்பு. பட்டினி கிடப்பபவர்களும் சலுகை. வயிரார சாப்பிட்டவர்களுக்கும் சலுகையா ? அதனால்தான் புரட்சித் தலைவர் கூட 9,000 வரம்பு என்ற திட்டத்தை அறிவித்தார். இவ்வாறு அவர்கள் கொண்டு வந்த உத்தரவுக்கு அறிவித்த ஆணைக்கு எவ்வளவு வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒன்றைச் சொல்லி அதைத் திரும்ப பெற்றுக் கொள்ளக்கூடாதா என்று கேட்பார்கள். நானே உங்களுக்கு எடுத்து வைக்கிறேன். மதுவிலக்கை ஒத்திவைத்து விட்டு பிறகு மீண்டும் மதுவிலக்கை நீங்கள் கொண்டு வர வில்லையா என்று கேட்பார்கள் மதுவிலக்கை ஒத்தி வைத்த நேரத்தில் மதுவிலக்கு ஒத்தி வைக்க வேண்டிய சூழ்நிலையை சொன்னேனே தவிர அனைவரும் மது அருந்தலாம் அதனால் கெடுதி இல்லை என்று, அதற்காக நான் வாதாடியது கிடையாது. ஆனால் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் திற்கு அதனை பாதிக்கிற உத்தரவை பிறப்பித்து விட்டு அந்த உத்தரவால் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் பாதிக்கப்படும் என்று சொன்ன நேரத்தில் என்ன கேட்டார்கள் ? கருணாநிதியி



னுடைய மகனுக்கும் வீரமணியினுடைய மகளுக்கும் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதே என்றல்லவா பதறுகிறார்கள் ' என்றல்லவா நமது முதல் அமைச்சரைப் போன்றவர்கள் பொறுப்புள்ளவர்கள் பேசினார்கள். தாங்கள் செய்தது நியாயம் புரட்சிகரமான கருத்து என்றல்லவா அவர்கள் சொன்னார்கள். நண்பர் மாரிமுத்து அவர்களே எடுத்துக் காட்டியது போல '' எக்கனாமிக்கலி பேக்வேர்டு '' ஆக இருப்பது என்பது இப்பொழுது எங்கே போய் விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொன்னது 31 சதவீதமாகவே இருக்கட்டும், கை வைக்காதீர்கள். 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அப்படியே இருக்கட்டும் கை வைக்காதீர்கள். மீதம் உள்ள ஜெனரல் காம்பிடிஷன் 51–ல் 10 அல்லது 15 சதவீதம் எடுத்து அதிலே எல்லா வகுப்பினரையும் சேர்த்து பிராமணர்கள் ஆனாலும் அல்லது வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் எல்லா வகுப்பையும் சேர்த்து பொருளாதாரத்திலே பலவீனமானவர்கள், ஏழை எளியவர்களுக்கு இதிலே இடம் ஒதுக்குங்கள் என்று தானே குறிப்பிட்டோம். அதை காதிலே போட்டுக் கொள்ளாமல் போராட்டம் நடத்தப் போகிறார்களா பார்க்கலாம் என்று முரசம் அடித்து விட்டு இன்றைக்கு திடீரென்று ஒரே நாள் அறிவிப்பில் 30-ஐ 50 ஆக ஆக்கியிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒரு கூட்டத்திலே கூட குறிப்பிட்டேன். '' இரண்டு கரண்டி சோறு போடு ஒரு கரண்டி பத்தாது '' என்று கேட்ட நேரத்தில் கோபித்துக் கொண்ட அம்மையார் இந்தா முழுவதையும் எடுத்துக்கொள் என்று அடுக்கஞ் சட்டியையே இலையில் கொட்டிவிட்டு போவது போல் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கோபம் கொண்டு கொடுத்திருக்கிறார்கள். அவருடைய கோபம் பிற்பட்ட சமுதாயத்திற்கு லாபம் என்று '' அதே போல் அதை லாபமாகத்தான் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு 16 என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் 18 ஆக உயர்த்தியது போல 18 என்பதை 21 ஆக உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். அது உயர்த்தப்படவில்லை. அவைகளைப்பற்றி அறிவிப்பதற்கு முன்பாக இந்தச் சட்டமன்றத்திலே விவாதம் நடத்திப் பலருடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு அதற்குப் பிறகு இந்த அறிவிப்பைச் செய்திருந்தால் பல குழப்பங்கள் வராமல் போயிருக்க முடியும். ஆனால் முதலிலேயும் வீம்பு, இப்பொழுதும் அவசரம். ஆகவே வீம்பும் அவசரமும் தான் இந்த அரசை இன்று நிலை குலைய வைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

தேர்தல் காலத்திலே முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் அறிஞர் அண்ணாவினுடைய கொள்கையாகிய மாநில சுயாட்சிக் கொள்கையைச் சொல்கிறோம் கருணாநிதி இப்

பொழுது ஏற்றுக் கொள்கிறாரா என்று கேட்டார்கள். மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற அப்படி ஒரு கொள்கையை அண்ணா அவர்கள் உருவாக்கிய கழகத்தின் கொள்கைத் தத்துவமாக இருந்தது. முதலமைச்சர் அவர்கள் பேசிய தேதி 8-12-1979-ல்.

இதை நான் என்னுடைய அருமை நண்பர் இன்று எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிக்கையை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்திலே சுயாட்சி என்ற தத்துவத்தை உள் அடக்கிய ஒரு தீர்மானம் ஏற்கெனவே ராஜமன்னார் கமிட்டி தந்த அறிக்கையினுடைய அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் குழு கூடி ஆலோசித்து செழியன், மாறன் இருவரையும் அமைப்பாளர்களாகக் கொண்ட அந்தக் குழு தந்த பரிந்துரையை அமைச்சர் அவையில் விவாதித்து சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானத்தை கொண்டு வந்த போது அதை எதிர்த்த கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலச் சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா சொன்னாரா? அந்தத் தத்துவத்தை அண்ணா ஏற்றுக் கொண்டாரா. இல்லவே இல்லை என்று அன்றைக்கு வாதிட்டவர்கள் இந்த அவையில் உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அதைத் திருத்திக் கொண்டு அண்ணா சொன்னார் என்பதற்கு அன்றைக்கே ஆதாரங்களை எடுத்துக் காட்டினோம். அதை இன்றைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சராக இருக்கிற நண்பர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அன்றையதினம் அண்ணா அவர்கள் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லிக்குத் தந்திருந்த பேட்டியையே படித்துக்காட்டி அண்ணா அவர்கள் மாநிலச் சுயாட்சிக்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்துக்களில் மாநிலச் சுயாட்சி என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியதை இந்த அவையில் எடுத்துக் காட்டியும் கூட அண்ணா சொன்னதை அன்றைக்கிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் இந்த அவையிலே ஏற்றுக் கொள்ளவில்லை. எட்மண்ட் அவர்கள் அப்போது சொன்னார்கள்—எட்மண்ட் என்று சொல்வதற்காக மன்னிக்கவும் அப்போது அவர் எட்மண்டாகத்தான் இருந்தார். அதனால் சொல்கிறேன்—அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். கூடுதல் அதிகாரகளை மாநிலங்கள் பெற்றாக வேண்டும் என்று. ஆனால் அந்த அதிகாரங்களை உங்கள் கையில் கொடுக்கக் கூடாது உங்கள்கையில் அதிகொடுப்பதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்என்று



இன்று அமைச்சராக இருக்கும் திரு. எட்மண்ட் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் அதிகாரங்களை கொடுக்கக் கூடாது; மாநில சுயாட்சி என்றிருப்பதால் அது எப்படியிருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை. நீங்கள் கேட்கிற கூடுதல் அதிகாரங்களை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஒத்துக்கொண்டாலும் மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது. கூடுதலான அதிகாரங்கள் தேவை என்று நாங்கள் வலியுறுத்துகிற நேரத்தில் அந்த அதிகாரங்கள் இன்றைக்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் கொடுக்கப்பட்டால் பாதிக்கப்படுகிறவர்கள் இந்த நாட்டிலே இருக்கிற எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்த நாட்டிலுள்ள பொது மக்கள் என்பதை மட்டும் மிகத் தெளிவாக கூறிக் கொள்கிறேன் என்று 20-4-74-ல் இந்தப் பேரவையில் என் அருமை நண்பர் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கிற திரு. எட்மண்ட் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நான் அப்போதே சொன்னேன். எந்தக் கட்சியினுடைய ஆட்சியிடம் கொடுப்பது என்பதல்ல; பிரச்னை தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களும் சுயாட்சித் தன்மையோடு விளங்க வேண்டும்; உண்மையான கூட்டாட்சித் தத்துவம் கருதித்தான் சொன்னோமே தவிர யார் கையில் கொடுப்பது என்பதல்ல. நீங்களே ஆட்சிப் பொறுப்பில் இருந்து மாநிலச் சுயாட்சி தீர்மானத்தை இங்கே கொண்டு வருவீர்களானால் அதை ஆதரிக்கின்ற முதல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கும் என்று இந்த மன்றத்தில் சொன்னேன். நடவடிக்கைக் குறிப்பில் அது ஏறி இருக்கிறது. ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் கொடுக்கக் கூடாது என்று நீங்கள் சொன்னதற்காக இப்போது ஒரு வேளை மாநிலச் சுயாட்சி கொடுக்க மத்திய அரசு முன் வந்தால் நாங்கள் கொடுக்காதே, கொடுத்தால் எங்கள் கையில் கொடு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளரிடம் கொடுக்காதே என்று சொல்கிற குறுகிய மனப்பான்மை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்காது என்பதை மாத்திரம் இந்த அவையில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. இந்த தேர்தலின் முடிவையொட்டி வெளியிலேயும் இந்தத் அவையிலேயும் பல கருத்துக்களும் கூறப்பட்டிருக்கின்றன. இது மாநிலத்தைப் பொறுத்ததல்ல என்ற ஒரு வாதம் பலமாக இங்கே பேசப்படுகிறது. ஆனால் தேர்தலுக்கு முன்பு எடுத்து வைத்த கருத்துக்கள் என்ன? அண்ணா பத்திரிகையில் என்னுடைய அருமைத் தம்பி மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் எவ்வளவு காரசாரமான கட்டுரைகள் எழுதினார்கள் என்பதும் அது அந்தக் கட்சியினுடைய அதிகாரபூர்வமான ஏடு என்பதும் நாடு அறிந்த ஒன்று. அவர் சொல்கிறார். உள்

ஞரிலே செல்வாக்கு இழந்த உதவாக்கரை என ஒதுக்கப்பட்ட கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள்—நல்ல வேளையாக கலைஞர் என்றாவது போட்டார்களே—உதவாக்கரை என்று ஒதுக்கப்பட்ட கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத் திந்தியாவில் வருகிற பொறுப்பை யாரிடம் தருவது என்பதை நிர்ணயிக்க வேண்டிய கடமை தன்னிடம்தான் இருப்பதைப் போல் தருக்கோடு பேசுகிறார். நேருவின் மகளே வருக நிலையான ஆட்சி தருக என்று அனைத்து இந்தியா சார்பாக ஏப் பிரதிநிதிபோல் கருதிக் கொண்டு இந்திரா காந்திக்குக் கட்டியம் கூறுகிறார். அது 5-12-79 அண்ணாவில் வந்த காளிமுத்துவின் கட்டுரை. திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கூட்டணி தனிப்பட்ட எந்தக் கட்சிக்கும் எதிரான கூட்டணி அல்ல; தமிழகத்திற்கே எதிரான கூட்டணி; அதாவது திராவிட முன்னேற்றக் கழகம்—இந்திரா காங்கிரஸ் கூட்டணி என்பது தமிழகத்திற்கே எதிரான கூட்டணி. ஆகவேதான் அதை எதிர்க்க தமிழகத் தலைவர் தலைமையில் அணி அமைந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அணி அவர்களுக்கு புது ஆண்டில் புதுப் பாடம் கற்பிக்கும் என்பது உறுதி. இது காளிமுத்து அவர்கள் 4-12-79-ல எழுதியது.

11-12-79-ல் நமது முதல் அமைச்சர் அவர்கள் பேசியது தலைமை என்றால் ராணுவத்தைப் போல் நாம் பணியாற்ற வேண்டும். அப்படிப் பணியாற்றினால் பா. ரா. எம்.பி. ஆக முடியும். எம்.ஜி.ஆர். மானத்தோடு வாழ முடியும். அவர் எம்.பி. ஆக வேண்டும் நான் மானத்தோடு வாழ வேண்டும் இதை மறந்து விடக் கூடாது. இது முதல் அமைச்சர் பேசியது.

[பிற்பகல் 12–20]

பத்திரிகை உலகத்திலே மிகப் பெரியவர், தலைசிறந்த அரசியல்ஞானி தினமணி ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளன்று, அதாவது தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவருடைய பத்திரிகையிலே எழுதினார் :

'' தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில் இப்போதைய, தேர்தல் பிரச்சினை தி.மு.க. வேண்டுமா, அ.இ.அ.தி.மு.க., வேண்டுமா என்பதே. தமிழ்நாட்டில் ஆளப் போவது ஜனதாவோ, இந்திரா காங்கிரசோ அல்ல. அணி அமைத்துள்ள அ.இ.அ.தி.மு.க. தலைமையும் சரி, தி.மு.க. தலைமையும் சரி, அவரவரது கூட்டணி கட்சிகளுக்கு விசுவாசமாகவே நடந்து வருகிறார்கள்.

இங்கு பிரச்சினை, இந்திரா கட்சியா, ஜனதா கட்சியா என்பதல்ல.



வட இந்திய மாநிலங்களில்—வங்காளம், பஞ்சாப் தவிர, மற்ற எல்லா மாநிலத்து அரசுகளில் ஜனதாவோ, இந்திராவோ அர்ஸ் காங்கிரஸோ பதவிக்கு வர முடியும். தமிழ்நாட்டில் அப்படி அல்ல.

தமிழ்நாடு ஓட்டர்கள் பார்க்க வேண்டியது திரு. மு. கருணாநிதியா, திரு. எம். ஜி. இராமச்சந்திரனா, என்பதுதான் ''

இது '' தினமணி '' பத்திரிகையில் சிவராமன் அவர்கள் எழுதியது. இந்த ஆதாரங்கள் எல்லாம் நடைபெற்ற தேர்தல், நாடாளுமன்றத்தின் மத்தியில் யார் தலைமைப் பொறுப்பை ஏற்பது என்ற கேள்வியின் அடிப்படையிலே நடந்தது என்றாலும் கூட, அதன் துணையாக மாநிலப் பிரச்சினைகளும் அதிலே அடங்கியிருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள்; மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் 1979-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்று 'அண்ணா' இதழில் எழுதுகிறார் :

'' கருணாநிதிக்கு அவரைப் பற்றி மட்டுமே கவலை. ஆனால் புரட்சித் தலைவருக்கு இந்தத் தமிழ் நலம் பற்றி, ஐயாவும், அண்ணாவும் ஆகியவர்களின் கொள்கைகளைப் பற்றிக் கவலை. குட்டி இட்லர், சேலை கட்டிய இட்லருக்கு வக்காலத்து வாங்குகிறார். தமிழகத்தில் குப்பைக் கூடைக்கு போய்விட்ட சரக்கு. கொலு ஏறத் துடிக்கிறது.'' நான் குப்பைக் கூடைக்குப் போய் விட்ட சரக்காம். கொலு ஏறத் துடிக்கிறேனாம். மாண்புமிகு காளிமுத்து, அமைச்சர் அவர்களுடைய மணிவாசகம் இது. '' தமிழகத்தில் குப்பைக் கூடைக்குப் போய்விட்ட சரக்கு கொலு ஏறத் துடிக்கிறது. இட்லர்கள் சகாப்தம் முடிந்துவிட்டது. இரண்டு இட்லர்களும் இனி அரியணை ஏறப் போவதில்லை ''. இது 'அண்ணா' பத்திரிகையில் 1979-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்று திரு. காளிமுத்து அவர்கள் எழுதிய கட்டுரை.

'' 11 ஆண்டுகளாக பிரதமராக இருந்தவர் இந்திரா ; 7 ஆண்டுகள் முதல்வராக இருந்தவர் கருணாநிதி. இவர்களது சொல்லுக்கும், செயலுக்கும் பல முரண்பாடுகள் உள்ளன. இப்படிப்பட்டவர்களால் ஜனநாயகம் காக்கப்பட மாட்டாது. இவர்களுக்கு ஓட்டளித்தால் மீண்டும் தேர்தல் நடப்பதற்கு உத்தரவாதம் இல்லை ''—முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளன்று 'அண்ணா' பத்திரிகையில் வந்த பேச்சு.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எப்போதும் ஆருடம் கூறுவதில் வல்லவர்கள். அவர்கள் மயிலை, மாங்கொல்லை பொதுக் கூட்டத்தில் பேசுகிறார். வருகிற நாடாளுமன்றத் தேர்தல், சென்னையில் மூன்று தொகுதிகளிலும் நாங்கள்தான் வெற்றி பெறுவோம். அந்த அளவிற்கு மக்கள் முதல் அமைச்சர் அவர்கள் பின்னால் இருக்கிறார்கள். இன்னும் ஒரு

வாரத்திற்குள் தி.மு.க. விலிருந்து 7 சட்ட மன்ற உறுப்பினர்கள் விலகி அண்ணா தி.மு.க.வில் சேருவார்கள். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, சட்டமன்றத்தில் 46 ஆக உள்ள தி.மு.க. வின் பலம் 26 ஆகக் குறையும், என்று சொன்னார்கள். அவை முன்னவர் அவர்களுடைய ஆரூடம் பலித்ததா, இல்லை என்பதை அவையை ஒரு முறை உற்றுப் பார்த்தால் தெரியும்.

வாக்காளர் பட்டியலைப் பற்றித் தேர்தல் முடிந்த பிறகு அண்ணா தி.மு.க. தலைவர்கள் எல்லாம் அதில் தவறுகள் நடந்து விட்டதாகச் சொன்னார்கள். ஆனால், தேர்தலுக்கு முன்பு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? சென்னையில், வாக்காளர் பட்டியலில் 6 இலட்சம் பேர்கள் விடப்பட்டிருப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருப்பதைப் பற்றி முதல்வர் அவர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதற்கு முதல்வர் அவர்கள் அளித்த பதில், அதிகாரிகள் வாக்குப் பதிவு செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பணியில் கவனத்தோடு இருந்தார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. வாக்குப் பதிவு செய்யும் அதிகாரிகள் நிச்சயமாக எந்தக் கட்சிக்காகவும், கருணாநிதி சொல்வது போன்ற தவறுகளில் ஈடுபட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், தோல்விக்கு பிறகு நேர்மாறான விளக்கம் அண்ணா தி.மு.க. தலைவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கு நம்முடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் பேசிய நேரத்திலே, வெளியிலே பொது மேடைகளில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்திலும், திண்டுக்கல் இடைத் தேர்தலில் நாங்கள் வெளியிட்ட கருத்துக்களுக்கும், இப்போது கருணாநிதி வெளியிட்ட கருத்துக்களுக்கும் வேறுபாடு உண்டு. ஏனென்றால், திண்டுக்கல் இடைத் தேர்தல் இந்த அரசாங்கத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா, இல்லையா என்ற கேள்வியை முதன்மையாக வைத்துத்தான் தேர்தல் நடைபெறுகின்றது என்று கருணாநிதி அறிவித்தார். ஆகவேதான் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார். மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் கோவிந்தராசன் அவர்களும் இந்த அவையில் சொன்னார். ஆனால், திண்டுக்கல் தேர்தலுக்குப் பின்பு, 1973-ம் ஆண்டு, மேத் திங்கள் 8-ம்நாளன்று கோவையிலே நடைபெற்ற "மே' தின விழாக் கூட்டத்திலே நான்பேசும்போதுசொன்னேன். "தேர்தல்கள் ஒரு நாட்டின் வரலாற்றில் புரண்டு விடக்கூடிய சில பக்கங்கள். அதிலே திண்டுக்கல் இடைத் தேர்தல் அப் பக்கத்தில் தேடிப் பார்க்க வேண்டிய ஒரு வரி. அவ்வளவுதான். பொதுத்தேர்தல் என்பது ஒரு பக்கம். இடைத் தேர்தல் என்பது ஒரு வரி. ஆகவேதான், இதில் அதிக கவனம் செலுத்த விரும்பவில்லை" என்று நான் குறிப்பிட்டேன்.



அது மாத்திரமல்ல. அந்த இடைத் தேர்தலுக்கு முன்பு நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். "திண்டுக்கல் தேர்தலில் உங்கள் கட்சிக்கு நேர் எதிர்க் கட்சி எது? நான் சொன்ன பதில்—களத்தில் இருக்கும்போது எங்களுக்கு சரிநிகர் போட்டி யார் என்பதைத் தெரிவிப்பது தேர்தல் தந்திரமாகாது. திண்டுக்கல் தொகுதியைப் பொறுத்த வரை சரிநிகர் பலம் உள்ளவர்கள் யார் என்பதைச் சொல்ல விரும்பவில்லை. ஒரு தொகுதியில் காணப்படுகிற பலம் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல தமிழ்நாடு முழுமைக்கும் காணப்படுகிற பலம் என்று கருதிக் கொள்ள இயலாது. இது 1973-ம் ஆண்டு மேத் திங்கள் 4-ம் நாளில் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. "முரசொலி" பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால் திண்டுக்கல் தேர்தல் முடிந்த பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போது எதிர்க்கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்த என்னுடைய இனிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் "தென்னகம்" பத்திரிகையில் விடுத்த அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார்? 'கருணாநிதி சர்க்காருக்கு தமிழகத்தின் நாலரைக் கோடி மக்கள் அளித்த அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். இந்த அராஜக லஞ்ச ஊழல அரசு மக்களின் திட்டவட்டமான தீர்ப்புக்கு எதிராக இனி ஒரு விநாடியும்பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க எந்தவிதமான அருகதையும் இல்லை என்ற தமிழகமக்களின் தீர்க்கமான முடிவின் எடுத்துக் காட்டுத்தான் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அண்ணா தி.மு. கழகத்திற்குத் தமிழக மக்கள் அளித்த ஆதரவு ஆகும். திண்டுக்கல் தீர்ப்பு நியாயமான சில பிரச்சினைகளுக்கு உடனடி பரிகாரம் காண "இந்தியப் பேரரசுக்கும் கருணாநிதி கட்சிக்கும் கட்டளையிட்டிருக்கிறது. என்ன கட்டளை தெரியுமா? 'இந்தியப் பேரரசு சுணக்கமின்றி உடனடி விசாரணைக் கமிஷனை அமைத்து திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பதவியில் இருந்து விலக்க வேண்டும்." திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் தென்னகம் பத்திரிகையில் அறிக்கை விட்டார். எல்லாப் பத்திரிகைகளிலும் அந்த அறிக்கை வந்தது. இந்தியப் பேரரசு சுணக்கமின்றி விசாரணைக் கமிஷனை அமைத்து தி.மு.க. அரசைப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமென்று சொன்னார்.

நாங்கள் சொல்லுவதெல்லாம்—நீங்கள் பதவியில் நீடிப்பது நியாயம் அல்ல என்றுதான் சொல்லுகிறோம். நீங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டீர்கள். விசாரணைக் கமிஷன் வையுங்கள் விசாரணைக் கமிஷனை வைத்துவிட்டு இந்த அரசாங்கத்தை உடனடியாகப் பதவியில் இருந்து விலக்குங்கள் என்று மத்திய அரசுக்கு நீங்கள் அன்றைக்குச் சிபாரிசு செய்தீர்கள். கருணாநிதி சர்க்காருக்கு தமிழகத்தின் நாலரைக் கோடி மக்கள் **அளித்த** அங்கீ

காரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். இனி ஒரு விநாடி கூட பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க எந்த விதமான அருகதையும் இந்த அரசுக்கு இல்லையென்ற தமிழ்மக்களின் தீர்க்கமான முடிவின் எடுத்துக் காட்டுதான் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.கழகத்திற்குத் தமிழக மக்கள் அளித்த மகத்தான ஆதரவாகும்.

என்னுடைய அன்புக்குரிய பெரியவர் கலியாணசுந்தரம் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திண்டுக்கல் தேர்தல் முடிந்ததும் வெளியிட்ட அறிவிப்பு—கருணாநிதியின் ஜனநாயக விரோதப் போக்குக்கு மாபெரும் அடியாகவே திண்டுக்கல் தேர்தல் முடிவு அமைந்திருக்கிறது. இந்த ஆட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை திண்டுக்கல் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டி விட்டது. தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு அ.தி.மு.க. பெற்றுள்ள வெற்றி, அசெம்பிளியில் கருணாநிதிக்குள்ள மெஜாரிட்டி உண்மை நிலைக்குப் பொருத்தமானது அன்று என்பதற்கும் கருணாநிதி சர்க்கார் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதற்கும் அத்தாட்சியாகும் '—எம் கல்யாணசுந்தரம், நிருபர்களுக்குப் பேட்டி தென்னகம், நாள் 1973-ம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள்.

பி. இராமமூர்த்தி அவர்கள் கொஞ்சம் சூடாகவே பதில் அளித்தார்கள் 'கருணாநிதியே உடனே ராஜினாமா செய்'— "தென்னகத்தின்' தலைப்பு இது 'அரசில் சட்டத்தை மேற்கோள் காட்டி சாக்குக் காட்டி ஐந்து ஆண்டுக் காலம் அதிகாரத்திலே நீடிக்க உரிமையுண்டு என்றெல்லாம், முதலமைச்சர் கூறுவதன் மூலம் தமிழக மக்கள் தி.மு.க.வை நிராகரித்து விட்டதை மறைக்க முடியாது. முதலமைச்சர் கருணாநிதிக்கு வெட்கமும், அரசியல் நாணயமும் சிறிதேனும் இருக்குமானால் ராஜினாமாச் செய்து சட்டசபையைக் கலைத்து விட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன் வர வேண்டும். ஒரு இடைத் தேர்தல் முடிவுக்கு ராமமூர்த்தி சொன்னது—முதலமைச்சருக்கு வெட்கமும், அரசியல் நாணயமும் சிறிதேனும் இருக்குமானால் ராஜினாமாச் செய்து சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன் வரவேண்டும். இது பி. ராமமூர்த்தி அவர்களின் அறிக்கை தென்னகத்தில் 1973-ம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள் வெளியானது.

மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் பாலசுப்பிரமணியம் அவர்கள். . . .

திரு. என். சங்கரய்யா : ஏற்கெனவே இந்த விஷயம் வரும்போது தோழர் கோவிந்தராஜன் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். மீண்டும் அதையே கூற விரும்புகிறேன். திண்டுக்கல் தேர்தல் நடந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லப்பட்டது "எங்களுக்கு திண்டு; கல் உங்களுக்கு; என்று சொல்லப்பட்டது மட்டுமல்ல மிகக் கொடுமையான பலாத்



காரம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவரை ஆதரித்த எங்களைப்போன்ற கட்சிகளுக்கு எதிராக திண்டுக்கல் நகரத்திலேயே நடத்தப்பட்டது என்பது உலகறிந்த இரகசியம். அப்படிப்பட்ட ஒரு நேரத்தின் இறுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்தத் தேர்தல் முடிவு பெற்ற பிறகு இன்றைக்குத் தாங்கள் சொல்வதுபோல் அதற்காகப் பொதுக்கூட்டங்களை நடத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தி கவர்னரிடத்தில் மனுக் கொடுத்து இந்த அரசாங்கத்தை நீங்கள் டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. தாங்கள் எழுப்பிய கவாலுக்குப் பதிலாகச் சொல்லப்பட்டது அந்த அறிக்கையே தவிர அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் ராஜினாமாச் செய்யவேண்டுமென்றோ அல்லது போகவேண்டுமென்றோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதைத் தொடரவில்லை என்பதையும் தாங்கள் சொல்லிக் கொண்டிருப்பது அதற்கு நேர்மாறானது என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 12-30]

திரு. மு. கருணாநிதி : ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று மென்மையாகச் சொல்லவில்லை. முதலமைச்சருக்கு வெட்கமும் அரசியல் நாணயமும் இருந்தால் ராஜிநாமாச் செய்து சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன்வர வேண்டுமென்றுதான் பி. இராமமூர்த்தி சொன்னார். இது மென்மையான வார்த்தை என்று திரு. சங்கரய்யா சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் திண்டுக்கல் தேர்தலுக்கு முன்பு நான் சொன்னதைப் படித்துக் காட்டினேன். இது இந்த அரசாங்கத்தை அங்கீகரிக்கிறீர்களா இல்லையா என்பதற்காக வைக்கப்பட்ட தேர்தல் அல்ல; இது ஒரு இடைத் தேர்தல்தான் என்று குறிப்பிட்டேன். அவைகளை எல்லாம் நான் முதலிலேயே படித்துக் காட்டினேன். அதை திரு. சங்கரய்யா அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன்.

அன்றைக்கு இன்னொன்றும் சொன்னார் நம்முடைய முதலமைச்சர், ஒரு அருமையான உதாரணம், திண்டுக்கல் தொகுதியின் முடிவு தமிழகத்தின் முடிவாகாது என்று கூறுகிறவர்களுக்கு பணிவன்போடு நான் கூறிக்கொள்கிறேன், அண்ணா இருந்தபோது அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்துகொள்வதாமா கூடாதா என்று திருச்சி நகரத்தில் நடந்த கழக மாநாட்டுக்கு வந்த மக்களிடம் வாக்குகள் பெற்று அதையே தமிழகத்தின் முடிவாக ஏற்றுக்கொண்டார்கள், தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் பெரும்பான்மை முடிவு என்று சொல்லை முன்வருவார்கள், தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான தொண்டர்கள், ஆதரவாளர்கள் இருந்தார்கள், அத்தனை பேரிடமிருந்தும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற பிறகுதான் முடிவு செய்ய வேண்டுமென்று அண்ணா காத்திருக்கவில்லை, மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் போட்ட வாக்கு

களை வைத்தே தேர்தலில் நிற்பது என்று முடிவு செய்தார். அதைப்போலவே நீங்கள் ஒரு இடைத் தேர்தலை வைத்தே ராஜிநாமாச் செய்யவேண்டுமென்ற கருத்தை முதலமைச்சர் அப்போது எடுத்துச் சொன்னார்.

அது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொன்னார், "கோவையிலும் புதுவையிலும் நடைபெற்ற தேர்தல்களில் இன்றைய ஆளுங்கட்சி ஒட்டுமொத்தமாக மக்களால் புறக்கணிக்கப்பட்டு விட்டது, மக்கள் நம்பிக்கையை இழந்து அரசியல் தார்மீகத் தகுதிகளை இழந்துவிட்ட நிலையில் இந்த மன்றத்தில் கருணாநிதி பட்ஜெட்டை எப்படிப் படிக்கலாம் என்று ஹாண்டே கேட்டார், ஹாண்டே எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனை முக்கியமானது என்று கூறி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு. கே.டி.கே. தங்கமணி அதை ஆதரித்தார்". அதாவது, பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று இங்கே டாக்டர் ஹண்டே சொல்லி அன்றைய தினம் அதை எதிர்த்தார். மக்களுடைய ஆதரவை கோவையிலும், புதுவையிலும் இழந்துவிட்டீர்கள். நீங்கள் பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று கூறி, திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் ஆதரித்து ஆமாம் பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று ஒரு பெரிய அமளியே இந்த அவையிலே நடைபெற்றது. நான் கேட்கிறேன். அப்போது, புதுவையிலே நாங்கள் 3 இடங்களையாவது பெற்றிருந்தோம், 1974 ஆம் ஆண்டு தேர்தலில். அதற்கே பட்ஜெட் படிக்கக் கூடாது என்றால் புதுவையிலே இப்போது எந்த இடத்தையும் பெறாத அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பட்ஜெட்டைப் படிக்கலாமா என்ற சந்தேகத்தைதான் நான் கேட்க விரும்புகிறேன். அதற்காக நீங்கள் படித்தால் நீங்கள் படிக்கக் கூடாது என்று நிச்சயமாக பண்பற்ற முறையில் நான் சொல்ல மாட்டேன்.

புதுவை, கோவை தேர்தல்கள் மூலம் மக்கள் கருணாநிதி கட்சியை அறவே புறக்கணித்துவிட்ட உண்மை வெளிப்படுகிறது. மக்கள் என்றைக்கோ அளித்த ஆதரவை வைத்துக்கொண்டு மக்களைத் தொடர்ந்து ஆளும் உரிமை இருப்பதாக கருணாநிதி பேசுவது ஜனநாயகம் அல்ல. உடனே ராஜிநாமாச் செய்வதுதான் மக்கள் தீர்ப்புக்கு மரியாதை செலுத்துவதாக இருக்கும். சமநீதி என்ற பத்திரிகை வெளியீட்டு விழாவில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், இன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட கருத்து, தென்னகத்திலே 1964 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாளில் வந்திருக்கிறது.

பிறகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய இல்லங்களுக்கு எல்லாம் சென்று அந்த உறுப்பினர்களை எல்லாம், நீங்கள் நாஜிநாமாச் செய்யுங்கள் என்று, கிட்டத்தட்ட 170-180 திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு ஆங்காங்கு பேரணி நடத்தி ராஜிநாமாச் செய்யுங்கள் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.



அது மாத்திரமல்ல. ஊர்வலம் நடத்தலாமா என்று திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சிக்கும் நமக்கும் இருக்கிற வம்பு என்று நான் சொல்லவில்லை, உங்களுக்கும் எங்களுக்கும் தகராறு இருப்பதாக நான் கூறவில்லை. நான் கூறுவது எல்லாம் நம்பிக்கை இழந்த பின்னும் நாடாள்வதா என்ற தலைப்பைப் போட்டு அன்றைய திளம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரே ஏடாக அதிகாரப் பூர்வமான ஏடாக விளங்கிய தென்னகத்தில் 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளில் எழுதிய வாசகத்தை மட்டும் நான் படிக்கிறேன். மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்குச் சென்றீர்கள். மக்களை மறந்து லஞ்ச நாயகர்களாக ஆனீர்கள் இன்று நாடெங்கும் மூண்டு இருக்கும் எதிர்ப்பை அடக்க அராஜகம் நடத்துகிறீர்கள், இனியும் நீங்கள் எங்களுக்குப் பிரதிநிதிகள் அல்ல, எங்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்க விரும்பினால் நம்பிக்கை இழந்த ஊழல் அரசினை கருணாநிதி அமைச்சரவையை பதவியிலிருந்து விலக்க தீர்மானம் நிறைவேற்றுங்கள், இல்லையென்றால் கருணாநிதி ஆட்சியை அகற்ற முடியாது என்றால் எங்களுக்கு பிரதிநிதிகளாக நீங்கள் இருக்க முடியாது. எனவே, மக்கள் வாக்குகளை இழந்த திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினரே பதவியை ராஜிநாமாச் செய்க என்று வாக்காளர் பேரணி முழங்க இருக்கிறது. அண்ணல் வழி நடக்கும் ஆற்றல் மறவர்களே, அண்ணாவின் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்த பொம்மை அரசை வெளியேற்ற கருணாநிதி ஆட்சியை விலக்கு, இன்றேல் விலகு என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டளையிட வாக்காளப் பெரு மக்களே பெருந்திரளாகப் பேரணியில் கலந்துகொள்வீர். ஜனநாயகம் தழைக்க அராஜகம் அழிய லஞ்ச ஊழல் ஒழிய அணி திரள்வீர். இது ஊர்வலத்திற்காக அன்றைய தினம் எழுதப்பட்ட ஒரு வாசகம் ஆகும். அராஜக அடக்குமுறை ஆட்சிபுரியும் கருணாநிதி அரசு வருகின்ற நவம்பர் 13 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன் பதவி விலக வேண்டும். இல்லையேல் நாட்டில் மக்கள் கொந்தளிப்பு ஏற்படும். இது எம். கல்யாணசுந்தரம் அவர்கள் "தென்னகத்திலே" 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் தேதியன்று வெளியிட்ட அறிக்கை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : யார் ஐயா உட்கார் என்று சொன்னது. மறுபடியும் உட்கார் என்று யாரும் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்கார் என்று யார் சொன்னது? நான் காதால் கேட்டுவிட்டுப் பிறகுதான் சொல்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும். உங்களுக்குள்ளே பேசிக் கொள்ளாதீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மூன்று முறை எங்கள் கட்சியைப்பற்றி குறிப்பிட்ட பிறகு நான் எழுந்திருக்கிறேன். இடையிலே குறுக்கிட விரும்பவில்லை. இடைத் தேர்தலில் திண்டுக்கல் தேர்தலாக இருக்கலாம். சோவை தேர்தலாக இருக்கலாம். இந்தத் தேர்தல்களில் ஆட்சியைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றி கொள்கையாக வைத்துதான் நாங்கள் தேர்தலிலே போட்டியிட்டோம். ஆகவேதான் அந்த இடத்திலே இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டோம். இப்பொழுது பாராளுமன்றத்தில் தேர்தல் ; காங்கிரஸ் கட்சிக்கும் ஜனதா கட்சிக்கும் தான் பிரதானமான முரண்பாடு. அந்தத் தேர்தலையும் இந்தத் தேர்தலையும் ஒன்றாகப் பார்க்கிறார்களா என்று நான் அவரைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : திண்டுக்கல்லில் நடைபெற்றது சட்டமன்றத் தேர்தல் அல்ல ; அதுவும் பாராளுமன்றத் தேர்தல்தான்.

இறுதியாக ஒரு அறிக்கை. நம்முடைய இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் விடுத்தார். அந்த அறிக்கையில்

"நாளைக் கடத்தாதீர்"—அறிவுரை எங்களுக்கு அப்பொழுது. அச்சுறுத்தல் நீலிக் கண்ணீர் வடித்தல் ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என்ற தவறான நம்பிக்கையில் தொடர்ந்து பொய்களையே வாரி இறைத்தல் போன்றவைகளில் நாளைக் கடத்தாமல் முழு வெறுப்படைந்த மக்கள் சந்தேகத்தோடு உள்ள நண்பர்கள்; ஆத்திரப்பட்டுள்ள நீதியைக் காப்பாற்ற விரும்பும் அதிகாரிகள் லஞ்ச ஊழல்களால் தன்னம்பிக்கையற்றுப்போன உங்கள் இதயம் இவைகளுக்கு இடையில்—அதிகாரிகள் எல்லாம் இழுக்கப்பட்டிருக்கிறார்கள் அப்பொழுது—இவைகளுக்கு இடையில் எத்தனை நாளைக்குத் தமிழக மக்களைக் கொடுமைப்படுத்தி சுகமாக வாழ்ந்து விட முடியுமென்று கனவு காண்கிறீர்கள். தமிழக மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உடனடியாக ராஜீனாமாச் செய்து பொதுத் தேர்தலில் மக்களைச் சந்தியுங்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. அதற்கு அனைவரும் தலை வணங்குகிறோம்."

இது அன்றைய தினம் இன்றைய முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து "நாளைக் கடத்தாதீர்" என்று எச்சரிக்கை விடுத்துச் சொன்ன அறிக்கையாகும்.

நான் இவைகளை யெல்லாம் படிப்பதன் மூலம், நீங்கள் உடனடியாக இராஜீனாமாச் செய்யுங்கள் என்று நான் இப்பொழுது இந்த மன்றத்திலே சொல்ல விரும்பவில்லை ; அல்லது இந்த ஆட்சியைக் கலையுங்கள் என்று நான் மத்திய சர்க்காரிடதித்திலே போய் பரிந்துரை செய்யப் போவது இல்லை.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நான் கேட்கிறேன் நீங்கள் எடுத்து வைத்த வாதங்களுக்கு நீங்கள் அளிக்கின்ற பதில் என்ன ? நீங்கள் எடுத்து வைத்த வாதத்திலே கடைசியாகச் சொன்னீர்களே, அதையே திரும்பப் படிக்கிறேன் :

" அச்சுறுத்தல் நீலிக்கண்ணீர் வடித்தல் ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என்ற தவறான நம்பிக்கையில் தொடர்ந்து பொய்களையே வாரி இறைத்தல் போன்றவைகளில் நாளைக் கடத்தாதீர்கள். முழு வெறுப்படைந்த மக்கள் சந்தேகத்தோடு உள்ள நண்பர்கள், ஆத்திரப்பட்டு நீதியைக் காப்பாற்ற விரும்பும் அதிகாரிகள் லஞ்ச ஊழல்களால் தன்னம்பிக்கையற்றுப் போன உங்கள் இதயம், இவைகளுக்கு இடையில் எத்தனை நாளைக்குத் தமிழக மக்களைக் கொடுமைப்படுத்தி, சுகமாக வாழ்ந்து விட முடியுமென்று கனவு காண்கிறீர்கள். தமிழக மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உடனடியாக ராஜீனாமா செய்து பொதுத் தேர்தலில் மக்களைச் சந்தியுங்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. அதற்கு அனைவரும் தலை வணங்குவோம்."—

நம்முடைய எம்.ஜி.ஆர். அவர்களுடைய அதே இனிய வாசகத்தை இங்கே நினைவுபடுத்தி அமர்கிறேன்.

[பிற்பகல் 12-50]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய அறிக்கையின்மீது நன்றி கூறுகின்ற தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இங்கே இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கவனிக்க வேண்டியதும், அவர்கள் சொல்கின்ற குறைபாடுகள் திருந்த வேண்டிய நிலைமையிலே, இருக்கின்ற குற்றம் சாட்டப்படுகின்ற சூழ்நிலைமையிலே இருக்கின்ற நிலைமைகள் இவைகளை எல்லாம் கவனித்து உண்மையிலே அவைகள் இருக்குமானால் அதைச் செய்து தீரவேண்டிய பொறுப்பிலே இருக்கின்றவர்கள்தான் இங்கே ஆளுகின்ற பதவியிலே இருக்கின்றோம் என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

இந்த ஆளுநர் அறிக்கையின்மீது முதலில் தங்களுடைய கட்சிகளின் சார்பாக கலந்து கொள்ளவில்லை; தங்களுடைய கண்டனத்தை வெளியிட விரும்பி வெளிநடப்புச் செ[illegible] து தங்களுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உள்ளம் திறந்து அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை எல்லாம் எடுத்துக் காட்[illegible] விரும்பு எதையெல்லாம் வெளிப்படுத்த வேண்டுமென்று

கிறார்களோ அதையெல்லாம் எடுத்துச் சொல்லி விவாதத்திலே கலந்து கொண்டதற்காக அமைச்சரவையின் சார்பாக நான் நன்றி கூறிக்கொள்ளுகின்றேன்.

குற்றச்சாட்டுகள் குறை கூறுவது என்கின்ற வகையில் பல்வேறு பிரதிநிதிகள் இங்கே தொழிலாளர் பிரச்னை, விவசாயிகள் பிரச்னை இதைப் போன்று பல்வேறு பிரச்னைகளைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக, அவைகளுக்கெல்லாம் தனித்தனியாகப் பதில் சொல்லி, நேரத்தை நீட்டிக் கொண்டு செல்ல விரும்பாமல், எதை, எதை நாங்கள் செய்தோம் என்பதைப்பற்றி கோடிட்டுக் காண்பித்திருக்கின்றோம், ஆளுநர் உரையில் என்பதையும் சொல்லி, எதை, எதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோமோ அவைகளை அவ்வப்போது வெளியிடுகின்றோம் என்பதையும் இங்கே வெளியிட்டிருக்கின்றோம் என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குற்றச்சாட்டுகளை வெளியிடும்பொழுது ஆத்திரம் மேலிட்டு சொல்லுகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்படலாம். அறிவாற்றலோடு புள்ளி விவரங்களோடு, ஆராய்ச்சிப் பக்குவத்தோடு வெளியிடுகின்ற திறமையும் இருக்கலாம். தாங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ப தங்களிடம் இருக்கின்ற ஆதாரங்களை எடுத்து வைத்து இந்தச் சூழ்நிலைகளில் இவைகளெல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லும்போது அதற்கேற்ப அவர்களுடைய திறமை வெளிப்படுகிறது என்றாலும் விவாதத்திலே திறமை காட்டுவதால் மட்டும் உண்மை அப்படியே வெளி வந்து விடுகிறது என்று நம்ப வேண்டிய அதை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை சில சமயம் நமக்கு ஒத்துழைக்கக் கூடியதாக அமைவதில்லை என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய வேண்டுமென்பதை எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். என்ன என்ன செய்திருக்கின்றோம் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். நாங்கள் செய்த நன்மைகளைப் பற்றிப் பேசியவர்களுக்கு தாங்கள் நன்றி கூறுவதும் என்னென்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்களோ அவர்களுக்கு நாங்கள் அதிலே அக்கறை காட்டுவோம் என்ற உத்தரவாதத்தைத் தருவதும் எங்களுடைய கடமை என்பதை உணர்ந்து இந்தக் கருத்தை வெளியிடுகின்றேன்.

கோரிக்கைகள் வைப்பது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற நிலைமையில் ஏன் தாமதம் ஆகிறது என்ற கேள்வியை எழுப்பி பதில் பெற முயற்சிப்பதெல்லாம் மிக மிகத் தேவையான ஒன்று என்பதை நான் மறுக்கத் தயாராக இல்லை. பல இலாகாக்களை என் கையிலே வைத்துக் கொண்டு அந்த



இலாகாக்களைப் பற்றிய பதில் பெற வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்குப் பதில் கிடைக்க முடியாமல் நான் வராமல் இருக்கிறேன் என்ற குற்றச்சாட்டை எப்பொழுதும் போல் இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, ஏனென்றால் அந்தப் பிரச்னைகள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் பேரவைச் செயலர் என்ற ஒருவரை இங்கே பதவி ஏற்கச் செய்து நான் வராத நேரத்தில் அந்தப் பதிலை இங்கே தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய நிலைமைகள் இருந்தும் பயன்படவில்லை என்று கருதுவாரானால், அது போதாது என்று கருதுவாரானால் எதிர்காலத்தில் எந்த முறையைக் கடைபிடித்தால் திருப்தி ஏற்படுமோ அதைக் கடைபிடிக்க இந்த அரசும் நானும் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

பிரச்னைகள் உருவாவதும் அதற்குப் பரிகாரம் தேட முயற்சிப்பதும் தனி மனிதனுக்கே உள்ள நிலைமை என்று ஆகும்போது ஒரு அரசுக்கு அது ஏற்படாது என்று சொல்வதற்கில்லை என்பதை அனுபவப்பட்டவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சில திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பி அதைக் கொள்கையாகவும் ஏற்று, அதிலும் தன்னுடைய உயிர்க் கொள்கையாக ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் அதை நிறை வேற்றவேண்டும்; நிறைவேற்றக் கூடிய தகுதியில் உட்கார வைக்கப்பட்டு அந்த வாய்ப்பும் தரப்பட்டு அந்த உணர்விலே நிறைவேற்ற வேண்டுமென்று முன்னுக்கு வரும்போது சிலர் கருத்து வேறுபாடுகள் கொண்டு தங்களுடைய எண்ணங்களை, தங்களுடைய கருத்துக்களை வெளியிடுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்கிற கடமை உணர்வில் பற்று வைத்திருக்கின்ற அந்தப் பிடிப்பில் நாங்கள் முயற்சிக்கும்போது அது சோதனையாக மாறி எதிர்பார்த்ததற்கு மாறாக விளைவுகள் விபரீதமாகும்போது அதைப் பற்றிச் சிந்தித்து மாற்று நிலைமைகளை உருவாக்குவதற்கு முன்வருவது ஜனநாயகத்தில் மிக மிகத் தேவையான ஒன்று என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்பதிலே எனக்கு ஐயம் இல்லை.

ஒரு தனி மனிதன் ஆட்சிக்கு வந்து ஒரு கட்சியின் சார்பாக முதலமைச்சராக நான் இருந்தாலும் கூட ஒரு கட்சி என்ற ரீதியிலே ஆட்சிக்கு வந்தபிறகு தனி மனிதர் ஆட்சி என்று இல்லாமல் எங்கள் கொள்கையை என் மூலமாக அமைச்சரவை அல்லது எங்கள் கட்சி அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிற இலட்சியம் அவைகள் எனக்குக் கட்டளையிட்டால் அல்லது ஒத்துழைத்தால் நான் அதை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பும்போது தீவிரமாக முற்படுவது தவறு என்று கருதுவது அவரவர்களுடைய கருத்துக்கேற்ப மாறுபட்ட நிலைமையில் எண்ணங்கள் விளக்கங்கள் வெளிப்படுத்தப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மது விலக்கைப் பொறுத்தவரையில் நான் இன்னும் எவ்வளவு தீவிரமாக இருக்கிறேன் என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்காது என்பதிலே எனக்கு ஐயம் இல்லை. நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டேன் என்று யாரும் எண்ணவில்லை என்பதை நான் புரிந்து கொள்ளும்போது உண்மையிலேயே நான் மன ஆறுதல் அடைகின்றேன்.

இங்கே பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது எச்சரித்ததை நான் மறக்கவில்லை. எச்சரிக்கப்பட்டேன் விபரீதம் விளையும் என்றார்கள். சட்டம் விபரீதத்தின் உச்ச கட்ட நிலைக்கு நிரபராதிகளைக் கூட இழுத்துச் சென்று விடும் என்ற கருத்துக்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள். ஆனால் எப்படியாவது அந்த மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக நிறைவேற்றி மக்களுக்கு நன்மை விளைவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று என்னுடைய ஆசையின் விளைவாக எங்கள் அமைச்சரவையின் ஒப்புதலோடு எங்கள் கட்சியின் அனுமதியோடு நாங்கள் நடவடிக்கை எடுக்க முற்பட்டபொழுது அந்தச் சட்டம் வருவதற்கு ஒரு சில மாதங்கள் அல்ல—ஒன்றிரண்டு ஆண்டுகள் என்று கூடச் சொல்லலாம்; அது $1\frac{1}{2}$ ஆண்டு என்று கூடச் சொல்லலாம்—அந்தக் காலக்கட்டத்தில் நான் பலமுறை மேடையிலே பேசும்பொழுது சட்டம் கொண்டு வரப்படும் கடுமையாக இருக்கும், ஆகையால் ஒவ்வொருவரும் இந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்வது மிகமிகத் தேவை என்று நான் சொல்லி இருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் நான் எடுத்துச் சொல்லிய பிறகு அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும் அவர் அந்தத் தவறுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்ற வகையில் அந்தச் சட்டத்தினால் வருகின்ற தண்டனைகளை தொல்லைகளை அனுபவித்தாக வேண்டுமென்பதை நான் பலமுறை சொல்லியதற்குப் பிறகு அது அமுலாக்கப்படுவதற்கு இங்கே வழிவகை காணப்பட்டது. ஆனால் உண்மையிலேயே நான் அதை அமுலுக்குக் கொண்டு வந்த பிறகு மக்களிடையே இருந்த எண்ணம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததோ இந்தச் சட்டம் வந்துதான் தீர வேண்டும் அமுலாக்கப்பட வேண்டுமென்று எந்தத் தாய்மார்கள் வாழ்த்தினார்களோ பாராட்டினார்களோ அந்தத் தாய்மார்களே கண்ணீர் விடக்கூடிய அளவில் விபரீதமாக நிலைமைகள் உருவாக்கப்பட்டதை எண்ணி கலங்கிய பிறகு வேதனைப்பட்ட பிறகு அந்தத் துன்பங்களிலிருந்து தவிர்ப்பதற்கு அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற வகையில்தான் சில திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோமே தவிர, அடிப்படையாக மதுவிலக்கு என்கிற கொள்கையை விட்டுவிடுவது என்பதோ, அதை ரத்து செய்வது என்பதோ, இந்த அரசின் கொள்கை அல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.





ரூ. 25 கொடுத்தால் யார் வேண்டுமென்றாலும் குடிப்பதற்கு, பர்மிட் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னால் குடிப்பதற்காக அல்ல என்பதை நான் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன். பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ள வேண்டுமென்று. இதே அவையில் சொல்லப்பட்டது வீட்டிற்குள்ளே எல்லாம் படுத்திருப்பவர்களை வெளியே கூப்பிட்டு கைது செய்கின்றார்கள் படுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வீட்டிலே நிம்மதியாகத் தூங்குகின்றவர்களுக்கு அமைதி இருக்க வழியில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைய தினம் இந்தச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே கண்ணியமாக வாழ்கின்றவர்கள் கூட நிம்மதியாக வாழ முடியவில்லை என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது என்பதை உணரும்போது நான் சட்டம் கொண்டு வந்து விட்டேன், அந்தக் கொள்கை எனக்குப் பிடித்திருக்கிறது, ஆகவே யாரை எந்தத் துன்பத்திற்கு ஆளாக்கினாலும் கவலையில்லை, அதைச் செய்தே தீர வேண்டுமென்கிற நிலைமையில் அந்த யதேச்சாதிகார உணர்வில் நான் அப்படியே செயல்படுவதற்கு, நான் எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கையின் வழிமுறை எனக்கு உதவவில்லை யென்பதும் அந்த உணர்வில் நான் சொன்னதெல்லாம் சரி, செய்ததெல்லாம் சரிதான் என்கிற நிலையிலே அதை நடத்துவிக்க நான் முற்படவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில்தான் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன; சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

நான் சில நாட்களுக்கு முன்பு பேசியபோது கூட ஒரு இடத்தில் குறிப்பிட்டேன். 25 ரூபாய் கொடுத்து பர்மிட் வாங்கிக் கொள்ளுங்கள் என்பது, நீங்கள் குடியுங்கள் என்பதற்காக அல்ல; குடிக்காதவர்கள் குற்றம் செய்யாதவர்கள் எப்போது நம்மீது வீண்பழி சுமத்தப்படுமோ என்ற அச்சத்தில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பாதுகாப்புக்காகத் தரப்படுகிறது என்று சொன்னேன். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடுவது ....

திரு. மு. கருணாநிதி : பாதுகாப்புக்காக பெர்மிட் வாங்கி வைத்துக் கொள்வது என்றால் குடிக்கின்ற பழக்கம் இல்லாதவர்களும் அதை வாங்கி வைத்துக் கொள்வதற்குத் தாங்கள் கருத்தறிவிக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒரு கத்தி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள், பாதுகாப்புக்கு என்றால் கொலை செய்வதற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றா பொருள் படும் ? அப்படி எடுத்துக் கொள்ளக் கூடாது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 பிப்ரவரி 13

மது விலக்கைப் பொறுத்தவரையில் நான் இன்னமும் எவ்வளவு தீவிரமாக இருக்கிறேன் என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்காது என்பதிலே எனக்கு ஐயம் இல்லை. நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டேன் என்று யாரும் எண்ணவில்லை என்பதை நான் புரிந்து கொள்ளும்போது உண்மையிலேயே நான் மன ஆறுதல் அடைகின்றேன்.

இங்கே பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது எச்சரித்ததை நான் மறக்கவில்லை. எச்சரிக்கப்பட்டேன் விபரீதம் விளையும் என்றார்கள். சட்டம் விபரீதத்தின் உச்ச கட்ட நிலைக்கு நிரபராதிகளைக் கூட இழுத்துச் சென்று விடும் என்ற கருத்துக்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள். ஆனால் எப்படியாவது அந்த மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக நிறைவேற்றி மக்களுக்கு நன்மை விளைவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று என்னுடைய ஆசையின் விளைவாக எங்கள் அமைச்சரவையின் ஒப்புதலோடு எங்கள் கட்சியின் அனுமதியோடு நாங்கள் நடவடிக்கை எடுக்க முற்பட்டபொழுது அந்தச் சட்டம் வருவதற்கு ஒரு சில மாதங்கள் அல்ல—ஒன்றிரண்டு ஆண்டுகள் என்று கூடச் சொல்லலாம்; அது 1½ ஆண்டு என்று கூடச் சொல்லலாம்—அந்தக் காலக்கட்டத்தில் நான் பலமுறை மேடையிலே பேசும்பொழுது சட்டம் கொண்டு வரப்படும் கடுமையாக இருக்கும், ஆகையால் ஒவ்வொருவரும் இந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்வது மிகமிகத் தேவை என்று நான் சொல்லி இருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் நான் எடுத்துச் சொல்லிய பிறகு அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும் அவர் அந்தத் தவறுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்ற வகையில் அந்தச் சட்டத்தினால் வருகின்ற தண்டனைகளை தொல்லைகளை அனுபவித்தாக வேண்டுமென்பதை நான் பலமுறை சொல்லியதற்குப் பிறகு அது அமுலாக்கப்படுவதற்கு இங்கே வழிவகை காணப்பட்டது. ஆனால் உண்மையிலேயே நான் அதை அமுலுக்குக் கொண்டு வந்த பிறகு மக்களிடையே இருந்த எண்ணம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததோ இந்தச் சட்டம் வந்துதான் தீர வேண்டும் அமுலாக்கப்பட வேண்டுமென்று எந்தத் தாய்மார்கள் வாழ்த்தினார்களோ பாராட்டினார்களோ அந்தத் தாய்மார்களே கண்ணீர் விடக்கூடிய அளவில் விபரீதமாக நிலைமைகள் உருவாக்கப்பட்டதை எண்ணி கலங்கிய பிறகு வேதனைப்பட்ட பிறகு அந்தத் துன்பங்களிலிருந்து தவிர்ப்பதற்கு அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற வகையில்தான் சில திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோமே தவிர, அடிப்படையாக மதுவிலக்கு என்கிற கொள்கையை விட்டுவிடுவது என்பதோ, அதை ரத்து செய்வது என்பதோ, இந்த அரசின் கொள்கை அல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



1980 பிப்ரவரி 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ரூ. 25 கொடுத்தால் யார் வேண்டுமென்றாலும் குடிப்பதற்கு, பர்மிட் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னால் குடிப்பதற்காக அல்ல என்பதை நான் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன். பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ள வேண்டுமென்று. இதே அவையில் சொல்லப்பட்டது வீட்டிற்குள்ளே எல்லாம் படுத்திருப்பவர்களை வெளியே கூப்பிட்டு கைது செய்கின்றார்கள் படுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வீட்டிலே நிம்மதியாகத் தூங்குகின்றவர்களுக்கு அமைதி இருக்க வழியில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைய தினம் இந்தச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே கண்ணியமாக வாழ்கின்றவர்கள் கூட நிம்மதியாக வாழ முடியவில்லை என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது என்பதை உணரும்போது நான் சட்டம் கொண்டு வந்து விட்டேன், அந்தக் கொள்கை எனக்குப் பிடித்திருக்கிறது, ஆகவே யாரை எந்தத் துன்பத்திற்கு ஆளாக்கினாலும் கவலையில்லை, அதைச் செய்தே தீர வேண்டுமென்கிற நிலைமையில் அந்த யதேச்சாதிகார உணர்வில் நான் அப்படியே செயல்படுவதற்கு, நான் எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கையின் வழிமுறை எனக்கு உதவவில்லை யென்பதும் அந்த உணர்வில் நான் சொன்னதெல்லாம் சரி, செய்ததெல்லாம் சரிதான் என்கிற நிலையிலே அதை நடத்துவிக்க நான் முற்படவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில்தான் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன; சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

நான் சில நாட்களுக்கு முன்பு பேசியபோது கூட ஒரு இடத்தில் குறிப்பிட்டேன். 25 ரூபாய் கொடுத்து பர்மிட் வாங்கிக் கொள்ளுங்கள் என்பது, நீங்கள் குடியுங்கள் என்பதற்காக அல்ல; குடிக்காதவர்கள் குற்றம் செய்யாதவர்கள் எப்போது நம்மீது வீண்பழி சுமத்தப்படுமோ என்ற அச்சத்தில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பாதுகாப்புக்காகத் தரப்படுகிறது என்று சொன்னேன். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடுவது ....

திரு. மு. கருணாநிதி : பாதுகாப்புக்காக பெர்மிட் வாங்கி வைத்துக் கொள்வது என்றால் குடிக்கின்ற பழக்கம் இல்லாதவர்களும் அதை வாங்கி வைத்துக் கொள்வதற்குத் தாங்கள் கருத்தறிவிக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒரு கத்தி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள், பாதுகாப்புக்கு என்றால் கொலை செய்வதற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றா பொருள்படும் ? அப்படி எடுத்துக் கொள்ளக் கூடாது.

காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு கத்தி வேண்டுமென்று சொல்கிறார் என்றால் அதைச் கொல்வதற்காக என்று எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். பணக்காரர்கள் வசதி மிக்கவர்கள் பெர்மிட் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் வசதியற்ற ஏழைகள் பெர்மிட் இல்லை என்ற காரணத்தால் குடிக்காமல் இருந்தால்கூட பழி சுமத்தப்படுகிறார்கள். ஏதோ தவறி குடித்துவிட்டால் தண்டனை கிடைக்கிறது என்பதால் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். மேலவையில் நான் உறுப்பினராக இருந்த நேரத்தில் முதியவர் முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலனார் அவர்கள் இந்த அவையிலே முதலமைச்சராக இருந்தபோது தி.மு. கழக பிரதிநிதியாக நான் அங்கே உட்கார்ந்திருந்த நேரத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். சொன்னார்கள் குடிக்காவிட்டால் அந்த மனிதன் செத்துவிடுவான் ; ஆகவேதான் மருத்துவர்கள் அறிவுரைப்படி குடித்து அந்த உயிரைக் காப்பதற்காக அந்த அனுமதி தரப்படுகிறது என்று சொன்னார்கள். அப்போது என்னுடைய உள்ளத்தில் இருந்த வேகத்தில மட்டுமல்ல ; உண்மையாக நான் இப்போது நம்பிக் கொண்டிருக்கின்றேனே இது போன்ற உணர்வில் நான் சொன்னபோது ஒரு சிலர் அப்படி செத்துப் போகிறார்கள் என்றால் அதனால் இந்த நாட்டுக்கு என்ன நஷ்டம் ; பரவாயில்லை போகட்டும் அதற்காக பெர்மிட் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னேன்.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் நான் குறிப்பிட்டேன். பணக்காரர்களுக்குப் பாதுகாப்பு, ஏழைகளுக்குப் பாதுகாப்பு இல்லை. இது எப்படி அனுமதிக்கப்பட முடியும் என்று நான் கேட்டிருக்கிறேன் ; அது குறிப்பேட்டில் இருக்கிறது. அந்தக் கொள்கையிலிருந்து நான் மாறிவிட்டதாக யாரும் நினைக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் நான் தெளிவுறச் சொல்கிறேன். எல்லோரும் ஒத்துழைத்திருந்தால் எல்லோரும் நிச்சயமாக இந்தத் தவறுகள் மக்களிடமிருந்து நீக்கப்பட வேண்டுமென்று அவர்களுக்கு இது தேவையில்லை என்று நாம் ஒன்றுபட்டு செயல்பட்டிருந்தால் இந்த அளவுக்குத் திருத்தம் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை என்று கொஞ்சம் வருத்தத்தோடும் வேதனையோடும் சொல்ல விரும்புகிறேன்.

எங்கே பார்த்தாலும் பத்திரிகைகளிலே தயவு செய்து ஒவ்வொருவரும் மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள் இந்த ஒரு வாரம் அல்லது 10 நாட்களை எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்குச் சாராயம் காய்ச்சுபவர்களே தமிழ்நாட்டில் இப்போது இல்லையா ? சாராயம் விற்பனை செய்யப்படவில்லையா?



கள்ளச் சாராய நடமாட்டம் இல்லையா ? எந்தப் பத்திரிகையிலாவது இதுபற்றி அதிகமாக செய்திகள் வந்துக் கொண்டிருக்கிறதா? ஏன் வரவில்லை ? இந்த ஒரு திருத்தம் வருகிறது என்று சொன்னதற்குப் பிறகு எங்களை குற்றவாளிகள் ஆக்கவோ கையாலாகாதவர்கள் என்று சொல்லவோ ஆட்சியில் அதிகாரத்தை வைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தவில்லை செயல்படுத்த விரும்பவில்லை என்று சொல்லவோ பத்திரிகைகளில் திரும்பத் திரும்ப எழுதப்பட்டது. எப்போது பார்த்தாலும் இங்கே சாராயம் காய்ச்சினார்கள், இங்கே கண்டுபிடிக்கப்பட்டது இங்கே கைது செய்யப்பட்டார்கள். இப்படி எங்கெங்கே பார்த்தாலும் விளம்பரம் செய்யப்பட்டதால் இது நடைமுறைப்படுத்த முடியாத ஒன்று நடைமுறையில் இந்த அரசால் செயல்படுத்த முடியாத ஒன்று என்று திரும்பத் திரும்ப பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். இந்த 10 ; 15 நாட்களாக தயவு செய்து ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். பத்திரிகைகளில் எங்காவது காய்ச்சப்பட்டது என்று அல்லது கொண்டு போனார்கள் என்று அல்லது பிடிபட்டார்கள் என்று யாரையாவது கொண்டுபோய் சிறையில் அடைத்தார்கள் என்று பத்திரிகையில் வரவில்லை என்றாலும் நடைபெறாமல் இல்லை.

சாராயம் காய்ச்சுவதைப் பிடிக்கிறார்கள் இப்போது. அதிக அளவில் வருமானம் தரக்கூடிய சரக்குகளை எல்லாம் கைப்பற்றுகிறார்கள். 30, 40 பேர்கள் என்று சாராயம் காய்ச்சுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆகவே இதெல்லாம் நடைபெறாமல் இல்லை. ஆனாலும் இதற்கெல்லாம் விளம்பரம் தரப்படுவதில்லை. அது பற்றி எழுதுவதும் இல்லை. அக்கறை காட்டுவதில்லை. இதிலிருந்து தமிழக அரசைப் பொறுத்த வரையில் நான் வேதனையோடு சொல்லிக் கொள்வேன். சிலவற்றை மறைத்து—உண்மையை மறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை—மக்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டக்கூடிய செய்திகளை வெளியிடுவது நாட்டுக்கு நல்லது தவறுகளை பற்றி அதிகமாக விளக்கம் சொன்னால் இப்படியும் செய்யலாம் என்று மற்றவர்கள் தெரிந்துகொள்ள கூடிய அளவுக்கு வந்துவிடும். ஆகவே அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து போடக் கூடாது. பெரிய தலைப்புக்களில் குறிப்பிட்டு வெளியிட்டால் அதைப்பற்றி தெரியாதவர்கள் கூட இப்படியும் நாம் செய்து பழகிக் கொள்ள முடியும்; சம்பாதித்துக்கொள்ள முடியும் என்ற அளவுக்கு அந்த ஆசைகளை அவை உருவாக்கிவிடும். நான் இதை வேதனையோடு சொல்கிறேன். சட்டசபையிலே பேசும்போதெல்லாம் பேசி இருக்கிறீர்கள். சாராயம் தண்ணீராகத் தெருவிலே ஓடுகிறது. என்னசெய்யப் போகிறீர்கள் உங்கள் சட்டத்தால் என்றுதான் கேட்கப்பட்டதே தவிர இதைச் செய்யலாம், இப்படிச் செய்யலாம் நாம், எல்லோரும் சேர்ந்து இதற்கு ஒரு முடிவு கட்டலாம், இந்தப் பாதையைப் பின்பற்றலாம் உங்களுக்குத் தெரியவில்லை நாங்கள் சொல்கிறோம், ஆகவே இதைக் கடைப்பிடியுங்கள் என்று சொல்ல

வில்லை. ஆனால் என்ன சொன்னார்கள் ? சட்டம் கொண்டு வர வேண்டாம்; தீவிரமான அந்தத் திருத்தங்கள் வேண்டாம் என்று இதைத்தான் வற்புறுத்தினார்களே தவிர வேறு வகையில் இப்படி இருப்பதைத் தடுப்பது எப்படி என்பது பற்றிய வழிமுறை சொல்லப்பட்டனவா என்றால் நிச்சயமாக இல்லை. அது நாட்டினுடைய நல்ல சொள்கைக்கு நல்ல கொள்கையினை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு தருவதாக இல்லை என்பது மட்டுமல்ல; இருப்பதைப் பெரிது படுத்துவதற்குப் பயன்பட்டதே தவிர அதை மற்றவர்கள் தெரிந்து கொண்டு தெரியாதவர்கள் செய்து கொள்வதற்கு உபயோகப்பட்டதே தவிர வேறு இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது நாங்கள் முன்னால் ஒரு அறிக்கையைச் சொல்வதும் குறிப்பாக நான் அவ்வப்போது மாற்றிக் கொண்டு சொல்வதும் என்னுடைய வழக்கமாக இருக்கிறது என்பதை இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெளிவுபட பல ஆதாரங்களோடு எடுத்துச் சொன்னார்கள். அதிலே முக்கியமாக நான் நடிப்பதைப்பற்றி எங்செங்கு என்னென்ன பேசினேன் என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லி நான்கைந்து நாட்களுக்குள் எவ்வளவு மாற்றத்தோடு சொன்னேன் என்பதை எல்லாம் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் நடிப்பதற்சான அந்தப் படத்தின் தொடக்க விழா நடந்தது. அதில் நான் கலந்து கொண்டேன் என்பது சட்டமன்றத்திலே பேசப்பட்ட உண்மையாகும். அது ஓராண்டு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால். அந்தத் தொடக்க விழாவோடு அது நிறுத்தி வைக்கப்பட்டு, அதிலே எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் அந்தப் படப்பிடிப்பு தொடங்கப்படாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டது. பாட்டுப்பதிவோடு என்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தப் படத்தில் நான் நடித்து முடிக்சாததால் ஒருவேளை என்மேல் உள்ள அக்கறையோ அல்லது என்னை வைத்துப்படம் எடுப்பவர்கள் மீது உள்ள அக்கறயோ அதாவது அவர்கள் பணம் பாழாகிவிடுகிறதே என்ற அளவில் இப்படி எல்லாம் பணத்தைப் பாழாக்கிவிட்டு இங்கே முதலமைச்சராக உட்கார்ந்து அந்தப் படத் தயாரிப்பாளர் பணத்தை எல்லாம் செலவழித்து சும்மா இருக்கின்றாரே, இதற்கு ஒரு நீதி கிடையாதா என்ற அளவிலோ அல்லது படவினியோகஸ்தர்கள் பணம் கொடுத்திருக்கிறார்களே அவர்கள் ஏன் சும்மா பேசாமல் இருக்கிறார்கள் என்று வெளியே கேள்வி கேட்க ,எழுத பல நண்பர்கள் அக்கறை காட்டுகின்ற நிலைமையில் அவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியது அவசியம் என்ற நிலைமை உருவாகும்போது அதிலே அந்தத் தொழிலிலே இருப்பவர்களே இப்படிக் கேள்வி கேட்கிற நேரத்தில் நான் நடித்து



பாதியிலே நின்று இருக்கின்ற படத்தை தீபாவளி அன்று வெளியிட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய கருத்தை நான் அப்போது வெளியிட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பத்திரிகையில் எப்படி வந்து விட்டது என்பதை இங்கே நான் சொல்லியாக வேண்டும். டேப் ரிக்கார்டரிலே பதிவு செய்திருந்தால் தயவு செய்து நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். படம் எடுக்கப் போகிறேன் என்று நான் சொன்னதற்கும், தீபாவளிக்கு வெளியிடப்படுவது என்பதற்கும் சம்பந்தமே இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதுவும் நான் கட்டுப்பாடோடு சொல்லி இருக்கிறேன். சட்டம் அனுமதித்தால் செய்வேன் அனுமதிக்காவிட்டால் நான் வெளியே சென்று அந்தப்பணியை முடிப்பேன், திரும்பி வருவேன்; வாய்ப்பிருந்தால் அல்லது வேண்டுமென்றால் என்று நான் வெளியிட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1—00)

இதற்கு ஒருவனுக்கு உரிமை இல்லை என்று சொன்னால், அது வேடிக்கை தான் என்றாலும், மறுநாள் மாற்றி சொல்கிறேன் என்று சொல்லும் போதுதான் அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மறுநாள், அமைச்சர் வீரப்பன் அவர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்குக் காரணம், அப்படிப்பட்ட ஒரு குழப்பத்தை என்மீது அதிக அன்பு வைத்திருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள், அல்லது பத்திரிகை நண்பர்கள் வெகுவாக முக்கியத்துவம் கொடுத்து அதை வெளியிடுவதற்கு, அவர் பொறுப்பேற்றுக் கொண்ட போது எந்தெந்த நோக்கத்தோடு அதை சொன்னோம் என்பதை வெளியிடுவதற்காக அவர் மறுப்புக் கொடுத்தார். விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கத்தை வைத்துக் கொண்டு, அந்த கொள்கையிலிருந்து மாறுபட்டதாகவோ, நான் பணி செய்யப் போகிறேன் என்று சொன்னதாலோ ஏதோ சொல்லிவிட்டு மாற்றிக் கொண்டு இருக்கிறேன் என்றோ யாரும் தவறாக கருதிவிட வேண்டாம் என்பதை நான் இங்கே வெளியிடுகிறேன். யாருடைய மனதையும் நான் புண்படுத்தவோ, அல்லது சவாலாக வைத்துக் கொண்டு பேசவில்லை என்பதை யாவரும் ஏற்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, அண்ணா அவர்களின் நினைவு நாளில் நான் சொன்னதற்கு ஒரு முக்கிய காரணம், சிலர் எழுதினார்கள், சிலர் பேசினார்கள், 'ஒரு முதலமைச்சர் நான் பதவியை விட்டு சினிமாவிற்குப் போகிறேன் என்று சொல்கிறார், மக்கள் கொடுத்த பொறுப்பைத் தட்டி கழித்து விட்டுப் போகிறார். நிறைவேற்றுகிறோம் என்று சொன்னவைகளை நிறைவேற்றாமல் ஒதுங்கிப் போகிறார் என்ற குற்றச்சாட்டுகள் வெளியிடப்பட்ட பிறகு நான் என்னுடைய எண்ணத்தை தீவிரப் படுத்திக் கொள்ளாமல், மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு,

அந்த எண்ணத்தை அங்கே வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் மற்றவர்கள் அதைச்சொல்லாமல் இருந்திருந்தால் 'போய் நடிப்பதாக இருந்தால் நடித்து விட்டுப் போகட்டுமே, அல்லது அமைச்சர் பதவியை விட்டு போனால் போகட்டுமே,' என்று பேசாமல் இருந்திருந்தால், நான் அடுத்தபடி அதை மறுத்து சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்காது, எண்ணத்தை விளக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டிருக்காது. அதைப்போலத் தான் ஒவ்வொன்றிலும் என்னைப் பொறுத்தவரையில் முன்னுக்கு பின் முரணாகப் பேசி எந்த லாபத்தையும் நான் அடைய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஒரு தொழில்ல் ஈடுபட்டு, அதுவும் அந்தத் தொழிலில் நம்பிக்கை உற்ற ஒருவருக்கு நான் வாக்குக்கொடுத்து பாதி படத்தில் நிறுத்தி பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கிறவர்கள் நஷ்டம் அடையக் கூடாது என்பதற்காக 2½ ஆண்டுகளுக்குப் பிறகும் அது தாமதித்து விட்டதே என்கிற நிலையில் அதை முடித்துக் கொடுப்பதற்கு சட்டம் அனுமதித்தால் செய்யலாம் என்று வெளியிட்டதற்கு ஒரு பக்கம், இவர் சினிமாவிலே நடிக் போகிறார், சட்டப்படி கூடாது. ஒரு கட்சி சொல்கிறது அந்தப்படம் வெளி வந்தால், இவா நடித்தால் மறியல் செயவோம், தர்ணா செய்வோம் என்கிறார்கள். இன்னொரு பக்கம் சொல்கிறாகள், லட்சக்கணக்கான பணம் நாசமாகிவிட்டதே, அதற்கு ஏன் இவர் இப்படிச் செய்கிறார், நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று அந்தப் பக்கம் கேள்வி. இன்னொரு புறத்திலே பொறுப்பை தட்டி கழித்து விட்டு ஓடுகிறார். பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதை செயலாற்றாமல் போகிறார் என்று குற்றச்சாட்டு. இவைகளை யெல்லாம் மற்றவர்கள் உருவாக்கும் போதுதான், நான் என்ன நினைக்கிறேனோ, அதுதான் சரி என்று பிடிவாதம் இல்லாமல், நாட்டுக்கு ஏற்ப, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்கிற வகையில் என்னுடைய கருத்து தவறாக இருந்தாலும் சரியாக இருந்தாலும் அதை மாற்றிக் கொண்டு, நான் என்னுடைய உயிர் மூச்சாக கொண்டுள்ள சில கருத்துக்களையும், எண்ணங்களையும், கொள்கைகளையும் கொஞ்சம் தள்ளி வைத்து, தமிழகத்திற்கு என்னுடைய கடமையை முழு அமைச்சரவையின் மொத்த அனுமதி பெற்றுத்தான் செயகிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பட்ஜெட் செஷன் கூட இருக்கிறது, அவை நீடித்தால் என்று சொன்னார்கள், அது நியாயமான வாதம். நீடித்தால் என்று அவர்சொல்லும்போது நீடிக்கவேண்டும் என்றுஅவர்விரும்புகிறார் என்பதிலே எனக்கு நம்பிக்கை பிறக்கிறது. ஆனால் அவர் நீடிக்கக்கூடாது என்று விரும்பினால், அதையும் எனக்குப் புரிந்து



கொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்கிற வகையில் நான் சொல்ல விரும்புகிறேன், நானும் சொல்கிறேன் அவை நீடித்தால், அந்த பட்ஜெட் செஷன் வரும்போது என்ன சொல்ல இருக்கிறது என்று கேட்டதற்கு, நான் சொல்வேன்—மறியல் நடக்கிறது, போராட்டம் நடக்கிறது, போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு தரப்பினரும், ஒவ்வொரு பிரிவினரும் சொல்லும்போது எந்தெந்த நேரத்தில் தான் அதைச் சொல்லவேண்டுமோ அதைச்சொல்வது கடமை என்ற வகையில்தான்அதைசொல்கிறேனேதவிர அவசரஅவசரமாக சொல்லிவிட்டுப்போவது என்றால்,இன்னமும்பலவற்றைச் சொல்லிவிட்டு நான் பேசாமல் போய்விடலாம். நாங்களே கூட சொல்லலாம். இப்பொழுது சொன்னது போல, நான் முன்பு சொன்னது போல, ஏன் ராஜினாமா செய்யக்கூடாது என்று சொன்னது போல,நாங்களே போய் ராஜிநாமாச்செய்துவிட்டு சட்டசபையைக் கலைத்து விடுகிறோம் என்று சொல்லி விட்டு, அதற்கு முன்பாக, நடத்த முடிகிறதோ இல்லையோ, என்னென்ன சொல்லவேண்டுமோ அவைகளை யெல்லாம் சொல்லிவிட்டு இவைகளை யெல்லாம் நாங்கள் செய்திருப்போம், எங்களை அங்கே உட்கார விடவில்லை. ஆகவே நாங்கள் வெளி வந்திருக்கிறோம், வாக்குத் தாருங்கள் என்று நாங்கள் கேட்க முடியும். அந்த வகையில் நாங்கள் காரியத்தை ஆற்றுவோம் என்று சொல்ல முடியும், ஆனால் அப்படிச் செய்ய நாங்கள் விரும்பவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தொழிலாளர்கள் சம்பந்தமாக பேசியவர்களுக்கெல்லாம் நான் ஒரு கருத்தை வெளியிடக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு நிச்சயமாகத்தொழிலாளர்களுக்காக சில சட்டங்களை உருவாக்கவும் அவர்களுக்குப் பாதுகாப்புத்தரவும் தீர்மானித்திருக்கிறது என்பதையும் அதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும், இங்கே சட்டமன்றத்தில் உள்ளவர்களையும் வெளியே இருக்கிறவர்களையும் அழைத்து அவர்களோடு பேசி பட்ஜெட் செஷனிலேயே அந்தச் சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே போல் படித்துப் பட்டம்பெற்ற பட்டதாரிகள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக பதிவு செய்துள்ள பட்டதாரிகள் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 94,498 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தத் தமிழக அரசு ரூ. 50 வீதம் மாத உதவித் தொகை கொடுக்கும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு கோடி ரூபாய் என்று தயவு செய்து கணக்குப் பார்க்காதீர்கள். ஆனால் எவ்வளவு கோடியாக இருந்தாலும் இதைச் செய்வதற்கு இந்த அரசு முன் வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிடுவதன் மூலம் எங்களால் என்னென்ன செய்ய முடியுமோ, இந்த அரசால் என்னென்ன

செய்யமுடியுமோ அதைச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அதை நாங்கள் செய்வதற்குத்துணிந்து முன்வருகிறோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்புக்கு மிக்க நன்றி. நாங்கள் அதை
வரவேற்கிறோம். ஆனால் பட்டதாரிகள் என்று அது லிமிட்
செய்யப்பட்டிருக்கிறது. பட்டம் பெற முடியாத ஏழைகள்
ஏராளமாக எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் இருக்கிறார்கள். அவர்
களுக்கும் இதை எக்ஸ்டென்ட் செய்வது நியாயமாக இருக்கு
மல்லவா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எவ்வளவு திறமைசாலி
என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் அவர் ஒன்று
சொல்லி அதற்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் விடமாட்டார்
கள் என்பது எனக்குத் தெரியும். அதில் இன்னொரு கேள்வியைத்
தொக்கி நிற்க வைத்து அதற்குப் பதில் எப்போது வரும் என்று
கேடபதில், மிக சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய
திறமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்
கிறேன். நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். இந்த
வேலைக்கு உணவுக்கு திட்டம் என்பதும் வேலை வாய்ப்பு உறுதித்
திட்டம் என்பதும்,உடல் உழைப்பால் உழைத்து வாழ்கிற கிராமப்
புற மக்களுக்கு தனியாக திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்
கிறோம். அதில் தவறுகள் இருந்தால் அந்த அதிகாரிகள் மீது
நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே பட்டப்
படிப்பு என்று சொல்லும்போது அது பதிவு செய்து கொண்டுள்
ளவர்களுக்கு என்ற வகையில் இந்தக் கருத்தை வெளியிட்டேன்.
அதற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவாகும் என்று எண்ணிப்
பார்த்து, அதை எப்படிச் சரிசெய்வது என்பதையும் நினைத்து
சீர்தூக்கிப் பார்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். இந்த அரசுக்கு
வருமானம் கிடைக்கும் என்ற நிலை உருவாகுமேயானால் ஏதா
வது ஒரு வகையில் புது வரி போட்டாலும் பரவாயில்லை, யாருக்
காவது ; அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற சட்ட
மன்ற உறுப்பினர்களும் ஒத்துக்கொண்டு ஒத்துழைத்தால் யோச
னையும் சொன்னால் அப்படிப்பட்ட நிலை வருமானால் அதை
யும் கொஞ்சம் விரிவாக்குவதில் எங்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லை.
ஓரளவிற்குத்தான்...............

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பட்டதாரிகள் என்றால்
டிப்ளமா வாங்கியவர்களும் பட்டதாரிகளுக்கு ஈக்வலாகயிருக்
கிறார்கள். ஆகவே டிப்ளமா வாங்கியவர்களும் இதில் அடங்கு
வார்களா ?



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விரிவாக சட்டம் வெளியிடும்போது விளக்கம் கிடைக்கும். இதேபோல் பல்வேறு வகைகளில் இன்று நாங்கள் சொல்கிறோம் என்றால் சொல்லச் செய்கிறீர்கள், சொல்கிறோம். வெளியே இருந்து சொல்ல வைக்கிறீர்கள், நாங்கள் சொல்ல முற்படுகிறோம். அதையும் முழுமையாகச் செய்ய முடியாவிட்டாலும், ஓரளவிற்காவது நாங்கள் செய்ய முற்படுகிறோம் என்றால் நீங்கள் திருப்தியடைவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சில குற்றச்சாட்டுகள் வீட்டுவசதி வாரியத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர், கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அதுபற்றிக் கவனிக்கப்படும் என்பதும் யாராக இருந்தாலும் இந்த முடிவு ஏன் இடப்பட்டது, எப்படி இடப்பட்டது, யார் பொறுப்பு என்பதைப் பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

(பிற்பகல் 1–10)

அதேபோல் தஞ்சைப் பகுதியிலே நடக்கின்ற நிலையைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பை எழுதி, உடனடியாகத் தொலைபேசியிலே பதில்தரவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகள் முயற்சித்துக் கொண்டிருப்பார்கள் ; நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் ; நம்புங்கள். அதேபோல், பல குறைகளை எடுத்துக் காட்டும்போது, உதவி செய்கின்ற நிலையில் நீங்கள் எங்களோடு ஒத்துழைக்கும்போது, நாங்கள் உங்களை மதிக்கிறோம் என்பது மட்டுமல்ல, நன்றி காட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதிகாரிகள தவறு செய்தால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க வேண்டியது எங்கள் கடமை. அதைப் போல், அதை நிவர்த்தித்துத் தருவதும் தீர்த்து வைப்பதும் எங்கள் பொறுப்பாகும் என்பதை நாங்கள் நிச்சயமாக மறந்துவிடவில்லை.

அதேபோல், இங்கு நீலகண்டன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். என்னைவிட இங்கே உட்கார்ந்திருக்கிற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த அரசினுடைய ஸ்டுடியோவைப் பற்றி மிக நன்கு தெரியும் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். நான் அதைச் சொல்லிக் கொள்வதிலே தவறில்லை. காரணம், அதிக ஆண்டுகள் அவர் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு அதிகம் இருந்திருக்கிறது, சிவதாணுப் பிள்ளை என்பவர் ஒய்வு பெறும் போது பெற்றுவந்த சம்பளம் ரூ. 1,710. அகவிலைப்படி போன்றவைகள் ரூ. 420 ஆகமொத்தம் 2,130. நீலகண்டன் பெறுவது ரூ. 2,000. அலுவலக வேலைக்கு கார், தொலைபேசி போன்றவை முன்னாள் முதல்வருக்கும் இருந்தது. நியமன வேலைசெய்யும் விதி

களின் படியும், சட்டப்படியும் பார்த்து இதைச் செய்திருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஏன் பதவியை அப்படியே வைத்துவிட்டுச் செய்தீர்கள் என்றால், நாங்கள் சில திருத்தங்களை, இன்னும் கொஞ்சம் சீராக, அனுபவப்பட்டவர்களைக் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அந்தவகையில், கலைஞர் அவர்களுக்கு நேரமிருந்தால் ஒருமுறை அந்த ஸ்டூடியோவிற்குச் சென்று, முன்னால் எப்படி இருந்தது, இப்போது எப்படி நடைபெறுகிறது என்பதை அவர்கள் அரை மணி நேரம் சுற்றிப் பார்த்து கவனித்தால் நன்கு தெரியும், நீலகண்டன் அவர்கள் எந்த அளவுக்கு அங்கு ஒழுங்குமுறையை முறைப்படுத்தி இருக்கிறார்கள், சிறப்பாக செயல்பட நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் சரிவர அவரால் புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன். அதற்குப் பிறகும் வந்து அவர் இது சரியில்லை என்று சொல்வார்களானால், அதைப் பற்றி பரிசீலிக்கவும் இந்த அரசு தயங்காது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகண்டன் அவர்கள் திரைப்பட பிரிவு பிலிம்ஸ் டிவிஷன் வேலையும் பார்க்கிறார்கள். அந்தப் பணியும் சேர்த்து அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அதற்கு 'பிரிசிடெண்ட்' என்று மாற்றப்பட்டது. இதை நான் சொல்வதில் உண்மை இருக்கும் என்று அனுபவப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணரமுடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

கப்பல் பேர ஊழல் வழக்கு சம்பந்தமாகக் கூறினார்கள். சரண் சிங் அமைச்சரவையில் எங்கள் நண்பர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அங்கேயிருந்து திரும்பி வரச்சொல்லி, பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்ட பிறகு இங்கிருந்து கடிதம் எழுதப்பட்டது. அதற்குப் பிறகு பிரதம அமைச்சர் என்ற ரீதியிலே அவர் அங்கிருந்து முடியாது என்று உச்ச நீதிமன்ற பிரதம நீதிபதி சொல்லிவிட்டார் என்று எழுதிய பிறகு, என்னால் எதையும் செய்ய முடியாது என்கிற நிலையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றும் இருக்கிறது. இங்கே சொன்னதற்கு நான் அந்தக் கடமையை ஏற்றுக்கொண்டு செய்தேன். பதில் வந்ததைப் பத்திரிகைகளிலே படித்திருப்பீர்கள். ஆனால், அதே நேரத்தில் வெளியிலே எங்களைப் பற்றி, இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசியதற்காக நான் வழக்கு தொடுத்திருக்கிறேன், அரசின் சார்பாக என்பதையும் இங்கே நான் குறிப்பிடும்போது, அதிலேயே உண்மை வெளிவந்து விடும். நாங்கள் வாங்கினோமா, இல்லையா என்பதெல்லாம் அதிலே அவர்கள் நிரூபித்துவிட முடியும். ஆதாரங்களையெல்லாம் அங்கே சொல்லிவிட்டால், அது வெளிப்பட்டுவிடும். நாங்கள் குற்றவாளி என்றால், தண்டனை ஏற்பதற்கு நான் எப்போதும்





தயாராக இருக்கிறேன். முதலில் நான் பொது மேடையிலே எப்படிப் பேசியிருக்கிறேனோ, அதே கருத்தைத்தான் இன்னமும் சொல்லுகின்றேன். நான் சொல்வதற்கு இங்கே வேறு ஏதோ உள்கருத்து இருப்பதாகக் கருதவேண்டாம். என்னைப் பற்றி நான் சொல்கிறேன். உண்மையிலேயே ஒரு கோடி ரூபாயிலே ஒரு பைசாவாவது நான் வாங்கியதாக அங்கே நிரூபிக்கப்படுமேயானால், தமிழகத்திலே என்னை யாருமே அனுமதிக்க வேண்டாம். நானும் உயிரோடு இருக்க மாட்டேன் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.** தயவுசெய்து தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகை நண்பர்கள் * * என்று பத்திரிகைகளிலே வெளியிட வேண்டாம் என்று நீங்கள் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அது நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கக் கூடாது; பத்திரிகைகளிலும் வெளியிடக் கூடாது என்று தீர்ப்பளிக்கிறேன்.

<u>திரு க. சுப்பு:</u> விளக்கத்திற்காக......

<u>மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:</u> குறுக்கிட வேண்டாம். நான் முடித்து விடுகிறேன். இங்கே சில படங்களைக் காண்பித்தார்கள். அந்தப் படங்களை நான். . .

<u>திரு க. சுப்பு:</u> பாயின்ட் ஆப் ஆர்டர், நான் குறுக்கிடுவதற்காக எழுந்திருப்பவன் அல்ல. முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே கமிஷன் போட வேண்டுமென்ற கோரிக்கையின் பேரில் வாதத்தை வைத்திருக்கிறார்கள். தற்போது நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்கள் போட்டிருக்கும் வழக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது குற்றம் சுமத்தி போடப்பட்ட வழக்கு. அதிலே சரியா, தவறா என்று முடிவு ஏற்பட்டு எங்கள் மேல் வேண்டுமானால் குற்றம் கூறலாம். உங்கள் மேல் கூறப்பட்ட புகாருக்கு விசாரணை வேண்டாமா?

<u>மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:</u> அந்த வழக்கில் உண்மை வெளிவரும்போது நிச்சயமாக என மீது வழக்குப் போடலாம். அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டால் இன்னொருவர் சொல்லாமலே நானே ராஜினாமாச் செய்து நானே வெளியே வந்து நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க முயலுவேன். இல்லாவிட்டால் நான் முன்பு சொன்னதுதான் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 பிப்ரவரி 13

எதிர்க் கட்சித்தலைவர் சில படங்களைத் தந்திருக்கிறார்கள். கண்டிப்பாக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிப்பதோடு (குறுக்கீடு) எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கவர்னர் உரையின் விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் அவ்வளவு பேருக்கும் பதில் சொல்ல முடியவில்லை, நேரம் இல்லை என்பது மட்டுமல்ல, உடல் நலம் இல்லையென்பதும் காரணம் என்பதை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்ஜெட் செஷனில் நிறையப் பேச வாய்ப்பிருக்கிறது. இன்னும் என்னென்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறீர்களோ அவற்றைச் சொன்னால் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை இந்த அரசு ஆராயும் என்று சொல்லி ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆ. நடராசன், பெ. சு. திருவேங்கடம், தி.சு. நல்லதம்பி, நா. சுந்தரராஜ், சு. பாலன், செ. சிவசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி, மா. மணிமாறன், டி. பாக்கியதாஸ், ரா. கிருஷ்ணன், ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்த திருத்தங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "1980-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 30-ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்ற தீர்மானம் நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



1980 பிப்ரவரி 13]

## 4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

### ஏ. திருச்சி காவேரி ஸ்ட்ரக்சுரல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

[பிற்பகல் 1-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சி. கோவிந்தராசன், கு. ரமணி ஆகியோர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, "திருச்சி காவேரி ஸ்டரக்சுரலில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருவதால் அங்கு நிலவும் பதட்ட நிலைமை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திருச்சி காவேரி இஞ்ஜினியரிங் தொழிற்சாலை ஒரு இன்ஜினியரிங் நிறுவனமாகும். இதில் தொழிலாளர்களும், பணியாளர்களுமாக 1,050 பேர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். காவேரி ஸ்ட்ரக்சுரல்ஸ் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் என்பது தான் இத் தொழிற்சாலையில் உள்ள ஒரே தொழில் சங்கமாகும். இதில் 223 பணியாளர்களும் 313 தொழிலாளர்களும் அங்கத்தினர்களாக உள்ளனர். 20—7—1978 அன்று ஏற்பட்ட 12 (3) உடன் படிக்கை 31–5–1981 வரை அமுலில் இருக்கும். அதில் நிர்வாகமும் இச் சங்கமும் கையெழுத்து இட்டுள்ளன. ஆனாலும் பணியாளர் (Staff) மற்றும் பயிற்சியாளர்கள் இந்த உடன்படிக்கையில் அடங்கமாட்டார்கள். இச் சங்கம் சம்பள விகிதங்களை உயர்த்துதல் ( increase in Wages ) அகவிலைப்படி உயர்வு, இரவு நேர வேலைப்படி வழங்குதல், 1978–79ம் ஆண்டுக்கான "போனஸ்" ஆகிய பல கோரிக்கைகளை வலியுறுத்தி 29—8—1979 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையாளர் இரு தரப்பினரையும் அழைத்து கோரிக்கைகள் மீது 5—9—1979 முதல் பல நாட்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ஒரு சுமூகமான உடன்பாட்டிற்கு வர இயலாத நிலையில் அவர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு

12 (4) ன் கீழ் தனது சமரச முறிவு அறிக்கையை அனுப்பினார். நிர்வாகம் 1—11—1979 முதல் தொழிற்சாலையை மூடி விட எண்ணி 31—8—1979ல் அறிவிப்பை வெளியிட்டது. பின்னர் இந்தத் தேதி 1—2—1980 என்று மாற்றப்பட்டது.

திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் சமரச முறிவு அறிக்கைக்குப் பின்னும் இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டி, மேலும் பேச்சு வார்த்தைகள் சென்னையில் தொழிலாளர் ஆணையர் ஆலுவலகத்தில் உள்ள தொழிலாளர் துறை துணை ஆணையர் (குறைந்த பட்ச ஊதியம்) மற்றும் இணை ஆணையர் ஆகியோர் முன்னிலையில் 12—11—1979 13—11—1979, 14—11—1979, 15—11—1979 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. இந்தப் பேச்சுக்களிலும் ஒரு உடன்பாடு காண இயலாத நிலையில் திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையரின் சமரச அறிக்கையின் மேல் சம்பள உயர்வு, இரவு நேர வேலைப்படி, போனஸ் ஆகிய கோரிக்கைகள் மீது அரசுக்கு தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் 30—11—1979-ம் தேதிய கடிதம் மூலம் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன. அரசு ஆணை எண் 2037, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 11—12—1979ம் தேதியிட்ட உத்தரவுப்படி இக் கோரிக்கைகளை தொழில் நீதி மன்றத்திற்கு விட உத்தரவிடப்பட்டது.

சுமுகமாக ஒரு சூழ்நிலை மீண்டும் ஏற்பட பணியாளர்கள், பயிற்சியாளர்கள் வேலை பழகுவோர் ஆகியவர்கள் சம்பள விகிதங்களை மாற்றியமைத்தல், பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, இரவு நேர வேலைப்படி ஆகியவை வழங்குதல் முன்னரே அறிவித்த போனஸ் அளவைக் கூட்டுதல் ஆகிய கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக்கொண்டால் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதாகச் சங்கம் தெரிவித்தது. ஆனால் நிர்வாகத்தினர் எந்தக் கோரிக்கையையும் ஏற்க இயலாது எனத் தெரிவித்து விட்டனர்.

நிர்வாகம் 61 நிரந்தரப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது. 400 வேலை பழகுவோர்களுக்கு இப்போது வேலையில்லை எனத் தெரிவித்துள்ளது. இப்பொழுது 75 நிரந்தரப் பணியாளர்களும், 60 நிரந்தரத் தொழிலாளர்களும் 100 வேலை பயில்பவர்களும் 13—12—1979 முதல் வேலை செய்து வருகின்றனர். தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பாத மற்ற கோரிக்கைகள் மீது மறுபரிசீலனை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்று, தொழிலாளர் நல ஆணையரின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இணை ஆணையர் முன்னிலையில் இது பற்றி மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடரப்படுகின்றன.





திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கைப்படி அங்கு பணி புரியக்கூடிய 1,350 தொழிலாளர்களில் சுமார் 200 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அண்மையில் ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசனையை இரு சாராரும், நிர்வாகத் தரப்பும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திடக்கூடிய சூழ்நிலை இருந்தும் நிர்வாகத்தினர் வாபஸ் வாங்கி விட்டார்கள். பேக் அடித்துவிட்டார்கள். ஆகவே ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசணையை புறக்கணித்து விட்டார்கள். இன்றைக்கு ஆயிரம் தொழிலாளர்கள் வெளியே இருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நிர்வாகத் தரப்பை வலியுறுத்தி அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இவைகளை யெல்லாம் மனத்திற்கொண்டு நாளை மறுநாள் 15 ஆம் தேதியன்று சென்னையில் என் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### உள்ளூர்காரர்களுக்கே வேலை என்கிற கர்நாடக மாநில கொள்கை அறிவிப்பு குறித்து:

திரு. க. சுப்பு: அடுத்து நான் சொல்ல விரும்புவது ரொம்ப முக்கியமான பிரச்சினை. நம்முடைய அவையின் முன்னவர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லி விட்டால் போதும்.

திரு. க. சுப்பு: கர்நாடக மாநிலத்திலே பெங்களூர், பத்திராவதி போன்ற இடங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு உத்தரவு முன்பே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களிலேயிருந்து வருபவர்களுக்கு வேலை கிடைக்காத அளவிற்கு ஒரு உத்தரவு, அங்கே அரசு உத்தரவு ஒன்று போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே அப்படியிருப்பதாகச் சொல்லிக் கொண்டு அப்படிப் போடப்பட்டிருக்கிறது. நான் போய் இருக்கும் பொழுதுகூடச் சொன்னார்கள்.

[1980 பிப்ரவரி 13

(திரு. க. சுப்பு)

இன்றைக்கு வந்திருக்கக்கூடிய அரசும் அதைத் தீவிரமாக அமல் படுத்தப் போகிறது என்று வந்த அறிவிப்பையொட்டி அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள், மற்றவர்கள் அதாவது கன்னடியர் அல்லாத மற்றவர்களுக்கு வேலையே கிடைக்காது என்ற ஒரு மோசமான நிலைமை அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் நாயனார் அவர்களேகூட ரொம்ப வருத்தத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் அது கவனத்திற்கு வந்திருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் புரிந்து கொண்டேன். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய நியாயமான உணர்வுகளின் அடிப்படையில் தமிழக முதல்வர் கர்நாடக மாநில முதல்வரோடு தொடர்பு கொண்டு அது குறித்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

### ஏ. கல்லூரிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அழகர்சாமி, கூத்தகுடி சண்முகம், சிவசாமி, உத்ராபதி, காளியப்பன், கோவிந்தராசன், கு. ரமணி ஆகியோர் கொடுத்துள்ள தீர்மானம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே பள்ளத்தூர் சீதாலட்சுமி கல்லூரி சம்பந்தமாகவும், அதைத் தொடர்ந்து செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி சம்பந்தமாகவும் நான் ஏற்கெனவே கொடுத்த அறிவிப்புகள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி வந்திருக்கிறது. முதலிலே சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. சேவியர் பிச்சையா என்ற ஆசிரியர், திருச்சி புனித ஜோசப் கல்லூரியிலிருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரை மீண்டும் பணியிலமர்த்தக் கோரி ஆசிரியர் சங்கம் போராட்டம் நடத்தி வருகிறது. மேற்படி சங்கத்தைச்



1980 பிப்ரவரி 13] [திரு. செ. அரங்கநாயகம்]

சேர்ந்தவர்கள் கல்லூரிகள் முன் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அதற்கு ஆதரவாக திருச்சியை சேர்ந்த ஜமால் மொகமது கல்லூரி, ஈ. வெ. ரா. கல்லூரி, உருமு தனலட்சுமி கல்லூரி ஆகிய கல்லூரிகளின் மாணவர்கள் ஆர்பாட்டம் செய்ததாக திருச்சி ஆட்சியாளரிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. செயின்ட் ஜோசப் கல்லூரி 1—2—1980 முதல் மூடப்பட்டுள்ளது என்று தெரிகிறது. கல்லூரி முதல்வர் 10—2—1980 அன்று பெற்றோர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். இக் கூட்டத்தில் கல்லூரி மீண்டும் திறப்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், ஆசிரியர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து கல்லூரிக் கல்வி இயக்குநரை இப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்ளும் தீர்மானத்திற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் 4—2—1980 முதல் கல்லூரி முன் கிளர்ச்சி செய்வதை கைவிட ஆசிரிய சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையின்படி திரு. சேவியர் பிச்சையாவின் சார்பில் எ.யு.டி. யைச் சேர்ந்த ஆசிரியர்களும், கல்லூரி நிர்வாகத்தினரும் 6—2—1980 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநரோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். இப் பிரச்சினைக் குறித்து ஒரு தீர்வுகாண முயற்சி எடுக்கப்படும்.

சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்;—பள்ளத்தூரிலுள்ள சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி 24—1—1980 முதல் மூடப்பட்டுள்ளது. காரணம், மாணவிகள் ஆசிரியைகளால் தூண்டிவிடப்பட்டு, முதல்வரிடமிருந்து மன்னிப்புக் கேட்டு முதல்வரை 'கேரோ' செய்ததாகவும், கூச்சல், குழப்பம் உருவாக்கியதாகவும் முதல்வர் அறிவித்துள்ளார். மாணவிகள் நல்லமுறையில் நடந்துகொள்வதாக முதல்வருக்கு உறுதியளிக்க முன்வரவில்லை. மாணவிகளின் ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியதால் கல்லூரி மூடப்பட்டுவிட்டது என முதல்வர் அறிவித்துள்ளார். மாணவிகள் விடுதியையும் காலி செய்துவிட்டு ஊருக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். மாணவிகள் முதல்வரை மிகவும் தொல்லைக்கு உள்ளாக்கியதாகவும் அதனால் இரவு 12 மணி அளவில் முதல்வர் ஆசிரியரல்லாத ஊழியர்களால் ஒரு நண்பரின் வீட்டுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார். மாணவிகளை விடுதியை விட்டு வெளியேறி ஊருக்குச் சென்றுவிடுமாறு அறிவித்தும், அவர்கள் அவ்வாறு செல்லாது, 24—1—1980 அன்று காலை வன்முறையில் ஈடுபட்டனர் என கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். காவல் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் இதுபற்றி தகவல்

அறிவிக்கப்பட்டு, வருவாய் துறை அதிகாரிகளும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் கல்லூரிக்கு வந்து மாணவிகளிடம் பேசி தீர்வு காண முயற்சித்தனர். இம் முயற்சி பயனளிக்காததால், கல்லூரி மூடப்பட்டது. தேவகோட்டை துணை கலைக்டர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் கல்லூரி மூடியுள்ளதால் கல்லூரியை விட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். விடுதி மாணவிகள் ஊருக்குச் செல்ல பணம் இல்லை என்று சொன்னதால், கல்லூரிச் செயளர் மாணவிகளுக்குப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தார். மாணவிகள் விடுதியை விட்டு வெளியேறிவிட்டனர்.

மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் இப் பிரச்னையைப் பற்றி ஆராய்ந்து தீர்வு காண பள்ளத்தூருக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்:—தலைவரவர்களே, பெண்களே, அந்த மாணவிகளே 'கேரோ' செய்கிற அளவிற்குப் போயிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் மூலம் அறிகிறேன். அங்கே கல்லூரி முதல்வர் ரொம்பத் தவறான முறையிலே, எல்லோரையும் கொடுமைப்படுத்தும் முறையிலே நடந்து கொண்ட காரணத்தினாலே, மாணவிகளுக்கு ஒரு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது என்பதும், அந்த ஆசிரியைகள் பூராவுக்குமே மாணவிகள் பக்கம் நியாயம் இருக்கிறது என்ற உணர்வு வந்திருக்கும்போது, பெருவாரியாக, எல்லாக் கட்சிகளுமே அந்தக் கல்லூரி முதல்வருடைய நடவடிக்கைக்கு எதிர்ப்பாக உண்ணாவிரத நடவடிக்கை நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே, இதிலே அரசு தலையிட்டு, வேலை நிறுத்தத்தை நீக்கி, அங்கே அமைதியை ஏற்படுத்தி, கல்லூரியைத் திறக்க ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—தலைவரவர்களே, அரசு நிச்சயமாக, இதிலே கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. கோவிந்தராசன்:—இப்படி நியாயம் அற்ற முறையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அடிக்கடி தனியார் கல்லூரிகளில் அரசாங்கத்தினுடைய சம்மதம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிற நிலைமை இருப்பதால், தனியார் கல்லூரிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, ஆட்களை வெளியே தள்ளுவதற்கு



முன்பாக, குறைந்தபட்சம், அரசையாவது கலந்து செய்யக் கூடிய அளவுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட பாதுகாப்புகள் நாம் தந்திருந்தாலும் கூட, செயின்ட் ஜோசப் கல்லூரி, சிறுபான்மை இனத்தவரால் நடத்தப்படுகிற காரணத்தால் அரசினுடைய அதிகாரங்கள் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் இந்தப் பிரச்னையில் நாம் உடனடியாகத் தீர்வு காண முடியாமைக்குக் காரணம்.

(ஐ) தஞ்சாவூர் மாவட்ட வடிகால், வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் குறித்து.

திரு. மா. மணிமாறன்: தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் வடிகால் கோட்டம், தஞ்சாவூர் வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் முழுவதிலும் ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மா. மணிமாறன்:—பேரவைத் தலைவரவர்களே, அதை நான் விளக்கிச் சொல்ல வேண்டாம். தீவிர விவசாயத் திட்டத்தில், தஞ்சை மாவட்டத்திலே குறிப்பிட்ட ஸ்பெஷல் டிவிஷன் எடுக்கப்பட்டாகி விட்டது, இப்பொழுது இரண்டு டிவிஷன்களும் க்ளோஸ் பண்ணக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை செய்து, தஞ்சை மாவட்டத்து மக்களுக்கு உதவியாக இருப்பதற்கு, அங்கே செலவழிப்பதற்காக, வேண்டிய அலுவலர்களை மாற்றாமல் வைத்திருப்பதற்கான உறுதியினை மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கினால் தஞ்சை மாவட்ட மக்கள் நன்றிக் கடன் உடையவர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கி விட்டு மிச்சத்தை கையிலே வைத்துக் கொள்ளலாம். ஆகவே கண்டிப்பாக அரசு உதவி செய்யும்.

(ஓ) மதுரை மாவட்ட, ஆலய மகா சிவராத்திரி விழா குறித்து.

திரு. கே. கந்தசாமி:—பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா கருமாத்தூரிலுள்ள கள்ளர் நாட்டின் மிகப் பழமையும் புராதனமும் வாய்ந்த முனுசாமி கோயில் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் வகையறாக் கோயில் வருடாந்திர மகா சிவராத்திரி விழா வருகிற 14, 15, 16 பிப்ரவரி 1980-ல் நடக்க இருப்பதால் அருகிலுள்ள அருளாநந்தர் கல்லூரியைச் சார்ந்தவர்கள் திட்டமிட்டு அதைத் தடுக்க முயற்சிக்கின்ற காரணத்தினால் அப் பகுதியிலுள்ள லட்சக் கணக்கான மக்கள் மத்தியில் பீதியும் அமைதியின்மையும் ஏற்பட்டிருக்கின்ற நிலைமை குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த செய்தி சம்பந்தமாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மதுரை மாவட்ட தெற்கு காவல்துறை கண்காணிப்பாளரிடமும் தொடர்பு கொண்டு செய்திகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதுவரை அரசுக்கு கிடைத்திருக்கின்ற தகவல் அப்பேர்ப்பட்ட குழப்பத்தை உருவாக்குகின்ற சூழ்நிலை ஒன்றுமில்லை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலை வைத்துக் கொண்டு நாளை முதல் நடைபெற இருக்கின்ற இந்த விழா எந்தவிதமான குந்தகமும் அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெறுவதற்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. மு. வாசன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன் சத்திரம் பஸ் நிலையத்திற்கு அருகில் போக்குவரத்தைச் சேர்ந்த நெடுஞ்சாலையில் விவசாயச் சங்கம் என்ற பெயரால் தனியார் பெரியதாகக் கட்டிடம் கட்டுவது அரசுக்குத் தெரியுமா? அதை அகற்ற அரசு என்ன முயற்சியை மேற்கொண்டுள்ளது.

திரு. வ. துலுக்கானம்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''விருத்தாசலம் வட்டம் மேமாத்தூர் கிராமம் ஐவதகுடி கிராமம் ஆகிய இரண்டும் கோமுகி நதியின் வெள்ளத்தில் வருடா வருடம் மூழ்குவதாலும் அதனால் பல ஆயிரம் மதிப்புள்ள வீடுகள் இடிந்து நாசமாவதாலும்





வீடுகள் இடியும் போது ஏற்படும் மக்கள் உயிர்சேதமும் பொருட்சேதமும் அந்த கிராம மக்கள் இடையே பீதியை ஏற்படுத்துவது குறித்து''

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''பேரவையின் 25(1) விதியின்படி பேரவையை இன்றிலிருந்து (13—2—1980) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்''

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 6—7—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1701-ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

67. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1978-79-ஆம் ஆண்டிற்கான 9-வது ஆண்டறிக்கையும் அதன் மீதான தணிக்கை அறிக்கையும் [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.



## இணைப்பு I.

[490-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 127-க்கான விடையைக் காண்க]

(அ) ஆம்.

(ஆ) தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள், நிறுவனங்கள், இடங்கள் ஆகியவற்றில் திரைப்படம் பிடிக்க தனியார் பட நிறுவனங்களுக்கு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அனுமதி அளிக்கிறார்.

சென்னை மத்திய சிறைச்சாலைக்குள் சென்று திரைப்படம் பிடிக்க அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட திரைப்பட நிறுவனர்களின் பட்டியல்:—

| வரிசை எண். | பட நிறுவனங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. | திருவாளர்கள் சுஜாதா சினி ஆர்ட்ஸ், சென்னை. |
| 2. | உதயம் புரொடக்ஷன்ஸ், சென்னை. |
| 3. | கே. ஆர். ஜி. புரொடக்ஷன்ஸ், சென்னை. |
| 4. | பி. வி. டி. புரொடக்ஷன்ஸ், சென்னை. |
| 5. | மாங்காடு அம்மன், பிலிம்ஸ் — சென்னை. |
| 6. | நியோ மணிஜே சினி புரொடக்ஷன்ஸ், சென்னை. |
| 7. | மகேந்திரா பிலிம்ஸ், சென்னை. |
| 8. | விஜய மாதவி பிக்சர்ஸ், சென்னை. |
| 9. | ராதாகிருஷ்ணா மூவீஸ், சென்னை |
| 10. | கௌரவ் ஆர்ட்ஸ், சென்னை. |
| 11. | ஜகபதி ஆர்ட்ஸ் பிக்சர்ஸ், சென்னை. |
| 12. | ஜாசோப் மூவீஸ், திருவனந்தபுரம். |
| 13. | சுரேஷ் ஆர்ட்ஸ், சென்னை. |

(இ) ஆம்.

## இணைப்பு II.

[510-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 138-க்கான விடையைக் காண்க.]

விடை.

(அ) அண்டு (ஆ).—திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை பரிந்துரைத்த சாலை விவரங்கள் பின்வருமாறு :

(1) புதுபேட்—திருப்பத்தூர் நாட்ராம்பள்ளி மெயின் ரோடு (வழி) புள்ளநேரி திரியாளம்.

(2) ஜெயபுரம்—சண்டிலிரோடு (வழி) பாரண்டபள்ளி.

(3) கூடப்பட்டு—வெவ்வால் தோப்பு (பாம்பாற்றில் மூழ்குபாலம் கட்டுவதுடன்)

(4) செலந்தம்பள்ளி—சோம்பள்ளி (வழி) தாடஉறன வலசை ரோடு (மாம்பாற்றில் தரைப்பாலம்).

(5) கொடுமன்பள்ளி—ஜோன்ராம்பள்ளி இணைப்பு சாலை.

(6) அம்பலூர்—ஏக்லாஸ்புரம் சாலையின் நடுவில் பாலாற்றில் தரைப்பாலம் அமைத்தல்.

மேலே குறிப்பிட்டவற்றினுள் முதல் 3 வேலைகளுக்கு அரசின் அனுமதி கோரி 1978-79-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு சர்க்கரை இயக்குநர் 1978 ஜூனில் பிரேரணை அனுப்பினார். அரசு போதுமான நிதி வசதி இல்லையென கூறி அதிகமுக்கியம் என முதல் வேலைக்கு மட்டும் ரூ. 6 இலட்சத்தில் முடிக்க அனுமதி அளித்துள்ளது. 1979-80-க்கு அனுமதி கோரி மேலே (6)-ல் குறிப்பிடப்பட்ட சாலை வேலையை அனுமதிக்க அரசுக்குச் சர்க்கரை இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

123046

Y311,31'N80

N80-38.39731